
ராட்சிய பெண்
சாண்டில்யன்
முழு நாவல்
வானதி பதிப்பகம்

# புரட்சிப் பெண்

## அத்தியாயம் - 1

## ஜோதிபாய் பிரயாணம்

மிகவும் பலமான மழை! புயல்காற்றும் சேர்ந்துவிடவே 'விர் விர்' என்ற சப்தத்துடன் மழை இடைவிடாது பொழிந்தது. எழும்பூர் ஸ்டேஷனில் குழுமியிருந்த மக்ககள் அனைவரும் ஸிலோன் போட் மெயிலின் வருகையை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். ''மாயவரத்தில் பத்து சுழி மழை'', ''சிதம்பரத்தில் புயல் காற்று'', ''கொள்ளிடத்தில் வெள்ளம்'' என்ற தலைப்புகளுடன் முந்திய நாள் தினசரிகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த செய்திகளை வாசித்துவிட்டு வந்திருந்த அந்த ஜனங்களுக்கு ஏழு மணிக்கே வந்து சேரவேண்டிய போட்மெயில், மணி ஏழரையாகியும் வராதிருக்கவே தங்கள் பந்துக்கள் நலமாக வந்து சேர வேண்டுமேயென்ற கவலை நிமிஷத்துக்கு நிமிஷம் விருத்தியாகிக் கொண்டேயிருந்தது.

கவலை மேலிட்டிருந்ததால் சிலர் நின்ற இடத்தில் நிற்காமல் பிளாட்பாரத்தின் கோடிக்குப் போய் மெயில் வருகிறதா வென்று உற்றுப் பார்ப்பதும், மீண்டும் திரும்பி வந்து மற்ற மக்களுடன் சேர்ந்து கொள்வதுமாகவும் இருந்தனர். மற்றும் சிலர் ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்கு வெளியில் நின்று கொண்டு உள்ளே தலையை நீட்டி, ''என்ன ஸார்! ஏதேனும் சமாசாரம் வந்ததா?'' என்று விசாரித்தனர். மக்களுக்கு இவ்வளவு கவலையிருக்கும் சமயத்தில் ஸ்டேஷன் மாஸ்டர்

தமது 'தொப்பைக்'காட்டாமல் இருப்பாரா?

''சும்மா தொந்தரவு பண்ணா என் வேலை எப்படி ஸார் நடக்கிறது? வெளியிலேயே இருங்கோ. சமாசாரம் வந்ததும் சொல்கிறேன்'' என்று கள்ளென்று விழுந்துவிட்டு மேஜை மேலிருந்த ரிஜிஸ்டர்களைப் புரட்டி ஏதோ ஊன்றிக் கவனிப்பது போல் பாசாங்கு செய்யலானார்.

சரியாக ஏழே முக்கால் மணிக்கு ஸ்டேஷன் மாஸ்டர் வெளியே வந்தார். மழையை எதிர்நோக்கி இருக்கும் சாதக பட்சிகளைப்போல் அவரது வருகைக்காகக் காத்திருந்த மக்கள் தேனடையைச் சுற்றிக்கொள்ளும் ஈக்கள்போல் அவரைச் சுற்றிக் கொண்டனர். ஸ்டேஷன் மாஸ்டர் அவர்களைச் சட்டை செய்யாது போர்ட்டரைக் கூப்பிட்டு, ''அடே லயன் கிளியராச்சா பார், மெயில் தாம்பரத்திற்கு வந்துட்டதாம்'' என்று ஆக்ஞாபித்தார்.

இந்தக் காலத்தில் போட்மெயிலுக்கு அதிக மதிப்பில்லை. கொஞ்ச நாட்களுக்கு முன்பு போட்மெயிலில் பிரயாணம் செய்வதைக் கௌரவமாகக்கூடப் பலர் நினைத்து வந்தார்கள். ''போனால் போட்மெயிலில் போகவேண்டும் ஸார்'' என்று ஜனங்கள் சாதாரணமாகச் சொல்வதுண்டு. மற்ற வண்டிகளைப் போலன்றி பல ஸ்டேஷன்களில் நிற்காமல் போவதாலும், சௌகரியங்களும் கொஞ்சம் அதிகமாக இருந்ததாலும், அக்காலத்தில் போட்மெயிலுக்கு ஒரு விசேஷ கௌரவம் இருந்து வந்தது.

இரவு ஒன்பது மணிக்கு எழும்பூர் ஸ்டேஷனில் புறப்படத் தயாராக விருக்கும் மெயிலைப் பார்த்துத் தற்காலத்திலும் பிரமிக்கும் ஜனங்கள் பலர் இருக்கிறார்கள். வானிடையே அநேக நட்சத்திரங்கள் மின்னுவதுபோல் மின்னிக் கொண்டிருக்கும் மின்சார விளக்குகளுடனும், விர்ரென்று சுற்றிக் கொண்டிருக்கும் விசிறிகளுடனும், நின்றுகொண்டிருக்கும் மெயிலைப் பார்த்து



ஆனந்தப்படுவோர் சிலர். இவ்வளவு விளக்குகளும் விசிறிகளும் ஒரு பொத்தானைத் தட்டிவிட்ட மாத்திரத்தில் எரியவோ, அணையவோ, சுற்றவோ, சும்மாயிருக்கவோ, கேவலம் நம்முடைய அடிமைகள் மாதிரியிருக்கும்படி வெள்ளையர்களுடைய அபாரமான புத்தி கூர்மையால் கண்டு பிடிக்கப்பட்டன என்பதை நினைத்து, ''என்ன இருந்தாலும் வெள்ளைக்காரன் கெட்டிக்காரன்தான்'' என்று சிலாகிக்கிறவர்கள் அனேகர்.

ஆகவே இன்று நாம் ஆங்கிலேயரை, ''இந்தியாவுக்கு என்ன நன்மை செய்துவிட்டீர்கள்'' என்று கேட்டால், ''ரெயில்வேக்கள் போட்டிருக்கிறோம்; மின்சார விளக்குப் போட்டிருக்கிறோம்; தந்தியும், டெலிபோனும் அமைத்திருக்கிறோம்'' என்று பெருமையாகச் சொல்லுகிறார்கள்.

இந்த ரெயில்வேக்களின் மூன்றாம் வகுப்பு வண்டிகளைப் பார்த்தால் அப்படி அவர்கள் அதிகப் பெருமையடித்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லையென்பது தெரிய வரும். தவிர நமது தேசத்திலிருந்து வெளிதேசம் போகும் பணத்தினளவையும் நமக்குச் செய்து கொடுக்கப்பட்டிருக்கும் சௌகரியங்களையும் கவனித்தோமானால் யாரும் நம்மீது கருணை கொண்டு அளவுக்கதிகமாக நன்மை செய்துவிடவில்லையென்பதை அறியலாம். ஆனால் நாம் சூக்ஷ்மங்களைக் கவனிப்பதில்லை. வெளிப்படையாகத் தோன்றும் படாடோபங்களைப் பார்த்தே பிரமிக்கிறோம்.

நிற்க, இவ்வளவு மகிமை பொருந்திய போட்மெயிலானது காற்றையும் மழையையும் சிறிதும் லக்ஷியம் செய்யாமல் சென்னையை நோக்கித் தாம்பரத்தருகில் வந்து கொண்டிருந்தது.

மணி ஏழேமுக்காலான போதிலும் வானில் கருமேகம் அடர்த்தியாயிருந்ததால் பகலும் இரவு போலவே

இருந்ததுபற்றி, வண்டியிலிருந்த மின்சார விளக்குகள் அணைக்கப்படாமல் பளிச்சென்று எரிந்தபடியே இருந்தன. திருமகளின் அனுக்கிரகத்தால் முதல் இரண்டாம் வகுப்புகளில் பிரயாணம் செய்யக் கொடுத்து வைத்த ஸ்திரீ பூமான்கள் மழமழவென்றிருந்த மெத்தைகளின் மேல், மின்சார விளக்குகளின் காந்தியால் தங்கள் சில்க் ஷர்ட்டுகளும் வைரக் கம்மல்களும் மின்ன சயனித்தனர். ஆனால் பூலோகத்தில் தேவபோகத்தை அநுபவிக்க வந்த தேவர்கள் போலும், அப்ஸர ஸ்திரீகள் போலும் தோன்றினாலும் மெத்தைகளின் இடுக்குகளிலிருந்து சதா வெடுக் வெடுக்கென்று கடிக்கும் மூட்டைப் பூச்சிகளின் உபத்திரவத்தால் நரக வேதனைக்குச் சமானமான துன்பத்தையடைந்தவர்களாய் இரவு முழுவதும் நித்திரைவராமல் புரண்டு கொண்டிருந்தனர்.

மூன்றாம் வகுப்புகளில் பிரயாணம் செய்த ஜனங்கள் உடைந்த ஜன்னல்களின் வழியாக அடிக்கும் மழைச் சாரலால் அதிகக் கஷ்டப்பட்டதுமன்றி வறுமைக்கேற்ற அசங்கிய முடையவர்களாய், வெள்ளரிக்காய்த் தோல், வாழைப்பழத் தோல் முதலியவற்றை உட்காரும் இடத்திற்குக் கீழேயே போட்டுக்கொண்டு வண்டியை அதிகக் கேவலமாக்கினர். மேலும் அவர்கள் சுகவாசிகள் இல்லாதபடியால் இந்த அசங்கியங்களை லக்ஷியம் செய்யாதவர்களாய் உட்கார்ந்திருந்தனர்.

வண்டி சென்னையை அணுகும் சமயம் நெருங்கி விட்டதால் பிரயாணிகள் அனைவரும் வண்டியிலிருந்து இறங்கத் தயார் செய்து கொள்ளலானார்கள். இந்தியப் பெண்மணிகள் எழுந்திருந்து குழலைக் கோதி, புடவையைத் திருத்தித் தலைப்பை இழுத்துவிட்டுக் கொண்டனர். புருஷர்கள் ஆள்காட்டி விரல்களால் கண்களைத் துடைத்துக்கொண்டு கழற்றி மாட்டப்பட்டிருந்த கோட்டுகளை அணிந்து, பெட்டி முதலிய சாமான்கள் சரிவர இருக்கின்றனவாவென்று பார்க்க ஆரம்பித்தனர்.



வண்டியில் பிரயாணம் செய்த வெள்ளைக்காரப் பெண்மணிகளும், ஆங்கிலோ இந்தியர் என்றழைக்கப்படும் சட்டைக்காரத் துரைசானிகளும் கத்திரித்துவிடப்பட்டிருந்த தங்கள் மயிர்களை உயர்தர பிரஷ்களால் வாரிவிட்டதுடன், அவற்றிற்காகப் பிரத்தியேகமாகச் செய்யப்பட்டுள்ள ஊசிகளைக் குத்திக்கொண்டு முகத்திற்குப் பவுடர் ஒத்த ஆரம்பித்தனர்.

இப்படிக்கின்றித் தனியாய் ரயிலில் ஏறித் தம்பதிகள் உட்கார்ந்திருக்கும் அறைகளுக்குள் போக சங்கோசப்பட்டு, பக்கத்து அறைகளில் உட்கார்ந்துகொண்டு தம்பதிகளின் அறையின் பக்கம் உலாவுவது போல் போய், உள்ளே உட்கார்ந்திருப்பவர்களை பார்க்காதது மாதிரி கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டிருந்த பூமான்கள், நித்திரையின்மையால் கண்கள் செக்கச் செவேலென்று சிவந்திருக்க உட்காரவும் மனம் இல்லாமல், உலாவவும் சக்தியற்றவர்களாய் எப்படியாவது ஸ்டேஷன் வந்து வீட்டுக்குப் போய் ஒரு கப் காப்பி சாப்பிட்டால் போதும் என்ற ஸ்திதியிலிருந்து வந்தனர்.

அனைவரும் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த எழும்பூர் ஸ்டேஷனும் வந்துவிட்டது. பிரயாணத்தால் மிகவும் களைத்துப் போயிருந்த மக்கள் அனைவரும் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதென்ற குதூஹலத்தால் ஒருவரையொருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு இறங்கினர். இந்தச் சங்கடத்தில் போர்ட்டர்களும் வண்டியில் ஏறிக்கொண்டு இறங்குபவர்களுக்கு வழியை விடாமல் பிரயாணிகளின் படுக்கை, பெட்டி முதலியவற்றைக் கைகளிலிருந்து பிடுங்கலாயினர்.

வண்டியிலிருந்து அனைவரும் மெள்ள கீழேக் இறங்கினார்கள். இறங்கிய எல்லாரையும் கவனிப்பது நமக்குச் சாத்தியமில்லையாகையால் மற்றவர்களை விட்டுவிட்டு

முதல் வகுப்பிலிருந்து இறங்கிய நீலமேகம் பிள்ளை என்ற யௌவனபுருஷரையும் அவருடன் இறங்கிய ஜோதிபாய் என்ற ஒரு அழகியையும் மாத்திரம் தொடர்ந்து செல்வோம்.

நீலமேகம் பிள்ளைக்கு முப்பத்திரண்டு வயது இருக்கும். சுமார் ஐந்தரையடி உயரமுள்ளவர். மிகவும் அழகான மனிதர் இல்லாவிட்டாலும் பார்ப்பதற்கு லக்ஷணமாகத் தான் இருப்பார். தஞ்சாவூர் வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர். நீலமேகம் பிள்ளையென்பது அவரது முழுப் பெயரானாலும் ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறிய பிறகு நாகரீகத்துக்கு அடையாள மாக 'பிள்ளை' என்பதைக் கத்தரித்துவிட்டு சாதாரண நீலமேக மாக விளங்கி வந்தார்.

வெகு காலமாக ஹைகோர்ட்டில் வெள்ளைக் காரர்களுக்கென்று பிரத்யேகமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ரிஜிஸ்ட்ரார் உத்யோகத்தை வெகு திறமையுடன் வகித்து வருகிறார். அவர்கூட வந்த ஜோதிபாய் வட தேசத்துப் பெண். அவளுடைய முகம் வசீகரமாக இருந்தது. தவிர, அவள் மிகவும் தைரியம் வாய்ந்த ஸ்திரீ யென்பதையும் விளக்கியது. அவளுடைய கையிலிருந்த தோல் பெட்டி ஒன்றைத் தவிர வேறு சாமான் ஒன்றும் அவர்கள் கொண்டு வரவில்லை.

வண்டியை விட்டு இறங்கியதும் நீலமேகம் பிள்ளை எதிரேயிருந்த ஒரு கோச்சு வண்டிக்காரனைக் கூப்பிட்டு, ''அடே அம்மாளுடைய பெட்டியை வாங்கிக் கொண்டு போய் வண்டியில் வை'' என்று கூறினார். வண்டிக்காரனும் நிஜார், சட்டை முதலியவற்றை அணிந்து சாக்ஷாத் ஐரோப்பிய துரையைப் போல் விளங்கின ரிஜிஸ்ட்ராருடைய வாக்கை வேதவாக்கியமாகக் கொண்டு, ஜோதிபாயின் கையினின்றும் பெட்டியை வாங்கிக் கொண்டு தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த தன் கோச்சை நோக்கிச் சென்றான். ஜோதிபாயும், நீலமேகம் பிள்ளையும் வண்டிக்காரனைத் தொடர்ந்து சென்று வண்டியில் ஏறினர். உடனே தம் நண்பர் ஒருவர் பிளாட்பாரத்தினின்றும் தம்மைக் கூப்பிடுவதைக் கண்ட நீலமேகம் பிள்ளை



வண்டியை விட்டுக் கீழே இறங்கி, வந்த மனிதரைப் பார்த்து, ''அடடா! யாரது ஜமீன்தாரா! யாரோ கூப்பிடுகிறார்கள் என்றல்லவா இருந்தேன். தாங்கள் வருவதை நான் பார்க்கவில்லை. மன்னிக்க வேண்டும்'' என்றார்.

''அதனால் என்ன! பாதகமில்லை. எங்கிருந்து வருகிறீர்கள்? என்ன சமாசாரம்?'' என்று ஜமீன்தார் வினவினார்.

''திருச்சினாப்பள்ளிக்குக் கொஞ்சம் சொந்த அலுவலாய்ப் போயிருந்தேன். அங்கிருந்துதான் வருகிறேன்'' என்று நீலமேகம் பிள்ளை பதிலளித்தார். அவர் கூறிய மறுமொழியைக் கேட்பதுபோல் ஜமீன்தார் தலையை அசைத்துக் கொண்டிருந்தாலும் அவருடைய கண்கள் கோச்சுக்குள் உட்கார்ந்திருந்த ஜோதிபாயின் அழகிய வடிவத்தையே நோக்கிக் கொண்டிருந்தன.

''என்ன ஜமீன்தார்வாள்! நான் கூறுவது உங்கள் காதில் விழவில்லை போலிருக்கிறதே, யோசனை வேறு எங்கேயோ இருப்பதுபோலல்லவா தோன்றுகிறது'' என்று சிறிது குத்தலாகச் சொல்லிப் புன்சிரிப்பாகச் சிரித்தார் ரிஜிஸ்ட்ரார்.

''அப்படி ஒன்றும் விபரீத அர்த்தம் செய்துவிட வேண்டாம். அதிருக்கட்டும் நீலமேகம். ஷோக்கான உருப்படியாகத்தான் பிடித்துவிட்டாய். யாரது?'' என்று தாழ்ந்த குரலில் ஜோதிபாயிருந்த பக்கம் தம் கண்களைச் சிறிது சிமிட்டிக்காட்டிக் கேட்டார் ஜமீன்தார்.

''சேசே! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. என்னுடைய ஒழுக்கம் தெரிந்துகூட இப்படி விகல்பமாய் நினைத்துக் கேட்கிறீர்களே! இந்தப் பெண்ணின் பெயர் ஜோதிபாய். இவளுடைய உறவினர் ஒருவர் இடத்தில் கொண்டு போய் விடும்படி என்னிடம் ஒப்படைத்தார். பிறகு பேசிக்கொள்ளுகிறேன். நாழியாகிறது'' என்று சொல்லிவிட்டு

வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டு, ''கோச்மான்! வண்டியை மவுண்டுரோட்டுக்கு ஒட்டு'' என்று ரிஜிஸ்ட்ரார் ஆக்ஞாபித்தார். வண்டிக்காரனும் லகானை இழுத்துக் குதிரையைத் தட்டிவிட்டான்.

''நீலமேகம் பிள்ளை! நீங்கள் ஸ்டேஷனில் பார்த்த மனிதன் யார்?'' என்று ஜோதிபாய் ஹிந்துஸ்தானியில் கேட்டாள்.

''அவர் பெயர் ராஜதுரை. சென்னை ராஜதானிக்குள் மிகவும் செல்வம் வாய்ந்த இளையவல்லிபுரம் என்னும் ஜமீன் அவருக்குச் சொந்தமானது'' என்றார் நீலமேகம் பிள்ளை.

''அவன் ரொம்ப நாளாக உங்களுக்குச் சிநேகமோ?'' என்று ஜோதிபாய் மீண்டும் கேட்டாள்.

''அப்படி ரொம்ப நாள் சிநேக மொன்றுமில்லை. சாதாரண பரிச்சயம்தான். ஏன் கேட்கிறீர்கள்?'' என்று நீலமேகம் வினவினார்.

''ஒன்றுமில்லை. அந்த மனிதனைப் பார்த்தால் சுத்தப் போக்கிரி மாதிரி இருக்கிறதே என்றுதான் கேட்டேன். அவன் உங்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது கண்ணைச் சிமிட்டிய அழகும் என்னைப் பார்த்த பார்வையும் எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள் ஜோதிபாய்.

''ஜமீன்தார் போக்கிரியில்லை, கொஞ்சம் சவடால் பேர்வழி. ஏதாவது எக்கச்சக்கமாகப் பேசுவானே யொழிய உண்மையில் தங்கமான மனிதன்'' என்று நீலமேகம் சொன்னார்.

வண்டியும் மெள்ள மவுண்டு ரோட்டை அணுகியது. ''அடே! வண்டியை இடதுபுறமாகத் திருப்பி அதோ தெரியும் காப்பி ஹோட்டலுக்கு அருகில் நிறுத்து'' என்று ரிஜிஸ்ட்ரார் கூறவே, வண்டிக்காரனும் அவருடைய கட்டளையின்படி ஹோட்டலுக்கு எதிரே வண்டியை நிறுத்தினான். நீலமேகம் பிள்ளை கீழேயிறங்கி ஜோதிபாயை நோக்கி, ''அம்மா! வாருங்கள். பல் தேய்த்து ஒரு கப் காபி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்று கூப்பிட்டார்.



''வேண்டாம். வீட்டிற்குப் போன பிறகு பார்த்துக் கொள்ளலாம். நீங்கள் போய்ச் சாப்பிட்டுவிட்டு வாருங்கள்'' என்று ஜோதிபாய் பதிலுரைத்தாள்.

''ஆனால் சரி, உங்கள் இஷ்டம். இரவு முழுவதும் தண்ணீர் கூடச் சாப்பிடவில்லையே என்று கேட்டேன். இங்கேயே உட்கார்ந்திருங்கள். இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்'' என்ற சொல்லிவிட்டு நீலமேகம் பிள்ளை ஹோட்டலுக்குள் சென்றார். நேராகக் குழாயிருக்குமிடம் போய்ப் பற்பொடியால் பல் துலக்கிவிட்டு மேஜைக்கருகில் வந்து உட்கார்ந்து கைக் குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டார். பக்கத்தில் தயாராயிருந்த ஹோட்டல் பையன் அவருடன் உறவு கொண்டாடத் தொடங்கி, ''என்ன அண்ணா! என்ன சாப்பிடறேள்? சூடா பூரி உருளைக்கிழங்கு, இட்டிலி, உப்மா எல்லாமிருக்கு'' என்றான்.

''எதுவும் வேண்டாம். காபி மாத்திரம் சூடா ஒரு கப் கொண்டு வாரும்'' என்று நீலமேகம் பிள்ளை கூறினார். அவன் கொண்டுவந்த காபியைக் கோப்பையிலிருந்த அலு மினியம் ஸ்பூனால் கலக்கிக்கொண்டே வாயிற்படிக்கு நேராக நிறுத்தப்படிருந்த கோச் வண்டியை உற்றுப் பார்த்த வண்ணமிருந்தார்.

மிகவும் ஜனசஞ்சாரமுள்ள அந்த இடத்தில் வண்டியை நிறுத்தியிருந்ததைப் பார்த்த போலீஸ் ஜவான், ''டேய்! வண்டியை அப்படிக் கொண்டுபோய் நிறுத்து'' என்று அதட்டவே வண்டிக்காரன் கோச்சை மெள்ள சற்றுத் தூரம் ஒட்டினான். வண்டி கண்ணுக்கு மறைந்ததுதான் தாமதம், காபியைக் குடித்துவிட்டு நீலமேகம் பிள்ளை ஆசனத்தினின்றும் துள்ளியெழுந்தார். சில்லறையைக் கொடுத்துவிட்டு மெள்ளத் திருடன்போல் வாயிற்பக்கம் வந்து

ஒருவர் கண்ணிலும் படாமல் வண்டி சென்றதற்கு நேர் எதிர்த் திக்காய் சென்று, பக்கத்து சந்தில் நுழைந்து ஒரு ரிக்ஷாவை அமர்த்திக்கொண்டு அவனிடம் ஏதோ சொல்ல ரிக்ஷா மிகவும் வேகமாய்ச் செல்ல ஆரம்பித்தது.

சுமார் இரண்டுமணி நேரத்திற்கு மேலாகியும் காபி சாப்பிடப் போன நீலமேகம் பிள்ளை வராதிருக்கவே கோச்சு வண்டிக்காரன் ஆத்திரம் பொங்க, ''இதென்னடா இது! எளவு சவாரி. காபி சாப்பிடப் போனவனுக்கு இவ்வளவு நாளியா?'' என்று முணுமுணுத்துக் கொண்டே பெட்டியை விட்டுக் கீழே இறங்கி, ''என்னம்மா இது; அநியாயமா யிருக்குதே, ஐயா எங்கே போனாருன்னு தெரியலையே. எங்க ஓட்டனும்னு நீங்களாச்சும் சொன்னா ஓட்ரேன். ஒரு சவாரிக்கே நாள் பூரா சரியா பூட்சுன்னா ஏளை நாங்க எப்படிப் பொளைக்கிறது?'' என்றான். பதில் ஒன்றும் வராதிருக்கவே வண்டிக்குள்ளே எட்டிப் பார்த்தான்.

''ஐயையோ! இதென்ன இந்தம்மா இப்படி முளிச்சிக்கிட்டு ஒக்காந்திக்குனு இருக்காங்களே'' என்று கத்திக் கொண்டே எதிரே இருந்த போலீஸ் ஜவானைக் கையைத் தட்டிக் கூப்பிட்டு, ''ஐயா! ஐயா! இப்படிக் கொஞ்சம் ஓடியாங்க'' என்றான்.

''என்னடா கழுதை மாதிரி கத்றே?'' என்று அதிகார தோரணையில் கேட்டுக்கொண்டே போலீஸ் ஜவான் வருவதற்குள் அம் மங்கையின் கையைத் தொட்டுப் பார்த்த வண்டிக்காரன் மிகுந்த பீதியால் திகிலும் பிரமிப்பு மடைந்தான்.

''ஐயையோ! இந்தம்மாவின் உடம்பு ஜில்லுனு பூட்டுதே. இப்போதானே எழும்பூரிலேயிருந்து இவங்களை ஓட்டியாரேன். இன்னிக்கி யார் மூஞ்சிலே முளிச்சேனோ தெரியலியே. நல்ல கிராக்கி ஆப்டுச்சி'' என்று குளறினான்.

அத்தியாயம் - 2

## மரண விசாரணை

சென்னையின் சமாசாரம்தான் எல்லாருக்கும் தெரியுமே. யாராவது நாலு பேர் சேர்ந்து ஓரிடத்தில் பேசிக் கொண்டிருந்தால் அங்கு ஏதோ விசேஷமிருக்கிற தென்று அவர்களைச் சுற்றிப் பத்துப் பேர் கூடிவிடுவார்கள். அப்படி யிருக்க முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவம் நிகழ்ந்ததென்றால் சொல்லவேண்டுமா!

இரண்டு நிமிடங்களில் கோச்சைச் சுற்றிப் பலமான கூட்டமொன்று கூடிவிட்டது. பேலீஸ் ஜவான் வண்டிக்காரனை நோக்கி, ''அடே! இதென்ன வேலை? இந்தாம்மாளைப்பத்தி ஒனக்கென்ன தெரியும்? மரியாதையா சொல்லிடுறையா, உதை சாப்பிடுறையா?'' என்று அதட்டிக் கேட்டான்.

''இந்தம்மாளைப்பத்தி எனக்கு ஒன்னும் தெரியாதுங்க. முந்தி பிந்திகூடப் பார்த்ததில்லீங்க. இன்னிக்கு நான் முளிச்ச வேளை இந்த மாதிரி ஆச்சு. இவர்களை இப்பத்தான் எழும்பூரிலிருந்து ஓட்டியாரேன். இந்தம்மாளோட வந்த ஐயா 'அடே! வண்டியை இங்கேயே நிறுத்திக்கோ; ஓட்டலுக்குப் போய் காப்பி சாப்பிட்டு ரெண்டு நிமிடத்திலே ஓடியாரேன்'னு சொல்லிட்டு, அந்தக் காப்பி ஓட்டல்லே நொளைஞ்சாருங்க. மணி ரெண்டாச்சு இன்னும் ஆளைக்காணுங்க'' என்றுரைத்தான்.

இதைக் கேட்டதும் ஜவான் மிகுந்த பரபரப்புடன் வண்டிக்காரனைப் பார்த்து, ''மடையா! இதை ஏன் முன்னாடியே சொல்லித் தொலைக்கலை? அந்த ஆள்

ஆப்படறானா பார்க்கலாம் வா'' என்று சொல்லி வண்டிக் காரனை அழைத்துக் கொண்டு ஹோட்டலை நோக்கி ஓடினான்.

வெகுநேரம் அதி ஜாக்கிரதையுடன் தேடிப் பார்த்தும் அந்த மனிதன் காணாததால் ஜவான் வண்டிக்காரனுடன் திரும்பி வண்டிக்கருகில் வந்தான். இதற்குள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சமாசாரம் எட்டி ஸப்இன்ஸ்பெக்டர் வந்துவிட்டார். உடனே போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் வண்டியில் ஏறி ஜவானுடன் உட்கார்ந்து கொண்டு வண்டியை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு ஓட்டச் சொல்லவே, வண்டிக்காரனும் குதிரையை வேகமாகத் தூண்டினான்.

ஜோதிபாயின் சவம் ஆஸ்பத்திரி சேவகர் இருவரால் பிரேதப் பரிசோதனை அறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. டாக்டர் கோபாலன் சவத்தை மிகுந்த கூர்மையுடன் உற்று நோக்கினார். பிணத்தின் இருதயத்தின் மேல் கையை வைத்துப் பார்த்து, நாடியிருக்கிறதா வென்று நோக்கிவிட்டு, பின்பு கண் இமைகளைப் பரிசோதித்தார். கடைசியாக ஸப் இன்ஸ்பெக்டரை நோக்கி, ''இந்தப் பெண் இறந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாகிறது'' என்று ஆழ்ந்த குரலில் கூறினார். ஸப் இன்ஸ்பெக்டர் நடந்த சமாசாரங்களை டாக்டருக்குச் ெசால்லும்படி ஜெவானுக்குக் கட்டளையிடவே ஜவான் சால்விவர டாக்டர் மிகுந்த ஆவலாய் கேட்டு வந்தார்.

செய்யப்பட்ட பிறகு டாக்டர் ரப்பரால் தன் வேலையை கையுறைகளைப் போட்டுக் கொண்டு கவனிக்கத் தொடங்கினார். சிறிது பட்டையாய்க் கரண்டிகள் மாதிரி இருந்த இரண்டு ஜெர்மன் வெள்ளித் துடுப்புகளால் பிணத்தின் வாயைத் திறந்து அதிக பவருள்ள மின்சார விளக்கின் உதவியால் தொண்டைக்குள் நோக்கினார். அவருடைய முகத்தில் ஆச்சரியக் குறி தோன்றியது. பின்பு அவர் பிணத்தின் உள்ளங்கைகளைப் பரிசோதித்தார். இடது



உள்ளங்கையிலிருந்த கரம்போன்ற ஒரு தழும்பு அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. அதை டாக்டர் வெகு நேரம் உற்று நோக்கினார்.

''டாக்டர் ஸார்! இதென்ன கொலையா?'' என்று ஸப் இன்ஸ்பெக்டர் வினவினார்.

''இந்தக் கேஸில் நூதனமான சில விஷயங்கள் தென்படுகின்றன. உதாரணமாக, இதோ பாரும்! இந்தக் கையிலிருக்கும் இந்தத் தழும்பு பார்ப்பதற்கு ஒரு சாதாரண மச்சம் போல் தோன்றுகிறது. ஆனால் இது மச்சமல்ல! இதிலிருந்து நீர் என்ன நினைக்கிறீர்?'' என்று டாக்டர் கேட்டார்.

''நிச்சயமாய்க் கொலை என்றுதான் நாம் அபிப்பிராயப் படவேண்டியதாக இருக்கிறது'' என்று ஸப் இன்ஸ்பெக்டர் கூறினார்.

''அதிருக்கட்டும், இவளுடன் கூட ஒரு மனிதன் வந்தானென்கிறீர்களே, அவன் எங்கே?'' என்று டாக்டர் மறுபடியும் கேட்டார்.

''ஹோட்டலில் காபி சாப்பிட்டு வருகிறேனென்று சொல்லிவிட்டுப் போனான். போனவன் போனவன்தான். திரும்பி ஆசாமி அகப்படவில்லை'' என்று ஸப் இன்ஸ்பெக்டர் சொன்னார்.

''உம்...'' என்று சொல்லிவிட்டு டாக்டர் சிறிது நேரம் ஏதோ யோசித்தார். பிறகு ஸப் இன்ஸ்பெக்டரை நோக்கி, ''அனேகமாய் இது கொலையாக இருக்கலாம். நீங்கள் கூறிய விஷயங்கள்தான் சந்தேகத்தைக் கிளறுகின்றன. இப்பொழுது நான் ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. எல்லாம் நாளை விசாரணையின்போது சொல்லுகிறேன்'' என்று கூறவே, ஸப்இன்ஸ்பெக்டர் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்து கோச்சில் ஏறி உட்கார்ந்துகொண்டு ''வண்டியைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டு'' என்று ஆக்ஞாபிக்க,

வண்டிக்காரன் பெட்டியின் மேல் ஏறி உட்கார்ந்து தனது விதியை நினைத்து பெருமூச்சு விட்டுக் கொண்டு மறுபடியும் குதிரையைத்தட்டிவிட்டான்.

அன்று சாயந்திரத் தினசரிகளில் கொலையின் விவரங்கள் ஒன்றுக்குப் பத்தாக விருத்தி செய்யப்பட்டு வெளியாயின.'

'மவுண்டுரோட்டில் பயங்கரக் கொலை'', கொலை செய்தவன் கம்பி நீட்டி விட்டான்'', '' தொப்பியணிந்த துரை யார்?'' என்று பல நூதன தலைப்புகளுடன் செய்திகள் பிரசுரிக்கப்பட்டன. மறுநாட் காலை பதினொரு மணிக்கொல்லாம் பஞ்சாயத்தார் முன்னிலையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் இந்த ஆச்சரியமான கொலைக் கேஸை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

வழக்கமாகச் செய்யப்பட வேண்டிய சத்தியம் செய்யப்பட்டவுடன் முதலில் வண்டிக்காரனை விசாரிக்கத் தொடங்கினார் இன்ஸ்பெக்டர்.

**இன்ஸ்:** அடே! உனக்கு இந்த விஷயத்தைப் பற்றி என்ன தெரியும்?

**வண்டிக்காரன்:** செத்துப்பூட்ட அம்மாவை நான் எழும்பூரிலேருந்து ஓட்டியாந்தேனுங்க. இந்தம்மாகூட ஒரு ஐயா வந்தாருங்க. அவர் தொப்பி, நிஜார், பூட்ஸ் எல்லாம் போட்டுக்கினு தொரை மாதிரியே இருந்தாருங்க. டேசனிலே அவர் ஒத்தரோடே பேசினாரு.

**இன்ஸ்:** யாருடன் பேசினார்?

**வண்டிக்காரன்:** யாருன்னு தெரியாதுங்க. ஆனா ஓடிப்பூட்ட ஐயா அவரைக் கூப்பிடச்சே எல்லாம் ஜமீன்தாருன்னுகூப்பிட்டாங்க.

**இன்ஸ்:** அம்மா அந்த ஜமீன்தாருடன் பேசினார்களா?



**வண்டிக்காரன்:** இல்லீங்க. அந்த அம்மாளுக்கு தமிழ் தெரியாதுங்க.

**இன்ஸ்:** அம்மாளுக்குத்தமிழ் தெரியாதென்று உனக்கு எப்படித்தெரியும்?

**வண்டிக்காரன்:** இந்த அம்மா வண்டியில் வந்த ஐயாவோட பேசச்செல்லாம் துலுக்குலே பேசினாங்க.

**இன்ஸ்:** சரி, மேலே சொல்.

**வண்டிக்காரன்:** ஐயா ஜமீன்தாரோடே பேசிட்டு வண்டியிலே குந்திக்கினதும் வண்டியை மவுண்ட்ரோடுக்கு உடுன்னாரு. மவுண்ட்ரோடுக்கு வந்ததும் காபி சாப்பிட்டு வர்ரேன்னு சொல்லிவிட்டு, காபி ஓட்டலுக்குக்குள்ளே நொளைஞ்சாருங்க. ஆளை அப்புறம் காணுங்க.

**இன்ஸ்:** நீ மறுபடியும் அந்த மனிதனைக் கண்டால் அடையாளம் கண்டுபிடித்துக் கொள்வாயா?

**வண்டிக்காரன்:** அவன் நம்ம கண்லே ஆப்படட்டுங்க அப்புறம் சொல்றேன்.

**இன்ஸ்:** டேய்! கேட்டதற்கு பதில் சொல்.

**வண்டிக்காரன்:** சொப்பனத்திலேகூட அந்த ஆள் யாருன்னு சொல்வேனுங்க.

**இன்ஸ்:** ரயில்வே ஸ்டேஷனில், ஓடிப் போன ஆள் யாருடனோ பேசினதாகச் சொன்னாயே, அந்த ஜமீன்தார் என்பவன் போட்மெயிலில் அவர்களுடன் கூடவே பிரயாணம் செய்து வந்தவனா?

**வண்டிக்காரன்:** இல்லீங்க. இவங்க வரத்துக்கு முன்னாடியே புடிச்சு அவரு டேசன் பிளாட்பாரத்திலே அப்படியும் இப்படியும் அலெஞ்சுகினு இருந்தாருங்க.

**இன்ஸ்:** ஒரு வேளை ஜமீன்தார் இவர்களை எதிர்பார்த்தே ஸ்டேஷனுக்கு வந்திருக்கக்கூடுமா?

**வண்டிக்காரன்:** அப்படித்தாங்க இருக்கணும். என்னா

நான் ஒட்ரத்துக்கு பொட்டிமேலே ஒக்கார்ந்ததும் அவர் பக்கத்திலிருந்த மோட்டார்லே ஏறிக்கினு ரொம்ப வேகமாகப் போனாருங்க.

இத்துடன் வண்டிக்காரன் விசாரணை முடிந்தது. அடுத்தபடியாக டாக்டர் கோபாலன் விசாரிக்கப்பட்டார்.

**இன்ஸ்:** நீங்கள்தான் ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஹௌஸ் ஸர்ஜன் வேலை பார்த்துவரும் டாக்டர் கோபாலன் என்பவரா?

**டாக்டர்:** ஆம்!

**இன்ஸ்:** இந்தக் கேஸில் சம்பந்தப்பட்டிருக்கும் ஸ்திரீ இறந்து எவ்வளவு மணி நேரத்துக்குப் பிறகு பிரேதம் உம்மிடம் கொண்டுவரப்பட்டது?

**டாக்டர்:** சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு.

**இன்ஸ்:** பிரேதத்தைப் பரிசோதித்ததில் விஷயம் ஏதாவது விளங்கியதா?

**டாக்டர்:** நானும் ஹெண்டர்சன் துரையும் பிரேதத்தைப் பரிசோதித்தோம். திடீரென இருதயம் நின்றுபோய் விட்டதால் இந்த ஸ்திரீ இறந்திருக்க வேண்டுமென்றே முடிவுக்கு வந்தோம்.

**இன்ஸ்:** அப்படியானால் இதைச் சாதாரணமாக ஏற்பட்ட ஒரு மரணம் என்றா கருதுகிறீர்?

**டாக்டர்:** இல்லை. என்னுடைய சொந்த அபிப்பிராயம் அப்படியில்லை. இது வேண்டுமென்றே செய்யப்பட்ட கொலையாகத்தான் இருக்க வேண்டுமென நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆங்கில வைத்தியத்தில் கையாளப்படும் முறை ஒன்றாலும் இதைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இதில் நூதன விஷயம் ஒன்று கண்டுபிடித்தேன். இறந்த பெண்ணின் இடது உள்ளங்கையில் தம்பிடி அளவு அகலமுள்ள சிவப்பான தழும்பு ஒன்று இருந்தது. பார்ப்பதற்கு அது



மச்சம்போல் தோன்றினாலும் உண்மையில் அது மச்சமல்ல.

**இன்ஸ்:** ஒருவேளை விஷம் அவ்விடத்தில் ஊசியின் மூலமாகக் குத்தி ஏற்றப்பட்டு அதனால் இப்பெண் இறந்திருக்கக்கூடுமா?

**டாக்டர்:** அப்படி அபிப்பிராயப்பட்டுத்தான் நானும் துரை ஹெண்டர்ஸனும் இரத்தத்தைப் பரிக்ஷித்தோம். அப்படி விஷத்துக்குரிய குறியொன்றையும் இரத்தம் காண்பிக்கவில்லை.

**இன்ஸ்:** அப்படியானால் எந்தக் காரணத்தைக் கொண்டு அந்த ஸ்திரீ இறந்தாளென்று கருதுகிறீர்?

**டாக்டர்:** ஆங்கில வைத்திய முறையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் நிலையில் திடீரென்று இருதயம் நின்று போய்விட்டதன் காரணமாக மரணம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

**இன்ஸ்:** சரி, நீர் போகலாம்.

அடுத்தபடி முதலில் பிணத்தைப் பார்த்த போலீஸ் ஜவான் விசாரிக்கப்பட்டான்.

**இன்ஸ்:** உனக்கு இந்தக் கேஸைப் பற்றி என்ன தெரியும்?

**ஜவான்:** ஸார்! நேற்றுக் காலை சுமார் பத்து மணிக்கு அதோ நிற்கும் வண்டிக்காரன் என்னை சீக்கிரம் வரும்படி கையைத் தட்டிக் கூப்பிட்டான். நான் சென்று பார்த்தபொழுது வண்டிக்குள்ளிருந்த பெண் பிணமாய்க் கிடந்தாள். இதற்குள் ஸப் இன்ஸ்பெக்டரும் வந்துவிட்டார். நாங்கள் பிணத்தை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் ஒப்புவித்தோம். இவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

**இன்ஸ்:** அந்தப் பெண்ணின் பெட்டியிலிருந்த வஸ்துக்கள் என்னவென்று கவனித்தீர்களா? அவளுடைய உறவினர் - சிநேகிதர் எவரிடமிருந்தாவது வந்த கடிதங்கள்

ஏதாவது இருக்கின்றனவா என்று பார்த்தீர்களா?

**ஜவான்:** நானும் ஸப்இன்ஸ்பெக்டரும் பெட்டியைப் பரிசோதித்தோம். அதில் பெண்ணுக்கு வேண்டிய புடைவை ரவிக்கைகளைத் தவிர இரண்டு மோதிரங்களும் ஒரு கடிதமும் கிடைத்தன.

**இன்ஸ்:** அவை எங்கே?

''இதோ வைத்திருக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே பக்கத்திலிருந்த ஸப்இன்ஸ்பெக்டர் மேஜைமேல் கடிதத்தையும் மோதிரங்களையும் வைத்தார். இன்ஸ்பெக்டர் கடிதத்தைப் பிரித்துப் பஞ்சாயத்தாருக்கு வாசித்துக் காட்டலானார்.

காட்டுப்புத்தூர்,

ஜோதிபாய்,

நீ எந்தக் காரியத்தை நாடிச் செல்லுகின்றாயோ அதை ஜாக்கிரதையாகச் செய்து முடிக்க வேண்டும். நான் தற்சமயம் திருச்சியை விட்டு வரக்கூடாத நிலைமையில் இருக்கிறேன். இல்லாவிட்டால் உன்னைத் தனியாகச் சென்னைக்கு அனுப்ப ஒரு நாளும் உடன்பட மாட்டேன். ஒவ்வொரு திங்கட்கிழமை மாலையும் சரியாக ஐந்து மணிக்கு உன்னை ஹோட்டல் வாசலில் சந்திக்கத் தவறமாட்டேன். ஜமீன்தாரிடம் நெருங்கிப் பழகாதே.

குள்ளநரி

இதை வாசித்து முடித்ததும் ''பலே! சரியான குள்ளநரிதான். பேர் கிடையாது. எந்த ஹோட்டல் என்றும் குறிப்பிடவில்லை. சென்னையிலுள்ள ஆயிரம் ஹோட்டல்களில் எந்த ஹோட்டலில் திங்கட்கிழமை மாலை போய்க் காத்திருப்பது? காத்திருந்து எவனென்று கண்டுபிடிப்பது?'' என்று ஸப் இன்ஸ்பெக்டர் முணுமுணுத்தார்.



பஞ்சாயத்துக்காரர்கள் வெகுநேரம் ஒருவரை யொருவர் கலந்து யோசித்தார்கள். கடைசியில் அவர்களில் தலைமையானவர் எழுந்து பேசலானார்.

''இன்ஸ்பெக்டரவர்களே! தாங்கள் கடைசியில் வாசித்த கடிதம் ஒன்றுதான் பலவிதச் சந்தேகங்களைக் கிளப்பி விடுகிறது. கடிதம் எழுதின மனிதன் ஏன் தன் பெயரைக் குறிப்பிடவில்லை? அவன் ஏன் அவளை ஹோட்டல் வாயிலில் சந்திக்க முயலுகிறான்? பகிரங்கமாக அவளை ஏன் வீட்டில் போய்ப் பார்க்கக்கூடாது? இந்த ஜமீன்தார் யார்? இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் ஜமீன்தாரும் ஸ்டேஷனுக்கு வந்த ஜமீன்தாரும் ஒரே மனிதர்தானா?

''கடிதம் இவ்வளவு சந்தேகங்களைக் கிளப்பி விடலாம். ஆனால் அர்த்தமற்ற சாதாரண வார்த்தைகளாகவும் இருக்கலாம். கடிதம் எழுதின மனிதனுக்கும் இப் பெண்மணிக்கும் ரகசியமான தொடர்பு இருக்கக்கூடும். ஆகவே அவன் பயப்பட்டுக் கடிதத்தில் தன் பெயரைக் குறிப்பிடாதிருக்கலாம். வீட்டுக்குப் போய்ச் சந்தித்தால் அவள் உறவினருக்குத் தெரிந்துபோகுமென்ற பயத்தால் ஹோட்டல் வாசலில் சந்திக்கும்படி எழுதியிருக்கலாம். சாதாரணமாகவே அந்தப் பெண்ணை ஜாக்கிரதையாய்ப் போய் வரும்படி எழுதியிருக்கலாம்.

''டாக்டர் கோபாலன் வாக்குமூலப்படி இப்பெண் சாதாரண மரணத்தை அடைந்திருக்கிறாள் என்றே நாங்கள் நம்பவேண்டி இருக்கிறது. ஆங்கில வைத்திய முறையால் பார்க்கும் வரையில் இது சாதாரண மரணமென்றுதான் டாக்டர் கூறியிருக்கிறார். ஆங்கில முறை ஒன்றைக் கொண்டுதான் நாம் தற்காலத்தில் தீர்ப்புச் சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படிக் கடிதத்தின் பிரகாரம் ஜமீன்தாராவது அல்லது இவளுடன் கூட வந்த மனிதாவது இவளுக்குத் தீங்கிழைக்க எண்ணியிருந்தாலும் டாக்டர் மரணம் சாதாரணமாக ஏற்பட்டதென்று கூறுவதால் அவர்கள் யாதொரு தீங்கும்

இழைக்கவில்லையென்றே ஏற்படுகிறது. ஆகவே நாங்களும் இதைச் சாதாரணமாக ஏற்பட்ட ஒரு மாணமென்றுதான் எண்ணுகிறோம்'' என்று சொல்லி உட்கார்ந்தார்.

இன்ஸ்பெக்டரும் அவ்வாறே அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பு எழுதிவிடவே கூட்டம் கலைந்தது. ஆனால், அங்கு விஜயம் செய்திருந்தவர்களில் ரகசியப் போலீஸ் இலாக்கா டிப்டி சூப்பிரண்டெண்டு குப்புசாமி ராஜா மட்டும் பஞ்சாயத்துக்காரர்களின் தீர்ப்பில் சிறிதும் திருப்தியில்லாதவராய் தம் துடையில் கையிலிருந்த பிரம்பால் 'டப்டப்' என்று அடித்துக்கொண்டே ஆழ்ந்த யோசனையுடன் வெளியேறினார்.

அத்தியாயம் - 3

## கூட்டமும் குழப்பமும்

இடி மின்னல் குமுறலுடன் வானில் கார்மேகம் கர்ஜித்துக் கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த சமுத்திரம் 'ஓஹோ' வென்று இரைந்தவண்ணம் பெரிய அலைகளைக் கரைக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. இவற்றுடன் போட்டி போடுகிறாப்போல் ஒரு சிறுவன் ஹைகோர்ட்டுக் கடற்கரையில் தொண்டை கிழிய 'வந்தேமாதரம்' கீதம் பாடிக்கொண்டு நின்றான். அவனுக்குப் பக்கத்தில் இரண்டு பெட்ரோமாக்ஸ் விளக்குகள் போடப்பட்டிருந்ததையும், ஒரு கதர்க்கொடி காற்றில் பட்பட்டென்று அடித்துக்கொண்டு கம்பீரமாய், பறப்பதையும், எதிரே கதர் உடையணிந்த பத்துப் பதினைந்து பேர் நிற்பதையும் பார்க்கும்போது, அவ்விடத்தில் ஏதோ பொதுக்கூட்டம் நடக்கப்போவதாகத் தோன்றியது.

சற்றுத் தூரத்திற்கப்பால் இரண்டு மூன்று பத்திரிகை நிருபர்கள் பென்சில்களைச் சீவிக்கொண்டு உலாவிக்கொண்டிருந்ததை கவனித்தபோது அக்கம்பக்கத்தில் போய்க்கொண்டிருந்த மக்களுக்குக் கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தேகமும் நீங்கி விட்டது. இருந்தாலும் அப்படிப் பொதுக்கூட்டம் போட்டதைப்பற்றி ஆச்சரியப்பட்டுக் கொண்டே ஜனங்கள் கொஞ்சங் கொஞ்சமாகக் கூடலானார்கள். அவர்களில் ஒருவர் பத்திரிகை நிருபர்களை அணுகி ','என்ன சார், இன்றைக்கு என்ன விசேஷம்? இந்த மாதிரிக்கூட்டம் போட்டிருக்கிறார்களே?'' என்று கேட்டார்.

''பலராம ஐயரை ஜெயிலிலிருந்து விட்டுவிட்டார்களாம்! அவர் பேசுவதற்காக, காங்கிரஸ்

கமிட்டியார் கூட்டம் போட்டிருக்கிறார்கள்'' என்று பத்திரிகைக்காரர்கள்பதில் சொன்னார்கள்.

இந்தச்செய்தி காட்டுத்தீபோல் அங்கு உட்கார்ந்திருந்த மக்களிடை பரவிவிட்டது. அத்தனை ஜனங்களும் பிரபல காங்கிரஸ் தலைவரான பலராம ஐயர் வரவை மிகுந்த ஆச்சரியத்துடன் எதிர்நோக்கி இருந்தார்கள். வானம் பிசுபிசுவென்று தூறிக்கொண்டிருந்ததாலும் ஜனங்கள் அதை லட்சியம் செய்யவில்லை. உரக்கக் கத்திக் கொண்டிருந்த பையன் பாட்டையும் கேட்கவில்லை. அவர்கள் கேட்காவிட்டாலும்பையன்பாட்டை நிறுத்தவில்லை.

பொதுக் கூட்டம் நடப்பதில் ஆச்சரியம் என்ன இருக்கிறதென்று சிலர் கேட்கலாம். நமது கதை நடக்கும் காலத்தில் அது ஒரு ஆச்சரியமாகத்தான் இருந்தது. 1930-வது வருஷம்அப்பேர்ப்பட்ட வருஷம்.

சில ஸ்தலங்களில் நாலு பேருக்குமேல் கும்பல் நின்றால் சட்டவிரோதமான கும்பலென்று அறிவிக்கப்பட்ட காலம். பலவித அவசரச் சட்டங்கள் அமலில் இருந்த காலம். தினமொன்றுக்குச் சராசரி இரண்டணாக்கூட சம்பாதிக்க வழியற்று வறுமை மிகுந்து உடம்பு ஒடுங்கி உணர்ச்சி யிழந்து கிடந்த மக்கள் திடீரென்று உணர்ச்சி பெற்று, தேசத்தின் அழைப்புக்கிணங்கித் தியாகம் செய்ய முன் வந்ததைக் கண்டு உலகமே அதிசயித்த காலம்.

ஜெயில்கள் இந்துதேச வீர ஸ்திரீகளாலும், புருஷர்களாலும் நிரம்பி மேவழிந்த காலம். ஆயுத பலத்தைவிட ஆத்மசக்தியே சிறந்தது என்பதை உலகத்துக்கு இந்தியா அறிவித்த காலம். சில பொதுக்கூட்டங்களைப் போலீஸார் தடி கொண்டு தாக்கிக் கலைத்த காலம். தர்சனா என்ற இடத்தில் நடந்த உப்பு சத்தியாக்கிரகக் காட்சியைப் பார்த்த ஐரோப்பிய நிருபரான வெப் மில்லர் 'நியூ பிரீமென்' பத்திரிகையில் பின்வருமாறு எழுதினார்:-



''சென்ற பதினெட்டு வருஷங்களாகச் சுமார் இருபத்திரண்டு தேசங்களில் பத்திரிகை நிருபர் வேலை செய்திருக்கிறேன். பலவகையான கலவரங்களையும் தெருச் சண்டைகளையும் பார்த்திருக்கிறேன். ஆனால் தர்சனாவில் கண்ட காட்சிகள் சில சமயங்களில் மனத்துக்கு மிகுந்த வேதனையைக் கொடுப்பவையாக இருந்தபடியால் நான் முகத்தைச்சிறிது நேரம் திருப்பிக்கொண்டு என்னை ஆச்வாசப் படுத்திக்கொள்ளவேண்டியதாயிருந்தது.''

அப்படியிருந்தது போலீஸ் தடியடி. அதே காட்சியைக் கண்ணுற்ற இந்திய சேவக சங்க அக்கிராசனரான ஸ்ரீ ஜி. கே. தேவதார், ஸ்ரீ கே. நடராஜன், பம்பாய் ஸ்மால்காஸ் கோர்ட் மாஜி ஜட்ஜ் ஜனாப் ஹுசேன் இவர்கள் மூவரும் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டார்கள்:-

''உப்பு நிலையத்தின் எல்லையை விட்டுச் சத்தியாக்கிரகிகளை விரட்டிய பிறகு குதிரை மீது ஆரோகணித்துக் கைகளில் தடிகளுடன் வந்த ஐரோப்பியப் போலீஸ் படையினர் தங்கள் குதிரைகளை வேகமாக ஓட்டி, தடிகளால் ஜனங்களை அடித்தனர். கிராமம் முழுவதும் நாலுகால் பாய்ச்சலில் குதிரைகளைவிட்டுப் பெண்களையும், புருஷர்களையும், குழந்தைகளையும் அடித்து வீழ்த்திக்கொண்டு சென்றனர். மக்களில் சிலர் சந்துகளில் ஓடிவிட்டனர். மற்றும் சிலர் வீடுகளில்புகுந்து கதவைச்சாத்திக் கொண்டனர். தப்பிக் கொள்ள முடியாதவர்கள் அடி பட்டார்கள்.''

கூட்டங்கள் மேற்கூறிய வழிகளில் கலைக்கப்பட்ட காலம். ஆகையால் சென்னை ஹைகோர்ட்டு கடற்கரையில் கூடிய ஜனங்களுக்கு பொதுக்கூட்டம் நடத்தப் படுகிற தென்றால் ஏன் ஆச்சரியம் ஏற்படாது?

உட்கார்ந்திருந்தவர்களில் சிலர், ''இந்தக் கூட்டத்துக்கு ஏன் 144 போடவில்லை?'' என்று பக்கத்திலிருந்தவர்களைக் கேட்டார்கள். ''ஒருவேளை பலராம ஐயர் பேச ஆரம்பித்தபின்

போலீஸார் குதிரைமேல் வந்து குண்டாந்தடிப் பிரயோகம் நடத்துவார்களோ?'' என்று மற்றும் சிலர் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை. போலீஸார் கூட்டத்தைத் தடுத்து 144 போடவுமில்லை; குண்டாந்தடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைக்கவுமில்லை.

பலத்த கரகோஷத்தினிடையே இரு கைகளையும் கூப்பியவண்ணம் பலராம ஐயர் கூட்டத்திற்குள் நுழைந்தார். அதுவரை மேஜைமீது பக்கத்தில் நின்றுகொண்டு இடைவிடாது பாடிக்கொண்டிருந்த தொண்டன் பாட்டை நிறுத்தினான்.

முதலில் பலராம ஐயருக்கு நல்வரவு கூறிய ஒரு தலைவர், ''சகோதரர்களே! இன்று நமது தலைவர் விடுதலை செய்யப்பட்டதைக் குறித்து நீங்கள் சந்தோஷப்பட வேண்டாம். நாளைக்கே அவர் ஜெயிலுக்குப் போவது நிச்சயம். தேச விடுதலைப் போர் நடக்குங் காலத்தில் எந்தத் தேசபக்தன் தான் அமைதியுடன் வீட்டில் உட்கார்ந்திருக்க முடியும்?'' என்று சொல்லி உட்கார்ந்தார்.

பிறகு பலராம ஐயர் பேச எழுந்தார். அவர் பேச ஆரம்பிக்கையில் பக்கத்திலிருந்த ஒரு பையன், ''பலராம ஐயருக்கு ஜே!'' என்று கூச்சல் போட்டான். ஜனங்களும் கூச்சல் போட்டார்கள். மேலும் அவன், ''மகாத்மா காந்திக்கு...'' என்று ஆரம்பித்தபோது பலராம ஐயர் அவனுக்குச் சமிக்ஞை காட்டி, ''அப்பா போரும், உட்காரு'' என்று சொல்லி அடக்கிவிட்டுப் பேசலானார்.

''சகோதரர்களே! தாய்மார்களே! இன்று நான் உங்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளிக்க வேண்டியிருப்பது பற்றி வருந்துகிறேன். எனக்கு முன் பேசியவர் நான் மறுபடியும் நாளைக்கே ஜெயிலுக்குப் போவேனென்று சொன்னார். அப்படியொன்றும் நான் செய்யப் போவதில்லை'' என்ற



வார்த்தைகளுடன் தமது பிரசங்கத்தை ஆரம்பித்தார். இத்தகைய வார்த்தைகளை அந்தக் காலத்தில் எந்தத் தேசியத் தலைவனிடமிருந்தும் ஜனங்கள் எதிர்பார்க்கவில்லை. அப்படியிருக்க பலராம ஐயர் இங்ஙனம் பேசி முடித்தவுடன் கூட்டத்திலிருந்த ஜனங்களுக்குச் சிறிது சந்தேகமேற்பட்டது. நடுத்தர வயதுள்ள ஒரு மனிதன் இந்த வார்த்தைகளை உற்றுக் கேட்டான். உடனே கூட்டத்தின் நடுவே எழுந்து நின்று, ''ஏன் ஜெயிலுக்குப் போகப்போவதில்லை?'' என்று கேட்டான். அவனைத் தொடர்ந்து மக்கள் பலரும் ''ஏன்? ஏன்?'' என்று கேட்டார்கள்.

''சகோதரர்களே! அவசரப்படாதீர்கள், சொல்லுகிறேன். எனக்கோ வயதாகிவிட்டது...'' என பலராமையர் வார்த்தையை முடிக்குமுன்பே முதலில் கேள்வி கேட்ட மனிதன் மறுபடியும் எழுந்து, ''இந்தத் தடவை ஜெயிலுக்குப் போனதற்கு முன்பு உங்களுக்குப் பால்ய வயதோ?'' என்றான். ஜனங்களில் சிலர் சிரித்தார்கள்.

கூட்டத்தில் பலராம ஐயரிடத்திலுள்ள பிரேமையினால் சிலர் கேள்வி கேட்ட மனிதனை அடிக்க ஓடினார்கள். ஆனால் அவன் தனியாக வரவில்லை. அவனுடன் வந்திருந்த பத்துப் பதினைந்து வாலிபர்கள் அடிக்க வந்தவர்களை எதிர்க்கலானார்கள். கேள்வி கேட்ட மனிதன் எல்லாரையும் கையமர்த்தி விட்டு, பலராம ஐயரை நோக்கி, ''உங்களுக்கு ஆறுமாதம் சிறைவாசம் கொடுத்தார்களே, ஏன் ஒரு மாதத்திற்குள் விட்டுவிட்டார்கள்?'' என்று கேட்டான்.

பலராம ஐயர் பதில் சொல்ல வாயெடுக்குமுன் கூட்டத்தில் பெருங் குழப்பமேற்பட்டது. பலராம ஐயரை நோக்கி மலைப்பிஞ்சுகள் பறந்தன. சில ஜனங்கள் கேள்வி கேட்ட மனிதனைத் தாக்க முயற்சித்தார்கள். ஆனால் அம் மனிதன் வெகு சாமர்த்தியமாகத் தப்பிக்கொண்டு பலராமையர் இருந்த இடத்திற்கு ஓடினான். கூட்டத்தில் குழப்பமேற்பட்டு விட்டதால் தூரத்திலிருந்த போலீசாரும் நெருங்கி வந்தார்கள்.

கேள்வி கேட்ட மனிதன் பலராம ஐயரை நெருங்கி அவர் கையைப் பிடித்திழுத்துக் கொண்டு ரோட்டிற்கு வந்து அங்கு நிறுத்தப்பட்டிருந்த காரில் அவரையும் ஏற்றித் தானும் ஏறிக்கொண்டான். மோட்டார் வேகமாகப் பறந்து சென்றது.

மோட்டாருக்குள் சுகமாகச் சாய்ந்துகொண்ட பலராம ஐயர் தமது பக்கத்திலிருந்த மனிதனைப் பார்த்து, ''என்ன சாஸ்திரி! இன்றைக்கு என்ன கலாட்டா பண்ணுகிற தென்றே கூட்டத்திற்கு வந்தாயா?'' என்றார்.

''அதிருக்கட்டும் பலராம ஐயர். நான் கேட்ட கேள்விகளில் தவறு ஏதேனுமிருக்கிறதா?'' என்று கேட்டான் சரப சாஸ்திரியென்ற அம்மனிதன்.

பலராம ஐயர் பதில் சொல்லவில்லை. ''ஆமாம், எனக்குந்தான் ஆச்சரியமா இருக்கிறது. ஆறு மாதம் சிறைவாசம் அளித்துவிட்டு உம்மை ஏன் ஒரு மாதத்திற்குள் வெளியே விட்டார்கள்?'' என்று மீண்டும் கேட்டான் சரபசாஸ்திரி.

''என்ன நீ கூட இம்மாதிரி கேட்கிறாய் சாஸ்திரி! ஒழுங்காக ஜெயிலில் நடந்துகொள்பவர்களைச் சீக்கிரமாக விடுதலை செய்யலாமென்று சட்டமில்லையா?'' என்றார், பலராம ஐயர்.

''ஓகோ! அப்படியா சங்கதி, ரொம்ப சரி, எப்படி இருந்தபோதிலும் நீங்கள் விடுதலை யடைந்ததைப் பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம்!'' என்று சரப சாஸ்திரி கூறினான்.

பலராம ஐயர் சிறிது நேரம் மௌனமாயிருந்தார். சரப சாஸ்திரி மீண்டும் பேச்சு கொடுத்தான். ''அது கிடக்கட்டும்; மவுண்டு ரோட்டுக் கொலையைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டான்.

**பலராம ஐயர்:** மவுண்டு ரோட்டில் நடந்ததை ஏன் கொலையென்று சொல்லுகிறாய்? அது சாதாரண மரணமல்லவா? பஞ்சாயத்தார் தீர்ப்பை நீ கவனிக்கவில்லையா?



**சரபசாஸ்திரி:** இல்லை, டாக்டர் கோபாலன் வாக்குமூலத்தைத்தான் ஊன்றிக் கவனித்தேன்.

**பலராம ஐயர்:** இருதயம் நின்றுபோய் விட்டதால் பெண் இறந்தாளென்றல்லவா டாக்டர் சொல்கிறார்.

**சரபசாஸ்திரி:** இருதயம் நிற்காவிட்டால் யாரை யாவது இறந்ததாகச் சொல்லுவதுண்டா?

**பலராம ஐயர்:** கிடையாது... ஆனால்....

''ஆனால் என்ன ஆனால்...? இருதயம் நிற்காவிட்டால் யாரையும் இறந்ததாகச் சொல்லமுடியாது. ஆகையால் இருதயம் நிற்பதற்குக் காரணம் கண்டுபிடிக்கவேண்டும். இதற்கு ஆங்கில வைத்தியத்தில் எதுவும் வழியில்லை. ஆயுர்வேதம் போன்ற மற்ற வைத்திய முறைகளுக்கு இந்தக் காலத்தில் மதிப்பில்லை. ஆகவே கொலை என்ற சம்சயம் இருந்தால்கூட அதைப்பற்றி ஆராய வேண்டியதில்லை. சாதாரண மரணம் என்று சொல்லிவிடலாம். அதை எல்லோரும் ஒப்புக்கொண்டு சும்மா இருக்க வேண்டியதுதான்'' என்று சொல்லி சரப சாஸ்திரி சிரித்தான்.

''நீ என்ன இதைக் கொலை என்றா சொல்லுகிறாய்?'' என்று கேட்டார் பலராம ஐயர்.

**சரபசாஸ்திரி:** சந்தேகமென்ன!

**பலராம ஐயர்:** அப்படியானால் கொலை செய்தவன் யார்?

**சரப சாஸ்திரி:** நீங்கள் கூடவா இப்படிக் கேட்பது? அந்தப் பெண் கூடவே ஒரு மனிதன் வருகிறான். அவன் மறைந்த மறுநிமிடத்தில் பெண் பிணமாய்க் கிடக்கிறாள். இதிலிருந்து நீங்களே ஊகித்துக் கொள்ளலாகாதா?

''அந்த மனிதன் யாராயிருக்கலாம்?'' என்று கேட்டார் பலராம ஐயர்.

''என்ன பலராம ஐயர்வாள்! வக்கீல் உத்தியோகத்தை என்னிடமே காட்டுகிறாய் போலிருக்கிறது. கூண்டில் ஏறியிருப்பவனைக் கேள்விமேல் கேள்வி கேட்டு, அவன் உண்மையைச் சொல்ல விரும்பினாலும் உளற அடித்து விடுகிறீர்களே. அந்த மாதிரி என்னிடமும் செய்ய நினைக்கிறீர்களா? நீர் கேட்கும் கேள்விகளைப் பார்த்தால் நான்தான் கொலை செய்தேனென்று சொல்லுகிறாப் போல் அல்லவா இருக்கிறது'' என்று கூறிவிட்டுச் சரப சாஸ்திரி சிரித்தான். பலராம ஐயரும் கூடச் சிரித்தார்.

அதுவரையில் சம்பாஷணையில் ஆழ்ந்திருந்த பலராம ஐயர் மோட்டாருக்கு வெளியே பார்த்தார். மோட்டார் எழும்பூர் ஸ்டேஷனுக்கருகில் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தவுடன் அவருக்குக் கொஞ்சம் சந்தேகமேற்பட்டது.

''சாஸ்திரி! நாம் மயிலாப்பூருக்கு அல்லவா போக வேண்டும்? மோட்டாரை இந்தப் பக்கமாக விட்டுக் கொண்டு வந்துவிட்டானே, ஒருவேளை நீ ஜாகையை எழும்பூருக்கு மாற்றி கொண்டு விட்டாயோ?'' என்று கேட்டார்.

''இல்லை, ஜாகையைத் திருச்சினாப்பள்ளிக்கு மாற்றிக் கொண்டு விட்டானே'' என்றான் சரப சாஸ்திரி. இதைக் கேட்டதும் பலராம ஐயருக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''இப்பொழுது நாம் எங்கே போகிறோம்?'' என்று பலராம ஐயர் வினவினார்.

''திருச்சினாப்பள்ளிக்குத்தான், பலராம ஐயர்! சரப சாஸ்திரியை லேசுபட்டவன் என்று நினைத்தீரா? எதற்காக நீர் விடுதலை செய்யப்பட்டீரோ அந்தக் காரியம் ஒரு நாளும் கைகூடாது. மயிலாப்பூரிலுள்ள வீட்டைக் காலி செய்து விட்டேன். எனது சாமான்கள் எழும்பூர் ஸ்டேஷனில் மெயில் வண்டியில் இருக்கின்றன. உமக்கும் எனக்கும் இரண்டாம் வகுப்பு டிக்கட்டுகள் வாங்கி இடங்களை ரிசர்வ் செய்திருக்-



கிறேன். நாம் இரண்டு பேரும் இப்பொழுதே திருச்சிக்குப் பிரயாணமாகிறோம்'' என்றான் சரபசாஸ்திரி.

''கூட்டத்தில் நான் பேசத் தொடங்கினால் வண்டி கிடைக்காதென்றுதான் ரகளை செய்து கூட்டத்தைக் கலைத்துவிட்டாயா?'' என்று கேட்டார் பலராம ஐயர்.

''ஆமாம். உண்மையைப் பட்டென்று ஊகித்து விட்டீரே! பலராம ஐயர், நீர் மிகுந்த புத்தி கூர்மையுடையவர்தான். ஆனால் எல்லாப் புஷ்பங்களிலும் தேன் எடுக்கும் வண்டின் ஜபம் எப்படி செண்பகப் பூவிடம் மட்டும் சாய்வதில்லையோ அந்த மாதிரி உம்முடைய புத்திசாலித்தனம் சரப சாஸ்திரியினிடத்தில் மட்டும் செல்லாது'' என்றான்.

இதற்குள் ஸ்டேஷன் வந்துவிட்டது. இருவரும் மெயிலில் ஏறி உட்கார்ந்த சில நிமிடங்களில் மெயில் ஊதிக் கொண்டு புறப்பட்டது. அதே சமயத்தில் மயிலாப்பூரில் சரப சாஸ்திரியிருந்த வீட்டுக்கு டிப்டி சூப்பரிண்டெண்டு குப்புசாமி ராஜா இரண்டு ஸப் இன்ஸ்பெக்டர்களுடன் வந்து சாஸ்திரியின் அறையை நோக்கிச் சென்றார். அறை காலியாக இருந்ததைக் கண்டு ஸ்தம்பித்து நின்றனர்.

முடிவில் பக்கத்திலிருந்த ஸப்இன்ஸ்பெக்டரை வருத்தம் கலந்த முகத்துடன் நோக்கி, ''ஜோதிபாய் கொலையின் காரணத்தை விளக்கக் கூடிய ஒரு முக்கியமான சாட்சியைக் கைது செய்யவே இங்கு வந்தேன். அவன் எனக்கே பெரிய நாமமாகக் குழைத்துப் போட்டு விட்டான். இருக்கட்டும். நாளைக்கே திருச்சிக்குப் பிரயாணமாகிறேன். வேறு வழியில்லை'' என்றார்.

அத்தியாயம் - 4

## படித்தது போதும்

வண்டல் மண் கலந்த தனது வெள்ளத்தால் பயிர்களுக்கு நல்ல செழிப்பைக் கொடுத்து தஞ்சை, திருச்சியென்னும் இரண்டு ஜில்லாக்களிலுள்ள மக்களுக்கு உணவளித்து வரும் காவிரித் தாயாரின் கரைமேல் நிர்மாணிக்கப்படும் பாக்கியத்தைப் பெற்ற திரிசிபுரம் என்ற திருச்சினாப்பள்ளி இந்தியாவின் புராதன நகரங்களிலொன்றாக விளங்கி வருகிறது.

'குடதிசை முடியை வைத்துக் குணதிசைப் பாதம் நீட்டி வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கை நோக்கி, அரவணையில் படுத்திருக்கும் பகவானுடைய நேர் திருஷ்டியில் நிலைத்திருக்கும் பாக்கியத்தையும் பெற்றிருக்கிறது அந்நகரம்.

சரித்திரப் பிரசித்தியும் அதற்கு உண்டு. இந்தியாவின் சரித்திரப் போக்கையே திடீரென மாற்றிவிட்ட நகரம். அன்வருத்தீன்கான் மகனான மகமது ஆலியைத் தீர்த்துவிட்டு, தானே கர்நாடக நவாப் ஆகிவிட வேண்டுமென்று சந்தா சாகிப் திருச்சினாப்பள்ளியை முற்றுகையிடாமற் போனால், 1748-வது வருஷம் ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்த இங்கிலீஷ்காரர்கள் விழித்துக் கொள்ளப் போவதில்லை. டூப்ளேயின் அதிகாரமே ஓங்கிப் பிரஞ்சு ஆட்சி இந்திய நாட்டில் நிலைத்திருக்கும்.

இங்கிலீஷ்காரர்களின் நல்ல காலம் கிளைவ் சமயத்தில் யோசனை சொன்னான். திருச்சி முற்றுகையில் சந்தா சாகிப்



வெற்றி பெற்று அன்வருத்தீன் குடும்பம் நசித்து விட்டால் இந்தியாவில் இங்கிலீஷ்காரர்களுக்கு இடமில்லையென்பதை எடுத்துக் காட்டினான். பிறகு கிளைவ் ஆர்க்காட்டை முற்றுகையிட்டது, சந்தா சாகிப் திருச்சியிலிருந்து அனுப்பிய சைன்னியத்தை முறியடித்தது முதலான விஷயங்கள் இந்திய சரித்திரத்தில் விவரமாகக் கூறப்பட்டன. ஜெனரல் லாரன்ஸூம், கிளைவும் திருச்சியை முற்றுகையிட்டவர்களை முறியடித்த பிறகுதான், இந்தத் தேசத்தில் ஆங்கில சாம்ராஜ்யம் வேரூன்றத் தொடங்கியதென்றும் சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

1748-வது வருஷத்தில் தேச சரித்திரத்தை வேறுவழியில் திருப்பிவிட்ட திருச்சினாப்பள்ளி 1930-வது வருஷத்தில் அப்படித் திருப்பிவிட்ட சரித்திரத்தை மாற்றி எழுத ஆரம்பித்தது. 1748-வது வருஷத்தில் அதிகாரத்தைப் பிரெஞ்சுக்காரர் கையிலிருந்து ஆங்கிலேயர் கைகளுக்கு அந்நகரம் மாற்றிவிட்டதென்றால் 1930-வது வருஷத்தில் ஆங்கிலேயர் கையிலிருக்கும் அதிகாரத்தைச் 'சுதேச மக்கள்' கைக்கு மாற்றத் தொடங்கியதென நாம் சொல்லலாம்.

1930-வது வருஷம் 13-ஆம் தேதியன்று நூறுபேர் கொண்ட தொண்டர் படையுடன் தமிழ்நாட்டில் சத்தியாக்கிரகப் போர் தொடங்கிய ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார் தமது வேதாரண்ய யாத்திரையைத் திருச்சியிலிருந்துதான் தொடங்கினார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

1930-வது வருஷத்திய சத்தியாக்கிரக இயக்கத்தை ஆங்கில சாம்ராஜ்யம் வேரூன்றத் தொடங்கிய நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட முடியுமா வென்று சிலர் கேட்கலாம். நமது தேசத்து சத்தியாக்கிரக இயக்கம் வெளி தேசத்தாரின் பார்வைக்குச் சாமானியமாக இருக்கலாம். ஆனால் நமக்கு அது பெரிய இயக்கம். விடுதலைப் போரின் முதல் படி. தேசிய எழுச்சியின் அடையாளம். ''அந்த சத்தியாக்கிரகம் எவ்வளவு தூரம்

வலுத்தது? விடுதலைப் போரில் தமிழ்நாடு எவ்வளவு சிறந்த பங்கை எடுத்துக் கொண்டது?'' என்ற விஷயங்களை வாசகர்கள் அறிவார்கள். அதன் பலனையும் இப்பொழுது அநுபவித்து வருகிறார்கள். அத்தகைய இந்நகரத்தில் நிகழ்ந்த சிலசம்பவங்கள்தான்நமது கதையின்போக்கையும் வெகுவாக மாற்றிவிட்டன. அப்படி மாற்றியிருக்காவிட்டால் இந்த மாகாணத்தில் என்னென்ன விபரீதங்கள் நேரிட்டிருக்குமோ சொல்ல முடியாது.

மழைக்காலம் போய்ச் சரத்காலம் வந்தது. டிஸம்பர் மாதம் ஆரம்பித்துவிட்ட போதிலும் காவிரியில் ஜலம் கொஞ்சம்கூடக் குறையவில்லை. ஏற்கனவே பெய்த மழை மும்முரமானதால் பிரவாகம் பூரணமாகப் போய்க் கொண்டிருந்தது. ஒரு நாள் சூரியோதய காலம். காலைச் சூரியனின் இளங் கிரணங்கள் நீரில் பிரதிபலிப்பதால் காவிரியின் நீர் முழுவதும் பளபளவென்று பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. மேல் சிந்தாமணிப் படித்துறையின் ஒரு புறத்தில் இளமங்கைகள் சிலர் குளித்துக் கொண்டிருக் கிறார்கள். அவர்கள் மஞ்சள் தேய்க்கும்போது கைகள் அசைவதால் ஏற்படும் வளைகளின் ஓசையும், ஒருவரையொருவர் பரிகாசம் செய்துகொண்டு கலீரென்று சிரிக்கும் சப்தமும் காதில் சங்கீதம் போல் விழுகின்றன. அவர்கள் தலையில் சூட்டி யிருக்கும் வாசனை மலர்களிலிருந்து விழுந்த இதழ்கள் தண்ணீரில் மிதந்து சென்று கொண்டிருக்கின்றன. பக்கத்திலிருந்த மண்டபத்தில் ஏறி வாலிபர்கள் சிலர் திடீர் திடீரென்று தண்ணீரில் குதித்துக் கொண்டிருக்கிறார்கள். நடுக் காவேரியில் இரண்டு மூன்று பரிசல்கள் மிதந்து சென்று கொண்டிருக்கின்றன. மற்றொரு கரையில் சில சிறுவர்கள் மாடுகளை வெள்ளத்தில் விட்டடித்துத் தாங்களும் அவற்றுடன் நீந்திச் சுழன்று சுழன்று வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த மாடுகளின் கழுத்திலிருக்கும் சலங்கைகள் அசைவதால் ஏற்படும்



சப்தமும், மயிலை பாய்ந்த அந்தக் காளைகளின் நிர்மலமான கருவிழிகளின் நோக்கும் தண்ணீர் மூக்கிலேறுவதில் தலையை ஆட்டி அவை சீறுவதின் சப்தமும்... ஆஹா! எவ்வளவு சுகம்!

இவற்றையெல்லாம் மாறி மாறிப் பார்த்து, ''என்ன அற்புதமான காக்ஷி!'' என்று பிரமித்து நின்று கொண்டிருந்தார் சென்ற எட்டு வருஷங்களாகக் குழாய் நீரையும் கூவம் நதியையும் தவிர வேறொன்றையும் கண்டிராத டாக்டர் கோபாலன். டாக்டர் கோபாலனுக்குச் சுமார் இருபத்தெட்டு வயதிருக்கும். கலாசாலைப் படிப்பை திருச்சி னாப்பள்ளியில்தான் முடித்துக் கொண்டார். பிறகு சென்னைக்குச் சென்று ஐந்து வருஷங்கள் வைத்தியக் கல்லூரியில் படித்துத் தேறி, சென்ற மூன்று வருஷங்களாக ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஹௌஸ் ஸர்ஜனாக வேலை பார்த்து வருகிறார். மூன்று மாதம் ரஜா எடுத்துக் கொண்டு அன்று காலையில்தான் திருச்சி வந்தார். அவர் வந்தபோது பலராம ஐயர் வீட்டில் யாருமில்லை. எல்லாரும் காலையில் ஸ்நானம் செய்துவிட்டு ஸ்ரீரங்கத்துக்கு ஸ்வாமி தரிசனம் செய்யப் போயிருந்தார்கள். ஆகையால் பெட்டி படுக்கைகளைச் சேவகனிடம் கொடுத்து உள்ளே வைக்கும்படி சொல்லிவிட்டு ஸ்நானம் செய்ய சிந்தாமணிப் படித்துறைக்கு வந்தார். அங்கு தோன்றிய இயற்கை வனப்பு அவரை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. பழைய நினைவுகள் அவர் கண்முன் எழுந்தன. திருச்சியில் வாசித்த காலத்தில் தாம் அந்த மண்டபங்கள் மீதிருந்து குதித்துத் துளைந்ததை யெல்லாம் எண்ணினார். தான் பிரதி தினம் பலராமஐயர் பெண்ணான ஜயலக்ஷ்மியுடன் அங்கு ஸ்நானம் செய்ய வந்ததையும் ஒருமுறை அவளை வெள்ளம் அடித்துக் கொண்டு போக விருந்தபோது தான் காப்பாற்றியதையும், அந்தச் சமாசாரம் கேட்டபிறகு பலராம ஐயர் தங்களிருவரையும் காவிரிக்குப் போகக்கூடாதெனக் கட்டளையிட்டதையும் நினைத்து உருகினார். தம்முடைய இப்போதைய வாழ்வையும்

நினைத்துப் பார்த்தார். அந்த நாட்கள் போய் விட்டதைக் குறித்துப் பெருமூச்செறிந்தார்.

காவிரிக் கரையின் ஓரத்தில் சிந்தாமணிப் படித்துறைக் கருகில் கட்டப்பட்டிருந்த வீடுகளில் வக்கீல் பலராம ஐயர் வீடும் ஒன்று. வெள்ளம் கொஞ்சம் அதிகமானால் இந்த வீடுகளின் சுவர்களை ஒட்டினாற்போல் காவிரி ஓடும். பலராம ஐயர் தேச சேவையில் பிரசித்தியடைந்ததைப் போல் வக்கீல் தொழிலிலும் பிரசித்தியடைந்திருந்தார். நல்ல வருமானம் வந்துகொண்டிருந்த காலத்தில் வக்கீல் தொழிலை உதறித் தள்ளிவிட்டு; தேச சேவையிலீடுபட்டார். இம்மாதிரி காரியம் செய்வது சுலபமல்ல. உலகத்தில் அந்தஸ்தும் பணமும் கிடைப்பது அபூர்வம். யோக்கியதை இருப்பவர் களுக்கெல்லாம் அந்தஸ்து கிடைப்பதில்லை. அந்தஸ்துடை யவர்களுக்குகெல்லாம் யோக்கியதை இருக்கிறதென்றும் சொல்லமுடியாது. இதனால்தான் ஷேக்ஸ்பியர் என்ற பிரபல ஆங்கில நாடகாசிரியர் அந்தஸ்துடையவர்களை மூன்று விதமாகப் பிரித்து, ''சிலர் பிறக்கும்போதே மேதாவிகளாகப் பிறக்கிறார்கள். சிலர் தங்கள் உழைப்பால் மேதாவிகளாகி அந்தஸ்து பெறுகிறார்கள். மற்றும் சிலர்மீது அந்தஸ்து சுமத்தப்படுகிறது'' என்று சொன்னார். கடைசியில் சொன்ன ரகம்தான் உலகத்தில் ஜாஸ்தி. அப்படிக்கின்றி ஏழையாய்ப் பிறந்து சொந்த உழைப்பினால் வக்கீல் தொழிலில் பிரசித்தி யடைந்து, பணத்தையும் அந்தஸ்தையும் சம்பாதித்த பலராம ஐயர், அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டுச் சர்க்கார் சத்திரத்திற்குள் நுழைந்தாரென்றால் அது சாதாரணமான காரியமல்ல. தமது சுயமான சாமர்த்தியத்தால் அரசியல் துறையிலும் மகோன்னத அந்தஸ்தையும் கீர்த்தியையும் அவர் பெற்றார்.

பலராம ஐயரும், அவர் பெண் ஜயலட்சுமியும், அவர் சகோதரியும் சுவாமி தரிசனம் செய்துவிட்டுத் திரும்பி வந்தார்கள். உள்ளே படுக்கை, பெட்டி முதலியன வைக்கப்



பட்டிருந்ததைப் பார்த்து, யார் வந்திருக்கிறதென்று விசாரித்தார்கள், ''பட்டணத்திலேயிருந்து நம்ப டாக்டர் தம்பி வந்திருக்கு'' என்று சேவகன் கூறினான்.

''யார் கோபால மாமாவா அப்பா?'' என்று ஜயலட்சுமி பலராம ஐயரைக் கேட்டாள்.

அவர் பதில் சொல்வதற்குள் சேவகன், ''ஆமாம் குழந்தை! இப்ப தம்பியைப் பார்த்தா அடையாளமே புரியல்லே. எவ்வளவு ஒசரம் ஒசந்து போச்சு. கிராப்புகூட வைச்சுக்கிட்டுருக்கு'' என்றான். சேவகனான கிருஷ்ணன். ஜயலட்சுமி குழந்தையாயிருந்த நாளாய்ப் பலராம ஐயர் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்தான். தொழிலாள ருடைய ஜீவாதார உரிமைகளைப்பற்றி எந்த அபேதவாதத் தலைவரும் அவனுக்கு உபதேசிக்கவில்லை யாகையால், அவன் எஜமான் குடும்பத்தைத் தன் குடும்பம் போலவே பாவித்து வேலை செய்துவந்தான். பலராம ஐயரும் அவனைத் தன் குடும்பத்திலொருவனாகவே நடத்தி வந்தார்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டு நிற்கையில் டாக்டர் கோபாலன் ஈர வஸ்திரத்துடன் உள்ளே நுழைந்தார். டாக்டர் கோபாலன் பலராம ஐயருக்கு தூர பந்து. கலா சாலையில் படிக்கும்போது பலராம ஐயர் வீட்டோடு இருந்து படித்தவர். அப்பொழுது ஜயலட்சுமி பத்து வயதுக் குழந்தையாகையால் கோபாலனை மாமாவென்று கூப்பிட்டு வந்தாள். அவ்வளவுதானே யொழிய இருவருக்கும் நெருங்கிய உறவு கிடையாது. பட்டணத்துக்குச் சென்ற பிறகு டாக்டர் கோபாலன் திருச்சியை எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

அவர் உள்ளே நுழைந்ததும் பலராம ஐயர், ''என்னடா கோபாலா! எப்பொழுது வந்தாய்?'' என்று கேட்டார்.

''இப்பத்தான் மாமா வந்தேன். இது யார் ஜயாவா? அடையாளமே தெரியவில்லையே!'' என்று சொல்லிவிட்டு ஸ்வர்ணச் சிலைபோல் நின்றுகொண்டிருந்த ஜயலட்சுமியைப்

பார்த்துப் பிரமித்து நின்றார் கோபாலன். பத்து வயதில் பொம்மை மாதிரியிருந்த ஜயலட்சுமி, இவ்வளவு அபூர்வ அழகுடன் கூடிய யுவதியாய் விளங்குவாளென அவர் சொப்பனத்தில்கூட நினைக்கவில்லை. குங்குமத்துடன் விளங்கிய அவளுடைய களை சொட்டும் முகத்தையும், சுருண்டிருண்ட கேசத்தையும், சிறிய இடையையும், பரிபக்குவமடைந்திருக்கும் அவளுடைய தேக சௌந்தரியத்தையும் பார்த்துப் பேச நாவெழாமல் நின்றார்.

''ஏண்டா! போய் ஈர வேஷ்டியை அவிழ்த்துப் போட்டு விட்டு நல்ல துணி உடுத்திண்டு வாயேன்'' என்று பலராம ஐயர் கூறிய பிறகுதான் கோபாலனுக்கு ஸ்மரணை வந்தது. ''இதோ ஒரு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்'' என்ற சொல்லிக் கொண்டு போய், தமது டிரங்கைத் திறந்து துணியை எடுக்கலானார்.

''என்னப்பா! இவரா கோபால மாமா? எவ்வளவு உயர்ந்து போய்விட்டார்!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ஜயலக்ஷ்மி.

''ஆமாண்டி! வயசாகவில்லையா?'' என்று பதில் சொல்லி விட்டுப் பலராம ஐயர் தமது சகோதரியைப் பார்த்து, 'ஏண்டி அக்கா! உள்ளே போய் இலை போடச் சொல்லேன்'' என்றார்.

அன்று சாப்பிடும்போதுகூட ஜயலக்ஷ்மி கோபாலனுடன் பேசவில்லை. தலையைக் குனிந்துகொண்டு மௌனமாகவே சாப்பிட்டாள்.

''என்ன மாமா! ஜயா என்னுடன் பேசவேயில்லையே'' என்ற கேட்டார் கோபாலன்.

''பேசாமல் என்னடா! வயசாகிவிட்டதால் கொஞ்சம் வெட்கப்படுகிறாள். ஒரு நாள் போகட்டும், உன்பிராணனை வாங்கிவிடுகிறாள் பார்'' என்றார் பலராமையர்.

''என்ன! ஜயா அவ்வளவு பொல்லாதவளா?'' என்றார் கோபாலன்.



''சந்தேகமா யிருந்தால் அக்கம் பக்கத்தில் கேட்டுப் பார். எல்லாரும் பிடாரி என்று கூப்பிடுகிறார்கள். கொஞ்சங் கூடப் பயமே கிடையாது. எல்லாரோடும் சண்டை போடுகிறாள். காலேஜில், கூட வாசிக்கும் ஒரு பையனைப் பளீரென்று அறைந்துவிட்டாளென்று பிரின்ஸிபால் கடுதாசி எழுதியனுப்பியிருக்கிறார். மோட்டாரை வேகமாக ஓட்டு கிறாள். இதுவரை இரண்டு தடவை போலீஸ் கேஸில் மாட்டிக்கொண்டு அபராதம் கொடுத்தாச்சு. அப்படிப் பட்டவள் என்னவோ உன்னைக் கண்டுதான் வெட்கப் படுகிறாள்'' என்று பலராம ஐயர் கூறினார்.

சாப்பிட்டுவிட்டு எல்லோரும் கூடத்திலிருந்த சோபாக்களில் உட்கார்ந்துகொண்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் பலராம ஐயர் தூக்கம் வருகிறதென்று படுத்துக் கொள்ள மெத்தைமேல் போய்விட்டார். டாக்டர் கோபாலன் பத்திரிகையைக் கையிலெடுத்துக் கொண்டு அதை வாசிப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தார். ஜயலக்ஷ்மியும் ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டிக்கொண்டிருந்தாள். இருவருக்கும் படிப்பில் புத்தி செல்லவில்லை. புத்தகத்திலிருந்து அவளும், பத்திரிகையிலிருந்து அவரும் கண்களை உயரத் தூக்கி ஒருவரையொருவர் பார்ப்பார்கள். பிறகு இருவரும் சிரித்துக்கொண்டு மீண்டும் அச்செழுத்தில் கண்களைச் செலுத்துவார்கள்.

இந்த மாதிரி இரண்டு மூன்று தடவையான பின் டாக்டர் கோபாலன் மெதுவாக, ''ஜயா! என்ன என்னுடன் பேசமாட்டாயா?'' என்றார்.

''பேசாமலென்ன?'' என்றாள் ஜயலக்ஷ்மி. அவர்களுடைய மௌன விரதம் இவ்விதம் முடிவடைந்தது. பிறகு பேச்சு வளர்ந்தது. கோபாலனுக்கு இரண்டாம் வேளை டிபன்கூடப் பரிசாரகனை கொண்டுவரச் சொல்லாமல் தானே கொண்டுவந்து கொடுத்தாள் ஜயலக்ஷ்மி.

பகல் பொழுது போயிற்று. சாயந்திரம் பலராம

ஐயருக்கு அவ்வூர் போலீஸ் சூப்பிரண்டினிடமிருந்து கடிதம் ஏதோ வரவே அவரைப் பார்க்க பலராம ஐயர் சென்று விட்டார். கோபாலனும் வெளியே கிளம்பினார்.

''டாக்டர் ஸார்! எங்கே போகிறீர்கள்?'' என்று ஒரு இனிமையான குரல் தமக்குப் பின்னாலிருந்து வந்ததைக் கேட்டுக் கோபாலன் திரும்பிப் பார்த்தார். வாயிற்படியில் ஜயலக்ஷ்மி சிரித்துக் கொண்டு நின்றாள்.

''காவிரியில் போய்க் குளித்து விட்டு வரலாமென்று போகிறேன்'' என்றார் கோபாலன்.

''நானும் வரலாமா'' என்றாள் ஜயலக்ஷ்மி.

''ஆகா, வா'' என்று சொல்லத்தான் கோபாலனுக்கு மனத்துக்குள் ஆசை. இருந்தாலும் சங்கோஜம் ஒரு பக்கத்தில் வதைக்கவே, ''யாராவது பார்த்தால் ஏதேனும் சொல்வார்கள். கெட்ட உலகம். நான் மாத்திரம் போய் விட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

பத்தடி தூரம்தான் சென்றிருப்பார். பின்னால் யாரோ நடந்துவரும் சப்தத்தைக் கேட்டுத் திரும்பினார். ஜயலக்ஷ்மி வந்து கொண்டிருந்தாள்.

''என்ன ஜெயா உங்கப்பா சொன்னது சரியாகப் போச்சே!'' என்றார் கோபாலன்.

''என்ன செய்கிறது, சுபாவம்!'' என்று சொன்னாள் ஜயலக்ஷ்மி.

சூரியனின் பொன்னிறக் கிரணங்கள் காவிரி ஜலத்தைத் தங்கமயமாக அடித்துவிட்டன. அந்த ஜோதியைப் பார்த்து இருவரும் மயங்கி நின்றார்கள். பிறகு நீரிலிறங்கி நீந்தி விளையாடினார்கள். கோபாலன் மண்டபத்திலேறி அடிக்கடி குதித்தார். அப்படி ஒரு முறை அவர் குதித்தபோது தண்ணீர் வாரியடித்து ஜயலக்ஷ்மி தலையை நனைத்து விட்டது.

''பிரம்மசாரி சேஷ்டை இன்னும் போகவில்லையே?'' என்று கோபித்துக் கொண்டாள் ஜயலக்ஷ்மி.



''எப்படிப் போகும்? இன்னும் கலியாணமாக வில்லையே'' என்றார் கோபாலன். அவள் நாணத்துடன் புன்சிரிப்புக் கொண்டாள். அந்த முல்லைச் சிரிப்பினால் அவள் முகம் விகசித்த அழகைக் கண்டு அவர் தேன் குடித்த நரிபோல் மயங்கி நின்றார். இருவரும் குளித்தெழுந்து பேசிக் கொண்டே நடந்து வீட்டுக்கு வந்தார்கள்.

வீட்டிற்குள் நுழையும்போது, ''இப்பொழுது என்ன வாசித்துக் கொண்டிருக்கிறாயா?'' என்று கோபாலன் கேட்டார்.

''ஆமாம், இண்டர்மீடியட் இரண்டாம் வகுப்பு வாசித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் ஜெயலக்ஷ்மி.

இவர்கள் வருவதற்குள் திரும்பி வந்து கூடத்தில் உட்கார்ந்திருந்த பலராமையர், ''ஜயா! நீ இதுவரை படித்தது போதும். நாளை முதல் உனது படிப்பை நிறுத்திவிட ஏற்பாடு செய்துவிட்டேன். உங்கள் காலேஜ் பிரின்ஸிபாலிடம் சொல்லி ரிஜிஸ்டரில் பெயரை அடித்துவிடச் சொல்லி விட்டேன்'' என்றார்.

''ஏன் அப்பா?'' என்று கேட்டாள். ஜயலக்ஷ்மி.

''ஏன்னா? படிப்பைவிட முக்கியமான விஷயங்கள் உலகத்தில் இருப்பதால்தான்'' என்றார் பலராமையர்.

ஜயலக்ஷ்மியின் கண்களில் நீர் ததும்பியது. அழுகை தொண்டையை அடைக்க, ''என்ன அப்பேர்ப்பட்ட விஷயம்?'' என்றாள்.

''ஜயா! உனக்கு வயதோ பதினெட்டாகிறது. குழந்தைபோல அழுவதில் பிரயோசனமில்லை! நீ இதுவரையில் செய்த காரியங்களால் உன்னைப் போலீஸார் தேடுகின்றனர். வா, சமாசாரத்தைச் சொல்லுகிறேன்'' என்று அவளைத் தனியாகத் தமது அறைக்கு அழைத்துக் கொண்டு போய் வெகுநேரம் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.

அத்தியாயம் - 5

## பெண்ணா! பிசாசா!

டாக்டர் கோபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை. பதினெட்டு வயதாகியும் பச்சைக் குழந்தை போல் இருக்கும் ஜயலட்சுமி போலீஸாரிடம் பயப்படும்படியான என்ன காரியத்தைச் செய்திருக்கக் கூடுமென்று யோசித்துப் பார்த்தார். அவள் போக்கிரியாக இருந்த போதிலும் தனக்கு அவளிடம் ஏற்பட்டிருக்கும் பாசத்தால் தன் பார்வைக்கு பச்சைக் குழந்தை போல் தோன்றுகிறாளோவென்றும் எண்ணினார். அவள் ஏதாவது எக்கச்சக்கமாக அபாயத்தில் சிக்கிக் கொண்டால் அவள் பெயர் சந்தியிலிழுபடுமே யென்றும் அதனால் அவளுடைய பிற்கால வாழ்க்கையே கெட்டுப் போய் விடுமேயென்றும் நினைத்து வருத்தப்பட்டார். இம்மாதிரி அவருடைய சந்தேகங்கள் ஒன்றுக்குப் பத்தாக விருத்தியாக அவருக்கு அவளிடமுள்ள அன்பும் விருத்தியாயிற்று.

அன்றிரவு போஜனத்தின்போது டாக்டர் கோபாலன் பேசவில்லை. ஆழ்ந்த யோசனையிலிருந்தார். இரண்டொரு தடவை ஜெயலட்சுமி கண்களை இலைகளிலிருந்து உயரத் தூக்கி அவர் முகத்தைப் பார்த்தாள். அவர் ஆழ்ந்த சிந்தனையுடன் உட்கார்ந்திருப்பதையும் அவரது முகத்தில் கவலைக் குறி அதிகமாகத் தோன்றுவதையும் கவனித்தாள். அன்றைய சாயந்திர நிகழ்ச்சிகள்தான் அவர் கவலைக்குக் காரணமென்பதையும் ஊகித்துக் கொண்டாள். தன்னைப்பற்றி அவர் கவலைப்படுகிறார் என்பதை நினைக்கும்போது அவளுக்குச் சந்தோஷம் ஏற்பட்டது. அந்தச் சந்தோஷம் மின்னல்போல் ஒரு விநாடிதான் நிலைத்தது. அன்றிரவே தான்



போலீஸாருக்குப் பயந்து வீட்டை விட்டு வெளியேற வேண்டியதை நினைத்து வருந்தினாள்.

அன்றைய தினம் அமாவாசைக்கடுத்த பிரதமை; எங்கும் காரிருள் சூழ்ந்துவிட்டது. கருப்புக் கம்பளியில் வைரங்களை வாரியிறைத்துவிட்ட மாதிரி ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன. இரவு பதினோரு மணிக்கு ஜயலக்ஷ்மி தன் வீட்டைவிட்டுப் புறப்பட்டாள். பலராம ஐயர் வாசல்வரையில் கூட வந்து, ''நான் சொன்னபடி நடந்து கொள், பாலத்துக்கப்புறம் இருக்கும் தண்ணீர்ப் பந்தலுக்குப் போ. அங்கு சரபசாஸ்திரி இருப்பான். உன்னைக் காப்பாற்றுவான். பிறகு காரியம் நடக்கிறபடி நடக்கட்டும்'' என்றார்.

ஜயலக்ஷ்மி, ''சரி ஆகட்டும்'' என்ற பதில் சொல்லி விட்டு ஒரு அடி எடுத்து வைத்தவள் மறுபடியும் திரும்பி, ''ஏன் அப்பா! நான் எங்கேயென்று அவர் கேட்டால் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''யார் கோபாலனா? அவன் கேட்டு நான் பதில் சொல்ல வேண்டியது அவசியமோ? ஜாஸ்தி கேட்டால் 'உன் வேலையைப் பார்த்துக் கொண்டுபோ' என்று சொல்லிவிடுகிறேன்'' என்றார் பலராம ஐயர்.

இந்தப் பதில் ஜயலக்ஷ்மிக்கு மிகவும் வருத்தத்தை உண்டு பண்ணிற்று. ''அப்பா அவர் வந்தது நமது காரியத்திற்கு இடைஞ்சலாய்த்தானிருக்கிறது. நம்முடைய தலையெழுத்து இப்படியிருப்பதற்கு அவர் என்ன செய்வார்? அவருக்குக் கடுமையான எந்தப் பதிலும் சொல்லாதீர்கள்'' என்று சொல்லிவிட்டுப் படியிலிருந்து இறங்கி அந்தக் கும்மிருட்டில் மறைந்து விட்டாள். வாயிற் கதவைத் தாளிட்டுவிட்டுப் பலராம ஐயர் உள்ளே சென்றார்.

காவிரிப் பாலத்தின் வடக்குப் பக்கத்திலுள்ள தண்ணீர் பந்தலின் வாசலில் மினுக்மினுக்கென்று விளக்கு எரிந்து

கொண்டிருந்தது. அதற்குப் பெயர்தண்ணீர்ப்பந்தல் என்றாலும் உண்மையில் அது ஒரு ஓட்டல். ஹோட்டலென்று பெயர் வைத்தால் முனிசிபாலிடியில் அதிக வரி போடப்போகிறார் களேயென்று அதற்குத் தண்ணீர்ப் பந்தலென்று பெயர் வைத்திருந்தான் ஹோட்டல் சொந்தக்காரனான கோவிந்தன். திருச்சினாப்பள்ளிக்குள்ளேயே கோவிந்தன் பெரிய ரௌடி யென்று பெயர் வாங்கினவன். அவன் ஹோட்டலுக்குப் போக்கிரிகள்தான் வருவது வழக்கம். கண்ணியமானவர்கள் அந்த ஹோட்டல் பக்கம் வரக்கூடப் பயப்படுவார்கள். இரவில் அங்கு சூதாட்டங்கள் நடக்கும். திருச்சியில் நடக்கும் அநேக சண்டைசச்சரவுக்குக் கோவிந்தன்தான் காரணமென்பது ஜனங்கள் அபிப்பிராயம். ஆனால் போலீஸார் தலைகீழாக நின்று முயற்சி செய்தும் இதுவரை கோவிந்தன் மீது எந்தத் தப்பும்கண்டுபிடிக்க முடியவில்லை.

ஹோட்டலுக்கு வெளியே இருந்த விளக்கு சிறிதானாலும் உட்பக்கத்தில் பெரிய விளக்குகள் போடப்பட்டிருந்தன. ஒரு பக்கம் சிலர் உட்கார்ந்து காசு வைத்துச் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். மற்றொரு பக்கம் குடியால் சிவந்த கண்களுடன் சிலர் பெரிய சுருட்டுகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இன்னொரு பக்கத்தில் சாய்வு நாற்காலியொன்றில் சரபசாஸ்திரி சாய்ந்துகொண்டு பக்கத்திலிருந்த கோவிந்தனுடன் பேசிக்கொண்டிருந்தான்.

''என்னாங்க சாஸ்திரி! நீங்க பட்டணத்திலேயிருந்து பலராமஐயரை இங்கே கொண்டாந்து விட்டப்புறம் அவரைப் பார்க்கவே இல்லையா?'' என்று கோவிந்தன் கேட்டான்.

''இல்லை. இனிமேல் நமது காரியங்களில் தலையிடக் கூடாது என்று சொல்லி அன்றைக்கு ஸ்டேஷனில் விட்ட பிறகு அவரைப் பார்க்கவே இல்லை'' என்றான் சாஸ்திரி.

''மேற்கொண்டு அந்த ஆள் ஏதாவது விஷமம் பண்ணப் போறானுங்க'' என்றான் கோவிந்தன்.



''இனிமேல் பலராம ஐயர் விஷமம் பண்ணக்கூடிய ஸ்திதியில் இல்லை. அவர் பெண் மேலே மூன்று கேஸ்கள் தாக்கலாயிருக்கு. இரண்டு கள்ளக் கையெழுத்து வழக்கு. இன்னுமிரண்டு நாளில் போலீஸார் பெண்ணைக் கைது செய்து விடுவார்கள். ஆகையால் பலராம ஐயர் நம்மிடம் உதவிகேட்டு வரக்கூடிய நிலையில் இருக்கிறாரேயொழிய விஷமம் செய்யக்கூடிய நிலையில் இல்லை'' என்றான் சாஸ்திரி.

''அந்தப் பொண்ணா? அது என்ன வேணும்னாலும் செய்யுங்க. பொண்ணா அது! பிடாரிங்க. அதைப் பார்த்திருக்கீங்களா நீங்க?'' என்று ஹோட்டல்காரன் கேட்டான்.

''இல்லை'' என்றான் சாஸ்திரி.

**கோவிந்தன்:** பின்னே இவ்வளவு சமாசாரம் எங்கேயிருந்து புடிச்சீங்க?

**சாஸ்திரி:** சூப்பிரிண்டெண்டு ஆபீசில் விசாரித்தேன். நம்ப ஆட்கள்தான் எல்லா இடங்களிலும் இருக்கிறார்களே.

**கோவிந்தன்:** இன்னொண்ணு கேட்டீர்களா? இந்தப் பெண்ணுக்கும் நம்ப டிப்டி சூப்பிரிண்டெண்டு மாதவராவுக்கும் சம்பந்தமிருக்குன்னு வாஸுதேவன் கிளப்பிவிட்டிருக்கானாம். இது அந்தப் பொண்ணுக்குக்கூடத் தெரிஞ்சிருக்காம். அவனைக் கொலை பண்ணிடுறேன்னு சொல்லிண்டிருக்காம் அந்தப் பொண்ணு. அது செஞ்சாலும் செஞ்சிடுங்க.

**சாஸ்திரி:** யாரது வாஸுதேவன்?

**கோவிந்தன்:** அவந்தாங்க நம்ப ஸி.ஐ.டி. ஸப் இன்ஸ்பெக்டர். பொதுக் கூட்டங்களிலெல்லாம் வந்து சர்க்காருக்காகப் பிரசங்கங்களைக் கோடு கோடா கிளிச்சு எழுதுவானே.

சரபசாஸ்திரி அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை.

ஏதோ யோசிக்க ஆரம்பித்துவிட்டான். வாயிற் கதவை யாரோ
தடதட வென்று தட்டும் சப்தம் கேட்டது. கோவிந்தன் மெல்லச்
சென்று கதவைத் திறந்து வெளியே தலையை நீட்டினான்.
எதிரே மங்கலான வெளிச்சத்தில் ஜயலக்ஷ்மி நிற்பதைக்
கண்டான். தான் பார்ப்பது கனவா நனவா வென்று அவனுக்குச்
சந்தேகம் ஏற்பட்டது. பலராம ஐயர் பெண் எதற்கும்
துணிந்தவள் என்பதை அவன் கேள்விப் பட்டிருக்கிறான்.
ஆனால் இந்த மாதிரி நள்ளிரவில் போக்கிரிகளுக்குப் பெயர்
போன தன்னுடைய ஹோட்டலுக்குத் துணிந்து
வருவாளென்று அவன் எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம்
நிதானித்துக்கொண்டு, '' என்னம்மா விசேஷம்?'' என்று
கேட்டான்.

''விசேஷத்தை அப்புறம் சொல்லுகிறேன். முதலில்
என்னை உள்ளே விட்டுக் கதவைத் தாழ்ப்பாள் போடு''
என்றாள் ஜயலக்ஷ்மி.

கோவிந்தன் அப்படியே செய்துவிட்டு ஜயலக்ஷ்மியை
உள்ளே அழைத்துக் கொண்டு வந்தான். அவன் உள்ளே
வந்தபோது வழியில் உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவன்
''டேய்! அதோ போகிறாளே பார்த்தையா. அவள் பெரிய
பேர்வழிடா. நடத்தைகூடக் கொஞ்சம் மோசம்னு கேள்வி''
என்றான்.

''சே... மூஞ்சியைப் பார்த்தா கொழந்தை
மாதிரியிருக்கு. அப்படியெல்லாம் இருக்காதுடா'' என்றான்
இன்னொருவன்.

''கொழந்தைக்கி ராத்திரிலே இங்கென்னடா
வேலை?'' என்று கேட்டான் முதலில் பேசினவன்.
மற்றவர்கள் கொல்லென்று சிரித்தார்கள். இதைக் கேட்ட
ஜயலக்ஷ்மிக்கு அசாத்திய கோபம் வந்தது. ஒரு தடவை
தன்னைப்பற்றிக் கேவலமாகப் பேசியவர்களை முறைத்துப்
பார்த்தாள்.



''எங்களைப் பார்த்து எம்மா மொறைக்கிறே? ஊரிலே
அப்படிப் பேச்சா இருக்கு. சூப்பிரிண்டெண்டே ஒன்னப் பத்தி
என்னென்னவோ சொல்றாராம்'' என்றான் அவர்களில்
ஒருவன். எல்லோரும் மறுபடியும் அவளைப் பார்த்துச்
சிரித்தார்கள். அந்தப் போக்கிரிகள் கும்பலோடு அப்பொழுது
சண்டை போடுவதில் பயனில்லையென்று தெரிந்து
கொண்டாள். அப்போது அவளுக்கிருந்த ஆத்திரமெல்லாம்
சூப்பரிண்டெண்டு மேலேயே திரும்பியது. அவளுடைய
முகத்தில் வீசும் கோபத்தணலைச் சரப சாஸ்திரி தூரத்திலிருந்து
பார்த்து, அவள் மிகுந்த துணிச்சலுள்ளவளென்பதில் சிறிதும்
சந்தேகமில்லையென்று தனக்குள்ளேயே சொல்லிக்
கொண்டான். வாயிற் கதவை மீண்டும் யாரோ தடதட வென்று
தட்டும் சப்தம் கேட்டது. கோவிந்தன் கதவைத் திறப்பதற்குப்
போனான்.

''கதவைத் திறக்காதே, போலீஸார் என்னைத் துரத்திக்
கொண்டு வந்திருக்கிறார்கள். நான் தப்பியோடுவதற்கு
முதலில் வழியைக் காட்டு '' என்று ஜயலக்ஷ்மி துடித்தாள்.
அவள் சொல்லி வாய் மூடியதும் அங்கிருந்த அனைவரும்
'போலீஸ் போலீஸ்' என்ற ரகசியமாகச் சொல்லிக்கொண்டு
பக்கத்திலிருந்த அறைகளுக்குப் போய்த் தூங்குவதுபோல்
பாசாங்கு செய்தனர்.

''கதவைத் திறக்காவிட்டால் கதவை உடைத்து
விடுவோம்'' என்று வாசலிலிருந்து சப்தம் கேட்டது.

சரப சாஸ்திரி தன் இடத்திலிருந்து எழுந்து வந்து
ஜயலக்ஷ்மி கையைப் பிடித்துச் சரசரவென்று இழுத்துக்
கொண்டு புழக்கடை கதவுக்காக ஓடினான். கதவைத் திறந்து
விட்டு, ''நீ பின்னாலிருக்கும் தோப்பு வழியாகப் போய் அதோ
காவிரிப்பாலத்தருகில் இரு. இதோ நான் வருகிறேன்''
என்றான்.

ஜயலக்ஷ்மி தோப்புக்குள் நுழைந்து காவிரிப் பாலத்
துக்குப் போனாள். சரப சாஸ்திரி உள்ளே போய்க்

கோவிந்தனிடம் ஏதோ சொல்லிவிட்டு ஜயலக்ஷ்மியைப் பின் தொடர்ந்தான்.

ஜயலக்ஷ்மி பத்தடி முன்னால் போய்கொண்டிருந்தாள். அவள் காவிரிப் பாலத்தில் சில அடி தூரம் நடந்ததும் அவளுக்கெதிரில் யாரோ வந்துகொண்டிருப்பது சரப சாஸ்திரிக்குத் தெரிந்தது. சற்று நேரத்தில் அந்த மனிதன் ஜயலக்ஷ்மியின் அருகில் வந்துவிட்டான். அவன் ஸி.ஐ.டி. போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் வாஸுதேவனென்று அப் பொழுதுதான் சரப சாஸ்திரிக்குத் தெரிந்தது. ஜெயலக்ஷ்மியை எச்சரிக்க சாஸ்திரி நினைக்குமுன் வாஸுதேவன் அவளருகில் நெருங்கி அவள் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுக் ''நீ யார்? இந்நேரத்தில் எங்கே போகிறாய்?'' என்றான்.

''யாராயிருந்தால் உனக்கென்ன; கையை விடுகிறாயா இல்லையா?'' என்று சொல்லிக்கொண்டு ஜயலக்ஷ்மி திமிறி அவன் பிடியிலிருந்து விலகிக்கொண்டாள், அவள் ஓட முயற்சிப்பதற்குள் வாஸுதேவன் அவள் கையை மீண்டும் பிடித்துக் கொண்டான்.

''நீ யார், இப்படி உபத்திரவம் செய்ய'' என்று ஜயலக்ஷ்மி கேட்டாள்.

''நான்தான் போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் வாஸு தேவன். இங்கு ஒரு பெண்ணைப் பிடிப்பதற்காக வந்திருக் கிறோம். அந்தப் பெண் நீயாக இருப்பாயோவென்று சந்தேகமாக இருக்கிறது'' என்று சொல்லிச்சென்டே வாஸு தேவன் தன் கையிலிருந்த டார்ச் விளக்கை ஏற்றி அவள் முகத்தைப் பார்த்துவிட்டு அணைத்துவிட்டான்.

கண் கூசியதால் ஒரு விநாடி ஜயலட்சுமி கண்களை மூடிக் கொண்டாள். பிறகு, ''நீதான் வாசுதேவனா? இருட்டில் அடையாளம் புரியவில்லை. கையை விடுகிறாயா இல்லையா?'' என்றாள்.

''விடாவிட்டால் என்ன செய்துவிடுவாய்?'' என்று சொல்லிக் கொண்டு வாஸுதேவன் அவள் கையை இன்னும்



அதிகமாக அழுத்திப் பிடித்தான்.

''என்ன செய்கிறேன் பார்'' என்று சொல்லிக்கொண்டு ஜயலக்ஷ்மி தன் பலம் முழுவதையும் சேர்த்து வாஸுதேவனை ஒரு தள்ளுத் தள்ளினாள். வாஸுதேவன் பின்னால் மல்லாந்து விழ இருந்தவன் மெள்ள சமாளித்துக் கொண்டு காவிரிப் பாலத்தின் கம்பியில் சாய்ந்தான்.

அவன் மறுபடியும் தன்னை நோக்கி வருவதற்குள் ஜயலக்ஷ்மி தனது மடியிலிருந்த பளபளவென்ற சிறிய கத்தி யொன்றை எடுத்துக்கொண்டு புலிபோல் பாய்ந்து வாஸு தேவன் இதயத்தில் கத்தியைப் பாய்ச்சிவிட்டாள். வாஸு தேவன் ஓவென்று அலறிக்கொண்டு பாலத்தின் கம்பியில் சாய்ந்தான். ஜயலக்ஷ்மி அவனருகில் சென்று சாய்ந்திருந்த அவன் உடலத்தைக் காவிரியின் பிரவாகத்தில் தள்ளினாள். பளேரென்று சப்தத்துடன் வாஸுதேவன் உடலம் ஜலத்தில் விழுந்தது.

மிகவும் கொடியதான இந்தச் செயலை, சற்றுத் தூரத்தி லிருந்து பார்த்துக் கொண்டிருந்த சரப சாஸ்திரி அவள் பெண்ணா, பேயா என்று சந்தேகப்பட்டான். அவள் பக்கத்தில் ஓடிவந்து கையிலிருந்த டார்ச் விளக்கை ஏற்றி காவிரிக்குள் பார்த்தான். டார்ச் வெளிச்சம் விழுந்த இடத்தில் பளபளவென்று ஜலம் பிரகாசித்ததேயொழிய வேறொன்றும் தெரியவில்லை.

''சரி! என்னுடன் வா'' என்று சரப சாஸ்திரி அவள் கையைப் பிடித்திழுத்துக் கொண்டு சற்றுத் தூரத்திற்கப்பால் நிறுத்தப்பட்டிருந்த ஒரு மோட்டாரில் அவளை ஏற்றித் தானே காரை ஓட்டிக்கொண்டு சென்றான். ஜெயலக்ஷ்மியின் தேகம் மோட்டாரில் ஏறியபிறகும் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. இருதயம் நின்றுவிடும்போல் படபட வென்று அடித்துக் கொண்டது. முகத்தில் வியர்வைத் துளிகள் உண்டாயின. மிகுந்த ஆயாசத்தினால் ஜயலக்ஷ்மி அப்படியே பின்னால் சாய்ந்து விட்டாள்.

அத்தியாயம் - 6

## சரப சாஸ்திரியின் வேதாந்தம்

திருச்சி கண்டோன்மென்டிலுள்ள ஒரு பெரிய
மெத்தை வீட்டுக்கு எதிரில் மோட்டார் நின்றது. மோட்டார்
விசையை நிறுத்திவிட்டு, ''கீழே இறங்கிவா; உள்ளே போக
லாம்'' என்றான் சரப சாஸ்திரி. ஜயலட்சுமி மோட்டாரை
விட்டுக் கீழே இறங்கி ஒரு நிமிஷ நேரம் தயங்கி நின்றாள்.
பிறகு பேசாமல் சாஸ்திரியைப் பின்தொடர்ந்து சென்றாள். சரப
சாஸ்திரி அவளை மெத்தை மேலிருந்த ஒரு விசாலமான
ஹாலுக்குள் அழைத்துக்கொண்டு போய், ''இதோ இங்கேயே
உட்கார்ந்திரு. இரண்டு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்!'' என்று
ஒரு பெரிய சோபாவைக் காட்டிவிட்டு வேறொரு அறைக்குப்
போய்விட்டான்.

ஜயலட்சுமி சோபாவில் உட்கார்ந்து தலையைத்
தொங்கவிட்டு முகத்தைத் தன்னிரு கைகளிலும் புதைத்துக்
கொண்டாள். அவளுடைய மனல் சொல்லவொண்ணாத பல
எண்ணங்கள் எழுந்து ஊசலாடின. சிறிது நேரங் கழித்துப்
பின்னால் சாய்ந்து கொண்டு கண் களிரண்டையும் திறந்தாள்.
எதிரேயிருந்த கடிகாரம் 'டங்டங்' என்று இருமுறை அடித்தது.

''என்ன இரண்டு மணியா! இந்த நேரத்தில் இந்த
இடத்தில் நான் இருக்கலாமா? இந்த மாதிரி ராத்திரி
வேளைகளில் ஊர் சுற்றிக் கொண்டு கண்ட கண்ட இடங்களில்
காலங் கழித்தால் உலகம் என்னைப்பற்றி என் இகழ்ச்சியாகப்
பேசாது?'' என்று மனதிற்குள்ளேயே சொல்லி தன்னை
நொந்துகொண்டாள்.

அந்த ஹாலை ஒருமுறை சுற்றும்முற்றும் பார்த்தாள்.



எங்கும் ஒரே கண்ணாடிக் குப்பிகள் மயமாக இருப்பதையும்,
பக்கத்தில் பல மருந்துப் பெட்டி கள் இருப்பதையும்
கவனித்தாள். ''சரப சாஸ்திரி டாக்டரா என்ன?'' என்று
எண்ணினாள். உடனே அவளுக்கு டாக்டர் கோபாலனைப்
பற்றிய நினைவுகள் வந்தன. ''இப்பொழுது அவர் நிம்மதியாக
தூங்கிக் கொண்டிருப்பார். என்னைப்பற்றிக் கவலைப்படப்
போகிறாரா என்ன?'' என்று மனத்துக்குள்
சொல்லிக்கொண்டாள். ''நான் சின்னவளாயிருந்தபோது
பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு ஜயாஜயா என்று உயிரை
விடுவாரே. அதெல்லாம் இப்பொழுது எங்கு போயிற்றோ
தெரியவில்லையே'' என்று தானே கேட்டுக்கொண்டாள்.

குழந்தையா யிருக்கும்போதுதானே மனிதர்கள்
நல்லவர்களாக இருக்கிறார்கள், பெரியவர்களாகப் போகப்
போகத்தான் மனதில் கெட்ட எண்ணம் கொஞ்சங் கொஞ்சமாக
சேர்ந்துவிடுகிறதே!'' என்று கோபாலன் மேல் குற்றம்
சாட்டினாள். தான் இருக்கும் இடம் தற்சமயம் அவருக்குத்
தெரியாதென்பதை அவள் சிறிதும் நினைக்கவில்லை. சற்று
நேரத்திற்கு முன்பு பிசாசுபோல் கொடிய செய்கையைச்செய்த
இப்பெண் மேற்சொன்னபடியெல்லாம் பச்சைக் குழந்தை
போல் நினைத்து மனதிற்குள் பிதற்றிக் கொண்டிருந்தாள்.
பிரகிருதியின் விசித்திரம்தான் என்ன! கடவுள் மனிதனிடம்
பிசாசின் குணத்தையும் கொடுத்திருக்கிறார். உன்னதமான
தெய்வித உணர்ச்சியையும் கொடுத்திருக்கிறார்; பிசாசின்
குணம் அடங்கி தெய்விக உணர்ச்சி அதிகமானால்
மனிதனுக்குப் பிற உயிர்களிடத்தில் அன்பும் அவற்றை
வதைப்பதில் மனவருத்தமும் ஏற்படுகிறது.
அப்படியில்லாமல் பிசாசின் குணம் மனிதனிடமும்
மேம்படும் காலத்தில் பயங்கர நிகழ்ச்சிகள் உலகத்தில்
ஏற்படுகின்றன. உயிர்களுக்கும் சேதம் உண்டாகிறது.

சுமார் பதினைந்து நிமிஷங்களுக்கெல்லாம் கையில்
ஒரு கோப்பையுடன் சரபசாஸ்திரி ஹாலுக்குள் பிரவேசித்தான்.

அதில் காபி புகைந்துகொண்டிருந்தது. ''இந்தா, இதை சாப்பிடு. உடம்பு கொஞ்சம் நிதானத்துக்கு வரும்'' என்று சிரித்துக்கொண்டே சாஸ்திரி கோப்பையை ஜயலட்சுமியின் கையில் கொடுத்தான்.

''என்ன காபியா போட்டுக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்த வேளையில் பால் ஏது?'' என்று ஜயலட்சுமி ஆச்சரியத்துடன் கேட்டாள். பிறகு காபியை ஒரு வாய் சாப்பிட்டாள். அந்தச் சமயத்தில் அவளுக்கு அது தேவாமிருதமாயிருந்தது. ''காபி ரொம்ப நன்றாகப் போடுகிறீர்களே'' என்று சிலாகித்தாள்.

''எந்த வேலையாக இருந்தாலும் நன்றாகச் செய்வதில்தான் எனக்குத் திருப்தி. அப்படி எல்லா வேலைகளையும் கவனித்துச் செய்யாத பக்ஷத்தில் இத்தனை நாள் நான் அந்தமான் தீவிலல்லவா இருப்பேன்'' என்றான் சாஸ்திரி.

ஜயலட்சுமி மீண்டும் ஒரு வாய் காபியை உறிஞ்சி விட்டு, ''அந்தமான் தீவிலா! ஏன்?'' என்று கேட்டாள்.

''காபியை முழுக்க சாப்பிட்டுவிடு. அப்புறம் பேசலாம்'' என்று சாஸ்திரி கூறினான். காப்பியைச் சாப்பிட்டு விட்டு ஜயலட்சுமி, ''அப்பாடா'' என்று சோபாவில் சாய்ந்து கொண்டாள். ''காபி என்னமோ உடம்புக்குக் கெடுதல்னு சொல்றா. ஆனால் அதை சாப்பிடறதிலே இருக்கிற சுகம் வேறெதிலையும் இல்லை'' என்று ஜயா சொன்னாள். அதை ஒப்புக்கொள்வதற்கு அடையாளமாகச் சாஸ்திரி தலையை அசைத்தான்.

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள். ''நீ தானே பலராம ஐயர் பெண்?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''ஆமாம். நீங்கள் யார்?'' என்று ஜயலட்சுமி விசாரித்தாள்.

**சாஸ்திரி:** என்னை சரப சாஸ்திரி என்று



சொல்லுவார்கள். உன் தகப்பனாரை எனக்கு நன்றாகத் தெரியும்.

**ஜயலட்சுமி:** என்னை எப்படி அவருடைய பெண் என்று தெரிந்து கொண்டீர்கள்?

**சாஸ்திரி:** உன்னைப்பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். அதைத் தவிர இன்று நீ செய்த செயலிலிருந்து நீதான் பலராம ஐயர் பெண்ணாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்தேன். அப்பா! என்ன துணிகரமான செயல்! வங்காளத்தில் உன்னைப்போன்ற சில ஸ்திரீகளுடன் பழகி இருக்கிறேன். ஆனால் இதே ராஜதானியில் இவ்வளவு தைரியமாக வேலை செய்யக்கூடிய பெண் உன்னைத் தவிர வேறு யாரும் கிடையாது.

**ஜயலட்சுமி:** நீங்கள் என்ன இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்திருக்கிறீர்களா?

**சாஸ்திரி:** ஐரோப்பாவைக்கூடச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். ரஷ்யாவில் ஒரு வருஷம் இருந்திருக்கிறேன்.

**ஜயலட்சுமி:** ரஷ்யாவுக்கு எதற்காகப் போய்த் தங்கியிருந்தீர்கள்?

**சாஸ்திரி:** அந்த ஊர் விவகாரங்கள் எப்படி நடக்கின்றனவென்று பார்ப்பதற்காகத்தான். என்னைப் போல் பொதுவுடைமைக் கொள்கையில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு ரஷ்யாவிடம் தனிப்பட்ட விச்வாஸம் உண்டு.

**ஜயா:** 'பணக்காரர்கள் என்றும் ஏழைகள் என்றும் பேதம் இருக்கக்கூடாது. பணத்தை எல்லாருக்கும் பங்கு போட்டுக் கொடுத்துவிடவேண்டும்' என்று சொல்லும் கக்ஷியைச் சேர்ந்தவர்களா நீங்கள்? அந்த மாதிரி உலகத்தில் வித்தியாசமே இல்லாமல் தடுக்க முடியுமா?

**சாஸ்திரி:** ஏன் முடியாது? ரஷ்யா தேசத்தில் அந்த மாதிரி நடக்கிறதே தவிர உலகத்தில் எவ்வளவு அநீதி

புத்திசாலிதனத்தால் முன்னுக்கு
நடக்கிறது பார். கேவலம் ஒருவன்தான். மற்றபடி பாம்பரை
வருபவன் ஆயிரத்தில் ஜாஸ்தி. இதையெல்லாம் சரிப்படுத்த
பெரிய மனிதர்கள்தான்
வேண்டியது அவசியமில்லையா?

**ஜயா:** ஒருவன் ஏழையாகப் பிறப்பதும்,
பணக்காரனாகப் பிறப்பதும் அவனுடைய பாவ
புண்ணியங்களைப் பொறுத்ததென்று சொல்லுகிறார்களே.
அதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?

**சாஸ்திரி:** புண்ணிய பாவங்களில் உனக்கு நம்பிக்கை
யிருக்கிறதா?

**ஜயா:** கண்டிப்பாக இருக்கிறது. ஹிந்துவாகப் பிறந்த
யாருக்குத்தான் புண்ணிய பாவங்களில் நம்பிக்கையில்லாமல்
இருக்கமுடியும்?

**சாஸ்திரி:** அப்படியானால் வாஸுதேவனை ஏன்
கொலை செய்தாய்?

இந்தக் கேள்வியைக் கேட்டு ஜயலட்சுமி திடுக்கிட்டுப்
போனாள். தன்னுடைய வார்த்தைகளை வைத்துக் கொண்டு
தன்னை சாஸ்திரி எப்படி மடக்கிவிட்டானென்பதைப் புரிந்து
கொண்டாள். இருந்தபோதிலும் மெள்ள சமாளித்துக்
கொண்டு,

''ஏன் செய்யக்கூடாது? என்னுடைய நிலைமையில்
நீங்களிருந்து பார்த்தால் தெரியும். நான் இப்போதிருக்கும்
நிலைக்கு வாஸுதேவன்தான் காரணம். என்னைக் கலியாணம்
செய்துகொள்ள வேண்டுமென்று தலைகீழாக நின்று
பார்த்தான். அப்பா ஒரேயடியாகக் கொடுக்க முடியாதென்று
சொல்லிவிட்டார்...'' என்று மேலும் ஏதோ சொல்லப்
போகையில் சாஸ்திரி இடைமறித்து, ''ஓகோ அதனால்தான்
உன்மேல் கண்டபடி அக்கப்போர் கட்டி விட்டானா?'' என்று
கேட்டான்.

''அதுமாத்திரமா செய்தான்? அப்பா ஜயிலுக்குப்



போனதும் தனியாக அத்தையுடன் இருந்த என்னைத்
தொந்தரவு பண்ண ஆரம்பித்தான். நான் டிப்டி சூப்ரண்டெண்டி
ளிடம் போய்ப் புகார் செய்யவே என் நடத்தையைப்பற்றியும்
அக்கப்போர் கிளப்பிவிட்டான்'' என்று மிகுந்த கோபத்துடன்
சொன்னாள் ஜயலட்சுமி.

''ஆமாம், உன் பேரில் இரண்டு கள்ளக் கையெழுத்து
கேஸ்கள் இருக்கிறதே. அது எப்படி ஏற்பட்டது?'' என்று சரப
சாஸ்திரி கேட்டான்.

''அதுவும் அவன் வேலைதான். அப்பா ஜயிலுக்குப்
போயிருந்தபோது எனக்குக் கையில் பணமில்லை. அப்பாவின்
ஸ்னேகிதர்கள் இரண்டு பேர் செக்குக் கொடுத்தார்கள். என்
னுடைய கஷ்டகாலம் செக்குக் கொடுத்த பத்து நாளில் ஒருவர்
இறந்துவிட்டார். மற்றொருவர் இப்போது பர்மாவில்
இருக்கிறார். அவ்விருவர்களுடைய உறவினர்களைக்
கொண்டு செக்குகள் என்னால் கள்ளக் கையெழுத்து
செய்யப்பட்டதாக வாஸுதேவன் கேஸ் ஜோடித்திருக்கிறான்''
என்றாள் ஜயா.

''இருந்தாலும் இன்று நீ இத்தகைய கொடிய
குற்றத்தைச் செய்யலாமா?'' என்றான் சாஸ்திரி.

''பெண்களுக்கு மானம் பெரிது. அதைக் காப்பாற்றிக்
கொள்ள எதைத்தான் செய்யக்கூடாது? முன்னாட்களில்
கௌரவமிழந்த ஸ்திரீகள் தங்கள் உயிரைப் போக்கிக்
கொண்டார்கள். அந்த வழி எனக்குப் பிடிக்கவில்லை. அது
நியாயமுமில்லை'' என்று ஜெயா சொன்னாள்.

சாஸ்திரி அவளைச் சிறிது நேரம் உற்று நோக்கிவிட்டு,
''ஸ்திரீகள் மானத்தை அவ்வளவு உயர்வாக நினைக்கிறாயா?''
என்றான். ஜயலட்சுமிக்குப் பிரமாதமான கோபம் வந்தது.
''நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''நானும் மிக உயர்வாகத்தான் நினைக்கிறேன். அதற்
காகத்தான் உன்னை இங்கு அழைத்துக் கொண்டு வந்தேன்''

என்று சாஸ்திரி சொன்னான்.

ஜயலட்சுமி பேசவில்லை. சாஸ்திரியே மீண்டும் பேசத் தொடங்கி, ''இன்னொரு ஸ்திரீயின் மானம் உன்னுடைய கௌரவத்தைப் போல் சீரழிந்து கிடந்தால் அவள் விஷயத்திலும் பழிவாங்க முன்வருவாயா?'' என்று கேட்டான்.

**ஜெயலட்சுமி:** நான் ஏன் வரவேண்டும்? அவள் மானத் தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது அவள் கடமை.

**சாஸ்திரி:** அந்த ஸ்திரீ உன் தாயாராக இருந்தால்கூட நீ பேசாமலிருப்பாயா?

**ஜெயா:** அப்பொழுது எப்படி நான் சும்மாவிருக்க முடியும்? எனக்கு ஊட்டி வளர்த்த தாயாரின் கஷ்டம் என்னுடைய கஷ்டம் போன்றதல்லவா? அந்தக் கஷ்டத்தைக் தீர்ப்பது என் கடமையாகிவிடாதா?

'' அந்தக் கடமையைச் செலுத்தும்படி இப்பொழுது நான் உன்னைக் கேட்கிறேன்'' என்று ஆழ்ந்த குரலில் சரப சாஸ்திரி கூறினான்.

ஜயலட்சுமி சிறிது யோசித்தாள். ''என்ன யோசிக் கிறாய்? நான் சொல்லுவது புரியவில்லையா? தாய் நாட்டுக்குத் தொண்டு செய்யவே உன்னை அழைத்து வந்திருக்கிறேன்'' என்று மிகுந்த அமைதியுடன் கூறினான் சாஸ்திரி.

''நீங்கள் என்ன புதிதாகச் சொல்லுகிறீர்களென்று எனக்குத் தெரியவில்லை. எனது குடும்பமே தேச சேவையில் ஈடுபட்ட குடும்பம். என் தகப்பனார் ஜயிலிலிருந்து திரும்பி வந்து இப்போதுதான் இரண்டு மாதமாகிறது. செல்வம் முழுவதையும் தேச காரியத்துக்கே அர்ப்பணம் செய்திருக்கிறார். இதைவிட நான் வேறு என்ன செய்ய வேண்டும்? நான் ஏன் ஜயிலுக்குப் போகவில்லையென்கிறீர் களா?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.



**சாஸ்திரி:** இல்லை. நான் அப்படிக் கேட்கவில்லை. போலீசாரிடம் தடியடி படுவதாலும், கொஞ்சம் நஞ்சம் வெளியில் நடமாட இருக்கும் சுதந்திரத்தையும் இழந்து ஜயிலுக்குப் போவதாலும் சுதந்திரம் கிடைக்குமென்று நான் நம்பவில்லை.''

''என்ன! உங்களுக்குச் சத்தியாக்கிரகப் போரில் நம்பிக்கை இல்லையா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ஜயா.

''இல்லை'' என்றான் சாஸ்திரி.

''இப்பொழுது ஆயிரக் கணக்கில் ஜயிலுக்குச் சென்றிருக்கும் மக்களின் தியாகம் வீண் என்றா சொல்லுகிறீர்! அப்படியானால் உங்களுக்கு எதில்தான் நம்பிக்கை!'' என்று கேட்டாள் ஜயா.

''எதிரிகளிடம் அடிபடுவதால் சுதந்திரம் உண்டாகு மென்று நான் நம்பவில்லை'' என்று சொல்லிவிட்டு எழுந்திருந்து ஹாலில் அங்குமிங்கும் உலாவிக்கொண்டே சாஸ்திரி பேசலானான்.

''இந்த அஹிம்ஸைத் தத்துவத்தாலும் அசட்டுத்தன மான தாராள புத்தியாலுமே இந்தத் தேசம் கெட்டுப் போயிற்று. சந்திரகுப்த மௌரியன் ஸ்தாபித்த அரசாங்கத்தைப் படைபலத்தால் விருத்தி செய்து அசோகன் இந்தியா முழுவதையும் ஏகசக்ராதிபதியாக ஆண்டிருக்கலாம். அந்தக் காலத்தில் மௌரியர்களின் ராணுவ பலம் அதிகம். அப்படி இந்தியா ஹிந்துக்களின் ஆதிக்கத்திற்குள்ளாகியிருக்கு மானால் பிற நாட்டார் படையெடுப்பைத் தடுத்திருக்கலாம். இன்று உண்மையில் இத்தேசம் ஹிந்துஸ்தானமாக விளங்கி வரும். முதல் யுத்தத்தில் ரத்தம் சிந்தியதைக் கண்டவுடனேயே கோழையான அசோகன்'' அஹிம்ஸா பரமோ தர்ம:'' என்று சொல்லிக் கொண்டு இனி பிராணிவதை செய்வதில்லையென பிரதிக்ஞை செய்து கொண்டான்.''

ஸித்தார்த்தரைப் போல் நமது அரசர்களில் பலருக்கு அஹிம்ஸைப் பைத்தியம் பிடித்திராவிட்டால் இந்தத் தேசம் அடிமை ஸ்திதிக்கு வந்திருக்காது. அடிமை ஸ்திதிக்கு வந்து விட்ட தேசம் தன்னை விடுவித்துக் கொள்ள தயாராக விருக்கும் சமயத்தில் காந்தி மீண்டும் அஹிம்ஸையைக் கிளப்பிவிட்டுத் தேச விடுதலையைத் தடை செய்கிறார். மிகுந்த ஆயுத பலம் பெற்ற அரசாங்கத்தை அஹிம்ஸையால் வழிக்குக் கொண்டுவர எப்படி முடியும்? எப்படி வைரத்தை வைரம்தான் அறுக்க முடியுமோ அதேபோல் பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட சைன்னியபலம் மிகுந்த அரசாங்கத்தை பலாத்கார மார்க்கத்தால்தான் வழிக்குக் கொண்டுவர முடியும். அந்த வழியை என்னைப் போன்ற சிலர் கையாண்டால் எங்கள் சங்கத்துக்குப் 'பயங்கர இயக்கம்' என்று மக்கள் பெயர் வைத்துவிடுகிறார்கள். என்ன அநியாயம்! நாங்கள் பார்ப்பதற்கு என்ன பயங்கரமாகவா இருக்கிறோம்?''

நீண்ட பிரசங்கமொன்றைச் செய்துவிட்டு ஜெயலட்சுமியை நோக்கினான் சாஸ்திரி.

இதைக் கேட்டதும் ஜயலட்சுமிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அனைவருக்கும் திகிலைக் கொடுத்துவரும் ஒரு பெரிய பயங்கர சங்கத் தலைவனிடம் தான் சிக்கியிருப்பதை அறிந்தாள். சாஸ்திரி புன்னகை தவழும் முகத்துடன் நின்று கொண்டிருந்தான்.

''சாஸ்திரி! நல்ல கேள்வி கேட்டீர்கள். பார்ப்பதற்கு நீங்கள் பயங்கரமாயில்லை: வாஸ்தவம். பாம்பு வழவழ வென்று மிருதுவாயிருக்கிறது! அது செய்யும் வேலை எவ்வளவு பயங்கரமானது? அம்மாதிரிதான் நீங்களும். நீங்கள் மிகப் பயங்கரமான மனிதர். மனிதர்களைக் கொல்வது உங்கள் தொழில். அதுவும் நேருக்கு நேர் நின்று சண்டை போட்டுக் கொல்கிறீர்களா? அதற்கும் உங்களுக்குத் தைரியமில்லை. புல்லில் தலையை வைத்து மறைந்துகொண்டிருந்து



மனிதனைப் பட்டென்று கடித்துக் கொன்றுவிடும் பாம்புகள் போல் நீங்கள் ஜனங்கள் உயிரை வாங்குகிறீர்கள். யுத்தத்தில் நேருக்கு நேர் நின்று சண்டைபோட்டுக் கொல்வதிலாவது சிறிது நியாயம் இருக்கலாம். மனிதன் எதிர்பாராத சமயத்தில் அவன் வீட்டில் வெடிகுண்டை எறிந்துவிட்டு ஓடி மறைவது எப்படி நியாயமாகும்? நினைக்கும்போதே பயமாயிருக்கிறதே'' என்று ஜயா கூறினாள்.

ஜெயலட்சுமியின் புத்தி கூர்மையைக் கண்டு சரபசாஸ்திரி ஆச்சரியப்பட்டான். ''என்ன புத்தி கூர்மையுடைய பெண்! பலராம ஐயர் பெண் வேறு எப்படி இருக்க முடியும்!'' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான். பிறகு ஜயாவை நோக்கி, ''ஜயலட்சுமி! அப்பாவைப் போல் நன்றாக உபமானம் சொல்லக் கற்றுக் கொண்டிருக்கிறாய். அதிருக்கட்டும், விஷயத்தைக் கவனி, உன் பெயருக்கு வாஸுதேவன் ஹானி விளைவித்ததால் அவனைக் கொலை செய்தது நியாயமென்கிறாய். பாரத மாதாவின் மானத்துக்கு ஹானி விளைவிப்பவர்களிடம் நாங்கள் அதே மாதிரி நடந்து கொள்ளுகிறோமென்றால் அதை அநியாயம் என்கிறாய். நீ சொல்வதில் அர்த்தமிருக்கிறதா பார். அது கிடக்கட்டும். உன் உபமானத்தின்படிதான் பார். பாம்பு தானாகச் சென்று மனிதரைக் கடிப்பதில்லை. அதை மனிதன் மிதித்தால்தான் கடிக்கிறது. மிதிப்பவர்களை மாத்திரம்தான் கடிக்கிறது. அந்த மாதிரிதான் நாங்கள் கவனித்துக் கொள்ளுகிறோம். தன்னை ஆதரிப்போரைப் பாம்பு ஒன்றும் செய்வது இல்லை. உலக ரட்சகனான மகா விஷ்ணுவுக்குப் பாம்பு படுக்கையாக இல்லையா? உலக நிக்கிரகனான சிவன் தலைக்குத்தான் ஆபரணமாயில்லையா?'' என்றான் சாஸ்திரி.

''சாஸ்திரி பாம்பு எங்கே இருந்தால் என்ன? அதனிடத்திலிருப்பது விஷம். விஷமுள்ள பிராணியிடத்தில் நன்மையை எதிர்பார்க்க முடியாது. அம்மாதிரிதான் நீங்களும். நீங்கள் கையாளும் பலாத்கார வழிகள் விஷத்துக்கு

ஒப்பானவை. உங்களுடைய கொள்கைகள் சிலாக்கியமானவை; வழிகள்தான் கெடுதல். அவற்றால் தேசத்துக்கு நன்மை ஏற்படாது. தேச முன்னேற்றத்துக்குத் தடைதான் ஏற்படும். இது என்னுடைய திடமான நம்பிக்கை'' என்றாள் ஜயலட்சுமி.

சாஸ்திரி சிறிது நேரம் பதில் சொல்லாமல் ஏதோ ஆலோசித்துக் கொண்டிருந்தான். முடிவில் ''ஜயலட்சுமி! என்னுடைய வழிகளில் உனக்கு இப்போது நம்பிக்கையில்லை. கொஞ்ச நாள் எங்களுடன் வேலை செய்தால் நம்பிக்கை ஏற்பட்டுவிடும். எங்கள் சங்கத்தில் உன்னைச் சேர்க்கத் தீர்மானித்து விட்டேன். எங்களுடன் வேலை செய்ய நீதான் சரியான பேர்வழி. என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''எனக்கு நம்பிக்கையில்லாத இயக்கத்தில் நான் எதற்காகச் சேரவேண்டும்?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''நீ சுதந்திரத்துடன் வாழ்வதற்காக... ஏற்கனவே இரண்டு கள்ளக் கையெழுத்து வழக்குகள் உன் மேல் தாக்கலாகி இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் குறைந்த பக்ஷம் இரண்டு வருஷங்களாவது ஜயில் வாசம் கிடைக்கும். போதாதற்கு நாளை முதற்கொண்டு போலீஸார் வாஸு தேவனைத் தேடுவார்கள். உனக்கும் அவனுக்கும் விரோதமென்பது போலீஸாருக்குத் தெரிந்த விஷயம். உன்னுடைய துணிச்சலும் அவர்களுக்குத் தெரியும். தவிர, வாஸுதேவன் மறைந்துவிட்ட அதே இரவில் உன்னைக் கைது செய்ய போலீஸார் துரத்தி வந்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் சேர்த்து யோசித்துப் பார். உன்மேல் சாக்ஷியம் எவ்வளவு பலமாக இருக்கிறதென்று தெரியும். தூக்குத் தண்டனை கிடைக்காவிட்டாலும் தீவாந்திர சிக்ஷையாவது நிச்சயம். எங்கள் சங்கத்தில் நீ சேர்ந்தாயானால் உன்மேல் போலீஸார் எவ்வித வழக்கும் தொடராதபடி நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.



நாளை முதல் நீ போலீஸ் பயமின்றி இஷ்டப்படி சஞ்சரிக்கும்படி செய்ய என்னால் முடியும். இல்லாவிட்டால் இவ்விடத்தை விட்டு வெளியேறிய இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் நீ கைது செய்யப்படுவாய்'' என்றான்.

அவன் பிடியில் தான் பூர்ணமாய்ச் சிக்கியிருப்பதை ஜயலட்சுமி அறிந்துகொண்டாள். ஆனால் போலீஸார் கண்ணில் படாமல் திரியும் சாஸ்திரி போலீஸாரிடமிருந்து தன்னை எப்படித் தப்புவிக்க முடியுமென்று சந்தேகித்தாள்.

''போலீஸாரிடமிருந்து எப்படி என்னைத் தப்புவிப்பாய்?'' என்று வாய்விட்டும் கேட்டாள்.

''பணம் எங்கும் வேலை செய்யும். அதைப்பற்றி உனக்கென்ன கவலை? நீ சங்கத்தில் சேர்ந்தால் நாளைக்கே உன் மேலிருக்கும் வழக்குகள் வாபஸ் வாங்கப்படும். வாஸுதேவன் கையெழுத்தைப் போலவே கையெழுத்திட்ட லீவ் மனுவொன்றும் சர்க்காருக்குப் போய்ச் சேரும். இரண்டு மாதகாலம் விசாரணைக்கு இடமில்லாமல் ஏற்பாடு செய்துவிட்டால் பிறகு நம் மேல் சந்தேகமேற்படாது'' என்றான் சாஸ்திரி.

ஜயலட்சுமி அவனுடைய புத்திகூர்மையையும் வேலைத்திறமையையும் கண்டு வியந்தாள். இவ்வளவையும் நேர்வழியில் செலவழித்தால் தேசம் எவ்வளவு லாபமடையும் என்று யோசித்தாள். தான் அவன் கையில் பலமாகச் சிக்கிக் கொண்டிருப்பதை அறிந்து அவனுடைய சங்கத்தில் சேர ஒப்புக்கொண்டாள்.

''ஆமாம்! இப்பொழுது சங்கத்தில் எவ்வளவு பேரிருக்கிறார்கள்?'' என்று கேட்டாள்.

''நமது மாகாணத்தில் முப்பத்தைந்து பேர் இருக்கிறார்கள். இதர மாகாணங்களில் மற்றும் சிலர் தலைமையின் கீழ் கொஞ்சம் அதிக அங்கத்தினர்கள் இருப்பார்கள்'' என்றான் சரப சாஸ்திரி.

ஜயலட்சுமி சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''இந்த முப்பத்தைந்து பேரை வைத்துக்கொண்டா ஆங்கில சாம்ராஜ்யத்தை ஜயித்துவிடப் போகிறீர்கள்?''

''ஜயலட்சுமி! மனிதர்களின் தொகை முக்கியமல்ல; ஊக்கம்தான் முக்கியம். இத்தாலி முழுவதையும் பலமான ஒரே தேசமாக உருவாக்கிய கரிபால்டி தன்னுடைய ஆயிரம் வீரர்களைக் கொண்டுதான் காரியத்தைச் சாதித்தான். தென் அமெரிக்க நாடுகளை ஸ்பெயின் தேசத்து ஆதிக்கத்தினின்றும் மீட்ட பொலிவார் தனது வேலையை எவ்வளவு குறைந்த ஆட்களைக் கொண்டு ஆரம்பித்தான்? இப்பொழுது பெரிய சமுத்திரம்போல் பொங்கி ஜயில்களுக்குள் பாயும் காங்கிரஸ் எவ்வளவு பேர்களுடன் ஆரம்பித்தது? அப்படியே காலக்கிரமத்தில் நமது சங்கமும் வலுக்கும், காரியமும் சித்திக்கும்'' என்று சாஸ்திரி கூறினான்.

இப்படிப் பலாத்காரமாகப் பயங்கர இயக்கத்தில் சேர்க்கப் பட்ட ஜயலட்சுமி அன்றிரவைச் சரப சாஸ்திரியின் வீட்டிலேயே கழித்தாள்.

அத்தியாயம் - 7

## அல்லிக் குளத்தருகில்

சரப சாஸ்திரி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினான். மறுநாள் சாயந்திரம் ஜயலட்சுமி மலைக் கோட்டை வழியாகத்தான் வீட்டுக்கு வந்தாள். வழியில் எவ்வளவோ போலீஸ்காரர்கள் அவளைப் பார்த்தார்கள். ஒருவர்கூட அவளைப் பிடிக்க முனையவில்லை. அவள் வீட்டுக்குள் நுழைந்தபோது பலராம ஐயர் கூடத்திலிருந்த சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தார். அதுவரையில் அவர் முகத்திலிருந்த கவலை அவளைக் கண்டதும் நீங்கியது. முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. ஏதோ பெரிய சுமை தலையிலிருந்து இறங்கியதுபோல் பலராம ஐயர் பெருமூச்செறிந்தார்.

''என்ன ஜயா! சரப சாஸ்திரியைப் பார்த்தாயா? எல்லாம் நான் சொன்னபடி முடிந்ததா இல்லையா?'' என்று பலராம ஐயர் கேட்டார்.

''ஆகா முடிந்தது'' என்று ஜயலட்சுமி கூறினாள். பிறகு சிறிது நேரம் மௌனமாயிருந்தாள்.

''என்ன யோசிக்கிறாய்?'' என்றார் பலராம ஐயர்.

''ஒன்றுமில்லை. கோபால மாமா எங்கே காணோம்?'' என்று கேட்டாள் ஜயா.

''அவன் மலைக்கோட்டைக்குப் பக்கத்தில் ஒரு அறையை வாடகைக்குப் பேசிக்கொண்டு அங்கே போய் விட்டான்.''

''ஏன் அப்படி?''

"நீ ராத்திரி புறப்பட்டுப் போய்விட்டாயோ இல்லையோ, காலையில் எழுந்திருந்ததும் உன்னைத் தேடிப் பார்த்தான். புழக்கடையிலே போய் ஜயா ஜயா என்று கூப்பிட்டான். அங்கே காணாது போகவே காவிரிப் பக்கம் போய்ப் பார்த்தான். பத்துப் பதினொரு மணி வரையில் பேசாதிருந்தான். பிறகு ஜயா எங்கே என்று என்னைக் கேட்டான். இன்னும் இரண்டு நாளில் வருவாள் என்று பதில் சொன்னேன். போன இடத்தைச் சொல்லென்று கட்டாயப்படுத்தினான். உனக்கு நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று சொன்னேன். அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. தன் பெட்டி படுக்கையெல்லாம் எடுத்துக் கொண்டு போய்விட்டான். நம்ம சேவகன் கிருஷ்ணன் அவனை மலைக்கோட்டை கிட்டப் பார்த்தானாம். தான் அங்கேயே பக்கத்தில் ஒரு வீட்டில் வாடகைக்கு அறை வைத்துக் கொண்டிருப்பதாகக் கிருஷ்ணனிடம் சொன்னானாம்" என்றார் பலராமையர்.

'ஐயோ பாவம். நான் காணவில்லையென்றதும் அவர் மனது, என்னபாடு பட்டிருக்கும்!' என்று ஜயா வருந்தினாள்.

பத்து நாட்கள் காற்றாய்ப் பறந்தன. ஜயலட்சுமியின் மனநிம்மதியும் பறந்து போய்விட்டது. அவளுக்குக் கவலை அதிகமாவதையும் எப்பொழுது பார்த்தாலும் அவள் எதையோ யோசித்துக் கொண்டிருப்பதையும் பலராம ஐயர் கவனித்தார். கொஞ்ச நாள் திருச்சியை விட்டு எங்கேயாவது கிராமத்திற்கு அழைத்துக் கொண்டு போனால் அவள் உடம்பு தேறும் என்று எண்ணினார். அந்த எண்ணத்தை ஈடேற்ற தெய்வமே அருள் புரிந்தது போல, ஜமீன் சம்பந்தமான சில முக்கிய விஷயங்களில் யோசனை கேட்க வேண்டியிருக்கிறதென்றும் தமது ஊர்வரையில் வந்து போனால் சௌகரியமாயிருக்கு மென்றும் இளையவல்லிபுரம் ஜமீன்தார் பலராம ஐயருக்குக் கடிதம் எழுதினார்.

"ஜயா இதோ பார். ஜமீன்தாரிடமிருந்து கடிதம்



வந்திருக்கிறது. இளையவல்லிபுரம் போய் வருவோம். வருகிறாயா?" என்று கடிதத்தைப் பார்த்துவிட்டுப் பலராம ஐயர்கேட்டார்.

"அங்கே என்ன விசேஷம்?" என்றாள் ஜயலட்சுமி.

"ஏதோ ஜமீன் விஷயமாக யோசனை கேட்க வரச் சொல்லியிருக்கிறார். நீ பிறந்த பிறகு நான் அங்கே போனதில்லை. பழைய ஜமீன்தார் இருக்கும்போது போனதுதான். நல்ல கிராமம். வா, போய்விட்டு வரலாம். அந்த ஜமீன்தார் பங்களாத் தோட்டத்தைப் பார்த்தாயானால் அதை விட்டு வரவே மனம் வராது" என்று சொன்னார் பலராம ஐயர். ஜயலட்சுமிக்கு மனதில் குதூகலமில்லை; இருந்த போதிலும் "ஆகட்டும்" என்றாள்.

இளையவல்லிபுரம் தஞ்சாவூருக்குப் பதினெட்டு மைல் தூரத்தில் இருக்கிறது. சென்னை ராஜதானியிலுள்ள முதல்தரமான ஜமீன்களில் இளையவல்லிபுரமும் ஒன்றெனக் கூறலாம். அந்த ஜமீனில் சுமார் இருபத்தைந்து கிராமங்கள் இருக்கின்றன. நிலங்களில் எப்பொழுதும் நல்ல விளைச்சல். வெற்றிலைத் தோட்டங்களும் பலாத் தோட்டங்களும் அதிகம்.

தஞ்சாவூர்க் கதம்பத்துக்குப் புஷ்பம் இளையவல்லி புரத்திலிருந்துதான் கிடைக்கிறதென்பது பிரசித்தம். இவ்வளவு வளப்பம் பொருந்தியிருந்த போதிலும் அந்த ஜமீனில் இருந்த ஜனங்கள் ஏழைகளாகவே இருந்தார்கள். அவர்கள் உழைப்பின் பலன் பூராவும் ஜமீன்தாரரின் படாடோப வாழ்க்கைக்குத்தான் பிரயோசனப்பட்டது.

இயற்கை வளப்பம் அதிகமுள்ள இந்தத் தேசத்தில் ஜமீன்தார்கள் மட்டும் நிலத்தில் சிரத்தையுள்ளவர்களாய், குடிகளின் நன்மைகளைக் கவனித்து இயற்கைச் சாதனங்களை உபயோகித்து நல்ல கைத்தொழில்களை ஆரம்பித்திருந்தால், தேசத்தின் செல்வம் பெருகியிருக்கும். ஜமீன்தார்களுக்கும் அவர்கள் குடிகளுக்கும் நல்லுறவும் ஏற்பட்டிருக்கும். ஆனால் நமது ஜமீன்தார்கள் வருமானத்தை அதிகமாக்கிக்கொள்ள

கைத்தொழில்களை உருவாக்கவில்லை. அவர்களுக்குத் தெரிந்தது ஒரே வழிதான். பணம் போதவில்லையென்றால் குடிகள் செலுத்த வேண்டிய நிலவரியை அதிகப் படுத்தினார்கள். அதை வரியென்றுகூட அவர்கள் சொல்லவில்லை. நிலம் தங்களுக்கும் சொந்தமென்றும், குடிகள் செலுத்துவது வாரம்தான் என்றும் சொல்லி வந்தார்கள். ஜமீன்தார்களுக்கு நிலத்தில் சொந்தம் கிடையாதென்பதற்குத் தஸ்தாவேஜுகள் பலவிருக்கின்றன.

நமது ராஜதானியின் நிர்வாகத்தில் பிரபலஸ்தர்களாயிருந்த மிஸ்டர் கரோல், ஸர் ஜான் ஷோர், மிஸ்டர் போர்ப்ஸ் முதலிய ஆங்கிலப் பிரமுகர்கள் அப்படியே அபிப்ராயம் சொல்லியிருக்கிறார்கள். பிரபல ஹைகோர்ட்டு ஜட்ஜுகளாகிய ஸர் முத்துஸ்வாமி ஐயரும், ஸர் சுப்பிரமணிய ஐயரும் அவ்விதமே தீர்ப்புகளும் எழுதியிருக்கிறார்கள். வரி வசூலிப்பதற்காக அவர்கள் ஈஸ்ட் இந்தியா கம்பெனியால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் என்பதற்கும் ஆதாரங்களிருக்கின்றன. இருந்தபோதிலும் நிலத்திற்குரிய எல்லா உரிமைகளையும் ஜமீன்தார்களே அனுபவித்து வந்தார்கள்.

சில ஜமீன்தார்கள் தங்கள் இஷ்டப்படி குடிகளை நிலத்தை விட்டுப் போகச் சொல்வதும் வேறொருவருக்கு நிலத்தை சாஸனம் செய்வதுமாக ஆட்சி புரிந்து வந்தார்கள். 1802-ஆவது வருஷத்தில் ஜமீன்தார்களுக்குக் குடிகள் செலுத்த வேண்டிய வரி இவ்வளவென்றும் ஜமீன்தார்கள் சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய பேஷ்கஷ் என்ற கப்பம் இவ்வளவென்றும் சர்க்காரால் நிரந்தரமாக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், ஜமீன்தார்கள், பொருள்களின் விலை உயர உயர, குடிகளின் வரியையும் உயர்த்தி விட்டார்கள். ஏற்கனவே பல அநீதிகள் இழைக்கப்பட்டுக் கஷ்டப்படும் ஜமீன் குடிகள் அடிக்கடி அதிகப்படுத்தப்பட்ட வரியைக் கொடுக்க முடியாமல் தவித்தார்கள்.



ஜமீன் குடிகளின் ஸ்திதி பொதுவாக இவ்வளவு லக்ஷணம் என்றால் இளையவல்லிபுரம் குடிகளின் நிலைமை மகா மோசமாயிருந்தது. ராஜதானிக்குள் எந்த ஜமீனில் வரி மிகவும் ஜாஸ்தி யென்றால் இளையவல்லி புரத்தில்தான் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

பழைய ஜமீன்தாராவது அதிக வரியை வசூலித்தாலும் குடிகளுக்கு அவசிமான காலங்களில் சில உதவிகள் செய்து வந்தார். ஒரு குடியின் வீட்டில் ஏதாவது கலியாணம் வந்ததென்றால் அதற்காக இன்னின்ன சாமான்கள் உக்கிராணத்திலிருந்து இனாமாய்க் கொடுக்க வேண்டியது என்று ஜாப்தா போட்டு வைத்திருந்தார். அதன் பிரகாரம் தர்மமும் செய்து வந்தார். அந்த ஜமீன்தார் சுத்த கர்நாடகமாக இருந்ததுதான் அதற்கெல்லாம் காரணம்.

இப்போது இருக்கும் புதிய ஜமீன்தார் பட்டத்துக்கு வந்த பிறகு பழைய வழக்கங்களையெல்லாம் நிறுத்தி விட்டார். ஜமீன் வரும்படி தமது சொந்தச் செலவுக்கே போதாதிருக்க அவர் குடிகளுக்கு எப்படி உதவி செய்ய முடியும்? தகப்பனார் இறந்ததும் புதிய ஜமீன்தார் தமது ஜாகையை பட்டணத்துக்கு மாற்றிக் கொண்டார். ஒரு முறை, இருமுறை பட்டணத்துக்குப் போய் வந்த சில குடிகள் ஜமீன்தாருக்குப் பட்டணத்திலேயே கெட்ட பெயர் அதிகமாக இயிருக்கிறதென்றும், தாசிகள் உறவு அதிகமாக இயிருக்கிறதென்றும் கிராமங்களில் சொல்லலானார்கள். அவர் குதிரைப் பந்தயத்தில் அதிகப்பணம் கோட்டை விடுவதாயும் வதந்தி உலாவலாயிற்று.

ஜமீன்தாரின் ஊதாரித்தனம் அதிகமாக குடிகளின் கஷ்டமும் அதிகமாயிற்று. கஷ்டம் தாங்காது போகவே குடிகள் வரி கொடுக்க மறுத்தார்கள். அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்ற ஜமீன்தார் நடவடிக்கை எடுத்துக் கொண்டார். குடிகள் கோர்ட்டில் வழக்குத் தொடுத்து ஜமீன்தார் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாதபடி தடை

உத்தரவு (இஞ்சக்ஷன்) வாங்கி விட்டார்கள். இதைப்பற்றி ஆலோசிக்கவே ஜமீன்தார் ஊருக்கு வந்து பலராமையரையும் அங்கு வரும்படி கடிதம் எழுதினார்.

பலராம ஐயரின் மோட்டார் இளையவல்லி புரத்தருகில் வந்துவிட்டது. அப்பா! என்ன அருமையான காட்சி! இரண்டு பக்கங்களிலும் வயல் காடு. பச்சைப் பசேலென்று வளர்ந்திருக்கும் பயிர் கண்ணைப் பறிக்கிறது. குஞ்சுக்கு இரையெடுத்துக் கொண்டு போகும் குருவிகள் போலச் சிறிய வாய்க்கால்கள் ஜலத்துடன் கழனிகளில் பாய்கின்றன.

''அப்பா! ஊர்தான் வந்துவிட்டதே, இங்கேயே இறங்கி நடந்து போகலாமே, சாயங்கால வேளையாயிருக்கிறது'' என்று ஜயலட்சுமி சொன்னாள். மோட்டாரை நிறுத்தி இருவரும் கீழே இறங்கியதும், ''டேய்! மோட்டாரை ஜமீன்தார் பங்களாவில் கொண்டுபோய் விடு. நான் இப்படியே நடந்து வந்துவிடுகிறேன்'' என்று பலராம ஐயர் சொல்லவே டிரைவர் காரைச் செலுத்திக் கொண்டு சென்றான்.

வரப்பின் மேலேயே ஒருவர் பின் ஒருவராய் இருவரும் நடந்து சென்றார்கள். வயல்களில் உழவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். புதிதாக யாரோ கிராமத்துக்கு வருவதைப் பார்த்து வேலையை நிறுத்தி, சிறிது நேரம் வக்கீலையும் ஜெயலட்சுமியையும் பார்த்தார்கள். அவர்களிலொருவனுக்குப் பலராம ஐயர் யாரென்று தெரிந்து விட்டது. ''அவர்தாண்டா நம்ம வக்கீல் ஐயா'' என்றான் அவன். உடனே அவர்களில் பலர் பலராம ஐயரைச் சுற்றி வளைத்துக்கொண்டு க்ஷேமம் விசாரித்தார்கள். ''இது யாருங்க? நம்ம கொளந்தேங்களா?'' என்று சிலர் கேட்டார்கள். பிறகு தங்கள் குறைகளையும் அவரிடம் சொல்லிக் கொண்டார்கள்.

''ஜமீன்தாரு ரொம்ப கஷ்டப்படுத்தறாருங்க. போன



வருஷம் விளைந்த நெல்லெல்லாம் வாரப் பணம் குடுக்கிறதுக்கே சரியாப் போச்சுங்க. வெள்ளத்திலே பாதி சேதமாய் போச்சுங்க. இந்த வருஷம் தள்ளிக் குடுக்க ணும்னு எஜமான் கிட்டச் சொல்லுங்க'' என்றான் ஒருவன்.

''ஏனப்பா, போன வருஷம் நல்ல விளைச்சல்தானே?'' என்று கேட்டார் பலராம ஐயர்.

''என்ன விளைஞ்சுதான் என்ன பிரயோசனங்க? வரியை சும்மா ஏத்திண்டுபோனா எங்களுக்கு விளைஞ்சுதான் என்னா பிரயோஜனம் சொல்லுங்க'' என்றான் மற்றொருவன்.

''அதிகம் கேட்டா எங்க மேலே கேஸ் போடறாருங்க. இப்பகூட ஏதோ இந்த மாதிரிதான் கேஸ்லே மாட்டிக்கினு இருக்காராம். அதுக்காகத்தான் உங்களை வரச்சொல்லிக் கடுதாசி போட்டிருக்குன்னு ஊர்லே சொல்லிக்கிறாங்க'' என்றான் இன்னொருவன்.

''இதெல்லாம் நல்லா இருக்குங்களா? நீங்க கொஞ்சம் எசமானிடம் சொல்லுங்க'' என்று முதலில் பேசியவன் மறுபடியும் விண்ணப்பித்துக் கொண்டான்.

அவர்களிலொரு வனுக்கு கொஞ்சம் வாய்த் துடுக்கு. ''யார் சொன்னாலும் கேக்க மாட்டாண்டா ஜமீன்தார். கேட்டுட்டான்னா தேவடியாளுக்குக் கொட்டிக் கொடுக்க பணத்துக்கு எங்கேடா போறது?'' என்றான்.

''டே களுதே! ஐயர் எதிருக்கே கன்னா பின்னான்னு பேசாதே'' என்று மற்றவர்கள் அவனை அடக்கினார்கள்.

பலராம ஐயர் அவர்கள் குறைகளைக் கவனிப்பதாக வாக்களித்துவிட்டுத் தமது புத்திரி பின் தொடர ஜமீன்தார் பங்களாவை நோக்கி நடந்தார். ஜமீன்தார் எவ்வளவு கிராதகனென்பதையும் ஜயலட்சுமி புரிந்து கொண்டாள். அவனுடைய பெயர் கெட்டிருக்கும்போது அவன் வீட்டில்

தங்கினால் தனக்கும் எங்கேனும் கெட்ட பெயர் வந்துவிடப் போகிறதேயென்று அஞ்சினாள். தன்னுடைய வாழ்க்கையில் சிறிது நாளாய்த் தன் பெயர் கெடுவதற்கு ஹேதுவான சம்பவங்களே நிகழ்வதைக் கண்டு விதியை நொந்து கொண்டாள்.

ஜமீன்தார் ராஜதுரை இவர்கள் வரவை எதிர்பார்த்துப் பங்களா வாசலிலேயே நின்று கொண்டிருந்தார். அவருடைய பக்கத்தில் ஜமீன் காரியஸ்தனான ராமஸ்வாமியும் நின்றிருந்தான். பலராமையரும் அவரது புத்திரியும் சௌகரியமாய்த் தங்குவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யும்படி மற்ற வேலைக்காரர்களை அதட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தான். பலராம ஐயரும் அவருடைய புத்திரியும் பங்களாவுக்கருகில் வந்தவுடனே ஜமீன்தார் அவர்களை எதிர்கொண்டு, ''வரவேணும், வரவேணும். அப்பா காலமான பிறகு தாங்கள் இங்கே அடிகூட எடுத்து வைக்கவில்லை. இப்பொழுதாவது வர நேர்ந்ததே'' என்று உபசாரவார்த்தைகள்கூறி வரவேற்றார்.

அப்படிப் பலராம ஐயரை எதிர்கொண்ட ஜமீன்தார் அடுத்த விநாடியில் வக்கீலுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ஜெயலட்சுமியைப் பார்த்து வாயைப் பிளந்து கொண்டு ''இது யார் நம்ப குழந்தையா?'' என்று கேட்டு அவளழகைக் கண்டு பிரமித்து நின்றார்.

''ஆமாம்! நாங்கள் தங்க எங்கே இடம் கொடுக்கி நீர்கள்''? என்று கேட்டுக்கொண்டு பலராம ஐயர் நகர்ந்தார்.

''நம்ப தோட்டத்து வீடு இருக்கிறதே அதிலேயே தங்க லாம்'' என்று ஜமீன்தார் சொல்லிவிட்டு, ''யாரடா ராமசாமி! ஐயாவையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு போய்த் தோட்டத்து வீட்டில் விட்டுவா'' என்று கூறவே, ராமசாமி ''சாமி இப்படி வாங்க'' என்று அவர்களை ஜமீன்தார் உத்தியான வனத்துக்கு அழைத்துச் சென்றார்.



பெரிய நந்தவனம். தூர இருந்து பார்ப்பவர்களுக்கு அது காடுபோல் இருக்கும். தோட்டத்தின் நடுவில் சிறிய வீடு. அது ஜமீன்தாரின் சிங்காரபவனம். அதைத்தான் வக்கீல் பலராமய்யருக்கு ஒழித்து விட்டிருந்தார்கள்.

விடபுருஷனான ஜமீன்தாருக்கு ஜயலட்சுமியைப் பார்த்ததும் மனது நிலை கலங்கிவிட்டது. 'நாமும் பட்டி னத்தில் எவ்வளவோ பெண்களைப் பார்த்திருக்கிறோம். இந்த மாதிரி ஒரு பெண் இருப்பாளென்று நினைக்கவும் முடியாத அவ்வளவு அழகல்லவா இவளுக்கிருக்கிறது' என்று தானே பிதற்றிக்கொண்டார். ஜயலட்சுமி நந்தவனத்துக்குள் நுழைந்து கண்ணுக்கு மறையுமட்டும் அவள் போவதையே பார்த்துக்கொண்டு நின்றார்.

மாலைப் பொழுது போயிற்று. சரத்கால சந்திரன் தன் னுடைய குளிர்ந்த கிரணங்களால் ஜனங்களுக்குச் சந்தோஷத் தைக் கொடுப்பதற்காக வானத்தில் கிளம்பினான். கிராமச் சிறுவர்கள் வாசலில் வந்து விளையாட ஆரம்பித்தார்கள். ஏழைப் பெண்கள் தங்கள் குடிசைகளிலிருந்து வெளிக்கிளம்பி, கூரையைப் பிடித்தவண்ணம் குழந்தைகள் விளையாடுவதைக் கண்டு களித்துக் கொண்டிருந்தார்கள். பலராம ஐயர் ஆகாரத்தை முடித்துக்கொண்டு தோட்ட வீட்டின் முன் தாழ்வாரத்தில் ஹரிக்கன் விளக்குடன் வந்து உட்கார்ந்தார். அங்கிருந்த சேவகனைக் கூப்பிட்டு, ''அடே! ஜமீன்தாரைக் கேஸ் கட்டுகளுடன் இங்கு வரச்சொல்லு'' என்று ஆக்ஞாபித்தார். சேவகனும் அவர் கட்டளையை நிறைவேற்றச் சென்றான்.

ஜயலட்சுமி வெளியில் வந்து, ''அப்பா! நான் தோட் டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரட்டுமா?'' என்றாள்.

''ஆகா! போய்விட்டு வா'' என்று உத்தரவு கொடுத்தார் பலராம ஐயர்.

அந்த அழகிய நந்தவனத்திற்குள் நுழைந்து ஜயலட்சுமி சென்றாள். அடர்ந்த நந்தவனம். நந்தவனம் முழுவதும்

வாசனை மலர்ச்செடிகளும் மரங்களுமே யிருந்தபடியால் நானாவித புஷ்ப ஜாதிகளின் வாசனையும் சேர்ந்து ஜெயலட்சுமியைப் பரவசப்படுத்தியது. அவளுடைய மெல்லிய காலில் கல்லுறுத்தப் போகிறதே யென்ற பரிதாபத்தினுடன் மாமல்லி தனது நீண்ட மலர்களை நிறைய உதிர்த்திருந்தது. சந்திரன் நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்ததால் இலைகளின் மத்தியில் சந்திரகிரணங்கள் பிரவேசித்துக் கீழே திட்டுத் திட்டையாக விழுந்து தரையை வைரமிழைத்தாற்போல் செய்திருந்தது.

நந்தவனத்தின் ஒரு புறத்தில் அல்லிக் குளம். அதன் கரையில் பசும்புல் படர்ந்திருந்தது. அங்கு போய் ஜயலட்சுமி உட்கார்ந்துகொண்டாள். சந்திர ஒளியில் தன்னுடைய கஷ்டங்களை யெல்லாம் மறந்து விட்டாள். அல்லிக் குளத்துக்குள் சந்திரன் பிரதிபிம்பம் தெரிந்தது. காற்றினால் ஏற்படும் சலனத்தால் நீர் அலையவே தண்ணீருக்குள் தெரியும் சந்திரன் இப்படியும் அப்படியும் அலைந்தது. ஜயலட்சுமிக்குச் சந்தோஷம் மேலிட்டதால் தன் மெல்லிய குரலில் பாடலானாள்.

'அல்லிக் குளத்தருகே - ஒருநாள்
அந்திப் பொழுதினிலே - அங்கோர்
முல்லைச்செடியதன்பாற் - செய்தவினை
முற்றும் மறந்திடக்கற்றதென்னே யென்று
சொல்ல வல்லாயோ கிளியே' -

என்று இனிமையாகப் பாடினாள். அவள் கானத்தைக் கேட்க வந்தனபோல் அல்லிக்குளத்து மீன்களும் கரைக்கு அருகில் வந்து உடம்பை ஆட்டிக்கொண்டு நின்றன. அவள் இனிய குரல் நந்தவனம் முழுவதும் பரவியது. அந்தச் சங்கீதத்தைக் கேட்டுக் குதூகலிப்பனபோல் பக்ஷிஜாலங்கள் சப்தித்தன.

இயற்கையழகில் ஈடுபட்டு மெய்ம்மறந்திருந்த ஜயலட்சுமிக்கு, 'வீசும் கமழ் நீயெனக்கு விரியும் மலர் நானுனக்கு' என்ற பாரதியின் காதல் பாட்டு அந்தச் சமயத்தில் ஞாபகத்துக்கு வந்தது. உடனே டாக்டர் கோபாலனை நினைத்துக் கொண்டாள். அவர் தன்னுடன் அப்பொழுது அங்கிருக்கக் கூடாதா என்று நினைத்தாள். 'அவர் இங்கிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்' என்று வாய்விட்டும் சொன்னாள்.



"இதோ காத்துக்கொண்டிருக்கிறார்" என்று பின்னாலிருந்து ஒரு சப்தம் வந்ததைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். தனக்கு வெகு அருகில் ஜமீன்தார் நின்றிருப்பதையும், அவர் விசிறி மடிப்பு அங்கவஸ்திரம் தன்மேல் உராய்ந்து கொண்டிருப்பதையும் பார்த்து மனம் பதைத்து எழுந்து விலகி நின்றாள்.

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள். "அப்பா, உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்" என்று ஜயலட்சுமி சொன்னாள்.

"அது எனக்குத் தெரியும்" என்றார் ஜமீன்தார். அவருடைய பார்வை அவளுக்குப் பிடிக்கவில்லை.

"தெரிந்தால் இங்கென்ன காரியம்? அங்கே போகிறது தானே" என்றாள் ஜயலட்சுமி.

"கொஞ்ச நேரம் கழித்துப் போகிறேன்" என்றார் ஜமீன்தார்.

"இங்கு எதற்காக வந்தீர்கள்? உங்களை யார் வரச் சொன்னது?" என்று கோபத்துடன் ஜயலட்சுமி கேட்டாள்.

"நன்றாக இருக்கிறதே கேள்வி. என்னுடைய தோட்டத் திற்கு நான் வருவது பிசகா?" என்று சொல்லி ஜமீன்தார் சிரித்தார். அந்தச் சிரிப்பு ஜயலட்சுமிக்குக் கர்ண கடூரமாய் இருந்தது.

"நீங்கள் செய்யும் காரியம் சரியாயில்லை!" என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

ஜமீன்தார் வழியை மறித்து அவள் கையைப் பிடித்துக் கொண்டார். ''ஜயலட்சுமி! உன்னை இப்பொழுது என்ன செய்துவிட்டேனென்று ஓடுகிறாய். இப்படி வா'' என்று குளத்தங்கரைக்காக மறுபடியும் இழுத்தார்.

''ஜமீன்தார்! கையை விட்டுவிடுங்கள். உங்களுடன் இங்கிருக்க எனக்கு இஷ்டமில்லை. வீணாக பலவந்தம் செய்ய வேண்டாம்'' என்று ஜயலட்சுமி கூறினாள்.

''என்னுடைய இஷ்டத்துக்கு விரோதமாக இதுவரை நடந்தவர்கள் கிடையாது. அப்படி நடந்தால் நான் விடுவதும் கிடையாது'' என்று சொல்லி, அவள் கையை ஜமீன்தார் இன்னும் இறுகப் பிடித்துக் கொண்டார்.

''இதோ பாருங்கள். எனக்கு இங்கிருக்க இஷ்டமில்லை. பலாத்காரம் செய்யாதீர்கள். பலாத்காரத்தால் யாருடைய இஷ்டத்தையாவது திருப்ப முடியுமா? பலவந்தத்தால் ஒரு பெண்ணின் அன்பைத்தான் பெற முடியுமா? வேண்டாம் விட்டுவிடுங்கள்'' என்ற ஜயலட்சுமி கூறிக் கையை விடுவித்துக்கொள்ள முயன்றாள்.

''பலாத்காரத்தால் ஒரு காரியமும் நடக்காதா?'' என்று கேட்டு ஜமீன்தார் சிரித்தார்.

''நடக்காது'' என்றாள் ஜயா.

''அப்படியானால் பலாத்கார வழிகளையே அடிப் படையாகக் கொண்ட சரபசாஸ்திரியின் பயங்கர இயக்கத்தில் ஏன் சேர்ந்தாய்?'' என்று ஜமீன்தார் கேட்டார்.

இந்தக் கேள்வியைக் கேட்டு ஜயலட்சுமி திடுக்கிட் டாள். ''உங்களுக்கு அது எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

''எனக்கு எல்லாம் தெரியும். உன் யோக்கியதையைப் பற்றிப் பிறர் என்ன நினைக்கிறார்களென்றுகூடத் தெரியும். சரப சாஸ்திரி எல்லாம் சவிஸ்தாரமாக எழுதியிருக்கிறான். வா



ஜயலட்சுமி! இன்னும் நீ நல்லவள்போல் பாசாங்கு செய்யதே'' என்று சொல்லிக்கொண்டே அவளுடைய இரு கைகளையும் பிடித்துத் தம்மருகில் ஜமீன்தார் இழுத்துக் கொண்டார்.

ஜயலட்சுமி ஓவென்று கத்தினாள். அடுத்த நிமிஷத்தில் இரும்பு போன்ற ஒரு கையால் ஜமீன்தார் அப்புறப்படுத்தப் பட்டார். ஓங்கி ஒரு குத்தும் அவருடைய முகவாய்க்கட்டையில் விழுந்தது. அந்தக் குத்தினால் ஜமீன்தார் கதி கலங்கிப் பின்பக்கமாக மல்லாந்து அல்லிக் குளத்தில் விழுந்து தத்தளித்தார்.

ஆகாயத்திலிருந்து இறங்கி வந்ததுபோல் டாக்டர் கோபாலன் எதிரே நிற்பதைக் கண்டு ஜயலட்சுமி சந்தோஷத்தால் மெய் சிலிர்த்து நின்றாள்.

ஜமீன்தார் கரையேறி வந்து டாக்டர் கோபாலனை ஏறிட்டுப் பார்த்து, ''நீ யார்? என் தோட்டத்துக்குள் உத்தரவின்றி ஏன் வந்தாய்?'' என்று கேட்டார்.

''ஏன் மறுபடியும் ஸ்நானம் பண்ண ஆசையாயிருக் கிறதா?'' என்று கோபாலன் கேட்டார். ஜெயலட்சுமி சிரித்தாள். கோபாலன் கேட்டதுகூட ஜமீன்தாருக்கு அவ்வளவு கோபமில்லை. ஜயலட்சுமி சிரித்ததுதான் எரிச்சலாயிருந்தது. இந்தச் சமயத்தில் காரியஸ்தன் ராமசாமியும் அங்குவந்து ஜமீன்தாரைப் பார்த்து, ''வக்கீல் ஐயா கட்டைப் பார்க்கணும்னு உங்களுக்காகக் காத்திருக்காரு....'' என்று ஆரம்பித்தவன் அவருடைய ஆடைகள் நனைந்திருந்ததைப் பார்த்து, ''ஏங்க உடம்பெல்லாம் ஈரமாயிருக்கு!'' என்று கேட்டான்.

''குளத்திலே ஸ்நானம் பண்ணினேண்டா'' என்று சொல்லிக் கொண்டே அங்கவஸ்திரத்தைப் பிழிந்துகொண்டு பங்களாவை நோக்கி ஜமீன்தார் நடந்தார்.

''ஷர்ட்டுகூட நனைஞ்சு போச்சிங்களே!'' என்று மீண்டும் கேட்டான் ராமசாமி.

''நனைந்தால் உனக்கென்னடா கழுதை? நீ போய்

வக்கீல் ஐயாவிடம் நான் இதோ வருகிறேனென்று சொல்'' என்றார் ஜமீன்தார். சற்றுத் தூரம் சென்றதும் குளக் கரையைத் திரும்பிப் பார்த்தார். டாக்டர் கோபாலன் மேல் சாய்ந்து கொண்டு ஜயலட்சுமி குலுங்க நகைத்துக்கொண்டிருப்பதைக் காண அவருக்கு எப்படியிருந்திருக்கும்!

டாக்டர் கோபாலனும் ஜயலட்சுமியும் குளக்கரையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

'' நீங்கள் எப்படித் திடீரென்று இங்கு வந்து குதித்தீர்கள்?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

'' என்னுடைய சித்தப்பா ஒருவர் இங்கிருக்கிறார். அவரைப் பார்க்க இரண்டு நாள் முன்பு வந்தேன். இன்று நீங்கள் வரப்போவதாகக் கிராமத்தில் பேச்சாயிருந்தது. உன்னைப் பார்க்கலாமென்று சாப்பிட்டுவிட்டு இந்தப் பக்கம் வந்தேன். இந்த இடத்தில் உன் பாட்டு கேட்டது. இப்படித் திரும்பினேன்'' என்று டாக்டர் கோபாலன் சொன்னார்.

''எனக்கு இங்கே இருப்பதற்கே பயமாயிருக்கிறது. நாளைக் காலையிலேயே அப்பாவை அழைத்துக்கொண்டு ஊருக்குப் போய்விட வேண்டும். ராத்திரி தூக்கங்கூட வராது போலிருக்கிறது'' என்றாள் ஜயலட்சுமி.

''நிம்மதியாய்த் தூங்கு. நானிருக்கிறேன். பயப்படாதே'' என்றார் டாக்டர்.

'எங்கேயோ சித்தப்பா வீட்டில் தங்கியிருப்பவர் நமக்கு எப்படி ஒத்தாசை செய்யப் போகிறார்? என்னவோ பிரியத்தால் சொல்லுகிறார்' என்று ஜயலட்சுமி நினைத்தாள். பிறகு அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு தோட்ட வீட்டுக்குச் சென்றாள்.

அன்றிரவு ஜயலட்சுமிக்குத் தூக்கம் வரவில்லை. தான் பயங்கரச் சங்கத்தில் சேர்ந்ததை சரப சாஸ்திரி ஏன் ஜமீன்தாருக்கு எழுதினான்? ஜமீன்தாருக்கும் சரப சாஸ்திரிக்கும் என்ன சம்பந்தம்? இதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள்.



நடு நிசியிருக்கும். பலராம ஐயர் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார். ஜயலட்சுமிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. வெளி வாசற் படியில் ஏதோ அசைவதுபோல் சப்தம் கேட்டது. மெள்ள அடிமேலடி எடுத்து வைத்து வந்து கதவை ஓசைப்படாமல் திறந்தாள். வாயிற்படிக்குக் குறுக்கே நல்ல வெள்ளையுடை யணிந்த ஒரு மனிதன் படுத்திருந்தான். பக்கத்திலிருந்த மரக்கிளை சிறிது அசைந்தது. சந்திர வெளிச்சம் அந்த மனிதன்மேல் விழுந்தது. பக்கத்தில் ஒரு ரிவால்வரை வைத்துக்கொண்டு மார்மேல் இரு கைகளையும் கட்டிய வண்ணம் டாக்டர் கோபாலன் தூங்குவதைக் கண்டாள். அவருக்குத் தன்னிடமுள்ள அன்பின் ஆழத்தை அறிந்தாள். ஆனந்தத்தால் அவள் கண்களிலிருந்து இரண்டு நீர்த்துளிகள் விழுந்தன. ''இப்பேர்ப்பட்ட ஒரு புருஷனின் உதவி இருந்து விட்டால் எந்தக் காரியம்தான் எனக்குப் பிரமாதம்'' என்று சொல்லிக் கொண்டாள். பிறகு குனிந்து அவருடைய நெற்றியில் மெல்ல முத்தமிட்டாள்.

''யாரது?'' என்று டாக்டர் கோபாலன் துடித்தெழுந்து ரிவால்வரை அவள் மார்புக்காக நீட்டினார்.

ஜயலட்சுமி சிரித்தாள். ''யாரது நீயா'' என்று கோபாலனும் சிரித்தார்.

அத்தியாயம் - 8

## இடம் மாறுதல்

**1931**-ஆவது வருஷம் ஆரம்பமாயிற்று. டாக்டர் கோபாலன் மீண்டும் பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு பலராம ஐயர் வீட்டுக்கே வந்து சேர்ந்துவிட்டார்.

பிரதி தினம் இரண்டு வேளை காவிரியில் ஸ்நானம் செய்துகொண்டு ராஜாவை நிம்மதியாய்க் கழித்து வந்தார். ஜெயலட்சுமியின் நடவடிக்கைகள் மட்டும் சந்தேகத்துக்கு இடந்தராமல் இருந்திருக்குமானால் மிகவும் மகிழ்ச்சியாய் அவர் ராஜாவின் மீதி நாளைக் கடத்தியிருப்பார். ஆனால் வாழ்க்கையில் பூரண சந்தோஷம் யாருக்குதான் ஏற்படுகிறது. ஜயலட்சுமியின் அன்பைப் பெற்றதால் ஏற்பட்ட சந்தோஷம் ஒரு பக்கமும் அவள் அடிக்கடி கண்டோன்மெண்டுக்குப் போவதாலும் சில இரவுகளை அங்கேயே கழித்துவிடுவதாலும் ஏற்பட்ட சந்தேகம் மற்றொரு பக்கமும் உ வரைவாட்டி வதைத்தன.

இரண்டொரு தடவை அவள் எங்கே போகிறாளென்பதை அறிய முயன்று, ''ஜெயா! எங்கே நேற்று முழுதும் நீ வீட்டில் இல்லையே?'' என்று கேட்டார். ஜயலட்சுமி அதற்குச் சரியான பதில் எதுவும் சொல்லவில்லை. ஒரு முறை அவள் வெளிக் கிளம்பியபோது அவளைத் தொடர்ந்து தாமும் கிளம்பினார்.

'' நீங்கள் இம்மாதிரி என்னைத் தொடர்ந்து வேவு பார்ப்பது சரியல்ல'' என்று ஜயலட்சுமி கண்டித்துவிட்டாள்.

''பெண் இந்த மாதிரி ஊர் சுற்றுவதைத் தடுக்கக்



கூடாதா?'' என்று பலராம ஐயரையும் ஒரு தடவை கேட்டார் டாக்டர்.

''உன் காரியத்தைக் கவனியப்பா! என் பெண்ணைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? அது விஷயமா உன்னை நான் யோசனை கேட்டா அப்போ சொல்லு'' என்று பலராம ஐயர் சொல்லிவிட்டார்.

கோபாலனுக்கு அதிகக் கோபம் வந்தது. வேறொருவர் தன்னிடம் அந்தத் தோரணையில் பேசியிருந்தால் மறுநிமிடம் அந்த வீட்டைவிட்டுக் கிளம்பியிருப்பார். ஏன் இருபது நாட்களுக்கு முன்பு அப்படிப் போனவர்தானே! ஆனால் கோபாலன் அப்போது இருந்த மாதிரி வேறு; இப்போது இருக்கிற மாதிரி வேறு. அப்போது அவருக்கு ஜயலட்சுமியினிடத்திலிருந்த அன்பை அவருடைய கோபம் ஜயித்து விட்டது. இப்பொழுது அன்பின் பலம் அதிகமாய் விட்டதால் கோபம் அதற்கு அடங்கி நடக்கவேண்டியதாயிற்று.

ஜயலட்சுமி கண்டோன்மெண்டிலிருந்த சரப சாஸ்திரியின் வீட்டுக்கு அடிக்கடி போய் அவனைச் சந்தித்து வந்தாள். அப்படி வந்துபோக வேண்டுமென்பது அவன் கட்டளை.

சரப சாஸ்திரியிடம் சில உயர்ந்த குணங்கள் இருந்ததையும் ஜயலட்சுமி கவனித்தாள். ஒரு முறைகூட அவன் தன்னை அகௌரவமாக நடத்தாததை நினைத்துப் பார்த்தாள். ஸ்திரீ சபலம் அவனுக்குச் சிறிதும் இல்லையென்பதையும் தெரிந்து கொண்டாள். பட்டாளத்துத் தலைவன் எப்படி ஒரு சோல்ஜரை நடத்துவானோ, ''அதே முறையில் தன்னை நடத்தி வந்ததை நினைதது, இவ்வளவு சிலாக்கியமான குணங்கள் உள்ள இம்மனிதன் விபரீத புத்தியால் கெட்டுப் போகிறானே'' என்று அவளுக்குச் சில சமயங்களில் வருத்தமும் ஏற்பட்டது.

ஜனவரி மாதத்தில் ஒரு நாள் அவள் உள்ளே நுழைந்த

போது சரப சாஸ்திரி ஏதோ அவசரமாக டைப் அடித்துக் கொண்டிருந்தான். அவளுடைய காலடி ஓசை கேட்டதும் தலையை நிமிர்ந்து பார்த்து, "உட்கார். இதோ வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, தனது வேலையைக் கவனித்தான்.

வேலை முடிந்ததும் அவளுக்கு எதிரில் வந்து உட்கார்ந்துகொண்டு, "நமது சங்கத்தைப் பற்றிய முக்கியமான சமாசார மொன்றை உனக்குச் சொல்லப் போகிறேன்" என்றான்.

"என்ன அது?" என்று ஜயலட்சுமி ஆவலாய்க் கேட்டாள்.

"சங்கத்தின் ஆபீஸை இப்பொழுது திருச்சியிலல்லவா வைத்துக் கொண்டிருக்கிறோம். இனிமேல் சென்னைக்கு மாற்றிவிடத் தீர்மானித்திருக்கிறேன்" என்றான் சரப சாஸ்திரி.

**ஜயலட்சுமி:** ஏன் சென்னைக்கு மாற்றிவிடுகிறாய்?

**சாஸ்திரி:** திருச்சியில் நமது நிலைமை மிகவும் அபாயமாகிவிட்டது. ரகசியப் போலீஸ் இலாக்கா டிப்டி சூப்பிரின்டெண்டு குப்புசாமி ராஜா இரண்டு மாதத்திற்கு முன்பு வந்தவன் இங்கேயே வட்டமிட்டுக் கொண்டிருக்கிறான். அவனுக்கு நமது ரகசியங்களிலும் கொஞ்சம் தெரிந்திருப்பதாகத் தோன்றுகிறது. தவிர திருச்சியில் நான் செய்ய வந்த வேலையும் அநேகமாக முடிந்துவிட்டது.

**ஜயலட்சுமி:** என்ன வேலை அது?

**சாஸ்திரி:** சங்கத்தைப் பலப்படுத்தப் பணம் வேண்டுமல்லவா? அதைச் சம்பாதிப்பதற்காக இங்கு வந்தேன். அந்தக் காரியம் அநேகமாக நாளைக்குப் பூர்த்தியாகிவிடும். பிறகு இவ்விடத்தைவிட்டுப் போய்விடுவேன்.

**ஜெயலட்சுமி:** பணம் சம்பாதிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?

**சாஸ்திரி:** அதையெல்லாம் உன்னிடம் சொல்ல



முடியாது. நீ சங்கத்தில் புதிதாகச் சேர்ந்திருப்பவள். சங்கத்தின் ரகசியங்களை நீ அறிந்துகொள்ள வேண்டுமானால் உனக்குச் சங்கத்தில் பூரண நம்பிக்கையிருக்கிறதென்று எனக்குத் தெரியவேண்டும். அப்படி உன் நம்பிக்கையைச் சோதிக்கக்கூடிய காலம் சீக்கிரம் வரும்.

**ஜயலட்சுமி:** அது கிடக்கட்டும். இதற்காகச் சென்னைக்குப் போவானேன். சுற்றுப் பக்கத்திலிருக்கும் கிராமங்களில் எதிலாவது ஆபீஸை வைத்துக் கொண்டாலென்ன?

"ஜயலட்சுமி! இம்மாதிரிச் சங்கத்தைக் கிராமத்தில் வைத்துக்கொண்டு நாம் எப்படி வேலை செய்ய முடியும்? முதலில் போக்குவரத்து வசதி கிடையாது. கட்டை வண்டி போகக்கூட உபயோகமற்ற ரோடுகள் உள்ள கிராமத்திலிருந்து துரிதமாக வேலை செய்வது கஷ்டம். இரண்டாவதாக நமது சங்கம் வேலை செய்யப் பணமும், ஊக்கமுள்ள ஜனங்களும் வேண்டும். கிராமங்களிலிருந்த பணமெல்லாம் நகரங்களுக்குப் போய்விட்டது. கிராமவாசிகள் ஏழ்மைத்தனத்தால் உணர்ச்சியிழந்து கிடக்கிறார்கள். பட்டணங்களில் பணமும் மனிதரும் கிடைப்பார்கள். பணக்காரர்களிடமிருந்து நாம் அவர்கள் இஷ்டப்பட்டாலும், இஷ்டப்படாவிட்டாலும் பணத்தை எடுத்துக் கொள்ளலாம். ஆள் பலத்துக்கும் பட்டணத்தில் குறைவில்லை. படித்துவிட்டு வேலையில்லாது திண்டாடிக் கொண்டிருப்பவர்கள் பட்டணத்தில்தான் இருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய வேலையை ஜனநெருக்கமுள்ள இடங்களில் செய்தால் தான் அகப்பட்டுக் கொள்ளமாட்டோம். இந்த மூன்று காரணங்களையும் உத்தேசித்துதான் சென்னைக்கு ஆபீஸை மாற்றிவிடத் தீர்மானித்துவிட்டேன்" என்று சாஸ்திரி கூறினான்.

அவன் கூறிய காரணங்கள் எவ்வளவு சரியானவை என்பதையும் தேச நிலைமையை அவன் எவ்வளவு நன்றாக

அறிந்திருக்கிறான் என்பதையும் ஜயலட்சுமி கண்டு வியந்தாள். அவன் கொள்ளையடித்துச் சங்கத்திற்குப் பணம் சேர்க்கத் தீர்மானித்திருக்கறான் என்பதையும் தெரிந்து கொண்டாள்.

''என்ன அநியாயம்! எவ்வளவு குற்றங்களை இந்த மனிதன் கடமைபோல் செய்யத் தீர்மானித்திருக்கிறான்! ஆனால் வேறு எப்படித்தான் அவன் நடந்து கொள்ள முடியும்! கொடிய பலாத்கார வழிகளிலிருந்து நல்லது எப்படி விளையும்? பாம்பினிடத்திலிருந்து பால் கிடைக்குமா? விஷந்தானே கிடைக்கும்'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

''ஆமாம், நீ சென்னைக்குப் போய்விட்டால் நான் உன்னை எங்கே சந்திப்பது?'' என்று கேட்டாள்.

''அதைப்பற்றிக் கவலைப்படாதே. அவசியமான சமயத்தில் உன்னை அழைத்துக் கொள்ளும் வழி எனக்குத் தெரியும்'' என்றான் சரப சாஸ்திரி.

அவனிடம் விடை பெற்றுக் கொண்டு ஜெயலட்சுமி வீடு வந்து சேர்ந்தாள்.

மறுநாள் இரவு ஒரு மணியிருக்கும். அமைதியான இரவில் பெரிய கூச்சல் கேட்டது. ஜனங்கள் அவரவர்கள் வீடுகளிலிருந்து வெளி வந்து என்ன விசேஷமென்று பார்த்தார்கள். கோட்டை ஸ்டேஷன் பக்கத்தில் பெரிய அக்கினி ஜ்வாலை தெரிந்தது. அந்தத் திக்கை நோக்கி ஜனங்கள் கும்பல் கும்பலாய் ஓடினார்கள். டாக்டர் கோபாலனும் ஜயலட்சுமியுங்கூட வெளியில் வந்து ஆகாசமளாவி எரிந்து கொண்டிருக்கும் நெருப்பு ஜ்வாலையையும் அதை நோக்கி ஓடும் ஜனங்களையும் பார்த்தார்கள்.

''நீ போய்ப் படுத்துக்கொள். என்ன சமாசாரம் என்று நான் பார்த்து வருகிறேன்'' என்று சொல்லி டாக்டர் கோபாலனும் கும்பலோடு ஓடினார்.



கோட்டை ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் கட்டப்பட்டிருந்த பிரம்மாண்டமான கணபதி பாங்கி இடிந்து விழுந்து கிடந்தது. அதிலிருந்த தூண்களும் உத்திரங்களும் எரிந்து கொண்டிருந்தன. நெருப்பணைப்பதற்கு ஜனங்கள் தீவிரப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த ஊர் டிப்டி சூப்பிரின்டெண்டு மாதவராவும், ரகசியப் போலீஸ் இலாக்காவைச் சேர்ந்த குப்புசாமி ராஜாவும், அந்த ஊர் கலெக்டர் முதலிய மற்றப் பெரிய உத்தியோகஸ்தர்களும் அங்கு வந்திருந்தனர்.

''எப்படித் தீப்பிடித்துக் கொண்டது?'' என்று டாக்டர் கோபாலன் அங்கிருந்தவர்களை விசாரித்தார்.

''இங்கே நடு ராத்திரிலே டுமீல்னு பெரிசா சப்தம் கேட்டுதாம். உடனே அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் ஓடி வந்து பார்த்தபோது கட்டிடம் படு சூர்ணமாயிருந்ததாம். தீயும் பிடித்துக்கொண்டது. யாரோ பாங்கிக்கு வெடியை வைச்சுட்டதா போலீஸ் பேசிக்குது'' என்றார் கூட்டத்திலிருந்த ஒருவர்.

ஜனங்கள் மெள்ள தீயை அணைத்தார்கள். டாக்டர் கோபாலன் விடியற்காலை நாலு மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

''என்ன சமாசாரம்! ஏதாவது வீடு தீப்பிடிச்சுண்டதா?'' என்று ஜயலட்சுமி விசாரித்தாள்.

''கணபதி பாங்கிக்கு யாரோ வெடி வச்சுட்டானாம். கட்டடம் சூர்ணமா விழுந்துவிட்டது'' என்று சொல்லிவிட்டுத் தூக்கம் கண்களைச் சுற்றவே கோபாலன் படுக்கச் சென்றார்.

ஜயலட்சுமியும் தனது அறைக்குச் சென்றாள். போகும் போது, ''சரி, சாஸ்திரி பணம் சம்பாதித்து விட்டான். என்னிடம் சமாசாரத்தைச் சொல்லாமலே காரியத்தைச் சாதித்துவிட்டான். கஜப்போக்கிரியாக இருக்கிறானே'' என்று சொல்லிக்கொண்டு

போனாள்.

பொழுது புலர்ந்தது. ராத்திரி கண்விழித்ததால் அன்று எட்டு மணிவரையில் கோபாலன் தூங்கினார். ஜெயலட்சுமி காபியை எடுத்துக் கொண்டு வந்து வாசற்படியிலிருந்தே, ''என்ன, எழுந்திருங்க நாழியாகல்லையா'' என்று கேட்டாள். படுக்கையில் இரண்டு தடவை புரண்டு படுத்துக் கொண்ட பிறகு கோபாலன் மெள்ள எழுந்திருந்து உட்கார்ந்து கொண்டார். ஜன்னல் கதவுகளைத் திறந்தார். வெயில் அவர் முகத்தில் அடித்தது.

''என்ன ஜயா! ஏகப்பட்ட நாழியாயிடுத்தே. ரொம்ப நாழி தூங்கிவிட்டேன். பக்கத்து வீட்டிலிருக்கும் கோழி கூட இன்னிக்குக் கூவலை போலிருக்கு. அது கூவினா முழிச்சிண்டு இருப்பேன்'' என்று கோபாலன் சமாதானம் சொல்லிக் கொண்டார்.

''அதான் இந்தக் கோழி வந்து கத்தவேண்டியிருக்கு'' என்று ஜெயலட்சுமி தன்னைக் குறிப்பிட்டுச் சொன்னாள். கோபாலன் சிரித்தார்.

''ஆமாம் காபி கொண்டுவந்துட்டையே. நான் இன்னும் பல்லும்தேய்க்கலையே... எப்படிக் காப்பி சாப்பிடறது? நான் என்ன வெள்ளைக்காரனா 'பெட்காபி' சாப்பிட'' என்றார் கோபாலன்.

''காபியெல்லாம் சுட்டுண்டுதான் இருக்கு. பல் தேச்சிட்டுச் சீக்கிரம் வாங்கோ'' என்றாள் ஜயா.

கோபாலன் கொல்லைக்கு ஓடிப் பல்லை அரையும் குறையுமாகத் தேய்த்துவிட்டு வினயமுள்ள குழந்தைபோல் காபியை வாங்கிச் சாப்பிட்டார். எப்பேர்ப்பட்ட புருஷர்களும் இளங்குமரிகளுக் கெதிரில் அப்படித்தான். வெளியில் வீரசிங்கங்களாய் விளங்கும் ஆண்கள் வீட்டில் பூனைக்குட்டி போல் பதுங்குவார்கள். இது உலக மாயை. ஜயலட்சுமியின் காதல் வலையில் பூரணமாகச் சிக்கியிருக்கும் டாக்டர்



கோபாலன் மாத்திரம் அந்த மாயையிடமிருந்து எப்படித்தப்ப முடியும்!

காபி சாப்பிட்டுவிட்டு ஐந்து நிமிஷ நேரம் கோபாலன் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். ஜயலட்சுமி காபி பாத்திரத்தைஎடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

''ஜயா! போகாதே, உன்னை ஒன்று கேட்க வேண்டு மென்று இரண்டு நாளாய் நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

''கேழ்க்கிறதுதானே'' என்றாள் ஜயலட்சுமி.

''கேழ்க்க வேண்டுமென்று இரண்டு நாளாகப் பிரயத்தனப்பட்டேன். வாய் வரவில்லை. என்னைப்பற்றி ஏதாவது தப்பாக நினைத்துக் கொண்டுவிடப் போகிறாயே என்று பயமாயிருக்கிறது'' என்றான் கோபாலன்.

''பயமாக இருப்பானேன்? நான் என்ன புலியா, கரடியா?'' என்று வேடிக்கையாகக் கேட்டாள் ஜயலட்சுமி.

''புலி, கரடியாயிருந்தால் நான் பயப்படமாட்டேன்'' என்றார் கோபாலன்.

''அப்படியானால் நான் அதையெல்லாம்விடக் கெட்டவளா?'' என்று ஜெயலட்சுமி கேட்டாள்.

''ஜயா! விளையாடாதே, ஏற்கனவே எனக்கு விஷயத்தைச் சொல்ல யோசனையாயிருக்கு. நீ மேலும் கேள்வி கேட்டால் அநேக நாளாக வாயை மூடிக் கொண்டிருந்த மாதிரி இப்பவும் இருக்க வேண்டியதுதான்'' என்று மெதுவான குரலில் சொன்னார்.

அவர் என்ன சொல்ல உத்தேசித்திருக்கிறார் என்பதை அந்தச் சமயத்தில் அவரது முகமே சொல்லிற்று. ஜயலட்சுமி அவர் சொல்லப் போவதை அறிந்து கொண்டாள். வெட்கத்தாலோ என்னவோ தலையைக் குனிந்து கொண்டாள்.

கோபாலன் அவள் பக்கத்தில் சென்று அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு, ''ஜயா! உனக்கு என்மேல் அன்பிருக்கிறதா?'''என்று கேட்டார்.

''என்னைக் கேட்கணுமா?''என்றாள் ஜெயா.

''அப்படியானால் உன்னை எனக்குக் கொடுக்கணும்னு எங்கப்பாவை விட்டு உங்கப்பாவுக்குக் கடுதாசி எழுதச் சொல்லட்டுமா?''என்று கோபாலன் கேட்டார்.

''வேண்டாம். இப்பொழுது வேண்டாம். இன்னும் கொஞ்சநாள் போகட்டும்'' என்றாள் ஜயலட்சுமி.

மேலும் ஏதோ கேட்க முயன்றார். அந்தச் சமயத்தில் வாசலில் இருந்து, ''கோபாலா, கோபாலா'' என்று பலராம ஐயர் கூப்பிடும் சப்தம் கேட்டது. கோபாலன் வெளியே சென்றார். பலராம ஐயர் பக்கத்தில் ஒரு ஜெவான் நின்றுகொண்டிருந்தான். ''இவர்தானப்பா டாக்டர்'' என்று பலராமஐயர் போலீஸ்காரனுக்குச் சொன்னார்.

''ஸார்! உங்களை டிப்டி சூப்பிரின்டெண்ட் அழைத்துக் கொண்டுவரச் சொன்னார்'' என்றான் போலீஸ் ஜவான்.

''என்னையா, எதற்காக?'' என்று டாக்டர் கேட்டார்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது ஸார்'' என்றான் ஜவான்.

உள்ளே போய்த் தகுந்த உடைகள் அணிந்துக் கொண்டு கோபாலன் ஜெவானுடன் சென்றார். சூப்ரின்டெண்டு வீட்டின் அறையொன்றில் அவரை உட்கார வைத்துவிட்டு, ''இங்கேயே இருங்க, டிபுடி சூப்ரின்டெண்டு வருவாரு'' என்று சொல்லிவிட்டு ஜவான் சென்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் குப்புசாமி ராஜா அந்த அறைக்குள் நுழைந்தார். குப்புசாமி ராஜாவைக் கோபாலன் இரண்டொரு தடவை சென்னையில் பார்த்திருக்கிறார். அவர்



இன்னாரென்றும் கேள்விப்பட்டிருக்கிறார்.

ஆகவே அவர் வந்ததும், ''என்ன தங்களை இங்கு மாற்றிவிட்டார்களா?'' என்று கோபாலன் கேட்டார்.

''இல்லை... நான் வேறு காரியமாக இங்கு வந்திருக்கிறேன். உங்களுக்குச் சில விஷயங்கள் சொல்லவே கூப்பிட்டனுப்பினேன்'' என்றார் குப்புசாமி ராஜா.

''முதலில் நான் கேட்கும் சில கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள். ஜயலட்சுமியை உங்களுக்கு எவ்வளவு நாளாய்த் தெரியும்?'' என்றார் குப்புசாமி ராஜா.

''குழந்தை முதற்கொண்டு தெரியும்'' என்றார் டாக்டர் கோபாலன்.

**குப்புசாமி ராஜா:** எப்படித் தெரியும்?

**கோபாலன்:** நான் அவர்கள் வீட்டிலேயே இருந்து படித்தவன். பலராம ஐயர் எனக்குத் தூரது உறவு.

**குப்புசாமி ராஜா:** நீங்கள் திருச்சியை விட்டுப் போய் எவ்வளவு நாளாயிற்று?

**கோபாலன்:** எட்டு வருஷங்களாயிற்று.

**குப்புசாமி ராஜா:** பிறகு இந்தப் பக்கமே வரவில்லையா?

**கோபாலன்:** இல்லை.

குப்புசாமி ராஜா சிறிது யோசித்தபின், ''அவளை எதற்காக நீர் சுற்றிக் கொண்டு திரிகிறீர்'' என்று கேட்டார்.

அதுவரை கோபத்தை அடக்கிக்கொண்டிருந்த கோபாலனுக்கு ருத்திராகாரமான கோபம் பொங்கி எழுந்தது. வேறு யாராவது அப்படிக் கேட்டிருந்தால் முப்பத்திரண்டு பல்லையும் கீழே உதிர்த்து வைத்திருப்பார். தான் அந்தச் சமயத்தில் இருந்த இடத்தையறிந்து தன்னை மீண்டும் அடக்கிக் கொண்டு, ''குப்புசாமி ராஜா! ஏதோ போலீஸ்

அதிகாரம் கையிலிருந்தால் கண்டபடி பேசலாமென்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்களா? ஜாக்கிரதையாய்ப் பேசுங்கள்'' என்றார்.

குப்புசாமி ராஜா அவர் கூறியதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே, ''டாக்டர்! அவளிடத்தில் உங்களுக்கு ஏதேனும் பாசமிருந்தால் அதை இன்றோடு தொலைத்து விடுங்கள்'' என்றார்.

கோபாலன் ஆசனத்திலிருந்து எழுந்து குப்புசாமி ராஜாவை மிகுந்த கோபத்துடன் நோக்கி, ''நீர் போலீஸ் உத்தியோகஸ்தராக இருக்கலாம். ஆனால் மக்களுடைய சொந்த விவகாரங்களில் தலையிட உமக்கு அதிகாரமில்லை. உம்மைப் போலவே நானும் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தன் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும்'' என்றார்.

''நீர் சர்க்கார் உத்தியோகஸ்தராக இருப்பதால்தான் சொல்லுகிறேன். இந்தப் பெண்ணுடன் இனிமேல் நீர் சேரக்கூடாதென்று எச்சரிக்கிறேன். அவள் அரசாங்கத்துக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறாள். அவளுடன் சேர்ந்தால் உமது உத்தியோகத்துக்கு உலை தேடிக் கொள்வீர்'' என்று குப்புசாமி ராஜா நிதானமாகச் சொன்னார்.

''அரசாங்க விரோதமான காரியங்களில் சிக்கியிருந் தால் அவளைக் கைது செய்வதுதானே?'' என்று கோபாலன் கேட்டார்.

''எங்கள் வேலையைச் செய்ய நீங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டாம்'' என்றார் குப்புசாமி ராஜா.

''எனக்கும் நீங்கள் புத்தி சொல்லவேண்டாம்'' என்று திருப்பிக் கொடுத்தார் கோபாலன்.

மிகுந்த யோசனையுடன் கோபாலன் வீடு திரும்பினார். அன்று முழுதும் பைத்தியம் பிடித்தவர்போல் உட்கார்ந் திருந்தார். அரசுக்கு விரோதமான எந்தக் காரியங்களில் ஜயலட்சுமி ஈடுபட்டிருப்பாளென்று தம்மாலானவரை



ஊகித்துப் பார்த்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அன்று சாயந்திரம் போலீஸிலிருந்து ஜெயலட்சுமிக்குப் பின் வரும் உத்தரவு கிடைத்தது:-

''ஜயலட்சுமியென்ற நீ சட்ட விரோதமான சில காரியங்களில் ஈடுபட்டிருக்கிறாயென்று நினைப்பதற்குக் காரணம் இருக்கிறபடியாலும், நீ இனிமேல் திருச்சி ஜில்லா எல்லையிலிருப்பதால் மேலும் அத்தகைய காரியங்களில் ஈடு படுவாயென்று தோன்றுகிறபடியாலும் இன்றிரவே திருச்சி ஜில்லா எல்லையை விட்டுப் போய்விட வேண்டியது.''

ஜயலட்சுமி மேற்படி உத்தரவைப் பலராம ஐயரிடம் காட்டினாள். ஜயலட்சுமியை எங்கு அனுப்பலாம் என்று பலராம ஐயர் கோபாலனைக் கலந்து யோசித்தார்.

''என்னுடன் பட்டணத்துக்கு வந்துவிடட்டுமே. வீட்டிலே அம்மாயிருக்கா, அப்பாயிருக்கா, பார்த்துக் கொள்ளுகிறார்கள்'' என்றார் கோபாலன்.

''அதுதான் நல்லதென்று எனக்கும் தோன்றுகிறது. அப்படியே செய்து விடுவோம். நானும் பட்டணத்துக்கு வருகிறேன்'' என்றார் பலராம ஐயர்.

அத்தியாயம் - 9

## சந்தேகம்

டாக்டர் கோபாலன் குடும்பத்தார் பரம்பரையாகப் பணக்காரர்கள். சர்க்காரில் பெரிய பதவிகளை வகித்தவர்கள். ஆகவே டாக்டர் கோபாலன் தகப்பனார் அவருக்கு அதிக சிரமமின்றி ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஹௌஸ் ஸர்ஜன் வேலையைச் செய்து வைத்துவிட்டார். கோபாலன் தமது வேலைத் திறமையாலும் உழைப்பாலும் வெகு சீக்கிரம் சென்னையில் முதல்தரமான டாக்டர்களில் ஒருவரெனப் பெயர் வாங்கினார். வேலைத்திறமையோடு தாராள புத்தியும் அவருக்கு இருந்தபடியால் அவரைப் புகழாத ஜனங்கள் சென்னையிலில்லை. இப்பேர்ப்பட்ட புத்திரனைப் பெற்றவர்களுக்கு என்ன குறையிருக்க முடியும்? ஒரே ஒரு குறை மட்டும் கோபாலன் பெற்றோர்களை வாட்டி வந்தது. கோபாலனுக்குக் கல்யாணமாகவில்லையே என்ற குறைதான் அது. மருத்துவக் கல்லூரியில் வாசிக்கும்போதே பல நல்ல வரன்கள் கோபாலனுக்கு வந்தன. அப்பொழுது கலியாணம் செய்து கொள்ள அவர் இணங்கவில்லை. படிப்பு முடியட்டும் பார்த்துக் கொள்வோம் என்றார். படிப்பு முடிந்தது, உத்தியோகமும் ஆகிவிட்டது. பையன் படிக்கும்போதே பெண் கொடுக்கத் துடியாய்த் துடிக்கும் பெற்றோர்கள், பையனுக்குப் பெரிய வேலையும் ஆகி அவன் மாதமொன்றுக்குச் சம்பளமாக ஐந்நூறு ரூபாயும், சொந்த ஹோதாவில் தொழில் செய்து ஐந்நூறு ரூபாயும் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டால் சும்மா விடுவார்களா? ஜாதகங்கள் வந்து குவிந்தன. படித்த காலத்தில் ஜாதகம் கொண்டு வந்தவர்கள்



இரண்டாயிரம் ரூபாய் வரையில் வரதக்ஷிணை கொடுக்கத் தயாராயிருந்தார்கள். இப்பொழுது கோபாலன் விலை ஏறி விட்டது. ஐயாயிரம் ரூபாய்க்கு மேலும் கொடுத்து அவனைப் பிடிக்க பலர் யத்தனித்தார்கள். ஒருவர் பிடியிலும் கோபாலன் அகப்படவில்லை. கலியாணமே தமக்கு வேண்டியதில்லையெனச் சொல்லி விட்டார். "என்ன கலியாணம் வேண்டியிருக்கிறது. ஒவ்வொருவர் படும் கஷ்டத்தை நான் பார்க்கவில்லையா?" என்று வேதாந்தம் பேச ஆரம்பித்து விட்டார். கோபாலனுடைய தகப்பனாரே பெரிய வேதாந்தி. உலகம் பெரிய மாயை என்றும், சம்ஸாரம் பெரிய சாகரமென்றும், அதனால் கிடைக்கும் சுகத்தைவிடக் கஷ்டமே அதிகமென்றும் பலவிடங்களில் பேசியிருக்கிறார். ஆனால் அதே வேதாந்தத்தைத் தம்முடைய பையன் திருப்பிப் படிக்க ஆரம்பித்தது அவருக்குப் பிடிக்கவில்லை. கோபாலன் தொழிலில் யார் வந்து கூப்பிட்டாலும் போய் வைத்தியம் செய்ததையும், தனது வைத்தியத்தால் பிறர் நோய் குணப்படும்போது சந்தோஷப்படுவதையும், குணமாகாத போது தனக்கே கெடுதி நேர்ந்து விட்டதுபோல் வருத்தப்படுவதையும் அவருடைய தகப்பனார் கண்டு பையன் இப்படியே காலத்தைத் தள்ளிவிடுவானோவென்று பயந்ததும் உண்டு. ஆகையால் டாக்டர் கோபாலன் திருச்சியிலிருந்து வந்த போது தனியாக வராமல் பலராம ஐயரையும் ஜயலட்சுமியையும் கூட அழைத்து வந்ததைப் பற்றி அவர் பெரிதும் சந்தோஷமடைந்தார். ஜயலட்சுமியும் கோபாலனும் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து பையன் மனம் மாறுபட்டிருக்கிறதென்று அவர் அன்றே தெரிந்து கொண்டார். அவ்விருவருக்கும் பரிபூரண அன்பிருக்கிறதா என்ற விஷயத்தில் கோபாலன் பெற்றோர்களுக்குக் கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தேகமும் நீங்கக்கூடிய நிகழ்ச்சிகள், அடுத்த சில தினங்களில் ஏற்பட்டன.

ஒரு நாள் அதிகாலையில் டாக்டர் கோபாலன்

வெளியே கிளம்ப உடையணிந்து கூடத்தில் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது ஜயலட்சுமியும் அங்கு வந்து சேர்ந்து, ''என்ன டாக்டர் ஸார்! எங்கே காலையிலேயே கிளம்பிவிட்டீர்களே?'' என்று கேட்டாள்.

''இல்லை! பக்கத்துத் தெருவில் ஒரு கேஸ் இருக்கிறது. அதைப் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும்'' என்றார் கோபாலன்.

''அப்படியானால் என் கேஸ் என்னவாகிறது?'' என்றாள் ஜயலட்சுமி.

''உனக்கென்ன உடம்பு?'' என்று கோபாலன் கேட்டார்.

''இருமல்'' என்று புளுகினாள் ஜயலட்சுமி.

''அடாடா! இருமலா வந்துவிட்டது? வா சீக்கிரம் பார்ப்போம்'' என்று புரளியாகச் சொல்லிக் கொண்டே டாக்டர் கோபாலன் அவளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு அவருடைய ரசாயன சாலைக்கு ஓடினார். அங்கிருந்த ஒரு சோபாவில் அவளைத் தடாலென்று தள்ளிவிட்டுக் கண்ணாடி பீரோவைத் திறந்து துடுப்புகள் போன்ற இரண்டு சிறிய கரண்டிகளை எடுத்து வந்தார். ''வாயைத் திற'' என்று சொல்லிவிட்டு, ஒரு கரண்டியை நாக்கில் வைத்து அழுத்தி நாக்கை வெளியில் இழுத்தார். மற்றொரு கரண்டியால் பல்லைத் தட்டி, ''இந்தப் பல்லை எடுத்துவிட வேண்டும்'' என்றார். அவர் வாயிலிருந்து கரண்டியை எடுத்ததும் ஜயலட்சுமி அவரைப் பார்த்து, ''நீங்கள் வைத்தியம் பண்ணு கிறது நன்றாயிருக்கிறது. இருமல் என்றால் பல்லைப் பிடுங்க வேண்டும் என்கிறீர்களே'' என்று சொன்னாள்.

''இருமல் என்றா சொன்னாய்? ஆனால் சரி, இதோ வந்து விட்டேன்'' என்று சொல்லிவிட்டு, கோபாலன் தன்னுடைய ஸ்டெதாஸ்கோப்பை எடுத்து வந்து அவளுடன் நெருங்கி உட்கார்ந்தார். ''எங்கே இப்படிக் காட்டு'' என்று



சொல்லிக் கொண்டே ஸ்டெதாஸ்கோப்பைக் காதில் மாட்டிக்கொண்டு அதன் மற்றொரு பாகத்தை அவளுடைய மார்பில் வைத்துப் பரீக்ஷை செய்வதுபோல் பாசாங்கு செய்தார். ஸ்டெதாஸ்கோப் கொஞ்சம் கொஞ்சமாக இடம் மாறுவதைப் பார்த்த ஜயலட்சுமிக்கு வெட்கம் அதிகமாகி விட்டது. ''இதைன்ன விளையாட்டு, நீங்கள் பரீக்ஷை செய்வது போதும் விடுங்கள்'' என்றாள்.

''பேசாதே, மூச்சை நன்றாக இழுத்துவிடு'' என்றார் டாக்டர் கோபாலன். அவள் சோபாவிலிருந்து எழுந்திருக்க முயன்றாள்.

''வியாதியாக இருக்கிறவர்கள் டாக்டர் சொல்கிறபடி கேட்க வேண்டும், உட்காரு'' என்று சொல்லி அவளை மீண்டும் சோபாவில் பிடித்துத் தள்ளினார் கோபாலன். இந்த சமயத்தில் காபி எடுத்துக்கொண்டு அவருடைய தாயார் உள்ளே நுழைந்தாள்.

கோபாலன் தாயார் கர்நாடகம். ஆகவே அவள் டாக்டரைக் கடிவதுபோல், ''என்னடா கோபாலா விளையாட்டு இது? ஜயாவை இன்னும் கொழந்தேன்னு நினைச்சுண்டு இருக்கையா?'' என்று கேட்டாள்.

''இல்லை அம்மா அவளுக்கு இருமல். அதுக்காகத்தான் பார்த்தேன்'' என்றார்.

ஜயலட்சுமி டாக்டர் கோபாலன் வீட்டிலிருந்த காலத்தில் இம்மாதிரி சம்பவங்கள் எவ்வளவோ அவருடைய பெற்றோரின் கண்களில் பட்டன. ''இருவருக்கும் கலியாணம் செய்துவிடலாமே'' என்று கோபாலன் தகப்பனார் பலராம ஐயரைக் கேட்டார். ''கொஞ்ச நாள் போகட்டும்'' என்று பலராம ஐயர் சொல்லிவிட்டார்.

சில தினங்கள் ஆனந்தமாய்க் கழிந்தன. ஒரு நாள் மாலை ஜயலட்சுமியும் டாக்டரும், சென்னைத் தம்புச்செட்டித் தெருவிலுள்ள அவருடைய வீட்டின் மேல் மாடியில்

உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். எலெக்டிரிக் விளக்குகள் பளிச்சென்று எங்கும் எரிய ஆரம்பித்துவிட்டன. டாக்டர் கோபாலனின் வீடு மிக உயரமாகக் கட்டப் பட்டிருந்தபடியால் அங்கிருந்து அவர்களுக்கு அந்தப் பக்கம் பூராவும் நன்றாகத் தெரிந்தது. சென்னை ஜகஜ்ஜோதியாய் விளங்கியது. சைனா பஜாரில் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் போய்க்கொண்டிருந்தார்கள்.

''பட்டணம் என்ன அழகாயிருக்கிறது!'' என்று மெள்ளக் கூறினாள் ஜயலட்சுமி.

''ஜயா! உலகத்தில் அழகாயிருக்கும் பொருள் களிலெல்லாம் குணம் இருக்கிறதா? பட்டணம் பார்ப்பதற்கு அழகாய்த்தான் இருக்கிறது. ஆனால் அதிக சுகமில்லையே'' என்றார் கோபாலன்.

அவர் பட்டணத்தைப் பார்த்து அந்த வார்த்தைகளைச் சொன்னாரா, அல்லது தன்னைப் பற்றித்தான் சொன்னாரா என்று ஜயலட்சுமிக்குப் புரியவில்லை.

''ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஏனா? நீயே யோசித்துப் பார். இந்த நகரத்தில் பிரதி தினமும் பல கோடி ரூபாய்கள் வியாபாரத்தில் வந்து போய்க்கொண்டிருக்கின்றன. இவ்வளவு செல்வம் தாண்டவ மாடும் இந்நகரத்தில் தரித்திரம்தான் அதிகமாய்க் குடி கொண்டிருக்கிறது. இந்த ஊரில்தான் கோர்ட்டுகள் ஜாஸ்தி. திருட்டும் கொலையும் இங்குதான் அதிகம். மோட்டார் கார்களில் செல்பவர்கள் மற்ற ஊர்களைக் காட்டிலும் இங்குதான் அதிகமாக இருக்கிறார்கள். நல்ல வெயிலில் வியர்வை நிலத்தில் ஒழுக பெரிய சாமான் வண்டிகளை மாடுகள்போல் மனிதர் இழுத்துச் செல்லும் காட்சியையும் இங்குதான் காணலாம். பெரிய பங்களாக்களில் சுகஜீவனம் செய்பவர்கள் இங்குதான் இருக்கிறார்கள். ஆனால் சாக்கடைகளுக்கருகில் சமைத்துச் சாப்பிடும் ஜனங்களும்



இங்குதான் அதிகம். பட்டணத்தில் பகட்டு ஜாஸ்தி. வறுமையும் வியாதியும் அதை விட அதிகம். நல்ல ஆடையாபரணங்களை யணிந்த ரோகமுள்ள பெண்ணைப்போல் இந்நகரம் விளங்குகிறது. இதைப் பார்த்து ஏன் மயங்குகிறாய்?'' என்றார் டாக்டர் கோபாலன்.

''அப்படியானால் உங்களுக்கு இங்கிருக்க இஷ்ட மில்லையா?'' என்று ஜெயா கேட்டாள்.

''இல்லை'' என்றார் கோபாலன்.

''பின் எங்கே போக இஷ்டம்?'' என்றாள் ஜயா.

''ஏதாவது ஒரு கிராமத்தில் போய்த் தனியாக ஒரு ஆஸ்பத்திரி வைத்துக்கொண்டு வாழ்நாளைக் கிராமத்து ஜனங்களுக்குச் சேவை செய்வதில் கழித்துவிடத்தான் விருப்பம்'' என்று டாக்டர் சொன்னார்.

''இந்த நகரத்தில் வியாதியும் வறுமையும் அதிகம் என் கிறீர்கள். இங்கிருந்து சேவை செய்வதுதானே நல்லது'' என்றாள் ஜயா.

''இங்கிருக்கும் ஜனங்களுக்கு உதவி செய்ய எவ்வளவோ டாக்டர்கள் இருக்கிறார்கள். தர்ம ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. கிராம ஜனங்களுக்கு இந்தச் சௌகரியங்க ளில்லை'' என்றார் டாக்டர்.

''இங்கு வேலை செய்தால் நீங்கள் சீக்கிரத்தில் பிரசித்தி பெற்றுவிடலாமே. அதை யோசிக்கவில்லையா?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''எனக்குப் பிரசித்தி எதற்கு? வேண்டாம். அதற்காக நான் வேலை செய்ய முடியாது. அப்பேர்ப்பட்ட கௌரவம் வேண்டியது மில்லை, ஜயா! பெரும்பான்மையான ஜனங்கள் இச்சிக்காத விஷயத்தை நான் இச்சிக்கிறேன். முக்கால்வாசி ஜனங்கள் பணத்தை இச்சிக்கிறார்கள். எனக்கு அது வேண்டியதில்லை. நான் உதறித் தள்ளத் தள்ள என்னிடம் அது

வந்து சேருகிறது. கௌரவத்துக்காக அனேகர் வேலை செய்கிறார்கள். நான் அதையும் இச்சிக்கவில்லை. அதுவும் என்னை மீறி என்னிடம் வந்து சேருமானால் வரட்டும். நிலையற்ற விஷயங்களை நாம் விரும்பக்கூடாது. நிலையாயிருப்பதானால் தானே கிடைக்கிறது'' என்றார் டாக்டர்.

அவருடைய உயர்ந்த குணத்தைப் பார்த்து ஜயா ஆச்சரியமடைந்தாள். இவர்கள் இப்படி உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில் கீழேயிருந்த டாக்டர் சேவகன் வந்து ஜயலட்சுமியை யாரோ கூப்பிடுவதாகச் சொன்னான். இருவரும் எழுந்திருந்து கீழே கூடத்திற்குப் போனார்கள். அங்கு சரப சாஸ்திரி உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டதும் ஜயலட்சுமி திடுக்கிட்டாள். உடனே மெள்ள சமாளித்துக்கொண்டு அவனை டாக்டருக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். ''இவர் பெயர் சரப சாஸ்திரி. அப்பாவுக்கு மிகவும் வேண்டியவர். இவரும் உங்களைப் போல் ஒரு டாக்டர்தான்'' என்றாள்.

''அப்படியா! ரொம்ப சந்தோஷம், உட்காருங்கள். ''உங்களைப்பற்றி ஜனங்கள் மிகவும் புகழ்ச்சியாகப் பேசுகிறார்கள்'' என்றான் சாஸ்திரி.

''அப்படிப் புகழ்வதற்குக் காரணம் எதுவுமில்லை'' என்றார் கோபாலன்.

''காரணமில்லாமலில்லை. சென்னை ராஜதானியில் புத்திசாலியான டாக்டர் ஒருவர் உண்டென்றால் அது நீங்கள்தானென்பது எனது அபிப்பிராயம்'' என்றான் சாஸ்திரி.

**கோபாலன்:** ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?

**சாஸ்திரி:** உங்களுக்குப் பழைய விஷயமொன்றை ஞாபகமூட்டுகிறேன். ஜோதிபாய் என்ற பெண் மாண்டு ரோடில் மரணமடைந்து கிடந்த வழக்கில் நீங்கள் சாட்சியம் சொன்னீர்களே ஞாபகமிருக்கிறதா? அந்த சாக்ஷியத்தை கவனித்தது முதல் உங்களிடம் எனக்குப் பூரண மதிப்பு



ஏற்பட்டுவிட்டது. ஆங்கில வைத்தியர்கள் தங்களுக்குத் தெரியாத ஒரு சம்பவம் ஏற்படும் போது அதன் மூல காரணத்தை அறிய பிரயத்தனப்படுவதில்லை. நீங்கள் அவர்களைப் போன்றவர்கள் அல்ல. ஆங்கில வைத்திய முறையில் விஷத்துக்கு அறிகுறி கிடைக்காமல் போனாலும், ஜோதிபாய் கொலை செய்யப்பட்டதாக அபிப்ராயம் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் உங்கள் வார்த்தையை உலகம் ஏற்கவில்லை. புத்திசாலிகள் வார்த்தைக்குச் சீக்கிரத்தில் மதிப்பு ஏற்படுவதில்லை. என்ன செய்கிறது?

**கோபாலன்:** ஆம், அப்பொழுது என் வார்த்தையை யாரும் நம்பவில்லை. ஆனால் அந்தப் பெண் இறந்தது விஷத்தால் என்று ருசுப்படுத்த இப்பொழுது என்னால் முடியும்.

''எப்படி முடியும்? அது என்ன விஷமென்று கண்டு பிடித்துவிட்டீர்களா?'' என்று சரப சாஸ்திரி கேட்டுவிட்டு, டாக்டருடைய முகத்தை ஊன்றிக் கவனித்தான்.

''அது ஆங்கில வைத்திய முறைக்குத் தெரிந்த விஷமல்ல. என்ன விஷமென்றும் என்னால் சொல்ல முடியாது. ஆனால் விஷத்துக்கு மாற்று கண்டுபிடித்துவிட்டேன்'' என்று டாக்டர் கோபாலன் சொன்னார்.

''எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''ஹெண்டர்ஸன் துரை இறந்தவள் ரத்தத்தில் விஷக் குறியில்லை யென்று சொன்னவுடன், கிளாஸ் துண்டுகளில் பிரேதத்தின் சதையில் சிறிது அறுத்து வைத்துக் கொண்டேன். அதை வைத்துக்கொண்டு பிரதி தினமும் சோதித்து வந்தேன். கிட்டத்தட்ட ஆர்ஸனிக் என்று விஷத்துக்கான சில அறிகுறிகள் அந்தச் சதையில் ஒருநாள் தெரிந்தன. பிறகு அதற்கு மாறாக ஒரு மருந்தையும் தயார் செய்திருக்கிறேன். இவ்விஷயத்தைப் பற்றி சீக்கிரமே சர்க்காருக்கு ஒரு ரிப்போர்ட்டும் அனுப்பப்

போகிறேன்.'' என்று டாக்டர் கோபாலன் சொன்னார்.

''அந்தக் கொலை விஷயத்தில் ஏன் இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்ற சரப சாஸ்திரி கேட்டான்.

''போன உயிர்களை மீட்க நம்மால் முடியாது. இருக்கும் உயிர்களைப் போக்காதிருப்பதற்காக முடிந்தவற்றைச் செய்வது டாக்டர்களின் கடமை. அந்தக் கடமையைச் செலுத்துவதில் எனக்குப் பரம திருப்தி'' என்றார் டாக்டர் கோபாலன்.

சரப சாஸ்திரி சிறிது நேரம் பேசாமலிருந்தான். பிறகு டாக்டரை நோக்கி, ''நான் ஜயலட்சுமியுடன் சிறிது நேரம் தனியாகப் பேசவேண்டியிருக்கிறது'' என்றான்.

''அவளிடம் பேசவேண்டியதை யெல்லாம் என் எதிரிலேயே பேசலாம்'' என்று டாக்டர் கோபாலன் சொன்னார்.

''அப்படிப் பேச முடியாது. மிகவும் ரகசியமான விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டியிருக்கிறது'' என்றான் சாஸ்திரி.

''என்ன ஜயா! நான் தெரிந்துகொள்ளத் தகாத அவ்வளவு ரகசியம் இவருடன் உனக்கிருக்கிறதா?'' என்று கோபாலன் ஜயலட்சுமியைப் பார்த்துக் கேட்டார்.

ஜயலட்சுமி மௌனமாக இருந்தாள். ''ஜெயலட்சுமி! நாம் இப்பொழுது ஒன்றும் பேசவேண்டியதில்லை. நான் இருக்கிற இடத்துக்கு நாளை ராத்திரி வந்து சேர்'' என்று சொன்னான் சாஸ்திரி. பிறகு அவள் காதருகில் சில வார்த்தைகளைக் கூறி ''அங்கே தானிருக்கிறேன்'' என்று கூறி விட்டு அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

''என்ன ஜெயா! நாளை ராத்திரி போகப் போகிறாயா?'' என்று கோபாலன் கேட்டார்.



''போய்த்தானாக வேண்டும்'' என்றாள் ஜயலட்சுமி.

''என்ன அவ்வளவு முக்கியமான காரியம்?'' என்று கோபாலன் வினவினார்.

''தேசகாரியம்'' என்றாள் ஜயலட்சுமி.

டாக்டர் கோபாலன் கோபச் சிரிப்புச் சிரித்தார். ''ஜயா! தேச காரியத்துக்குப் பெண்கள் ஊர் சுற்ற வேண்டுமா? வீட்டுக்குள்ளிருந்து தேச சேவை செய்ய முடியாதா? ஒவ்வொரு ஸ்திரீயும் தங்கள் குடும்பத்துக்கு விதேசிப் பொருள்களை வாங்குவதில்லையென்றும், படாடோபமாக வாழ்வதில்லை யென்றும் கங்கணம் கட்டிக்கொள்ளட்டும் மறுநாள் கிடைக்கிறது பார் சுயராஜ்யம்'' என்றார் டாக்டர் கோபாலன்.

ஜயலட்சுமி பதில் சொல்லவில்லை. ''இந்த மனிதன் எங்கிருக்கிறான்?'' என்று மீண்டும் கோபாலன் கேட்டார்.

''நான் சொல்ல முடியாது'' என்றாள் ஜயலட்சுமி.

அவருடைய மனசில் அவளைப் பற்றிப் பலமான சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. தான் கலியாணம் செய்துகொள்ள உத்தேசித்திருக்கும் ஒரு பெண் பரபுருஷன் ஒருவனுடன் ரகசியம் பேசி, அவன் சொன்னதைத் தன்னிடம் சொல்லவும் மறுக்கிறாள் என்றால் அதைவிட ஒரு புருஷனுக்குச் சந்தேக மூட்டக்கூடிய விஷயம் வேறு என்ன வேண்டும். வெகுநேரம் டாக்டர் ஏதோ யோசித்தார். ''ஜயா! என்னுடைய பொறுமைக்கும் ஒரு அளவிருக்கிறது. ஞாபகத்தில் வைத்துக் கொள்'' என்று சொல்லிவிட்டுக் கூடத்திலிருந்து தமது ரசாயன அறைக்குச் சென்றுவிட்டார்.

மறுநாள் முழுவதும் அவர் அவளுடன் பேசவேயில்லை.

அத்தியாயம் - 10

# சோதனை

மறுநாள் ஜனவரி மாதம் 25-ஆம் தேதி. அன்று சாயந்திரம் ஜயலட்சுமி டாக்டர் கோபாலனிடம் சொல்லிக் கொள்ளாமலே சரப சாஸ்திரி வரச் சொன்ன இடத்திற்குப் புறப்பட்டாள். முன் பனிக் காலமாதலால் சாயந்திரமே பனி மும்முரமாகப் பெய்ய ஆரம்பித்துவிட்டது. திக்குகள் நிர்மல மாயிருந்தன. குளிர்ந்தகாற்று மெல்லென வீசியது. சுபத்துக் கான அறிகுறிகள் எங்கும் தென்பட்டன.

சைனா பஜாரில் ஜனங்கள் மூலைக்கு மூலை பத்திரிகைகளைப் பிரித்து வைத்துக்கொண்டு குதூஹலத்துடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அனைவர் முகத்திலும் ஆச்சரியம் குடிகொண்டிருந்தது. என்ன விசேஷமென்று பார்ப்பதற்காக ஜெயலட்சுமியும் ஒரு பத்திரிகை வாங்கிக்கொண்டு சேத்துப்பட்டுப்போகும் பஸ்ஸில் ஏறிக்கொண்டாள். உட்கார்ந்துகொண்டு பத்திரிகையைப் பிரித்தாள். பின்னாலிருந்த ஒருவர் பையிலிருந்த மூக்குக் கண்ணாடியை எடுத்துப் போட்டுக்கொண்டு அவள் தோளுக்கு மேல் எட்டிப் பார்த்துப் பத்திரிகையை வாசிக்க ஆரம்பித்தார். வாசிக்க ஆரம்பித்தவர் ஏதோ பிரமிப்படைந்தவர் போல் ''அடடே! அப்படியா! என்னடா எங்கே பார்த்தாலும் ஜனங்கள் கும்பலாகப் பேப்பர் வாசிக்கிறார்களே என்ற பார்த்தேன்'' என்று உரக்கச் சொன்னார்.

''என்ன ஸார் விசேஷம்?'' என்ற பக்கத்திலிருந்த ஒருவர் கேட்டார்.



''காந்தியை ஜயில்லேயிருந்து விட்டுடச் சொல்லி வைஸ்ராய் உத்தரவு போட்டுட்டார்.'' என்றார் முதலில் வாசித்தவர்.

ஏற்கனவே பத்திரிகையை நன்றாக வாசித்துவிட்டு வந்த ஒருவர், ''நன்னா பாருங்க ஸார். காந்தியை மாத்திரமல்ல. காரியக் கமிட்டி மெம்பர்கள் எல்லோரையுமே விட்டுடப் போறாங்களாம்'' என்ற அலட்சியமாகக் கூறி, தமக்குப் பூரா விவரங்களும் தெரியுமென்பதைப் பஸ்ஸிலிருந்தவர்களுக்குக் காட்டிக்கொண்டார்.

''அப்படியா!'' என்று முதலில் பேப்பரை வாசித்தவர் மீண்டும் ஜயலட்சுமியின் தோளுக்காக எட்டிப் பார்த்தார். இதற்குள் பஸ் நிற்குமிடம் ஒன்று வந்துவிடவே கதவைத் திறந்துகொண்டு சிலர் உள்ளே நுழைந்தார்கள். கண்டக்டர் அவர்களை உள்ளே விடாது வழியை மறித்துக்கொண்டு, ''இரண்டு பேருக்குதான் ஸார் இடம் இருக்கிறது'' என்றான். வண்டியேற வந்தவர்களுள் பலசாலியான ஒரு மனிதன் மற்றவர்களை இடித்துத்தள்ளிக்கொண்டு முதலில் தொத்தி ஏறி ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்தவன் போல் உள்ளே வந்தான். ஓரத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் அவனுக்கு நகர்ந்து இடம் கொடுக்காமல் போகவே அவன் எல்லோருடைய முழங்கால்களையும் தன் கால்களால் இடித்து நசுக்கிக்கொண்டே கடைசியில் போய் உட்கார்ந்தான். மற்றொருவர் உள்ளுக்குள் வந்து குடையை மடக்க ஆரம்பித் தார். ஜயலட்சுமியின் முகத்தில் குடை குத்த இருந்தது. முன்னால் ஏறுபவர்கள் முழுங்கால்களால் இடிக்க பின்னாலிருப்பவர்கள் தோள் பக்கத்தில் உராய்ந்து பத்திரிகையை பார்க்க, இந்த நானாவித இம்சைகளால் பத்திரிகை வாசிக்க முடியாத ஜயலட்சுமி பத்திரிகையை மடித்து மடியில் வைத்துக் கொண்டாள். ''பட்டணத்தில் பஸ்ஸில் போகும் இந்த நாகரிக ஜனங்களின் ஒழுங்கற்ற

தன்மைக்கும் முரட்டுத் தனத்துக்கும் நாட்டுப்புற ஜனங்கள் எவ்வளவோ தேவலை'' என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டாள். மற்றெல்லா வேதனையையும்விட டாக்டர் கோபாலன் தன்னைப் பற்றி மிக்க கேவலமான அபிப்பிராயங்கொண்டு தன்னை இனிக் கிட்டே சேர்க்காமலிருந்துவிடப் போகிறாரே யென்ற வேதனைதான் அவளை அதிகமாக வதைத்தது. அவருக்கு இப்பொழுதிருப்பதை விட பத்து மடங்கு சந்தேகம் அன்று ஏற்படப் போகிறதென்பதை அவள் எப்படி அறிவாள்? அதுவுமின்றி அதே பஸ்ஸைப் பின்தொடர்ந்து மோட்டாரொன்றில் டாக்டர் கோபாலன் வந்து கொண்டிருப்பதையும் அவள் பஸ்ஸுக்குள்ளிருந்து எப்படிப் பார்த்திருக்க முடியும்! சேத்துப்பட்டிலிறங்கி ஜெயலட்சுமி கீழ்ப்பாக்கத்துக்குச் சென்றாள். மோட்டாரிலிருந்து இறங்கி சற்று தூரத்தில் அவளைத் தொடர்ந்து டாக்டர் கோபாலனும் நடந்து சென்றார். அங்கிருந்த பிரம்மாண்டமான பங்களாவொன்றில் அவள் நுழைந்தாள். அவள் பங்களாவுக்குள் போன பிறகு டாக்டர் கோபாலன் பங்களாவின் மதில்சுவரில் வெட்டப்பட்டிருந்த எழுத்துக்களை வாசித்தார். அவருக்கு மயக்கம் வரும் போலாகி விட்டது. மதில் சுவரில் ''இளையவல்லிபுரம் ஜமீன் வீடு'' என்று வெட்டப்பட்டிருந்தது. தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு பைத்தியம் பிடித்தவர் போல் டாக்டர்கோபாலன் திரும்பித்தமது காரிருக்குமிடம் சென்றார்.

நிற்க, அந்தப் பங்களாவின் விசாலமான ஹால் ஒன்றில் சரப சாஸ்திரி உட்கார்ந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தான்.

ஜயலட்சுமி உள்ளே வந்ததும், ''வா ஜெயலட்சுமி! உட்கார். எங்கு வராதிருந்துவிடப் போகிறாயோ என்று நினைத்தேன்'' என்றான்.



''வராமலென்ன செய்வது? நான்தான் உன் பிடியில் பூரணமாகச் சிக்கிக் கொண்டிருக்கிறேனே'' என்றாள் ஜயலட்சுமி.

''என் பிடியில் சிக்கிக் கொள்கிறதாவது. தேச சேவையல்லவா நீ செய்து வருகிறாய்'' என்றான் சாஸ்திரி.

''தேச சேவையா செய்கிறேன்? உன்னுடன் சேர்ந்து தேச முன்னேற்றத்துக்கு இடைஞ்சலல்லவா செய்கிறேன். ஆனால் நம்மையும் மீறித் தேசம் முன்னேற்றமடைகிறதே. அதுதான் ஆச்சரியம்'' என்று ஜயலட்சுமி சொன்னாள்.

''என்ன அப்படி முன்னேற்றமடைந்து விட்டது?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''என்ன முன்னேற்றமா? பத்திரிகையைப் படித்துப் பார். பலமான பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே அஹிம்ஸா சக்திக்குத் தலை வணங்குகிறது'' என்றாள் ஜெயலட்சுமி.

''காந்தியையும் இன்னும் சில பேர்களையும் விட்டுவிட வைஸிராய் உத்தரவு போட்டிருக்கிறாரே, அதைத்தானே சொல்லுகிறாய்?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''ஆம். அதன் உண்மை உனக்குத் தெரியவில்லையா? சத்தியாக்கிரகத்தின் சக்தியை உணராது போனால் சர்க்கார் காங்கிரஸின் ஒத்துழைப்பை ஏன் நாடுகிறார்கள்? முதலில் அஹிம்ஸாப் போராட்டம் என்றால் உன்னைப் போலிருக்கின்ற ஜனங்கள் எளிதாகத்தான் நினைத்தார்கள். ஆனால் இன்று ஏற்பட்டிருக்கும் முடிவைப் பார். அஹிம்ஸையின் சக்தி இப்பொழுதாவது உனக்குப் புலப்படுகிறதா!'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''அஹிம்ஸைக்கு சக்தி எங்கிருந்து வரும்? சக்தியற்றவர்களுக்கல்லவா அஹிம்ஸை. தைரியத்துடன் சண்டையிடுவோர்களுக்கு அஹிம்ஸையாவது மண்ணாங்கட்டியாவது!'' என்றான் சாஸ்திரி.

''சாஸ்திரி! சக்தியென்றால் என்ன? உடம்பிலிருக்கும்

கொழுப்பைத்தான் சக்தியென்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? ஜனங்களின் ஆத்மசக்தியால் ஒரே வருஷத்தில் என்ன அபூர்வமான காரியத்தை நமது தேசம் சாதித்து விட்டது! சாஸ்திரி, நீ உன் தீயவழிகளை விடமாட்டாயா?'' என்று பரிதாபம் கலந்த குரலில் ஜயலட்சுமி கேட்டாள்.

''உனக்குத் தீயவழியாய்த் தோன்றுவது எனக்குத் தீய வழியாய்த் தோன்றவில்லை. தவிர இப்பொழுது காந்தியை வெளியில் விட்டுவிட்டதால் என்ன பலன் கிடைத்துவிட்டதென்று நினைக்கிறாய்? அவர் பேசாமல் வட்டமேஜை மகாநாட்டுக்குப் போக ஒப்புக் கொள்ளா விட்டால் மறுபடியும் அவரை ஜயிலில் பிடித்துப் போடுவார்கள். இத்தனை நாள் உப்புக்காகச் சண்டை போட்டாரே, இனிமேல் உப்புக் காய்ச்ச உத்தரவு கொடுத்துவிடப் போகிறார்களா? ஒன்றும் கிடைக்காது. பிரமிக்காதே. இம்மாதிரி வழிகளில் எந்தத் தேசமும் விடுதலையடைந்ததில்லை'' என்றான் சாஸ்திரி.

அவனுடன் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதில் பிரயோசனமில்லையென்று ஜயலட்சுமி உணர்ந்து கொண்டாள். ''அது கிடக்கட்டும். இங்கு எதற்காக வரச் சொன்னாய்?'' என்று கேட்டாள்.

''இந்தச் சங்கத்தின் ரகசியங்களை உன்னிடம் கூறுமுன் உன்னைச் சோதிக்க நேரிடுமென்று முன்பு சொன்னேனே. ஞாபகமிருக்கிறதா? அந்தச் சோதனைக் காலம் இப்பொழுது வந்துவிட்டது. மிகவும் முக்கியமான ஒரு காரியத்தை உன்னிடம் ஒப்படைக்கிறேன். அதை ஜாக்கிரதையாகச் செய்து முடித்தாயானால், மார்ச்சு மாதம் முதல் தேதியன்று கூடும் நமது சங்கத்தின் கூட்டத்தில் உன்னை அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைக்க உத்தேசித்திருக்கிறேன்'' என்று சாஸ்திரி கூறினான்.

''என்ன அக்காரியம்?'' என்ற கேட்டாள் ஜயலட்சுமி.

சாஸ்திரி சொல்லலானான்:



இளையவல்லிபுரம் ஜமீன்தார் நமது சங்கத்தின் முக்கியமான அங்கத்தினர்களில் ஒருவர். அவர்மீது கிரிமினல் வழக்குத் தொடர ஏற்பாடாகி யிருக்கிறது. சர்க்கார் கக்ஷியை ருசுப்பிப்பதற்கு வேண்டிய தஸ்தாவேஜுகள் இப்பொழுது உதவி போலீஸ் கமிஷனரா யிருக்கும் சிங்காரவேல் பிள்ளையிடம் இருக்கின்றன. அந்தத் தஸ்தாவேஜுகளில் ஒரே ஒரு கடிதம் மாத்திரம் முக்கியமானது. அந்தக் கடிதத்தைச் சிங்காரவேல் பிள்ளை வெகு ஜாக்கிரதையாக தமது படுக்கை அறையிலுள்ள இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டியிருக்கிறார். அதை நீ மெள்ள கொண்டு வந்துவிட வேண்டும்.''

''கொண்டு வருவது இருக்கட்டும். என்னைப் பலவந்தம் செய்ய யத்தனித்த ஜமீன்தாருக்கு நான் ஏன் இந்த வேலையைச் செய்ய வேண்டும்?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''அவர் நமது சங்கத்தின் மெம்பராக இருப்பதால்தான். நமது சங்கத்தின் மெம்பர்களுக்கு வரும் ஆபத்தை நீக்க வேண்டியது நமது கடமை. இந்த வழக்கு சர்க்காருக்கு ஜயித்தால் ஜமீன்தார் எட்டு வருஷமாவது உள்ளே போக வேண்டியிருக்கும். ஜெயிலுக்குத் தனியாகப் போகும் சுபாவம் ஜமீன்தாருக்குக் கிடையாது. போகும்போது நம்மையும் சேர்த்து இழுத்தாலும் இழுப்பார். இதற்கெல்லாம் இடங்கொடுக்கக் கூடாது பார்!'' என்றான் சாஸ்திரி.

''ஆமாம்! போலீஸ் கமிஷனர் வீட்டுக்குள் நுழைந்து நான் எப்படித் தப்பி வருவது?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''பதினொரு மணிக்கு சிங்காரவேல்பிள்ளை ஆபீஸிற்குப் போய்விடுவார். அவருடைய பெண் உன்னுடன் படித்தவளென்பதை நாங்கள் தெரிந்து கொண்டிருக்கிறோம். அவளுடன் போய்ப் பேசுவதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்து சமயம் பார்த்துக் கடிதத்தை அமுக்கிவிடு. இதோ அந்த இரும்புப் பெட்டிச் சாவியும் ஒன்று சம்பாதித்து

வைத்திருக்கிறோம்'' என்று பையிலிருந்து ஒரு சாவியை எடுத்துக் கொடுத்தான் சரப சாஸ்திரி.

''ஆமாம்! சர்க்கார் சம்பந்தமான கடிதத்தைக் கமிஷனர் என் வீட்டில் வைத்துக் கொண்டிருக்கிறார்?'' என்று ஜெயலட்சுமி கேட்டாள்.

''அதில் கமிஷனருக்குக் கொஞ்சம் சொந்த விஷயமும் கலந்திருக்கிறது. நமது ஜமீன்தாருக்கும், சிங்காரவேல் பிள்ளைக்கும் உறவு உண்டு. ஜமீன்தாரின் தகப்பனாருக்குக் சிங்காரவேல் பிள்ளையின் பெண்ணிடத்தில் அதிக பிரேமை. அதனால் அவர் இறந்து போவதற்கு முந்தி அவள் பெயருக்கு இருபதினாயிர ரூபாய் உயிலில் எழுதி வைத்துவிட்டுப் போனார். உயிலைக் கொஞ்சம் மாற்றி ஜமீன்தார் பணத்தைச் சாப்பிட்டு விட்டார். உயில் எழுதிவைத்த பெரிய ஜமீன்தார் அம்மாதிரி தொகை ஒதுக்கியிருப்பதாகச் சிங்காரவேல் பிள்ளைக்குக் கடிதம் ஒன்றும் எழுதினார். அந்தக் கடிதத்தோடு இதர சாக்ஷியங்களும் வேண்டுமென்று சிங்காரவேல் பிள்ளை இத்தனை நாள் சாக்ஷியம் சேகரித்து, இப்போது வழக்குத் தொடர ஏற்பாடு செய்திருக்கிறார். அந்த வழக்கில் முக்கிய ருஜு அந்த கடிதம் தான். அதைத்தான் நீ கொண்டுவர வேண்டும்'' என்றான் சாஸ்திரி.

''நான் அகப்பட்டுக்கொண்டால் என்ன செய்கிறது?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''தப்பிக்கொள்ள ஒரு முக்கியமான சமாசாரம் சொல்கிறேன். ஜோதிபாயுடன் ஒரு மனிதன் ரயிலில் வந்த பிறகு மறைந்து விட்டானே ஞாபகமிருக்கிறதா? அம்மனிதனுக்கும் சிங்காரவேல் பிள்ளையின் பெண்ணுக்கும் கலியாணம் நிச்சயமாகியிருக்கிறது. அதைப்பற்றிய தகவலையும் சொல்லுகிறேன். அதை உபயோகப்படுத்திக் கொள். அந்த மனிதனிடம் சிங்காரவேல் பிள்ளையின் புத்திரிக்கு அபார பிரேமை'' என்றான் சாஸ்திரி.

''யார் அந்த மனிதன்?'' என்று வினவினாள் ஜெயா.



''ஹைகோர்ட்டு ரிஜிஸ்ட்ரார் நீலமேகம் பிள்ளைதான் அம்மனிதன்'' என்றான் சாஸ்திரி.

''அப்படியா! அவ்வளவு உயர்ந்த உத்தியோகஸ்தர் எதற்காகக் கொலை செய்தார்? அப்படித்தானிருந்தாலும் நான் சொல்வதைப் பிள்ளை நம்புவாரா?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''அதுவும் போதாதென்றால் இந்தக் கடிதத்தைப் பிள்ளையிடம் காட்டு. அவர் சில நாளைக்கு முன்பு போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கையில் சிறிய தவறு ஒன்று செய்துவிட்டார். ஏதோ கொஞ்சம் லஞ்சம் வாங்குவதானாலும் கடுதாசி எழுதிக் கேட்கக் கூடாதென்று அவருக்கு அப்பொழுது தெரியவில்லை. அப்படி அவர் எழுதிய கடிதம் இதோ இருக்கிறது. இந்தக் கடுதாசி வெளிக்கு வந்தால் உத்தியோகமே போய்விடுமென்று அவருக்குத் தெரியும்'' என்று ஒரு கடிதத்தை அவளிடம் சாஸ்திரி கொடுத்தான்.

ஜயலட்சுமி கடிதத்தை வாங்கி வைத்துக் கொண்டாள். ''முடியுமானால் அதைத் திருப்பிக் கொண்டு வந்துவிடு'' என்று சாஸ்திரி கூறினான். அப்படியே கொண்டு வருவதாக ஒப்புக்கொண்டு ஜயலட்சுமி புறப்பட்டு வீட்டுக்கு வந்தாள். அவள் வந்தபோது டாக்டர் கோபாலன் வாசலில் நின்று கொண்டிருந்தார்.

''என்ன ஜமீன்தாரோடே இப்போ சகஜமாகப் போய்ட்டாப் போலிருக்கு'' என்று கேட்டார்.

ஜயலட்சுமிக்குத் திடுக்கிட்டது. தான் ஜமீன்தார் வீட்டுக்குப் போனது அவருக்கெப்படித் தெரிந்தது என்று திகைத்தாள். பிறகு அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் ததும்பியதை டாக்டர் கோபாலன் பார்த்தார். இரண்டு நாட்களுக்கு முன்பானால் அக்கண்ணீரை அவர் முத்தமிட்டே துடைத்திருப்பார். ஆனால், அன்று முகத்தைத் திருப்பிக்கொண்டு மெத்தைமேல் அதி வேகமாக ஏறிப் போய் விட்டார்.

## அத்தியாயம் - 11

# பழைய சிநேகிதம்

கோபாலனுக்கு மனக்கவலை அதிகமாகப் போய் விட்டது. படுக்கையில் படுத்தார். தூக்கம் வரவில்லை. அறையிலிருந்த சாய்வு நாற்காலியை மடக்கிக் கையிலெடுத்துக் கொண்டு மேல் மெத்தைக்குப் போனார். அதை ஒரு பக்கத்தில் போட்டுவிட்டுச்சற்றுநேரம் அப்படியும் இப்படியும் உலாவினார். சிறிது நேரம் கைப்பிடிச் சுவரைப் பிடித்த வண்ணம் வெளியில் எட்டிப் பார்த்துக்கொண்டு நின்றார். வாசலில் ஜனங்கள் போய்க்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் கண்களுக்கு வண்டிகளோ மனிதர்களோ தெரியவில்லை. ஒரே பொட்டை வெளிபோல்தான் தெரு கண்ணுக்குத் தெரிந்தது. கண்விழித்திருந்தும் என்ன பிரயோசனம்? மனம் ஒன்றாத வரையில் எந்த இந்திரியம்தான் தன் வேலையைச் சரிவரச் செய்ய முடியும்? ஆகவே வீதியிலிருந்த எதுவும் அவருடைய கண்களில் படவில்லை. ஜயலட்சுமி பஸ்ஸில் சேத்துப்பட்டு போன காக்ஷியும், ஜமீன்தார் வீட்டுக்குள் நுழைந்த காக்ஷியும் தான் அவர் கண்முன் எழுந்து நின்றன. சிறிது நேரம் கழித்து நாற்காலியில் வந்து படுத்துக் கொண்டு கண்களை மூடித்தூங்க முயன்றார்.

ஜயலட்சுமி தனது அறைக்கு நேராகச் சென்றாள். வழியில் கோபாலன் தாயார் அவளைப் பார்த்து, ''வா அம்மா! சாப்பிட்டுவிட்டுப் போயேன்'' என்று கூப்பிட்டாள். ஜயலட்சுமிக்குப் பதில் சொல்ல முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு வந்தது. மெள்ள சமாளித்துக் கொண்டு, ''பசிக்கவில்லை அம்மா'' என்று



சொல்லிவிட்டுத் தனது அறைக்குச் சென்றுவிட்டாள்.

அறைக்கதவைச் சாத்திக் கொண்டு படுக்கையில் தடாலென்று விழுந்தாள். கோபாலன் வாசலில் கேட்ட கேள்விகள் அவளுடைய மனதில் சுருக்கென்று தைத்திருந்தன. அதை நினைத்துத் தலையாணியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மிக் குழந்தைபோல் அழுதாள். குழந்தை முதலே அவளுக்குக் கோபாலனிடம் பிரியம் அதிகம். அந்த அன்பு இப்போது காதலாகக் கனிந்திருந்தது. ''என்னிடம் அவர் அன்பு வைத்திருக்கிறார். நானும் அவரிடம் உயிர் வைத்திருக்கிறேன். அவருடைய தாயாரும் தகப்பனாரும் என்னைத் தங்கள் பிள்ளைக்குக் கலியாணம் செய்துகொள்ளத் தயாராயிருக்கிறார்கள். எல்லாம் பொருந்தியும் என் விதி ஏன் இப்படி இருக்கிறது? 'நிதியும் கணவனும் நேர்படினும் தம் விதியின் பயனே பயன்' என்று ஒளவை எனக்காகத்தான் சொன்னாளோ! எனக்குச் சனியனாக இந்தச் சரபசாஸ்திரி வந்து சேர்ந்தானே'' என்று விதியை நொந்து கொண்டே அழுதாள். கொஞ்ச நாழிக்கெல்லாம் அழுகை நின்றது. அந்தத் துக்கம் சிறிது சமனமாயிற்று. இதைவிட கஷ்டமான துக்கத்தையெல்லாம் காலம் ஆற்றி விடுகிறதல்லவா? படுக்கையைவிட்டு எழுந்திருந்தாள். அறையைவிட்டு வெளிக் கிளம்பி டாக்டர் அறையை நோக்கி நடந்தாள். அறைக் கதவு திறந்திருந்தது. உள்ளே போய் விளக்கை ஏற்றினாள். படுக்கையில் யாரும் காணோம். அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மனத்தில் பயமும் ஏற்பட்டது. ''என்னை வெறுத்துக் கொண்டு எங்கேயாவது கிளம்பிப் போய்விட்டாரோ?'' என்று நினைத்தாள். வாசலில் போய்ப் பார்த்தாள். அங்கு அவர் இல்லை. கடைசியாக அவளும் மேல் மெத்தைக்கு வந்து சேர்ந்தாள்.

வெண்ணிலா காய்ந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் களங்கமற்ற கோபாலனுடைய முகத்தைப் பார்த்தாள். 'என்னைப் பற்றிய கவலையால் அல்லலவா இவர்

இந்தக் கடும் பனியில் வந்து படுத்துக்கொண்டிருக்கிறார்.' என்று மெள்ளச் சொல்லிக்கொண்டே அவரை நெருங்கி அவருடைய காலடியில் உட்கார்ந்துகொண்டு அவருடைய முழங்கால்மேல் தலையணைச் சாய்த்துக் கொண்டாள். மறுபடியும் அவளுடைய கண்களிலிருந்து நீர் மளமளவென்று வர ஆரம்பித்தது. அந்தத் துளிகள் இரண்டு அவருடைய பாதத்தில் விழுந்தன. டாக்டர் கண்ணை விழித்துக் கொண்டு அவள்தன்காலடியில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார்.

''நீ எதற்காக இங்கு வந்தாய்?'' என்று கேட்டார்.

''நீங்கள் ஏன் பனியில் வந்து படுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று பதிலுக்குக் கேட்டாள்.

''நான் எங்கு படுத்துக் கொண்டால் உனக்கென்ன?'' என்றார் கோபாலன்.

''எனக்கென்னவா?'' என்று சொல்லி அவருடைய முகத்தை ஜயலட்சுமி பார்த்தாள். அவளுடைய கண்களில் அப்போதும் நீர் ததும்பிக் கொண்டிருந்தது. தலை மயிரும் சிறிது கலைந்து ஒன்றிரண்டு கண்களை மறைத்தாற்போல் தொங்கிக் கொண்டிருந்தன. அந்தப் பார்வையில் கோபாலன் மனம் உருகிவிட்டது.

''ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டு அவள் அழகிய முகத்தை மறைத்து நின்ற மயிர்களைக் கோதி ஒதுக்கி விட்டார்.

''நீங்கள் காரணம் கேட்க வேண்டுமா? நான் வந்தபொழுது நீங்கள் சொன்ன வார்த்தைகள் எப்பேர்ப்பட்டவை?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''நியாயம்தான். நீ ஜமீன்தார் வீட்டுக்குப் போனது சரி. நான் கேட்டதுதான் தப்பாகப் போச்சு!'' என்றார் கோபாலன்.

''நான் ஜமீன்தாரைத்தான் பார்க்கப் போனேனென்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.



கோபாலன்: பின் யாரைப் பார்க்கப் போனாய்?''

**ஜயலட்சுமி:** சரப சாஸ்திரி இங்கு வந்து என்னை வரச்சொல்லிவிட்டுப் போனதை நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கவில்லையா?

**கோபாலன்:** யார் அந்தச் சரப சாஸ்திரி? அவனுக்கும் ஜமீன்தாருக்கும் என்ன சம்பந்தம்? அவன் ஏன் அவன் வீட்டிலிருக்கிறான்?

**ஜயலட்சுமி:** இந்தக் கேள்விகளுக்கு இப்பொழுது பதில் சொல்ல முடியாத நிலைமையில் நானிருக்கிறேன். நீங்கள் நினைப்பதுபோல் நான் எந்தத் தப்பும் செய்யவில்லை. நான் சொல்வதை நம்பமாட்டீர்களா?

**கோபாலன்:** ஜயா! நீ சொல்வதை எந்த மனிதனாவது நம்ப முடியுமா பார்? என்னிடம் அன்பு வைத்திருப்பதாகச் சொல்கிறாய். நான் கலியாணம் செய்து கொள்ளுகிறேனென்று சொன்னால் வேண்டாமென்கிறாய்? உன்னைக்கட்டிப் பிடிக்க யத்தனித்த ஜமீன்தார் வீட்டுக்கு என் கண் முன்பாகப் போகிறாய். யாரோ ஒரு மனிதன் அங்கு வருகிறான்; அவனுடன் ரகசியம் பேசுகிறாய். பாதிநாள் ராக்காலங்களில் வீட்டிலிருப்பதில்லை. இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருக்கும் நான், என் கண்களை நம்புவதா? நீ சொல்லும் வார்த்தையை நம்புவதா?

**ஜெயலட்சுமி:** என்னை நம்புங்கள். இன்னும் கொஞ்ச நாள் நம்புங்கள். உங்கள் கண்ணுக்குத் தெரிந்த விஷயங்களுக்கும் அவற்றைப்பற்றி நீங்கள் செய்யும் கற்பனைக்கும் கொஞ்சங்கூட ஆதாரமில்லையென்பதை நிரூபிக்க என்னால் முடியும்.

டாக்டர் கோபாலன் பதில் சொல்லவில்லை. ''என்னைப் பற்றி உங்கள் மனசு என்ன சொல்கிறது?'' என்று ஜயலட்சுமி கேட்டாள். இவ்வளவு காரியங்கள் நிகழ்ந்தும்

தனக்கு ஜயாவின் மேலிருந்த அன்பு குறையவில்லையே யென்று கோபாலனுக்கே ஆச்சரியமாகத் தானிருந்தது. "இன்னும் என் மனசு உன்னைப்பற்றித் தவறாக நினைக்க இடங்கொடுக்க மாட்டேனென்கிறது. அதனால்தான் நான் இன்னும் வீட்டிலிருக்கிறேன். இல்லாவிட்டால் எங்கேயாவது ஓடிப்போயிருப்பேன்" என்றார்.

"அப்படியானால் உங்கள் மனத்தையாவது நம்புங்கள். இன்னும் கொஞ்சநாளைக்கு என்னை மன்னித்து வாருங்கள்" என்று அவன் காலடியில் வீழ்ந்தாள்.

டாக்டர் கோபாலன் அவளை மெல்லத் தூக்கி, "அழாதே ஜெயா! உன்னை நம்புகிறேன். இன்னும் கொஞ்சநாள் இந்த வேதனையைப் பொறுத்திருக்கக் கடவுள் எனக்குத் தைரியத்தைக் கொடுக்கட்டும்" என்றார். பிறகு இருவரும் தங்கள் தங்கள் அறைக்குப் படுத்துக் கொள்ளச் சென்றார்கள். அன்றிரவு கழிந்தது.

உதவிக்கமிஷனர் சிங்காரவேல் பிள்ளையின் பங்களா எழும்பூர் ஹைரோட்டில் இருந்தது. அவருக்குப் புஷ்பவல்லி ஒரே புத்திரி. வயதாகி விட்டதால் உத்தியோகம் உயர வேண்டுமே என்ற கவலை அவருக்கில்லை. பெண்ணுக்குத் தகுந்த இடத்தில் கலியாணம் பண்ணிக் கொடுத்துவிட்டு மனைவியை அழைத்துக் கொண்டு திவ்ய தேச யாத்திரையில் காலங்கழித்து விடப்போவதாக அவர் சிநேகிதர்களிடம் அடிக்கடி சொல்லி வந்தார். அவருக்குப் புஷ்பவல்லியிடத்தில் அதிகப் பிரியம் என்பது எல்லோருக்கும் தெரியுமாதலால் அவர் சொல்லி வந்ததை யாரும் லக்ஷியம் செய்யவில்லை. "இப்படிதான் ஸார் ரொம்பப்பேர் சொன்னா. திவ்ய தேசமாவது போவதாவது ஸார்" என்று அவருடைய சிநேகிதர்கள் பதில் சொல்லி வந்தார்கள். அவ்வளவு பிரேமையுடன் வளர்த்து வந்த அந்தப் பெண்ணை நீலமேகம் பிள்ளைக்குக் கலியாணம் செய்துகொடுப்பதாக ஏற்பாடும்



ஆகியிருக்கிறது. கலியாணமாகப் போகிறதென்று புஷ்பவல்லி குதூகலத்துடன் இருந்த சமயத்தில் தன்னுடன் படித்த சிநேகிதை வீட்டுக்கு வந்திருக்கிறாள் என்றால் அவளுக்கு எவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டிருக்கும்.

ஜயலட்சுமியைப் பார்த்தவுடன் புஷ்பவல்லி ஓடிவந்து கட்டிக் கொண்டாள். "எப்ப ஜயா பட்டணத்துக்கு வந்தே?" என்று குழந்தைபோல் விசாரித்தாள். ஜயலட்சுமிக்குப் புஷ்பவல்லியிடம் பிரியம் ஜாஸ்தி. பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது 'கண்ணு' என்றுதான் ஜெயா புஷ்பவல்லியைக் கூப்பிடுவது வழக்கம். இரண்டு பேரும் சகோதரிகள்போல் பழகியவர்கள்.

"வந்து கொஞ்ச நாள்தான் ஆச்சு கண்ணு, அப்பா எங்கே?" என்று ஜயா கேட்டாள்.

"அப்பா ஆபீஸுக்குப் போயிருக்காங்க. உள்ளே வா ஜயா" என்று ஜயாவைக் கையைப் பிடித்துக் கொண்டு பிள்ளையின் ஆபீஸ் அறையில் அழைத்துக் கொண்டு போய் உட்காரவைத்து, "இரு ஜெயா! நான் போய், பழம் கொண்டு வரேன்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

உதவிக்கமிஷனரின் ஆபீஸ் அறைக்குப் பக்கத்து அறை அவருடைய படுக்கையறை. ஆபீஸ் அறையிலிருந்தே படுக்கை அறைக்கு வழியிருந்தது. அந்த வழியின் கதவு திறந்திருந்ததால் உள்ளேயிருந்த இரும்புப் பெட்டி ஜயலட்சுமியின் கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது. ஜயலட்சுமி அந்த உள்ளுக்குச் செல்ல எழுந்திருந்தாள். அதற்குள் புஷ்பவல்லி பழங்களுடன் ஓடிவந்தாள்.

"ஜயா, இதைச் சாப்பிடு. காப்பி நீ எங்க வீட்டிலே சாப்பிடுவையோ?" என்று பழங்கள் கொடுத்துவிட்டுக் கேட்டாள்.

"கண்ணு! உன் கையால் தரும் எதையும் வேணும்னாலும் சாப்பிடுவேன்" என்றாள் ஜயா.

''இதோ பத்து நிமிஷத்தில் காபி வைக்கச் சொல்லி நானே கொண்டுவரேன்'' என்று சொல்லிவிட்டுப் புஷ்பவல்லி மறுபடியும் உள்ளே ஓடினாள்.

அடுத்த விநாடி ஜயா சிங்காரவேல் பிள்ளையின் படுக்கையறைக்குள் நுழைந்தாள். புஷ்பவல்லி மத்தியில் வந்துவிடப் போகிறாளேயென்ற பயம் ஒரு பக்கமும், தான் திருடுவதைப் பார்த்துவிட்டால் அவளுக்குத் தன்மேல் உள்ள அன்பு போய்க் கேவலமான அபிப்பிராயம் உண்டாகி விடுமேயென்ற அவமான உணர்ச்சி மற்றொரு பக்கமும் ஜயலட்சுமியை வாட்டி வதைத்தன. மிகுந்த தைரியத்துடன் மடியிலிருந்து சாவியை எடுத்து சீக்கிரமாக இரும்புப் பெட்டியைத் திறந்தாள். இரும்புப் பெட்டி கிரீச் என்று சப்தித்தது. அதிக திகைப்படைந்து ஜயலட்சுமி சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு யாருமில்லையென்ற தைரியங்கொண்டு அதிலிருந்த தஸ்தாவேஜுகளைப் புரட்டித் தனக்கு வேண்டிய காகிதத்தை எடுத்துப் பத்திரமாக ரவிக்கைக்குள் வைத்துக் கொண்டாள். ஆபத்தில் சிக்கிக் கொள்ளாமல் வேலையை முடித்தோமேயென்று சந்தோஷத்துடன் ஆபீஸ் அறைக்குச் செல்லத் திரும்பினாள். இரண்டு அறைகளுக்கும் நடுவிலிருந்த கதவைச் சாத்திக் கொண்டு கதவின்மேல் சாய்ந்தவண்ணம் சிங்காரவேல் பிள்ளை கோபப் பார்வையுடன் நின்றுகொண்டிருப்பதைக்கண்டு பயத்தால் வெலவெலத்துப் போய்த் திக்பிரமைடைந்து விட்டாள்.

''ஜயலட்சுமி! திருட ஆரம்பித்து விட்டாயா? எத்தனை நாளாக இந்த வேலை?'' என்று சிங்காரவேல் பிள்ளை கேட்டார். ஜயலட்சுமி பதில் சொல்லவில்லை.

''அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு மரியாதையாய் வீட்டை விட்டு வெளியே போ!'' என்று மறுபடியும் சொன்னார் பிள்ளை.

''முடியாது'' என்றாள் ஜயலட்சுமி.

''முடியாதா?'' என்று சொல்லிக் கொண்டே உதவிக்



கமிஷனர் கிட்டே நெருங்கினார். ''ஜயலட்சுமி! உன்னைக் குழந்தை முதல் எனக்குத் தெரியும். அதனால்தான் கைது செய்ய யோசனையாய் இருக்கிறது. பேசாமல் கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போ'' என்றார்.

''உங்களிடம் கொடுத்துவிட்டுப் போகவா இவ்வளவு சிரமப்பட்டுக் கடிதத்தை எடுத்தேன்?'' என்றாள் ஜயலட்சுமி.

சிங்காரவேல் பிள்ளைக்கு அசாத்தியமான கோபம் வந்தது. ''ஜயலட்சுமி! இதுவரை நான் பிற பெண்களைத் தொட்டதில்லை. உன்னைத் தொட்டுக் கடிதத்தைப் பிடுங்கும்படி செய்யாதே'' என்றார்.

''இந்தக் கடிதம் எனக்கு வேண்டும். உங்களிடம் கொடுக்க மாட்டேன். வழியை விடுங்கள்'' என்றாள் ஜயலட்சுமி.

சிங்காரவேல் அவள் கையை இறுகப் பிடித்துக் கொண்டார்.

''நீங்கள் என்னிடமிருந்து இந்தக் கடிதத்தைப் பிடுங்கினால் நான் உங்களுக்குச் செய்ய உத்தேசித்திருக்கும் உதவியை இழந்து உத்தியோகத்துக்கே உலை தேடிக் கொள்வீர்?'' என்று எச்சரித்தாள் ஜயா. பிள்ளை சிறிது விலகி நின்றார். ஜயலட்சுமி தனது மடியிலிருந்த சரப சாஸ்திரி கொடுத்த கடிதத்தை எடுத்தாள். இரண்டு கடிதங்களையும் இரண்டு கைகளில் பிடித்துக் கொண்டு, ''இந்த இரண்டில் எது வேண்டும்?'' என்று கேட்டாள்.

பிள்ளை இரண்டாம் கடிதத்தைப் பார்த்தார். அது என்ன கடிதமென்று தெரிந்துவிட்டது. அதைக் கண்டு நடுங்கினார். மற்றொரு கடிதத்தைக் கொடுத்து விட்டால் இருபதாயிரம் ரூபாய் பெண்ணுக்கு இல்லாது போய்விடுமேயென்ற யோசனை தோன்றியது. ''பழைய பாவத்துக்கான பிராயச்சித்த தட்சிணைபோல், இருபதாயிரம் ரூபாய் கிடைக்கக்கூடிய கடிதத்தையா கொடுத்துவிடுவது?''

என்று ஒரு நிமிஷம் யோசித்தார். 'இரண்டு கடிதங்களையும் பிடுங்கிக் கொண்டால் அபலையான அந்தப் பெண் என்ன செய்ய முடியுமென்று' சிந்தித்தார்.

''இரண்டையும் பிடுங்கிக் கொண்டால் என்ன செய்வாய்?'' என்று வாய்விட்டும் கேட்டார்.

''உமக்கு மாப்பிள்ளையாகப் போகும் மனிதனைத் தூக்கு மேடைக்கனுப்புவேன்'' என்றாள் ஜயலட்சுமி.

ஒன்றும் புரியாமல் அவளுடைய முகத்தை உதவிக் கமிஷனர் பார்த்தார். ''ஜோதிபாயுடன் வந்த மனிதன் மவுண்ட்ரோடில் காணாமல் போய்விட்டானே, அவன் யார் தெரியுமா? அவன்தான் ஹைகோர்ட்டு ரிஜிஸ்ட்ரார் நீலமேகம்'' என்று சொன்னாள் ஜயலட்சுமி.

உதவிக் கமிஷனர் திகைத்துப் போனார். தன்னுடைய புத்திரியின் சௌக்கியம், தன்னுடைய கௌரவம் எல்லாம் ஜயலட்சுமி கையில் சிக்கியிருப்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்டார். ஆகவே இருபதினாயிரம் ரூபாய் கொடுக்கக்கூடிய கடிதத்தை விட்டுவிடத் தீர்மானித்தார். ஜயலட்சுமி கொடுத்த அந்த மற்றொரு கடிதத்தை வாங்கி ஒரு மெழுகுவத்தியை ஏற்றி அதில் கொளுத்தினார். கொளுத்திக் கொண்டே, ''ஜமீன்தார் கடிதம் இங்கிருப்பது உனக்கெப்படித் தெரியும்?'' என்று கேட்டார்.

''சரப சாஸ்திரி சொன்னான்'' என்றாள் ஜயா.

''இந்தக் கடிதத்தை யார் உனக்குக் கொடுத்தது?'' என்று அவர் மீண்டும் கேட்டார்.

''சரப சாஸ்திரிதான்'' என்றாள் ஜயா.

''சரப சாஸ்திரிக்கு எல்லாம் தெரிகிறது. அவனுடைய பிடியில் அகப்படாதவர்கள் இல்லை. அவனுடைய ஆட்கள் எங்குமிருக்கிறார்கள் போலிருக்கிறது. அவனைக் கைது செய்ய ஏன் இன்னும் போலீஸ் இலாக்கா தாமதிக்கிறதென்று



தெரியவில்லை'' என்று தானே சொல்லிக் கொண்டார் உதவிக் கமிஷனர்.

இந்தச் சமயத்தில் புஷ்பவல்லியும் அங்கு வந்துவிட்டாள். ''ஐயா! இதோ காபி'' என்று சொன்னவள் தகப்பனாரும் அவளுடன் இருப்பதைப் பார்த்து, ''என்ன அப்பா! ஐயா வந்திருக்கிற சமாசாரத்தை இப்பதானே ஆள்கிட்டே சொல்லியனுப்பிச்சேன். அதுக்குள்ளே எப்படி வந்தீர்கள்?'' என்றாள்.

''சமாசாரம் கேட்டேன். உடனே வந்துவிட்டேன்'' என்றார் சிங்காரவேல் பிள்ளை. காபியைச் சாப்பிட்டுவிட்டு ஜயா புறப்பட்டாள். அவள் வாயிற்படியைத் தாண்டினதும் புஷ்பவல்லி தனது தகப்பனாரைப் பார்த்துக் குழந்தைபோல், ''அப்பா! ஜயா இன்னும் குழந்தை போலவே இருக்கா பார்த்தீங்களா? அவள் ரொம்ப நல்லவள், அப்பா'' என்றாள்.

''ஆட்சேபணையென்ன! தங்கமான பெண்'' என்று உள்ளெழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு சிங்காரவேல் பிள்ளை கூறினார்.

சிங்காரவேல் பிள்ளையின் வீட்டிலிருந்து புறப்பட்ட ஜயலட்சுமி நேராக சாஸ்திரியிருக்குமிடம் போகவில்லை. முதலில் மவுண்ட்ரோட்டுக்குப் போய்க் கையிலிருக்கும் கடிதத்திற்கு ரகசியமாகப் போட்டோ ஒன்று எடுத்துக் கொண்டாள்.

## அத்தியாயம் - 12

# சரப சாஸ்திரியின் சதிச் செயல்

மார்ச்சு மாதம் முதல் தேதியன்று சரப சாஸ்திரியின் பயங்கர இயக்கம் கூடியபோது தேசம் பெரிதும் நிலைகலங்கி இருந்தது. ஜனங்கள் மனத்தில் நிம்மதியில்லை. பிப்ரவரி மாதம் 17ஆம் தேதியன்று நமது 'அரை நிர்வாண பக்கிரி' ராஜப் பிரதிநிதியைப் பேட்டி கண்டு பேசப்போனபோது, ''இனி மேல் தேசத்தில் அமைதி நிலவும். சட்டமறுப்பு இயக்கம் ஓய்ந்துவிடும்'' என்று ஜனங்கள் நம்பினர். அந்த நம்பிக்கை மார்ச்சு மாதம் முதல் தேதியன்று மறைந்துவிட்டது. சமாதானத்தை நிலை நிறுத்த காந்தி செய்த முயற்சிகள் பலிக்கவில்லை என்ற செய்தி எங்கும் பரவலாயிற்று.

''சமரசப் பேச்சு போதும்'' என்ற சப்தமே காங்கிரஸ் சுற்றுவட்டாரங்களில் ஒலித்தது. ''ஆனானப்பட்ட ஐரோப்பிய யுத்தத்துக்குப் பயப்படாத இங்கிலீஷ்காரன் இந்த சத்தியாக் கிரகத்துக்கெல்லாம் மசிவானா ஸார்'' என்று விதேச மோஹிகள் பேசினார்கள்.

பலாத்கார வழிகளில் நம்பிக்கையுள்ள பயங்கரவாதி களுக்கும் இதே அபிப்பிராயந்தான். காந்தியின் கை சளைக்கும் போலத் தோன்றத் தோன்ற அவர்களுக்கு அஹிம்ஸையிலிருந்த அவநம்பிக்கை அதிகமாயிற்று. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் தான் சரப சாஸ்திரியின் சங்கம் கீழ்ப்பாக்கத்திலுள்ள பங்களாவில் கூடியது. பங்களாவின் கதவுகளெல்லாம் தாளிடப்பட்டன. சங்க அங்கத்தினர்கள் மாடியிலிருந்த ஹாலில் உட்கார்ந்து கொண்டார்கள்.



சரப சாஸ்திரி தலைமை ஸ்தானத்தில் அமர்ந்து கொண்டான். அவனுக்கு ஒரு பக்கத்தில் ஜமீன்தாரும், மற்றொரு பக்கத்தில் ஜயலட்சுமியும் உட்கார்ந்திருந்தனர். சங்கத்தின் மற்ற அங்கத்தினர்கள் ஜயலட்சுமியைச் சந்திப்பது அதுவே முதல் தடவையாகையால், சாஸ்திரி முதலில் அவளை அறிமுகப்படுத்தி வைத்தான்.

''சகோதரர்களே! தேசம் விடுதலையடைய வேண்டுமானால் தேச கைங்கரியத்தில் பெண்களும் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் நமது சங்கத்தின் கொள்கைகளுக்குத் தக்கபடி வேலை செய்யக்கூடிய திறமை வாய்ந்த பெண்கள் அகப்படுவது கஷ்டம் என்பதும் உங்களுக்குத் தெரியும். அப்பேர்ப்பட்ட பெண் நமக்கு இன்று கிடைத்திருக்கிறாள். இதோ எனது இடது புறத்தில் உட்கார்ந்திருக்கும் ஜயலட்சுமி மிகுந்த தைரியம் வாய்ந்தவள். ஏன், உண்மைமைச் சொல்லவேண்டுமானால் அவளுடைய தைரியத்தில் பாதி தைரியமுள்ள ஆண்பிள்ளை எவரும் நமது சங்கத்தில் கிடையாது'' என்றான் சாஸ்திரி.

சாஸ்திரியின் எதிரில் பரம தடியனான ஒரு வாலிபன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுடைய உடம்பில் ரோமம் அதிகமாயிருந்ததால் அவன் பார்வைக்குக் கரடிபோலவே இருந்தான். வேதாசலம் என்ற அவ்வாலிபன் சாஸ்திரியை நோக்கி, ''என்ன, சாஸ்திரி! போன வருஷம் ஒரு பெண்ணைக் கொண்டுவந்து சேர்த்தாயே, அவளை ஏன் பட்டணத்துக்கு அனுப்பிவிட்டாய்?'' என்று கேட்டான்..

''அவள் நமது சங்கத்தையே கவிழ்த்துவிடப் பார்த்தாள். அதனால்தான் அவளை மேல் உலகத்துக்கு அனுப்பினோம்'' என்றான் சாஸ்திரி.

''இவள் நம்மை மோசம் செய்யமாட்டாளென்பது நிச்சயமா?'' என்று கூட்டத்திலிருந்த மற்றொரு வாலிபன் கேட்டான்.

"இவன் மோசம் செய்ய இஷ்டப்பட்டாலும் முடியாது. நம்மைக் காட்டிக் கொடுக்கப் பிரயத்தனப்படும் மறு நிமிஷத்தில் இவனைத் தூக்குமேடைக்கு அனுப்ப என்னால்முடியும்" என்றான் சாஸ்திரி.

"எப்படி முடியும்?" என்று இன்னொருவன் கேட்டான்.

"இவள் செய்திருக்கும் குற்றம் அவ்வளவு கொடியது. இனிமேல் இவள் நமது சங்கத்தை விட்டுப் போகமுடியாது. நம்மை விட்டுப் போனால் நேராக ஜயிலுக்குள் நுழைய வேண்டியதுதான்." என்று சாஸ்திரி கூறினான். அவன் சொல்லிய சமாதானத்தில் அனைவரும் திருப்தியடைந்தனர்.

"ஜயலட்சுமி விஷயம் இத்துடன் நிற்கட்டும். இனி சங்கத்தின் வேலையைப் பற்றிக் கவனிப்போம்" என்று சாஸ்திரி அதிகார தோரணையில் கூறினான். உடனே அந்த ஹாலில் மௌனம் நிலவியது. சாஸ்திரி பேசுவதை அங்கத்தினர்கள் அனைவரும் ஜாக்கிரதையாகக் கேட்கலாயினர்.

"நமது சங்கம் ஏற்பட்டு இப்பொழுது ஒரு வருஷத்திற்கு மேலாகியும் நாம் உபயோகமுள்ள எக்காரியத்தையும் இது வரை செய்யவில்லை. சங்கத்தைப் பலப்படுத்துவதிலும், பணம் சேர்ப்பதிலும் காலம் கழித்தோம். கணபதியினருளால் நமக்குப் போதிய பணம் கிடைத்து விட்டது" என்று சாஸ்திரி சொன்னதும் அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

கணபதி பாங்கியைக் கொள்ளையடித்துவிட்டு, அதற்கு வெடிவைத்த விஷயத்தையே அவன் பிரஸ்தாபிக்கிறானென்பதை அவர்கள் அறிந்துகொண்டனர். அவர்களில் ஒருவனுக்கு உத்ஸாகம் தாங்க முடியாமல், "பேஷ் சாஸ்திரி! கணபதி பாங்கியைக் குளோஸ் பண்ணினதைத்தானே சொல்றே?" என்று சொல்லி உரக்கச் சிரித்தான்.



கொடிய செய்கையைச் செய்துவிட்டு, அதைப்பற்றிச் சர்வ சாதாரணமாக ஹாஸ்யத்துடன் சாஸ்திரி பேசுவதைக் கண்டு ஜயலட்சுமி ஆச்சரியப்பட்டாள். "என்ன மனிதர்கள்... எத்தனை பயங்கரமான காரியங்களைச் சர்வ சாதாரணமாகச் செய்கிறார்கள்" என்ற தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

சரப சாஸ்திரி "ஆம்" என்று கூறிவிட்டு மேலும் பேசலானான். "சங்கத்துக்குப் பணம் கிடைத்துவிட்டது. அங்கத்தினர்கள் போதாதேயென்று யோசித்தேன். அந்தக் குறை நீங்கும்படியான காலமும் நெருங்கிவிட்டது" என்றான்.

"அந்தக் குறை எப்படித் திடீரென்று நீங்கப் போகிறது?" என்று வேதாசலம் கேட்டான்.

"தேச நிகழ்ச்சிகளைப் பார்த்தீர்களானால் எப்படி நீங்கு மென்று தெரிந்து கொள்வீர்கள். தேசத்தில் வீரர்களான மனிதர்கள் இல்லையா என்ன? எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களில் முக்கால்வாசிப் பேர் அஹிம்ஸா மார்க்கத்தில் பிரமை கொண்டு காந்தியைப் பின்பற்றிச் செல்கிறார்கள். நிஷ்பலமான அஹிம்ஸா மார்க்கத்தில் ஜனங்களுக்கு மோகம் வலுத்தால் பலன் தரக்கூடிய பலாத்கார வழியில் நம்பிக்கை குறைகிறது. அஹிம்ஸா மோகம் ஜனங்களை விட்டு நீங்கும் காலம் நெருங்கிவிட்டது. நமது கட்சி இனி வலுக்கும்" என்றான் சாஸ்திரி.

"சாஸ்திரி! நீ கனவு கண்டு கொண்டிருக்க வேண்டியது தான். காந்தி இருக்கும் வரையில் ஜனங்களை அஹிம்ஸா மார்க்கத்தை விட்டுத்திருப்ப முடியாது" என்றாள் ஜயலட்சுமி.

"ஜயா! நீதான் கனவு காண்கிறாய். சர்க்கார் அவசரச் சட்டங்களைப் பிரயோகித்தாலும், தடியால் ஜனங்களை அடித்ததாலும் பல அபேதவாதிகளுக்கு ஏற்கனவே எரிச்சல்.

'என்னடா அவன்பாட்டுக்கு அடித்துக் கொண்டிருக்க வேண்டியது; நாம் சும்மா அடிபட வேண்டியதா?' என்று பலர் ஏற்கனவே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இனிமேலும் காங்கிரஸுக்கும், சர்க்காருக்கும் சமரஸம் ஏற்படா விட்டால் அபேதவாதிகள் அஹிம்ஸையைக் காற்றில் பறக்க விட்டுவிடுவார்கள். காங்கிரஸுக்கும் சர்க்காருக்கும் சமரசம் ஏற்படப்போவதில்லை. ஆகையால் அபேதவாதிகள் பலருக்கு அஹிம்ஸையிலுள்ள நம்பிக்கை போய்விடும். அடுத்தபடி அவர்கள் சேரக்கூடிய கட்சி என்னுடைய பலாத்கார கட்சிதான்'' என்று சாஸ்திரி பதில் சொன்னான்.

''சமரஸம் ஏற்படாதென்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்று ஜயலட்சுமி மீண்டும் கேட்டாள்.

''எப்படித் தெரியுமா? காந்தி-இர்வின் பேச்சால் பிரயோசனமில்லை என்று தோன்றுவதாக இன்றைய பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. பத்திரிகைகளைப் பார். உனக்குக்கூடத் தெரியும். இப்படித்தான் நேருமென்று எனக்கு முன்பே தெரியும். காரியக்கமிட்டி அங்கத்தினர்களை விடுதலை செய்தும், எப்பொழுது சர்க்காராக அவர்களைக் கூப்பிட்டுப் பேசவில்லையோ அப்பொழுதே தெரிந்து கொண்டேன். ஜயித்த கட்சியின் தலைவன் ராஜப்பிரதிநிதியைப் பேட்டி காண தானாக வேண்டிக் கொள்வது எங்கேயாவது உண்டா?'' என்றான் சாஸ்திரி.

''காந்தி ராஜப் பிரதிநிதியிடம் பேட்டி கேட்டதைச் சொல்லுகிறாயோ? சாஸ்திரி! சத்தியாக்கிரகி அசட்டுத் கௌரவத்தை கவனிப்பதில்லை என்பதை இன்று முதலாவது தெரிந்துகொள். எதிரிகளிடத்தில் துவேஷமும் அவனுக்குக் கிடையாது. ஜனங்கள் க்ஷேமம் ஒன்றுதான் அவனுக்கு முக்கியம். ஆகையால் காந்தி ராஜப்பிரதிநிதியைப் பேட்டி கேட்டதில் தவறெதுவுமில்லை, ஆச்சரியமுமில்லை'' என்று பதில் சொன்னாள் ஜயலட்சுமி.



''எதிரியிடம் துவேஷமில்லையா? அப்படியானால் சண்டை பிடிப்பானேன்?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''சாஸ்திரி, சத்தியாக்கிரகத்தின் உண்மைத் தத்துவத்தை நீ இன்னும் அறிந்துகொள்ளவில்லை. எதிரியிடம் துவேஷம் கொண்டு அவனுக்குத் துன்பமளிக்க சத்தியாக்கிரகி பிரயத்தனப்படுவதில்லை. தன்னுடைய தியாகத்தாலும் தான் கஷ்டப்படுவதாலும் எதிரியினுடைய மனத்தை மாற்றித் தன் காரியத்தைச் சாதித்துகொள்ள முயலுகிறான். சத்தியாக்கிரகி திடகாத்திரத்தால் ஜயிப்பதில்லை; திடசித்தத்தால் ஜெயிக்கிறான். காங்கிரஸுக்கும் சர்க்காருக்கும் சமரசம் நிச்சயம். காந்திக்கு வெற்றியும் நிச்சயம்'' என்றாள் ஜயலட்சுமி.

''ஜயா நிச்சயமென்று எப்படிச் சொல்லுகிறாய்?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''முடிவில் சத்தியத்துக்குத்தான் ஜயம். வெளிச்சத்துக்கு முன் இருட்டு எப்படி நிற்க முடியாதோ அதேமாதிரி அஹிம்ஸைக்கு முன் பலாத்காரமும், ஜனங்களின் ஆத்ம சக்திக்கு முன்பு படை பலமும் நிற்கமுடியாது. ஆகையால் தான் காந்திக்கு வெற்றி'' என்றாள் ஜயலட்சுமி.

''என்னப்பா சாஸ்திரி! இந்தப் பெண் பெரிய வேதாந்தம் பேசுகிறதே. இதைக் கொண்டுவந்து நம்முடன் சேர்த்து விட்டாயே'' என்றான் அங்கத்தினர்களில் ஒருவன். எல்லாரும் சிரித்தார்கள்.

ஜயலட்சுமிக்குக் கோபம் வந்துவிட்டது. தனது ஆசனத்திலிருந்து எழுந்து, ''சிரியுங்கள், சிரியுங்கள். இந்தச் சங்கத்தில் சேர்ந்திருந்ததற்காகப் பிற்காலத்தில் உங்களைப் பார்த்துத்தான் உலகம் சிரிக்கப்போகிறதே'' என்றாள்.

'தேசத்துக்காக உயிரைக் கொடுக்க வந்திருக்கிறோமே. அதனால் உலகம் சிரிக்குமென்கிறாயா?'' என்றான் வேதாசலம்.

''உயிரைக் கொடுக்கவா வந்திருக்கிறீர்கள்? உயிரை வாங்கவல்லவா வந்திருக்கிறீர்கள். பிறரைக் கொல்வதா தேச சேவை? நாலு உத்தியோகஸ்தர்களைக் கொன்றுவிட்டால் நாளைக்கே சுயராஜ்யம் வந்துவிடுமா? சுத்த முட்டாள்களாயிருக்கிறீர்களே! உங்களால் தேசத்துக்குத் தீமையே தவிர நன்மையில்லை. பயங்கர இயக்கத்தின் பலாத்கார வழிகளால் தீமைதான் ஏற்படும். நீங்கள் யாராவது இரண்டு பேரைக் கொன்றுவிட்டால் அதை வியாஜமாக வைத்துக் கொண்டு சர்க்கார் எல்லோர் பேரிலும் கடுமையான சட்டங்களைப் பிரயோகிக்கிறார்கள். இதனால் அஹிம்ஸா மார்க்கத்தில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. நீங்கள் சேவை செய்யவில்லை. தேசத்துக்கு முட்டுக்கட்டைதான் உங்களால் போடமுடியும். நீங்களெல்லோரும் வாலிபர்களாயிருக்கிறீர்கள். கொடிய குற்றங்களைச் செய்துவிட்டு வீணாக வாழ்வுக்கும் உயிருக்கும் உலை தேடிக் கொள்ளாதீர்கள்'' என்று ஜயலட்சுமி நீண்டதோர் பிரசங்கம் செய்தாள். அவள் சொன்னது அங்கத்தினர்களுக்கு நியாயமாகப் பட்டது. அவர்களில் ஒருவன், ''ஏம்மா! காந்தி ஜபம் ஒன்றும் சாயாது போலிருக்கிறதே''என்றான்.

''காந்தி ஜபம் சாயாவிட்டால் இந்தத் தேசத்தில் யாருடைய ஜபமும் சாயாது. அவரைப் பின்பற்றினால்தான் தேசத்துக்கு வெற்றி. இல்லாவிட்டால் வெற்றியில்லை'' என்று ஜயலட்சுமி கூறினாள்.

பிறகு சரப சாஸ்திரி எழுந்து பேசலானான்:- ''நமது புதிய அங்கத்தினரான ஜயலட்சுமி எவ்வளவு சாமர்த்திய முடையவளென்பதை அவளுடைய பேச்சிலிருந்தே நீங்கள் தெரிந்து கொண்டிருக்கலாம். அது மாத்திரமல்ல, அங்கத்தினர்களைச் சேர்ப்பதில் எனக்கிருக்கும் சாமர்த்தியத்தையும் நீங்கள் அறிந்து கொண்டிருக்கலாம். எனக்கு ஏன் இந்தச் சங்கத்தின் சக்தியில் நம்பிக்கையிருக்கிறது? சமூகத்திலிருந்து மணிகளாகப் பொறுக்கி இந்தச் சங்கத்திற்கு



ஆள் சேர்த்திருப்பதால்தான். உங்கள் ஒவ்வொருவருடைய திறமையிலும் எனக்கு அளவு கடந்த நம்பிக்கை இருக்கிறது. நமது சங்கத்தில் ஆயிரக்கணக்கான முட்டாள்கள் இல்லை என்பது வாஸ்தவம்தான். ஆனால் புத்திசாலிகளான கொஞ்சம் பேர் இருக்கிறீர்கள். நம்முடைய பலத்தை நாம் சாமர்த்தியமாக உபயோகித்தோமானால் அரிய பெரிய காரியங்களைச் செய்யலாமென்பதில் சந்தேகமில்லை. ஜயலட்சுமி இன்று பேசியதிலிருந்து உங்களுக்குச் சந்தேகம் சிறிது உண்டாயிருக்காலாம். ''என்னடா இந்த சாஸ்திரி நமது சங்கத்துக்கு நேர்விரோதமான அபிப்பிராயங்களையுடைய ஒரு பெண்ணைக் கொண்டுவந்து சேர்த்து விட்டானே?'' என்று நினைக்கலாம். ஒரு விஷயம் மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் ஒரு மனிதனுடைய பேச்சைக் கேட்டு அவன் நோக்கம் இன்னதென்பதை நிர்ணயிக்கக் கூடாது. அவன் செய்யும் காரியங்களிலிருந்துதான் தீர்மானிக்க வேண்டும். ஜயலட்சுமி அன்றிரவு காவிரிப் பாலத்தருகில் செய்த துணிகரமான கொலையை நான் என்னுடைய இரண்டு கண்களாலும் பார்க்காமல் இருந்தால் இந்தச் சங்கத்தில் அவளைச் சேர்த்திருப்பேனா? ஒருக்காலும் மாட்டேன். நீங்கள் இப்பொழுது நினைப்பதுபோல அவள் பேச்சை நம்பி அவளுக்கு அஹிம்ஸா வழியில் தான் நம்பிக்கை யிருப்பதாகத் தீர்மானித்திருப்பேன். மனத்துகுள் அவளுக்குப் பலாத்கார உணர்ச்சியே இருக்கிறதென்பதை தெரிந்து கொண்டிருக்கமாட்டேன்'' என்று சொல்லிவிட்டு ஒரு முறை சுற்றுமுற்றும் இருப்பவர்களைப் பார்த்தான்.

ஜயலட்சுமிக்குக் கோபம் அதிகமாயிற்று. தான் பேசிய பேச்சுகளை ஒரு நிமிஷ நேரத்தில் சாஸ்திரி எப்படித் திருப்பி விட்டான்என்பதை அறிந்தாள்.

''சாஸ்திரி! வீணாகப் பொய் சொல்லாதே. எனக்குப் பயங்கர வழிகளில் நம்பிக்கையில்லையென்று உனக்கு நன்றாகத் தெரியும்'' என்று சொல்லிவிட்டு மற்றவர்களை

நோக்கி, "சாஸ்திரி சொல்வதை நீங்கள் நம்புகிறீர்களா?" என்று கேட்டாள். மற்றவர்களுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

"சகோதரர்களே! இவள் கொலை செய்தது உண்மையா இல்லையா என்று அவளையே கேளுங்கள்" என்றான் சாஸ்திரி.

"ஆம்! அதை முதலில் சொல்" என்று பலர் கூச்சலிட்டனர்.

"ஆம் செய்தேன். எனது மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகத் தெரியாமல் செய்துவிட்டேன். அதனால் உங்கள் பலாத்கார வழிகளில் எனக்கு நம்பிக்கையிருக்கிறதென்று ஆகிவிடுமா?" என்றாள் ஜயா.

"எப்படி ஆகும்! ஆகாது அம்மா ஆகாது" என்று சிலர் பரிகாசமாகச் சிரித்தனர்.

தடியனான வேதாசலம் "டேய் அது அஹிம்ஸைடா!" என்றான். மீண்டும் பலர் சிரித்தனர்.

சாஸ்திரி எல்லோரையும் அடக்கிவிட்டு, "என்ன இன்றைக்கு ஜயலட்சுமியைப் பற்றிப் பேசக் கூடினோமா? இல்லது அவள் பிரசங்கத்தைக் கேட்கக் கூடினோமா? நாம் கவனிக்க வேண்டிய முக்கிய வேலை வேறு இருக்கிறது. ஜயலட்சுமி அஹிம்சையைப்பற்றி இன்னும் ஏதாவது பேச வேண்டியிருந்தால் புஸ்தகம் போட்டு விற்கட்டும்" என்று சொல்லிவிட்டு மேலும் பேசலானான்.

"சகோதரர்களே! நீங்கள் புத்திசாலிகள். உலக நிகழ்ச்சிகளைக் கவனித்து உண்மையை அறியக்கூடிய சக்தி உங்களுக்கு இருக்கிறது. உலகத்தில் அமைதி நிலவ வேண்டுமானால் பலாத்கார வழிகளைப் பிரயோகித்து எதிரிகளைப் பயப்படச் செய்யவேண்டியது அவசியம். ஐரோப்பிய வல்லரசுகள் மகாயுத்தம் தொடங்கியபோது



ஆங்கிலப் பிரமுகர்கள் என்ன சொன்னார்கள் என்பதைக் கவனியுங்கள். பிற்காலத்தில் யுத்தங்களைத் தடுக்கவே தாங்கள் யுத்தத்தில் இறங்குவதாகச் சொன்னார்கள். எதிரிகளை ஜயிக்கவும் அமைதியை நிலவச் செய்யவும் பலாத்கார வழிகள்தான் அவசியமென்று இதிலிருந்தே தெரியவில்லையா? அந்த ராஜ தந்திரிகள் விஷயம் தெரியாதவர்களா?" என்றான்.

"யுத்தத்தால் அமைதி ஏற்படாது. மீண்டும் யுத்தம் வரும் பார். தீமையிலிருந்து எங்கேயாவது நன்மை விளையுமா? யுத்தத்திலிருந்து யுத்தம்தான் சம்பவிக்கும். இது தான் உலக இயற்கை" என்றாள் ஜயலட்சுமி.

சாஸ்திரி அவள் பேச்சைச் சட்டை செய்யாது "சகோதரர்களே! பலாத்கார மார்க்கத்தில் நமக்குப் பூரணமான நம்பிக்கை இருக்கிறது. அஹிம்ஸையால் பிரயோசனம் இல்லையென்பது காந்தி - இர்வின் பேச்சிலிருந்து தெரிகிறது. ஒரு வருஷமாக அஹிம்ஸைப் போர் நடந்தும், ஆயிரக் கணக்கானவர்கள் ஜயிலுக்குப் போயும், வைஸிராய் வழிக்கு வருவதாகத் தெரியவில்லை. இப்பொழுது நாம் வேலை செய்ய ஆரம்பித்தால்தான் பலர் நமது அபிப்பிராயப்படி நடக்க முன் வருவார்கள். நமது சங்கம் வேலையைத் தொடங்குவதற்கு இதுதான் சரியான சமயம். ஆனால் சங்கத்துக்கு ஆபத்து நேரிடும் போலிருக்கிறது. அதைச் சமாளிக்க முதலில் முயற்சி செய்ய வேண்டும்" என்று கூறினான்.

ஆபத்து என்றதும் அனைவரும் திகிலடைந்தார்கள். "ஆபத்தா! என்ன ஆபத்து! யாரால் ஆபத்து?" என்று ஹாலின் மூலைகளிலிருந்து கேள்விகள் கிளம்பின.

"இரண்டு பேர்களால் கெடுதல் நேரிடும் போலிருக்கிறது. ஒருவர் ஜயலட்சுமியின் தகப்பனாரான பலராம ஐயர். இரண்டாவது ஆசாமி டாக்டர் கோபாலன். இவர்

களாய் சங்கம் அழிந்துவிடும் போலிருக்கிறது'' என்றான் சாஸ்திரி.

''ஜயலட்சுமிக்குக் கோபமும் திகிலும் அதிகமாயிற்று. ''பொய்! சுத்தப் பொய்! அவர்களால் உங்களுக்கு என்ன ஆபத்து?'' என்று கேட்டாள்.

''ஜயலட்சுமி! உன்னுடைய தகப்பனார் என்னையும், இந்தச் சங்கத்தையும் முன்பு ஒரு தடவை போலீசாருக்குக் காட்டிக் கொடுக்கப் பார்த்தார். அப்பொழுது அவரை மன்னித்தேன். மீண்டும் அவர் அதே வழியில் பிரவேசித்திருப்பதாகத் தெரிகிறது. இனிமேல் நான் கருணை காட்டினால் என் உயிரையும், அதைவிட அரிய இந்தச் சங்கத்தையும் அழித்தவனாவேன்'' என்று சாஸ்திரி கூறினான்.

''என்னுடைய தகப்பனார் அப்படி என்ன தப்பு செய்தார்?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''உன்னுடைய தகப்பனாருக்குச் சங்கத்தின் நடவடிக்கைகளில் சில தெரியும். ஜோதிபாய் நமது சங்க அங்கத்தினர் ஒருவரால் கொல்லப்பட்டாளென்பதை அறிந்ததும் என்னைப் பிடித்துக் கொடுப்பதாக போலீசாரிடம் ஒப்புக்கொண்டார். அதனால்தான் அவருக்குக் கோர்ட்டார் ஆறு மாதம் தண்டனை விதித்தும் சர்க்கார் அவரை விடுதலை செய்தார்கள். போலீஸ் முன்னதாகவே இலாக்காவிலுள்ள எனது ஆசாமி இதைப் பற்றி எனக்குத் தகவல் அனுப்பினான். பிறகு நான் எனது நண்பர்களில் சிலரை அழைத்துச் சென்று அவர் பேசிய கூட்டத்தைக் கலைத்து அவரைத் திருச்சினாப்பள்ளிக்குக் கொண்டுபோய் விட்டேன். திருச்சிக்குச் சென்றதும் இனி மேல் என் விஷயத்தில் தலையிடக்கூடாதென்று எச்சரித்து, விட்டுவிட்டேன். அவர் மீண்டும் போலீஸாருடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது'' என்ற கூறி விட்டு மற்ற அங்கத்தினர்களைப் பார்த்து, ''அப்பேர்ப்பட்ட மனிதனை என்ன செய்யலாம்?'' என்று சாஸ்திரி கேட்டான்.



ஜோதிபாய் போன வழியையே அவருக்குக் காட்டி விடு'' என்று பலர் கூவினார்கள்.

ஜயலட்சுமி ஏதோ பேச எழுந்தாள். அவளுக்குப் பயம் அதிகமாகிவிட்டது; பேச முடியவில்லை. அவள் வாய் திறப்பதற்குள், ''பலராம ஐயரை ஒண்டியாக அனுப்பக் கூடாது; டாக்டர் கோபாலனையும் அவருக்குத் துணையாக அனுப்ப யோசிக்கிறேன்'' என்று சாஸ்திரி சொன்னான்.

''டாக்டர் கோபாலன் என்ன செய்தார்?'' என்று ஒருவன் கேட்டான்.

''நமது சங்கத்தைப்பற்றிய முக்கிய ரகசிய மொன்று அவருக்குத் தெரியும். அந்த ரகசியம் வெளியானால் நாமெல்லோரும் அந்தமான் தீவுக்குப் போய்விடுவோம்'' என்றான் சாஸ்திரி.

''வாஸ்தவம். பலராம ஐயரைவிட கோபாலன்தான் நமக்கு முதல் சத்துரு. அவனை ஒழித்தால்தான் நமது சங்க வேலை மேற்கொண்டு நடக்கும்'' என்றார் ஜமீன்தார்.

ஜயலட்சுமியின் கண்களில் நீர் ததும்பியது. ''அடே கொலைகாரப் பாவிகளே! ஜாக்கிரதை! என்னிடமா உங்கள் கைவரிசையைக் காட்டுகிறீர்கள். எல்லோரையும் நான் ஒருத்தியே ஒழித்துவிடுவேன். நீங்கள் செய்யும் காரியம் இன்னதென்று யோசித்துப் பாருங்கள். இன்று என்னுடைய தகப்பனாரையும் எனது அன்புக்குப் பாத்திரமானவரையும் ஒழிக்கத் தீர்மானம் செய்கிறீர்கள். உங்களுக்குத் தகப்பனார், தாயார் இல்லையா? அன்புக்குப் பாத்திரமான பெண்டு பிள்ளைகள் சகோதரிகள்தான் இல்லையா? அவர்களைப் பற்றியும் நாளைக்கு இதே மாதிரி தீர்மானத்தைச் செய்ய சாஸ்திரி முன்வரமாட்டானென்பது நிச்சயமா? நாம் எதற்காக இந்தச் சங்கத்தில் சேர்ந்தோம். நமது பெற்றோர்களையும், அன்புள்ளவர்களையும் கொல்லவா? இதுவா தேச சேவை'' என்று சிங்கம் போல் கர்ஜித்தாள்.

''ஜயலட்சுமி! களை பிடுங்கினால்தான் பயிர் வளரும். அருகிலிருக்கும் விரோதிகளை நீக்கினால்தான் தேச சேவை செய்வது சாத்தியமாகும். தேச காரியத்தில் சுயநலத்தைக் கவனிக்காதே. தேசத்துக்காக அதைத் தியாகம் செய்வது தான் அதிகமாகும்'' என்று சாஸ்திரி சொல்லிவிட்டு, ''அந்த இரண்டு எதிரிகளையும் சரிப்படுத்துவதற்கு யார் ஓட்டுச் செய்கிறீர்கள்?'' என்றான், முக்கால்வாசிப் பேர் கை தூக்கினார்கள் மீதியிருந்த பேர்கள் ஜெயலட்சுமியிடம் பரிதாபம் கொண்டு தீர்மானத்தை எதிர்த்தார்கள். பெருவாரியான ஓட்டுகளால் தீர்மானம் நிறைவேறிய தென்று சாஸ்திரி அறிவித்தான்.

''சாஸ்திரி! உனக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டது. அதனால்தான் என்னை விரோதித்துக் கொள்கிறாய். உன்னை நல்லவழிக்குத் திருப்பலாமென நான் யோசித்த நாட்களும் உண்டு. ஆனால் பயங்கரக் குணமுடைய கொடியவனான உன்னை எப்படி நல்வழிக்குக் கொண்டுவரமுடியும்'' என்று கூறிவிட்டு மற்றவர்களைப் பார்த்து, ''முட்டாள்களே! இதே மாதிரி நம் ஒவ்வொருவர் பேரிலும் சரப சாஸ்திரி தப்புக் கண்டு பிடித்தால் எல்லாருடைய கதியும் என்னவாகுமென்று யோசித்தீர்களா? தவறு செய்யாத மனிதன் யாரும் கிடையாது. உங்கள் ஒவ்வொருவர் பேரிலும் சாஸ்திரி தப்பு கண்டுபிடித்து ஒவ்வொருவராக எல்லோரையும் கொன்று விடப் போகிறான். கடைசியில் இந்தச் சங்கத்தில் சாஸ்திரி ஒருவன்தான் மீதியிருப்பான். அப்புறம் அவனேதான் மெம்பர். அவனேதான் தலைவன்'' என்றாள்.

மறுபடியும் அவள் சாஸ்திரியை நோக்கி, ''அடே சாஸ்திரி! நான் உயிரை வெறுத்து நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் உன் விஷயங்களை எடுத்துச் சொன்னால் உன் கதி என்னவாகுமென்று யோசித்தாயா?'' என்று கேட்டாள்.



சாஸ்திரி சிரித்துக் கொண்டே, ''யோசிக்காமலா யிருப்பேன் ஜயா! முன்னாடியே யோசித்துவிட்டேன். ஆகையால் தான் உன்னை வெளியே போகவிடாது ஜமீன்தார் பங்களாவிலேயே சில நாட்கள் வைத்திருக்க உத்தேசித்திருக்கிறேன்'' என்றான்.

அத்தியாயம் - 13

## வைஷ்ணவப்பிள்ளையார்கள்

ஜமீன்தார் பங்களாவின் மாடியிலிருந்த அறைகளில் ஒன்று ஜயலட்சுமிக்கு ஒழித்து விடப்பட்டது. அவள் வெளியில் தப்பிப் போகாதிருப்பதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் ஜமீன்தார் சரிவரச் செய்து முடித்தார். சங்க அங்கத்தினர்கள் போனபிறகு மீண்டும் வாயிற்கதவுகள் தாளிடப்பட்டன. பங்களாவிலுள்ள யாரையும் அன்று வெளியே விடக்கூடாதெனச் சேவகர்களுக்கு ஜமீன்தார் கண்டிப்பான உத்தரவிட்டார். தோட்டத்தில் இரண்டு கோம்பை நாய்களையும் அவிழ்த்துவிட்டார். ''ஜயலட்சுமியின் அறையைப் பூட்டிவிடட்டுமா!''என்று கூட ஜமீன்தார் சாஸ்திரியைக் கேட்டார். ''அவசியமில்லை'' என்று சாஸ்திரி சொல்லிவிட்டான்.

இரவு பதினொரு மணியாகியும் ஜயலட்சுமிக்குத் தூக்கம் வரவில்லை. தனது தகப்பனாரையும், காதலனையும் எந்த வழியில் கொல்ல சாஸ்திரி யோசித்திருக்கிறானோ என்ற திகில் ஒரு பக்கமும், தான் ஜமீன்தார் வீட்டில் இரவு தங்கியதை அறிந்தால் கோபாலன் தன்னைப் பற்றி மறுபடியும் தப்பாக அர்த்தம் செய்துகொள்ளப் போகிறாரே என்ற கவலை ஒருபுறமும் அவளைவாட்டி வதைத்தன.

ஜமீன்தார் மீண்டும் தன்னைப் பலவந்தம் செய்ய யத்தனித்தால் என்ன செய்வது என்ற யோசனயும் கிளம்பியது. ஆனால் அந்த யோசனை மறுவினாடி அகன்றது. சரப சாஸ்திரி எவ்வளவு கொடியவனானாலும் ஒழுக்கமற்ற நடத்தைகளை அனுமதிக்க மாட்டானென்பதும், ஜமீன்தார் அவனையும் மீறி



அக் காரியங்களில் இறங்கினால் சாஸ்திரி அவனுக்கும் ஜோதிபாய் சென்ற வழியைக் காட்டி விடுவானென்பதும் அவளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. சாஸ்திரி இயற்கையாகக் கெட்ட குணமுடையவனல்ல என்பதும், தேச விமோசனத்துக்கு அவன் எந்த வழியில் நம்பிக்கை கொண்டிருந்தானோ அந்த வழியே இவனை இதர தீய வழிகளிலும் இழுத்துச் செல்கிறதென்பதையும் ஜயலட்சுமி உணர்ந்திருந்தாள்.

இம்மாதிரி அவள் பலவாறாக யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தபோது அறைக்கு வெளியில் காலடிச் சத்தம் கேட்டது. உடனே சட்டென்று படுக்கையில் படுத்து தூங்குவதுபோல் அபிநயித்தாள். ஜமீன்தார் மெள்ள கதவைத் திறந்து கையிலிருந்த டார்ச் விளக்கை ஏற்றி அவள் முகத்தைப் பார்த்துவிட்டு ''சாஸ்திரி! ஜெயலட்சுமி நன்றாகத் தூங்குகிறாள்'' என்று மெதுவாகச் சொன்னார்.

''அப்படியானால் ஓசைப்படாமல் கதவைச் சாத்திக் கொண்டு வா'' என்றான் சாஸ்திரி. ஜமீன்தார் அங்ஙனமே செய்துவிட்டுச் சாஸ்திரியைத் தொடர்ந்து சென்றதுதான் தாமதம். ஜயலட்சுமி படுக்கையை விட்டெழுந்து அடிமேலடி வைத்துப் பூனைபோல் அவர்களைத் தொடர்ந்து சென்றாள். அவர்களிருவரும் ஜமீன்தாருடைய படுக்கையறைக்குள் நுழைந்தனர். ஜயலட்சுமி அவ்வறையில் ஜன்னலுக்குப் பக்கத்தில் மறைந்து நின்று உள்ளே என்ன நடக்கிறதென்று கவனிக்கலானாள்.

அவ்வறையிலிருந்த மேஜைக்கருகில் இருந்த நாற்காலிகளில் ஜமீன்தாரும் சாஸ்திரியும் உட்கார்ந்து கொணடார்கள்.

''என்ன சாஸ்திரி! இனிமேல் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாய்?'' என்று ஜமீன்தார் கேட்டார்.

''செய்வதென்ன இருக்கிறது? முதலில் இன்று சங்கம்

தீர்மானம் நிறைவேற்றியபடி பலராம ஐயரையும், டாக்டர் கோபாலனையும் தீர்த்துவிட வேண்டியதுதான்'' என்றான் சாஸ்திரி.

''அதிருக்கட்டும், பலராம ஐயரைக் கொல்வதற்குத் தான் காரணம் சொல்லிவிட்டாய். கோபாலனையும் ஏன் கொல்லப் பார்க்கிறாய்?'' என்று மறுபடியும் ஜமீன்தார் வினவினார்.

''நான் சுமார் பதினைந்து வருஷங்கள் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்த ஒரு அபூர்வமான விஷத்துக்கு டாக்டர் கோபாலன் மாற்று கண்டுபிடித்து விட்டான். அதைக் கொண்டு ஜோதிபாய் சாதாரணமாக மரணமடையவில்லையென்றும் அவள் கொலை செய்யப்பட்டாளென்றும் நிருபிக்க அவனால் முடியும். ஆகவே அவனிருக்கும் வரையில் அந்த விஷத்தை நிர்ப்பயமாக நாம் உபயோகப்படுத்த முடியாது. இப்படி நமது சங்கத்தின் வேலைக்கு இடைஞ்சலாக இருப்பவர்களை நமது வழியிலிருந்து விலக்க வேண்டியது அவசியம் இல்லையா?'' என்றான் சாஸ்திரி.

ஜமீன்தார் சிறிது நேரம் பேசாமல இருந்தார். ஜன்னலுக்கருகில் நின்று கொண்டிருந்த ஜெயலட்சுமிக்கு உடம்பு துடித்தது. அப்பொழுது அவளிடம் வெடிகுண்டு ஒன்று இருந்தால் அஹிம்சையினிடத்திலிருந்த நம்பிக்கையைக் கூட விட்டு அதை எறிந்து அவர்களிருவரையும் தொலைத்திருப்பாள்.

சிறிது நேரம் கழித்து ஜமீன்தார் மறுபடியும் சாஸ்திரியைப் பார்த்து ''ஜயலட்சுமியை என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார்.

''நீதான் சொல்லேன். ஜயலட்சுமி டாக்டர் கோபாலனை உயிரினும் அதிகமாகக் காதலிக்கிறாள். காதலர்களைப் பிரித்து வைக்கலாமா? அவரை வைவஸ்வதப் பட்டணம் அனுப்பினால், இவளையும்கூட அனுப்ப



வேண்டியதுதான்'' என்றான் சாஸ்திரி.

ஜயலட்சுமிக்குத் தூக்கி வாரிப்போட்டது. ''இவன் இன்னும் எவ்வளவு பேரைக் கொலை செய்யப்போகிறானோ தெரியவில்லையே'' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டான்.

''சேசே பாவம், சாஸ்திரி! இந்த ஒரு காரியத்தை மாத்திரம் செய்யாதே' என்று ஜமீன்தார் ஜயலட்சுமிக்குப் பரிந்து பேசினார்.

''ஜமீன்தார்! முட்டாளைப் போல் உளறாதே. அவள் அழகைக் கண்டு மயங்கி உன்னுடைய சொந்த வாழ்க்கையையும் சங்கத்தின் நலத்தையும் அழிக்கப் பிரயத்தனப் படாதே. உன்னை ஜயலட்சுமி சிறிதும் மதிக்கவில்லை. அப்படியே மதித்தாலும் காதல் விவகாரங்களை அரசியல் விஷயங்களில் நுழையவிடக் கூடாது. நீ தேசத்திற்குச் சேவை செய்வதற்காக இச்சங்கத்தில் சேர்ந்திருக்கிறாய். அக்கடமைதான் முதல். பிறகு உன் சொந்த விவகாரங்களைக் கவனிக்க வேண்டும். அப்படியில்லாமல் நம்மைப் போலீஸுக்குக் காட்டிக் கொடுப்பதாக ஜயலட்சுமி பயமுறுத்தியதால்தான் அவளை ஒழித்துவிடத் தீர்மானித்தேன். நீயும் உனது சொந்த விவகாரங்களை அதிகமாக மதித்து, சங்கத்துக்குத் தீமை விளைவிக்ககூடிய ஒரு பெண்ணுக்குப் பரிந்து வேலை செய்ய முயன்றால் உனக்கும் அதே கதிதான் கிடைக்கும்'' என்றான் சாஸ்திரி.

ஜமீன்தார் திடுக்கிட்டார். ''சாஸ்திரி! என்னைக்கூடவா கொன்றுவிடுவாய்?'' என்று நடுக்கத்துடன் கேட்டார்.

''சங்கத்துக்குக் கெடுதி விளைவிப்பவர் எல்லாருக்கும் ஒரே தண்டனைதான். என்னிடம் பட்சபாதமே கிடையாது'' ஆகையால் ஜாக்கிரதையாக நடந்துகொள்'' என்றான் சாஸ்திரி.

ஜமீன்தார் மௌனமாயிருந்தார். ''சரிதான் இன்றைய சங்கக் கூட்டத்தில் தீர்மானத்துக்கு விரோதமாக

ஓட்டுச்செய்தார்களே அவர்கள் பெயர்களை எழுதி வைத்துக் கொண்டிருக்கிறாயா?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''எழுதி வைத்திருக்கிறேன். மொத்தம் ஏழு பேர் தீர்மானத்தை எதிர்த்தார்கள்'' என்று ஜமீன்தார் சொன்னார்.

''அவர்களை நாளை இரவு இங்கு வரச்சொல்லிக் கடிதம் எழுதிக் கொடுத்தனுப்பு'' என்று சாஸ்திரி ஜமீன்தாருக்கு உத்தரவிட்டான்.

''எதற்காக?'' என்று ஜமீன்தார் வினவினார்.

''ஜயலட்சுமியைச் சேர்ந்தவர்களையெல்லாம் ஜயலட்சுமியோடு சேர்த்து அனுப்புவதற்குத்தான்'' என்றான் சாஸ்திரி.

''நான் வெடிகுண்டு ஒன்று செய்து வைத்திருக்கிறேன். அதை வேதாசலத்தினிடம் கொடுத்துக் கோபாலன் வீட்டின் மேல் நாளை நடு இரவில் எறிந்துவிடும்படியும் ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று மறுபடியும் சாஸ்திரி சொல்லிக் கொண்டான். பிறகு வெகு நேரம் இருவரும் பேசவில்லை. ஜயலட்சுமிக்குக் கால் கடுத்தது. தனது அறைக்குப் போகத் திரும்பினாள். சாஸ்திரியின் குரல் மீண்டும் கேட்கவே மறுபடியும் ஜன்னலுக்கு அருகில் திரும்பி நின்றுகொண்டாள்.

''ஜமீன்தார்! இதென்ன பார்த்தாயா?'' என்று சொல்லிக்கொண்டே சரப சாஸ்திரி தன் கோட் பைக்குள் கையை விட்டுப் பித்தளையால் செய்யப்பட்ட ஒரு பிள்ளையார் விக்கிரகத்தை எடுத்து மேஜைமேல் வைத்தான்.

''இதை எங்கிருந்து வாங்கினாய்? மிகவும் அழகாயிருக்கிறதே'' என்றார் ஜமீன்தார்.

''வாங்குகிறதாவது....? இதைப் போல ஆயிரம் பிள்ளை யார்களை நானே செய்து விடுவேனே. நான்தான் இதைச் செய்தேன்'' என்றான் சாஸ்திரி.

ஜமீன்தார் பிள்ளையாரைக் கையிலெடுத்தார்.



''ஜாக்கிரதை! கீழே மாத்திரம் போட்டுவிடாதே'' என்று சாஸ்திரி எச்சரித்தான். ஜமீன்தார் விக்கிரகத்தைக் கூர்ந்து நோக்கினார். பிள்ளையாரின் தும்பிக்கையை அப்படியும் இப்படியும் ஆட்டிப் பார்த்தார். தும்பிக்கை ஆடும்படியாக அமைக்கப்பட்டிருந்தது. பிள்ளையாரின் நாபியில் சிறிய ஆணி வைக்கப்பட்டிருந்தது. அதை அழுத்தப் போனார் ஜமீன்தார். ''அந்த ஆணியைத் தொடாதே'' என்று சாஸ்திரி கத்தினான். அப்பொழுதுதான் அது சாதாரண விக்கிரகமல்லவென்றும் சாஸ்திரியால் செய்யப்பட்ட ஒரு கொடிய யந்திரமென்றும் ஜமீன்தாருக்குத் தெரிந்தது.

''சாஸ்திரி! என்ன இது? யந்திரம் போலிருக்கிறதே. இதை எதற்காக செய்தாய்?'' என்று ஜமீன்தார் கேட்டார்.

''எல்லாம் நம்முடைய காரியமாகத்தான். இதோ இன்னொரு பிள்ளையார்'' என்று பையிலிருந்து வேறொரு பிள்ளையாரை எடுத்து ஜமீன்தாருக்கெதிரில் சாஸ்திரி நிற்க வைத்தான்.

ஜமீன்தார் அம்மனிதனுடைய வேலைத்திறமையைக் கண்டு பிரமித்து நின்றார். சாஸ்திரி அபாரமான புத்தி கூர்மையுடையவனென்பதும் விஞ்ஞான சாஸ்திரத்தில் நிபுணனென்பதும் அவருக்குத் தெரியும். ஆனால் கைத்தொழிலில் கூட அவனுக்கு இவ்வளவு பரிச்சயமிருக்கிறதென்பதை அன்றுதான் அறிந்தார். இரண்டு விக்கிரகங்களையும் மாறி மாறிப் பார்த்தார். இரண்டுக்கும் சிறிதுகூட வித்தியாசமில்லை. ''எதை முதலில் பார்த்தோம்?'' என்று அவருக்கே சந்தேகம் ஏற்பட்டு விட்டது.

''சாஸ்திரி! நீ முதலில் வைத்த பிள்ளையார் எது?'' என்று கேட்டார்.

''என்னப்பா ஜமீன்தார்! உனக்கெதிரில்தானே இரண்டையும் எடுத்து வைத்தேன். உனக்கே அடையாளம் தெரியாவிட்டால் எனக்கெப்படித் தெரியும்?'' என்று சொல்லிச் சாஸ்திரி சிரித்தான்.

மீண்டும் விக்கிரகங்களைக் கூர்ந்து நோக்கிய ஜமீன்தார் அவற்றின் நெற்றிகளில் நாமம் செதுக்கப்பட்டிருப் பதைப் பார்த்து, ''அடாடா சாஸ்திரி! இதென்ன பிள்ளையார் இரண்டு பேரையும் வைஷ்ணவர்களாக அடித்து விட்டாயே. முகத்தில் நாமமல்லவா போட்டுவிட்டாய்?'' என்று ஆச்சரி யத்துடன் கேட்டார்.

''இன்னும் நன்றாக உற்றுப் பார்'' என்றான் சாஸ்திரி.

ஜமீன்தார் மீண்டும் உற்றுப் பார்த்துவிட்டு, ''எனக்கு ஒன்றும் தெரியவில்லை'' என்றார்.

''வைஷ்ணவர்களுக்குள் இரண்டு கட்சிகள் இருக் கின்றனவே தெரியுமா?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''தெரியாமலென்ன? வடகலை, தென்கலை என்று இரண்டு கட்சிகள். இரண்டு கட்சிகளும்தான் பொழுது விடிந்து பொழுது போனால் கோர்ட்டில் இழுத்துப் பறித்துக் கொண்டு நிற்கிறார்களே'' என்றார் ஜமீன்தார்.

''இப்பொழுது பிள்ளையார்களைப் பார். ஒரு பிள்ளையார் ஒரு கட்சி. மற்றொரு பிள்ளையார் மற்றொரு கட்சி'' என்றான் சாஸ்திரி.

ஜமீன்தார் உரக்கச் சிரித்து, ''சாஸ்திரி, பேஷ்!'' என்று சொன்னார்.

முதலில் சாஸ்திரி தென்கலைப் பிள்ளையாரைக் கையில் எடுத்துக் கொண்டு அதன் வயிற்றிலிருந்த ஆணியை இடது புறமாகத் திருப்பினான். பிள்ளையாருக்குள் 'கர்' என்ற ஓசை யுண்டாயிற்று. உடனே பிள்ளையாரை மேஜைமேல் வைத்தான். பிள்ளையார் ஆசனத்தை விட்டு எழுந்து நின்றார். பிறகு தன கால்களைப் பரப்பிக்கொண்டு தும்பிக்கையை ஆகாயத்தை நோக்கி ஆட்டிக்கொண்டு நடக்கலானார். திடீ ரென்று அவர் தும்பிக்கையிலிருந்து நெருப்புப் பொறிகள் கிளம்பின.



''சாஸ்திரி! இதென்ன நெருப்புப் பொறி கிளம்பு கிறதே?'' என்று ஜமீன்தார் பயத்துடன் கேட்டார்.

''ஜமீன்தார், பயப்படாதே! இந்தப் பிள்ளையார் ஒரு கெடுதியும் செய்யமாட்டார். கெடுதி செய்ய அவருக்கு இப்பொழுது சக்தி கிடையாது. இதோ இருக்கிறாரே வட கலைப் பிள்ளையார். இவர் பெரிய பேர்வழி'' என்றான் சாஸ்திரி.

''சாஸ்திரி! நீ சொல்வதின் அர்த்தம் எனக்குத் தெரிகிறது. தென்கலைப் பிள்ளையார் வெறும் பொம்மை. வடகலைப் பிள்ளையாரோ மிகக் கொடிய யந்திரம். இவற்றை எதற்காகத் தயாரித்தாய்?'' என்று ஜமீன்தார் கேட்டார்.

''ஜமீன்தார்! கொடிய யந்திரம் என்று சொன்னால் மட்டும் போதாது. வடகலைப் பிள்ளையாருக்கு நெருப்பு வருமிடத்தில் பச்சிலையை வைத்திருக்கிறேன்'' என்றான் சாஸ்திரி.

இதைக் கேட்ட ஜமீன்தார் நடுங்கினார். '' ஐயோ! உன்னுடைய விஷப் பச்சிலையையா வைத்திருக்கிறாய்! எதற்காக?'' என்று கேட்டார். பேச்சு அவருக்குச் சரியாக வரவில்லை. வாய் குளறியது.

''இதோ காட்டுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே சாஸ்திரி தனது பையிலிருந்த ஒரு நெருப்புப் பெட்டியை எடுத்தான். அதைத் திறந்து அதற்குள்ளிருந்த ஒரு பெரிய புழுவை எடுத்து எதிரேயிருந்த கிளாஸ் டம்ளரில் போட்டான். பிறகு வடகலைப் பிள்ளையாரின் ஆணியைத் திருகி விட்டு அதன் துதிக்கையை டம்ளருக்குள் நீட்டினான். இரண்டொரு நெருப்புப் பொறியுடன் சிறிது புகை கிளம்பியது. அந்தப் புகை டம்ளருக்குள் நுழைந்த மறுநிமிஷத்தில் புழு டம்ளரிலிருந்து அரை கெஜ தூரம் மேலெழும்பிக் கீழே விழுந்து துடிதுடித்து இறந்தது.

பிறகு சாஸ்திரி ஜமீன்தாரை நோக்கி, ''பிள்ளையாரின்

தும்பிக்கையின் வாசனை ஆறு அங்குலத்திற்கு அப்பாலிருந்த புழுவை என்ன பாடு படுத்திவிட்டது பார்த்தாயா? ஒரு அறையில் இந்தப் பிள்ளையாரை வைத்து அதன் ஆணியைத் திருகிவிட்டேனானால் தும்பிக்கையிலிருந்து பச்சிலையின் விஷப்புகை கிளம்பும். அந்த விஷம் பதினைந்து நிமிடங்களில் அறை முழுதும் பரவும். அதை முகருபவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்கள் அந்தப் புழுவைவிடப் பதின் மடங்கு அதிகமான துன்பத்தையடைவார்கள். இதுதான் பச்சிலையின் பெருமை'' என்று சாஸ்திரி கூறினான்.

''இந்த விக்கிரகத்தின் கொடிய தொழிலை நிறுத்த முடியாதா?'' என்று ஜமீன்தார் கேட்டார்.

''மனிதனால் முடியாத காரியம் என்ன இருக்கிறது? அதற்கும் வழி வைத்திருக்கிறேன். இதோ பார்'' என்று சொல்லிவிட்டுத் தென்கலைப் பிள்ளையாரை மறுபடி ஆட விட்டான்.

பிறகு அதன் தலையைப் பிடித்துத் தும்பிக்கையை கீழ் நோக்கி இழுத்தான். பிள்ளையாரின் ஆட்டம் நின்றது. ''இதே வழியில் வடகலைப் பிள்ளையாரின் ஆட்டத்தையும் நிறுத்திவிடலாம்'' என்று சாஸ்திரி ஜமீன்தாருக்கு விளக்கிச் சொன்னான்.

''இந்த யந்திரத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்?'' என்று ஜமீன்தார் கேட்டார்.

''சங்கக் கூட்டத்தில் தீர்மானத்தை எதிர்த்து ஓட்டுச் செய்தவர்களை நாளை சாயந்திரம் இங்கு வரவழைக்க உத்தே சித்திருக்கிறோமல்லவா? அவர்களோடு ஜயலட்சுமியையும் சேர்த்து ஓர் அறையில் வைத்து வேலை தீர்த்துவிடப் போகிறேன்'' என்றான் சாஸ்திரி.

''ஒரு தீர்மானத்துக்கு எதிராக ஓட்டுச் செய்ததற்காக அவர்களைக் கொல்லலாமா?'' என்று ஜமீன்தார் கேட்டார்.



''ஜமீன்தார்! சங்கத்தில் பிளவு ஏற்படக்கூடாது. நம் முடைய சங்கத்தைப் போன்ற ஒரு சங்கத்தில் நாலு பேர் இப்படியும் நாலு பேர் அப்படியும் அபிப்பிராயம் வைத்துக் கொண்டிருப்பது பிசகு. ஒருவன் அபிப்பிராயப்படி மற்றவர்கள் நடந்தால்தான் சங்க வேலை சரியாக நடக்கும். பிளவு ஏற்பட்டால் சங்கம் ஒழிந்தது. ஆகையால் பிளவைத் தடுப் பதற்கு வேண்டிய காரியங்களையெல்லாம் நாம் செய்ய வேண்டும்'' என்றான் சாஸ்திரி.

''என்ன சாஸ்திரி! சங்கத்திலுள்ள யாரும் உன்னுடைய யோசனைக்கு மாறாக அபிப்பிராயம் வைத்துக் கொள்ளக் கூடாதா? நீ என்ன ஹிட்லரா? அபிப்பிராயபேதம் உடைய வர்களையெல்லாம் ஒழித்துவிடுகிறேன் என்கிறாயே! சர்வாதி காரியாக இருக்கவேண்டும் என்கிறாயா? ஜனநாயக முறையில் உனக்கு நம்பிக்கையில்லையா?'' என்று ஜமீன்தார் கேட்டார்.

''ஜமீன்தார்? ஜனநாயகமாவது மண்ணாங்கட்டி யாவது? அதெல்லாம் அர்த்தமில்லாத வார்த்தைகள். ஜனநாயகம் எந்தத் தேசத்திலும் கிடையாது. எந்த ஸ்தாபனத்திலும் கிடையாது. பெரிய ஜனநாயக ஸ்தாபனமான காங்கிரஸைத்தான் பாரேன். காந்தி சொல்கிறபடிதானே காரியம் நடக்கிறது. அவர் தயாரிக்கும் தீர்மானங்களைத்தான் மற்றவர்கள் நிறைவேற்றி வைக்கிறார்கள். அப்படியில்லாமல் தலைக்குத் தலை அதிகாரம் வைத்துக் கொண்டு, ஆளுக்கு ஒரு யோசனை சொல்ல ஆரம்பித்தால் ஸ்தாபனம் அழிந்துவிடும். வேலை நன்றாக நடக்காது. ஒரு மனிதன் தலைமையின் கீழ் நடக்கும் காரியம்தான் சிறப்பாக நடக்கும்'' என்றான் சாஸ்திரி.

''ஜனநாயக முறையில் நம்பிக்கை இல்லாதிருக் கையில் தீர்மானங்களைப் பற்றி ஏன் ஓட்டெடுக்கிறாய்?'' என்று ஜமீன்தார் கேட்டார்.

''ஹிட்லர் ஏன் தேர்தல் வைத்து ஓட்டு எடுக்கிறார்? அது மாதிரிதான் நானும் செய்கிறேன். சங்கம் என்று

ஒன்றிருந்தால் ஓட்டெடுத்துத்தான் காரியக் கிரமத்தை நடத்தவேண்டும். அப்படி ஓட்டெடுப்பதால் ஒரு நன்மையும் இருக்கிறது. சங்கத்தில் நமக்கெதிரான நோக்கமுடையவர்கள் யார் யாரென்று தெரிந்து விடுகிறது. தெரிந்தவுடன் அந்த விரோதிகளை நீக்கிவிடுவது சுலபமல்லவா?'' என்று சாஸ்திரி விளக்கினான்.

அதற்குமேல் பேசினால் சாஸ்திரி தன் மேலும் தப்பபிப்பிராயம் கொண்டு தன்னையும் பைசல் செய்துவிடப் போகிறானேயென்று ஜமீன்தாருக்குப் பயமேற்பட்டது. ஆகவே அவர் பதில் எதுவும் சொல்லவில்லை. பிறகு இருவரும் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக்கொள்ளச் சென்றனர்.

பல யோசனைகள் மனதை வதைக்க ஜயலட்சுமி மெல்ல நடந்து தனது அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள். உள்ளே சென்றதும் அவளுக்கு அதுவரையில் இருந்த தைரியம் போய்விட்டது. மிகுந்த பீதியால் மயக்கம் வரும் போலாகிவிட்டது. கால் நடுங்கியது. அவளால் நிற்கக்கூட முடியவில்லை. தட்டுத் தடுமாறி எதிரேயிருந்த ஜன்னலுக்காக நடந்து சென்றன. ஜன்னலில் கம்பிகளே வைக்கப் படாமல் விசாலமாக அமைக்கப் பட்டிருந்தது. அதைப் பிடித்துக் கொண்டு வெளியே சிறிது தலையை நீட்டினாள். அவளுடைய முகத்திலிருந்த வியர்வைத் துளிகள் நிலா வெளிச்சத்தில் தாமரை இலையிலிருக்கும் நீர்த்துளிகளைப் போல் வெளேரென்று பிரகாசித்தன. சிறிது நேரம் சந்திரனை நோக்கினாள். சிறிது வெண்ணிற மேகங்கள் சந்திரனைக் கடந்து செல்லும்போது சந்திரன் அவற்றினுள் புகுந்து ஓடுவது போலிருந்தது. ஆனால் ஜெயலட்சுமிக்கு அப்பொழுது இருந்த விசனத்தில் சந்திரனை அவளுடைய கண்கள் பார்த்துக் கொண்டிருந்தனவே யொழிய அதன் அழகை மனம் கிரகிக்கவில்லை. ''பத்துப் பேர்களின் உயிரை ஒரே நாளில் ஒழித்துவிட சரப சாஸ்திரி தீர்மானித்திருக்கிறானே.



இதை எப்படித் தடுப்பது?'' என்ற யோசனையே அவள் மனசில் ஓங்கி நின்று கொண்டிருந்தது. தன் காதலனையும், தகப்பனாரையும் காப்பாற்றியாக வேண்டுமே என்ற கவலை மிக அதிகமாயிருந்தது.

'அவர்களை நான் காப்பாற்றா விட்டால், நான் உயிருடன் இருந்து என்ன பயன்? அவர்களுக்குப் பிறகு உலகத்தில் நான் ஏன் இருக்க வேண்டும்?'' என்று தன் மனத்துக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். ''நானே கைதியாயிருக்கிறேனே! அவர்களை எப்படித் தப்புவிக்க முடியும்?'' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்.

இந்தச் சமயத்தில் கடவுளைத் தவிர தனக்கு யாரும் ஒத்தாசை செய்ய முடியாதென்பதை அறிந்து தனது படுக்கைக்கு அருகில் வந்து உட்கார்ந்து கண்ணை மூடிக்கொண்டு தெய்வத்தைப் பிரார்த்தித்தாள்.

தெய்வ சிந்தனையில் வெகுநேரம் மூழ்கியிருந்த அவள், ''தெய்வமே! எனக்கு நீதான் இந்தச் சமயத்தில் வழிகாட்ட வேண்டும். நான் சொல்லும் வேலையை நம்பிக்கையாகவும், தைரியமாகவும் செய்து முடிக்கக்கூடிய ஒரு ஆளை நீதான் கொடுக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டாள்.

''என் உயிருக்கு உயிரான கோபாலன் இங்கிருந்தால் நான் நிர்ப்பயமாகக் காரியத்தைச் செய்து முடிப்பேன்'' என்றும் இரைந்து சொன்னாள். அவள் பிரார்த்தனையை தெய்வம் அப்பொழுதே கேட்டு அருள் புரிந்துவிட்டது போல் தோன்றியது. பிரார்த்தனை முடிந்த அதே நிமிஷத்தில் டாக்டர் கோபாலன் ஜன்னல் மூலமாக உள்ளே குதித்து, அவளை அணைத்துக்கொண்டு முகம் பூராவும் முத்தமிட்டு, ''ஜயா! பயப்படாதே. நல்லவர்களைத் தெய்வம் எப்பொழுதும் விட்டுக் கொடுப்பதில்லை'' என்று சொல்லிக் கொண்டே அவள் முதுகை ஒரு கையால் தடவிக்கொடுத்து ஆசுவாசப் படுத்தினார்.

அத்தியாயம் - 14

## சமயத்தில் உதவி

கோபாலனுடைய ஆலிங்கனத்தில் டாக்டர் மெய் மறந்து நின்றாள். தன்னைச் சுற்றியிருந்த ஜயலட்சுமி மெய் மறந்து நின்றாள். அவருடைய பலமான கரங்களைப் பார்த்ததும் அவளுக்கு இருந்த பயத்தில் பாதி போய் விட்டது. தான் காண்பது கனவோ என்றுகூட அவளுக்குத் தோன்றியது. தலையை அவருடைய பரந்த மார்மேல் சாய்ந்துக்கொண்டு, அந்தத் தோற்றம் கனவாயிருந்தால் மறைந்துவிடப்போகிறதே என்ற பயத்தால் கண்களை மூடிக்கொண்டாள்.

சிறிது நேரங்கழித்து விழிகளைப் பாதி திறந்து தலையைச் சிறிது நிமிர்த்தி அவருடைய கண்களைப் பார்த்தாள். மிகுந்த ஆபத்தான நிலைமையில் ஜமீன்தாருடைய பங்களாவில் தாங்கள் அந்தச் சமயம் இருந்து கொண்டிருப்பதை அவ்விருவரும் மறந்தார்கள். அவர்கள் கண்கள் சந்தித்தன. ஒருவர் கண்களில் மற்றொருவர் ஏதோ சுவர்க்கத்தைக் கண்டுவிட்டது போலப் பிரமித்துப் பார்த்துக் கொண்டிருந்ததார்கள். மின்சாரத்தால் இழுக்கப்பட்டனபோல் இருவர் இதழ்களும் நெருங்கிச் சந்தித்தன. இருவரும் வாயால் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. வாய் ஏன் பேசவேண்டும்? அவர்கள் ஆத்மாக்களும், உணர்ச்சிகளும்தான் பேசிக் கொள்கின்றனவே!

இந்த நிலையில் இரண்டு காதலர்களும் வெகுநேரம் நின்று கொண்டிருந்தனர். திடீரென்று ஜயலட்சுமியின் கண்களில் நீர் பெருகியது. "இந்தச் சுகம் எவ்வளவு நேரமிருக்கப் போகிறது? நமது உயிர் இருப்பதே நிலையாக



இல்லையே?" என்று நினைத்துக் கொண்டாள். அழுகை அதிகமாக வந்துவிட்டது. கோபாலன்மேல் சாய்ந்தவண்ணமே விம்மி விம்மி அழுதாள். கோபாலன் அவளை மெள்ள அழைத்துக் கொண்டு போய்ப் படுக்கையில் உட்காரவைத்தார். அவள் பக்கத்தில் தானும் உட்கார்ந்து கொண்டு, "ஜயா! அழாதே. என்ன செய்கிறது? விதியை அனுபவித்துதான் தீரவேண்டும். உன்னுடைய ரகசியங்களைப் பூராவும் என்னிடம் சொல்லியிருப்பாயானால் ஒரு கஷ்டமும் உனக்கு வந்திருக்காது" என்று சமாதானம் சொன்னார்.

"நான் என்ன செய்வேன்! ஒரு விஷயத்தையும் சொல்ல முடியாத நிலையிலிருக்கிறேன். சொன்னாலும் அநேக உயிர்களுக்கு ஆபத்து நேரிடும். என் ஒருத்தி உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நான் பல பேருடைய உயிரைப் போக்கலாமா?" என்றாள் ஜயா.

"ஜயா! உனக்கிஷ்டமில்லா விட்டால் என்னிடம் ஒன்றும் சொல்லாதே. இன்னும் கொஞ்சநாள் காத்திருக்கிறேன். ஆனால் உன் கௌரவத்துக்கு ஹானி நேரிடும்படியான காரியத்தை மாத்திரம் செய்யாதே" என்றார் கோபாலன்.

"நான் அப்படி ஒன்றும் செய்யவில்லை" என்றாள் ஜயலட்சுமி.

"அப்படியானால் இந்தப் பங்களாவில் ஏன் இரவில் தங்குகிறாய்? ஜமீன்தாருக்கு இருக்கும் கியாதி உனக்குத் தெரியாதா?" என்று கோபாலன் கேட்டார்.

"நானா இங்கு தங்குகிறேன்? என்னைச் சிறையல்லவா வைத்திருக்கிறார்கள்" என்று பதில் சொன்னாள் ஜயலட்சுமி.

கோபாலன்: யார் உன்னை சிறை வைத்திருக்கிறது?

ஜயா: சரப சாஸ்திரிதான்.

**கோபாலன்:** எதற்காக?

**ஜயா:** அவனுடைய சங்கத்தைப் பற்றிய ரகசியங்கள் எனக்குத் தெரியும். நான் அவற்றை வெளியிடப் போகிறேனேயென்று என்னைச் சிறைப்படுத்தி விட்டான். நாளை இரவு என்னைக் கொல்லவும் ஏற்பாடாகியிருக்கிறது.''

கோபாலன் தம்முடைய பையிலிருந்த இரு குழல் துப்பாக்கியை எடுத்து ஒருமுறை பார்த்தார். அதைப் பிரித்து ரவைகள்வைக்குமிடத்தை நோக்கினார். எல்லா அறைகளிலும் ரவைகளிருப்பதைப் பார்த்துத் திருப்தியுடன் துப்பாக்கியை மீண்டும் மூடி பைகளில் வைத்துக் கொண்டார். பிறகு ''சரி. இந்த சரப சாஸ்திரி என்பவனுக்கு என்ன வேலை?'' என்று கேட்டார்.

''மனிதர்களைக் கொல்லும் வேலை'' என்று ஜயா பதில் சொன்னாள்.

டாக்டர் கோபாலனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''நீ என்ன சொல்லுகிறாய் என்று எனக்குப் புரியவில்லை'' என்றார்.

''உத்தியோகஸ்தர்களைக் கொல்வதாலும் சர்க்கார் காரியாலயங்களுக்கு வெடிகுண்டு வைப்பதாலும் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் சம்பாதித்து விடலாமென்ற உத்தேசங்கொண்ட ஒரு கட்சி இந்தியாவில் இருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''அப்படி ஏதோ ஒன்றிருப்பதாகப் பத்திரிகைகளில் வாசித்திருக்கிறேன்'' என்றார் கோபாலன்.

''அந்தக் கட்சிக்குச் சென்னையில் ஒரு கிளை இருக்கறது. அதன் தலைவன் சரப சாஸ்திரி'' என்றாள் ஜயலட்சுமி.

டாக்டர் கோபாலன் திகைத்துப் போனார். பிறகு மெள்ள சமாளித்துக் கொண்டு, ''ஆமாம், அவனுக்கும்



உனக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டார்.

''நான் அந்தச் சங்கத்தில் ஒரு மெம்பர்'' என்று ஜயலட்சுமி சொன்னாள். கோபாலன் மீண்டும் திடுக்கிட்டார். ஓழே விழாதிருப்பதற்குப் பக்கத்திலிருந்த நாற்காலியைப் பிடித்துக் கொண்டார். ஜயலட்சுமி எழுந்து அவர் அருகில் வந்தாள். அவர் தோள்மேல் தன் இரு கைகளையும் போட்டுக் கோத்துக்கொண்டு, ''இதோ பாருங்கள். பயப்படாதீர்கள். இந்தச் சங்கத்துக்கு அழிவுகாலம் வந்துவிட்டது'' என்றாள்.

''ஜயா! சங்கத்துக்கு அழிவுகாலம் வந்தால் உனக்கும் வந்த மாதிரிதானே. எல்லாரையும் கைது செய்யும்போது போலீஸார் உன்னை மாத்திரம் விட்டுவிடப் போகிறார்களா?'' என்று தட்டுத் தடுமாறிக் கேட்டார் கோபாலன்.

''அவசரப்படாதீர்கள். இன்னும் கொஞ்ச நாள் என்னை எதுவும் கேட்கவில்லையென நீங்கள் வாக்குக் கொடுத்திருக்க வில்லையா? ஈச்வர க்ருபையால் நான் நினைத்தபடி காரியம் நடந்தால் சீக்கிரம் நம்முடைய கஷ்டங்கள் தீர்ந்துவிடும். நாம் இருவரும் எங்கேயாவது ஜனங்களில்லாத இடத்திற்குப் போய் சுகமாய் ஜீவிக்கலாம். கடவுளை நம்பி இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொண்டிருங்கள்'' என்றாள் ஜயா.

கோபாலன் சிறிது நேரம் பேசவில்லை. ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்தார்.

''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் ஜயலட்சுமி.

''இப்பொழுது சரப சாஸ்திரியும் ஜமீன்தாரும் எங்கிருக்கிறார்கள்?'' என்று கோபாலன் வினவினார்.

''இங்கேதானிருக்கிறார்கள்'' என்றாள் ஜயலட்சுமி.

''சரி, நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்த் தகவல் சொல்லி கான்ஸ்டேபிள்களை அழைத்து வந்து இவ்விருவரையும் கைது செய்துவிடுகிறேன். பிறகு ஒரு

தொந்தரவும் இல்லை'' என்று சொல்லி விட்டு ஜன்னலை நோக்கிப் புறப்பட்டார்.

ஜயலட்சுமி அவரைத் தாவிப் பிடித்துக் கொண்டு, ''ஐயோ! என்ன காரியம் செய்யப் போகிறீர்கள்? எல்லா வேலையையும் அடியோடு குட்டிச்சுவராக்கப் பார்க்கிறீர்களே. சரப சாஸ்தியைச் சமாளிக்கும் விஷயத்தை என்னிடம் விட்டுவிடுங்கள்'' என்றாள்.

''சரப சாஸ்திரிக்கு நீ ஏன் பரிந்து பேசுகிறாய்?'' என்று கோபாலன் கோபத்துடன் கேட்டார்.

''நான் பரிந்தா பேசுகிறேன்! நீங்கள் போலீஸாரிடம் போய்ச் சொன்னால்கூட அவர்கள் இங்கு வந்து சரப சாஸ்திரியைக் கைது செய்யமாட்டார்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். வேண்டாம். இந்த விஷயத்தில் பிடிவாதம் செய்யாதீர்கள். நான் சொல்வதுபோல் செய்வதாக வாக்குக் கொடுங்கள்'' என்று கெஞ்சினாள்.

''போலீஸார் கைது செய்ய மறுப்பார்கள் என்று உனக்கெப்படித் தெரியும்?'' என்று கோபாலன் கேட்டார்.

''அதெல்லாம் இப்பொழுது கேட்காதீர்கள். இன்னும் இரண்டு மூன்று நாட்களில் உங்களுக்கு எல்லாம் தெரியும். பிறகு என்மேல் தப்பு சொல்லமாட்டீர்கள். நான் சொல்லுகிற படி செய்வதாகச் சத்தியம் செய்யுங்கள்'' என்று ஜெயலட்சுமி மறுபடியும் கெஞ்சினாள்.

கோபாலன் அவ்வறையில் அங்குமிங்கும் சிறிது நேரம் உலாவினார்.

''சரி, இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?'' என்று கேட்டார்.

ஜயலட்சுமி தன்னுடைய ரவிக்கையில் செருகிக் கொண்டிருந்த பேனாவை எடுத்தாள். விளக்கை ஏற்றி விட்டு மேஜைமேலிருந்த காகிதத்தில் ஏதோ சில வரிகள் எழுதினாள்.



பிறகு காகிதத்தை மடித்துக் கோபாலன் கையில் கொடுத்து, ''நாளைக்குத் திங்கட்கிழமை. இந்தக் கடிதத்துடன் நாளை மாலை ஐந்து மணிக்கு கருணாகர விலாஸ் ஹோட்டல் வாசலில் போய் நின்றுகொண்டிருங்கள். போலீஸ் இலாக்கா டிப்டி சூப்பரிண்டண்டு குப்புசாமி ராஜா அங்கு வருவார். அவரிடம் இதைச் சேர்த்துவிடுங்கள்'' என்றாள்.

இதைக் கேட்டதும் டாக்டர் கோபாலனுடைய நினைவு சுமார் ஐந்து மாத காலத்திற்கு முன்னால் பறந்து சென்றது. ஜோதிபாய் மரண விசாரணையின்போது குள்ளநரியென்று கையெழுத்திட்ட கடிதத்தில், ''ஹோட்டல் வாசலில் பிரதி திங்கட்கிழமை மாலை சந்திக்கிறேன்'' என்று எழுதப்பட்டிருந்த வார்த்தைகள் அவர் ஞாபகத்திற்கு வந்தன.

திருச்சினாப்பள்ளியில் இருக்கையில் ஜயலட்சுமியுடன் சேரக்கூடாதென்று குப்புசாமி ராஜா தன்னை எச்சரித்ததையும் நினைத்தார். இந்தச்சம்பவங்களுக்கெல்லாம் என்ன சம்பந்தம் என்று யோசித்தார். ஒரே குழப்பமாக இருந்தது. ஜோதிபாயின் பெட்டியிலிருந்த கடிதத்தை எழுதியது யாரென்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவாதான் அவருக்கு மிகுதியாயிற்று.

''ஐயா! இந்தக் குள்ளநரி யென்பது யார்? நீயா, குப்புசாமிராஜாவா?'' என்று கேட்டார்.

''குப்புசாமி ராஜாதான்'' என்றாள் ஜயா.

''நீ யாரிடம் கடிதம் கொடுக்கச் சொல்லி இப்பொழுது என்னை அனுப்புகிறாயோ அதே மனிதன் உன்னுடன் பழக வேண்டாமென்று என்னை எச்சரித்தானென்பது உனக்குத் தெரியுமா?'' என்று மறுபடியும் கோபாலன் கேட்டார்.

''தெரியும்'' என்றாள் ஜலட்சுமி.

''அப்படி அவர் என்னை எச்சரித்ததற்கு ஏதாவது காரணமிருக்குமா?''

''அப்பொழுது காரணமிருந்தது. அதுவும் நியாயமான காரணம்தான்.''

''என்ன காரணமோ?'' என்று கேட்டார் கோபாலன்.

''இன்னும் சில நாட்களில் அவரே உமக்கு அதைப் பற்றிச் சொல்லுவார். காலதாமதம் செய்யாதீர்கள். நீங்கள் இங்கு நிற்கும் ஒவ்வொரு நிமிஷமும் உங்களுடைய உயிர் ஆபத்திலிருக்கிறது'' என்றாள் ஜயா.

கோபாலன் அவள் கொடுத்த கடிதத்தை ஜாக்கிரதையாக மடித்துப் பைக்குள் வைத்துக்கொண்டு அவள் இஷ்டப்படியே திரும்பிச் செல்லக் கிளம்பினார். அவர் கால்கள் நடக்கச் சக்தியற்றதாயிற்று.

''ஜயா! இந்த ஆபத்தில், இந்தக் கிராதகர்கள் இருக்குமிடத்தில் உன்னை ஒண்டியாக விட்டுச் செல்ல என் மனம் சம்மதிக்கவில்லையே. நீயும் என்னுடன் வந்துவிடேன்'' என்றார்.

''நாளைக்கு ஏழு பேரைக் கொல்ல சரப சாஸ்திரி ஏற்பாடு செய்திருக்கிறான். நான் ஒருத்திதான் அவர்களைக் காப்பாற்ற முடியும். ஆகையால்தான் நான் இங்கிருக்க வேண்டியிருக்கிறது'' என்றாள் ஜயலட்சுமி. மறுபடியும் ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் ஜயலட்சுமி கோபாலனைப் பார்த்து, ''நீங்கள் நாளை முதல் தம்புச்செட்டி தெரு வீட்டைக் காலி செய்துவிட்டு வேறெங்கேயாவது இரண்டு நாள் போயிருங்கள்'' என்றாள்.

''ஏன்?'' என்று கோபாலன் கேட்டார்.

''அந்த வீட்டின் மேல் வெடிகுண்டை எறிந்து உங்களைக் கொல்ல சரப சாஸ்திரி தீர்மானித்திருக்கிறான்'' என்றாள் ஜயலட்சுமி.

''என்னை எதற்காகக் கொல்ல உத்தேசித்திருக்கிறான்?''



''நீங்கள் சரப சாஸ்திரியின் விஷப் பச்சிலைக்கு மாற்று கண்டு பிடித்திருப்பதாக அன்று அவனிடம் பெருமையடித்துக் கொண்டீர்களோ இல்லையோ! அதனால்தான்!''

டாக்டர் கோபாலனுக்கு ஜோதிபாயின் கொலையைப் பற்றிய சிறிது உண்மை அப்பொழுதுதான் உதயமாயிற்று. ஏதோ கேட்க வாய் எடுத்தார்.

அவர் பேசு முன் ஜயலட்சுமி, ''சரி! போய் வாருங்கள். நாழியாகிறது. காரியத்தை நான் சொன்னபடி ஜாக்கிரதையாய்ச் செய்து முடியுங்கள். ஈச்வர கிருபையால் நான் உயிருடனிருந்தால் உங்களிடம் வந்து சேருகிறேன். இல்லாவிட்டால் மேல் உலகத்தில் சந்திக்கிறேன்'' என்று கண்களில் நீர் ததும்பச் சொன்னாள்.

கோபாலன் மறுபடியும் அவளை அணைத்து முத்தமிட்டார். அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டு, ''ஜயா! தைரியசாலியான நீயே அழுதால் காரியம் எப்படி ஜயிக்கும்? அழாதே, தைரியமாயிரு'' என்று தைரியம் சொன்னார்.

''ஜாக்கிரதையாகப் போய் வாருங்கள்'' என்று மெள்ளத் தன்னைத் தேற்றிக்கொண்டு ஜயலட்சுமி சொன்னாள். அப்பொழுதுதான் அவர் எப்படி உள்ளே வந்தாரென்ற யோசனை அவளுக்கு உண்டாயிற்று. தான் அங்கிருப்பது அவருக்கு எப்படித் தெரிந்ததென்ற சந்தேகமும் ஏற்பட்டது.

''ஆமாம்! நான் இங்கிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? இந்த அறைக்குள் எப்படி வந்தீர்கள்? ஜமீன்தார் வாசலில் காவல் வைத்திருக்கிறானே?'' என்று கேட்டாள்.

''நீ முன் தடவை இங்கு வந்தபோதே நான் உன்னைத் தொடர்ந்து வந்து இடத்தைப் பார்த்தேன். இன்று படுக்கையில் படுத்தும் தூக்கம் வரவில்லை. உன்னைப் பற்றிய நினைவுதான் அதிகமாயிருந்தது. உடனே காரை எடுத்துக் கொண்டு இங்கு வந்தேன். காரை தூரத்தில் நிறுத்திவிட்டு மதிலேறி உள்ளே குதித்துப் பங்களாவுக்கு வந்தபோது நீ ஜன்னலுக்கு வெளியே

கையை நீட்டினாய். உடனே பக்கத்திலிருந்த இரும்புக் குழாயைப் பிடித்துக் கொண்டு ஏறி உள்ளே ஜன்னல் மூலமாக வந்தேன்'' என்றார் கோபாலன்.

''என்ன அபாயமான காரியம். ஜமீன்தார் நாய்களைத் தோட்டத்தில் அவிழ்த்து விட்டிருக்கிறானே. நல்ல வேளை, அவை உங்களைப் பார்க்கவில்லை. போகும்போது ஜாக்கிரதையாய்ப் போய் வாருங்கள்'' என்றாள் ஜயலட்சுமி.

''கையில் துப்பாக்கி இருக்கிறது. பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு வந்த வழியே டாக்டர் இறங்க ஆரம்பித்தார். குழாயின் கடைசிப் பாகத்துக்கு வந்தவுடன் பூமியில் திடீரெனக் குதித்தார். கீழிருந்த ஒரு கல் அவர் காலைத் தடுக்கிவிட்டது. கோபாலன் கர்ணம் அடித்து விழப் போனார். நல்ல வேளை பக்கத்திலிருந்த சரப சாஸ்திரி அவரை விழாமல் பிடித்துக் கொண்டான்.

## அத்தியாயம் - 15

## கபட நாடகம்

சரப சாஸ்திரி டாக்டர் கோபாலனை விழாமல் பிடித்துக் கொண்டபோது வெகு சாமர்த்தியமாக அவரது பையிலிருந்த ரிவால்வரை எடுத்துக் கொண்டான். ஜெயலட்சுமியைக் கொல்லப் பிரதிக்ஞை செய்துகொண்ட மனிதனும், அவளைக் காப்பாற்றப் பிரதிக்ஞை செய்து கொண்ட மனிதனும் ஒருவரையொருவர் நிலா வெளிச்சத்தில் உற்றுப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். சரப சாஸ்திரி முதலில் பேச ஆரம்பித்தான்.

''என்ன டாக்டர் ஸார்! ராத்திரி வேளையில் இந்த வழியாக ஏறி இறங்கலாமா? நான் பிடித்துக் கொண்டிருக்கா விட்டால் இத்தனை நேரம் விழுந்து காயமல்லவா பட்டுக்கொண்டிருப்பீர்கள்? ஜயலட்சுமியைப் பார்க்க வேண்டுமென்றால், கதவைத் தட்டி ஒரு வார்த்தை சொன்னால் நானே அழைத்துக் கொண்டு போய் உம்மை அவளுடைய அறையில் சேர்த்திருக்கமாட்டேனா?'' என்று புன்சிரிப்புடன் கூறினான்.

டாக்டர் பேசவில்லை. அவருக்குக் கோபம்தான் வந்தது. பெரிய அபாயத்தில் தாம் சிக்கியிருப்பதை அறிந்தார். ஜயலட்சுமி சரப சாஸ்திரியைப் பிடித்துக்கொடுக்க தன் மூலம் செய்திருந்த ஏற்பாடுகளெல்லாம் வியர்த்தமாயின என்பதையும் சந்தேகமறத் தெரிந்துகொண்டார்.

''டாக்டர் ஸார்! என்ன யோசிக்கிறீர்கள்? வாருங்கள், உள்ளே போய்ப் பேசிக் கொள்ளலாம்'' என்று சொல்லிக்

கொண்டே சரப சாஸ்திரி கைத் துப்பாக்கியின் நுனியை அவருடைய முதுகில் அழுத்தினான். இரண்டு கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு பேசாமல் அவன் காட்டிய வழியே கோபாலன் நடந்து சென்றார். இருவரும் மெத்தைப் படிகளேறி ஜயலட்சுமியின் அறையின் அருகில் வந்து சேர்ந்தார்கள்.

''வாயைத் திறக்காமல் கதவை இடியுங்கள்'' என்று சாஸ்திரி உத்தரவிட்டான். அவன் சொன்னபடியே டாக்டர் செய்தார்.

''யார் அது?'' என்று உள்ளிருந்த வண்ணமே ஜயலட்சுமி கேட்டாள்.

''உங்கள் பெயரை மாத்திரம் சொல்லுங்கள்'' என்று கட்டளையிட்டான் சாஸ்திரி.

''நான்தான் கோபாலன்'' என்றார் டாக்டர்.

ஜயலட்சுமி பதை பதைத்துப் படுக்கையிலிருந்து எழுந்து வந்து மெள்ளக் கதவைத் திறந்துகொண்டே, ''என்ன மறுபடியும் வந்துவிட்டீர்களே. சீக்கிரம் போய் வாருங்களென்று சொன்னேனே'' என்றாள்.

''ஐயா! டாக்டருக்கு உன்னைவிட்டுப் பிரிய இஷ்டமில்லை. அதனால்தான் திரும்பி வந்துவிட்டார்'' என்றான் சரப சாஸ்திரி.

ஜயலட்சுமி அப்பொழுதுதான் டாக்டருக்குப் பின்னால் இருந்த சரப சாஸ்திரியைப் பார்த்தாள். ஆனால் அவள் சிறிதும் பயப்படவில்லை. அபாயம் சிறிதாக இருந்தால்தான் மனிதனுக்குப் பயம் இருக்கும். அதிகமாய் விட்டால் நெஞ்சு திடப்பட்டுவிடுகிறது. தலைக்கு மேல் ஓடிய வெள்ளம் சாண் ஓடினால் என்ன, முழம் ஓடினால் என்ன? ஜயலட்சுமி கதவைத் திறந்தாள். அவ்விருவரையும் உட்காரச் சொல்லி விட்டுக் கையில் துப்பாக்கியுடன் தான் மாத்திரம் நின்று கொண்டான் சரப சாஸ்திரி.



''டாக்டர்! ஜயலட்சுமி போலீஸாருக்கு என்ன தகவல் சொல்லச் சொல்லி உம்மை அனுப்பினாள்?'' என்று கேட்டான்.

''அதை உனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை'' என்றார் டாக்டர்.

''அவசியமிருக்கிறது. இதோ பார்த்தீர்களா?'' என்று கையிலிருந்த துப்பாக்கியைக் காட்டினான் சாஸ்திரி.

''சாஸ்திரி! என்னை யாரென்று நினைத்துக் கொண்டாய்? இந்த ஊளை மிரட்டல்களுக்கெல்லாம் பயப்படுபவன் நான் அல்ல. பீரங்கி வாயில் வைத்துச் சுட்டாலும் என் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வராது'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார் கோபாலன்.

சாஸ்திரி அதற்குமேல் அவரை ஒன்றும் கேட்கவில்லை. துப்பாக்கியை அவர் முகத்துக்கு நேராக நீட்டிக்கொண்டே அவருடைய பைகளைப் பரிசோதித்து அதிலிருந்த கடிதத்தை எடுத்துக்கொண்டான். அதில் ஜயலட்சுமி கையெழுத்து இருந்ததைப் பார்த்து, ''இவ்வளவுதான் எனக்கு வேண்டியது'' என்று சொல்லிவிட்டு, ''ஜமீன்தார்! ஜமீன்தார்!'' என்று கூப்பிட்டான்.

ஜமீன்தார் தமது அறையிலிருந்து அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்து அந்த அறையிலிருந்த காட்சியைப் பார்த்துத் திடுக்கிட்டு நின்றார்.

''ஜமீன்தார்! வெளிப் பக்கமாக ஏறிவந்து அதோ அந்த ஜன்னலுக்கு வெளியில் உள்ள இரும்புத் தாழ்ப்பாள்களைப் போட்டுவிடு. பனி அதிகமாயிருக்கிறது. ஜன்னல் திறந்திருந்தால் அதிகக் குளிர் எடுக்கும்'' என்றான் சாஸ்திரி.

ஜமீன்தார் அவன் உத்தரவை நிறைவேற்றச் சென்றார். ஜன்னல் கதவுகளைத் தாழ்ப்பாள் போட்டவுடன் சாஸ்திரி அவ்விருவரையும் நோக்கி, ''இனி அடக்கமாய்ப் படுத்துக் கொள்ளலாம், உங்களை யாரும் தொந்தரவு செய்ய

மாட்டார்கள்'' என்று சொல்லிவிட்டு மெள்ள வெளியே செல்ல ஆரம்பித்தவன் மறுபடியும் ஜயலட்சுமியைக் கூப்பிட்டு, ''ஜயலட்சுமி! ராத்திரியில் அகாலத்தில் விளக்கைப் போடாதே. அப்படி விளக்குப் போட்டுக் கடுதாசி எழுதினதால்தான் அகஸ்மாத்தாகத் தோட்டத்துக்கு வந்த எனக்கு உன் அறையில் ஏதோ விசேஷம் நடக்கிறதென்று தெரிய வந்தது'' என்று கூறிச் சென்றான். அவன் சென்றதும் ஜமீன்தார் அறையின் வெளிக் கதவையும் பூட்டி விட்டார். உள்ளேயிருந்த இருவரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்துக் கொண்டு நின்றார்கள்.

''இனி மேல் நாம் என்ன செய்வது?'' என்று கோபாலன் கேட்டார்.

''செய்வதற்கு என்ன இருக்கிறது? நாளை சாயந்திரம் இன்னும் ஏழுபேரை இங்கு கொண்டுவந்து எல்லாரையும் யமப்பட்டணம் அனுப்ப சாஸ்திரி யோசித்திருக்கிறான். அது வரையும் காத்திருக்க வேண்டியதுதான்'' என்றாள் ஜயலட்சுமி.

காலச் சக்கரம் வேகமாகச் சுழன்றது. மறுநாள் சாயந்திரம் சீக்கிரமே அணுகியது. அன்று முழுவதும் கோபாலனும் ஜயலட்சுமியும் அவ்வறையிலேயே பூட்டி வைக்கப்பட்டிருந்தார்கள். இருவருக்கும் சாப்பாடு காலாகாலத்தில் கொடுக்கப்பட்டது. ஆனால் சாப்பாடு கொண்டு வருபவன் ஒவ்வொரு முறை வரும்போதும் சரப சாஸ்திரி கைத் துப்பாக்கியுடன் அவனைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். ஆகையால் எவ்விதத்திலும் தப்பிச் செல்ல கோபாலனுக்கு வழியில்லாது போயிற்று.

சாயந்திரம் மணி ஆறு அடித்தது. சரப சாஸ்திரி கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து அவர்களிருவரையும் மேல் மாடியிலிருந்த அறை ஒன்றுக்கு அழைத்துச் சென்றான். அவ்வறையில் ஜமீன்தாரைத் தவிர முதல் நாள் சங்கக் கூட்டத்தில் தீர்மானத்துக்கு எதிராக ஓட்டுச் செய்த ஏழு பேர்கள் கூடியிருந்தனர். நடுவிலிருந்த மேஜைமேல் தென்கலைப்



பிள்ளையார் கம்பீரமாக உட்கார்ந்திருந்தார். உள்ளே வந்ததும் சரப சாஸ்திரி டாக்டர் கோபாலனுக்கும், ஜயலட்சுமிக்கும் ஆசனங்கள் கொடுத்தான். பிறகு மேஜைக்கருகில் போய் நின்றுகொண்டு பேசத் தொடங்கினான்.

''சகோதரர்களே! நமது சங்க வேலையை உத்தேசித்து அதற்கு அனுகூலமாக இருப்பதற்காக நான் ஒரு யந்திரம் செய்திருக்கிறேன். அதை உங்களிடம் காட்டவே இன்று உங்களை வரவழைத்தேன்'' என்றான்.

உடனே ஜயலட்சுமி எழுந்து, ''நண்பர்களே! சாஸ்திரி சொல்வது சுத்தப் பொய். உங்களைக் கொல்லுவதற்காகவே இங்கு வரவழைத்திருக்கிறான். அவனைப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்கள் உயிர்களை நான் காப்பாற்றி விடுகிறேன்'' என்று பதை பதைக்கக் கூறினாள்.

சாஸ்திரி பலமாகச் சிரித்தான். அந்த ஏழு பேரும் பயத்தால் நடுங்கினார்கள். சாஸ்திரி மேல் அவர்களுக்குக் கோபமும் வந்தது. ''சாஸ்திரி, எதற்காகச் சிரிக்கிறாய்? எங்களைக் கொல்லுவவதற்காகவா வரவழைத்தாய்? எங்களை ஏன் கொல்ல வேண்டும்? நாங்கள் என்ன தவறு செய்தோம்?'' என்று அவர்களில் ஒருவன் கேட்டான்.

சாஸ்திரி பதில் சொல்லுவதற்குள், ''நீங்கள் நேற்று சங்கத்தில் என் தகப்பனாரையும், காதலரையும் கொல்லுவதை எதிர்த்து ஓட்டுச் செய்தீர்களல்லவா? அதற்காகத்தான் சாஸ்திரி உங்ளைக் கொல்லத் தீர்மானித்திருக்கிறான். நான் சொல்வதைப் போல் செய்யுங்கள். அவனைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று ஜயலட்சுமி மறுபடியும் வேண்டிக் கொண்டாள்.

ஜயலட்சுமி சொல்வது நிஜமாகத்தானிருக்க வேண்டுமென்று அவர்களுக்குப் பட்டது. அவர்கள் தங்கள் ஆசனங்களிலிருந்து எழுந்தார்கள். சாஸ்திரி நன்றாக நிமிர்ந்து நின்றான். அவர்களைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்தான்.

''சே! உட்காருங்கள். முட்டாள்களைப் போல் நடந்து கொள்ளாதீர்கள். இந்தப் பெண்ணின் வார்த்தையைக் கேட்டு ஏற்கனவே ஒரு தடவை முட்டாள் பட்டம் கட்டிக்கொண்டிருக்கிறீர்கள். மீண்டும் கெட்டுப் போகாதீர்கள்'' என்று அவர்களை உற்றுப் பார்த்து அதட்டினான்.

அதற்கும் அவர்கள் கேட்காமல் அருகில் நெருங்கவே பையிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, ''இதோ என்ன இருக்கிறது பார்த்தீர்களா? இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தீர்களானால் உங்களைவரையும் சுட்டுவீழ்த்தி விடுவேன்'' என்று பயமுறுத்தினான். அவர்கள் பின்னால் நகர்ந்து சென்று மறுபடியும் தங்கள் ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

சரப சாஸ்திரி மிகுந்த வருத்தப்படுபவன்போல் நடித்துக் கொண்டு, ''சகோதரர்களே! இப்பொழுது நேர்ந்த சம்பவம் நமது சங்கத்துக்கேதுர்ப்பாக்கியம். இதற்குக்காரணம் என் முட்டாள்தனம்தான். பெண்கள் சேர்ந்த எந்தக் காரியமாவது உருப்பட்டதாக நமது புராணங்களில் கேள்விப் பட்டிருக்கிறோமா? இல்லை. அல்லது போன வருஷம்தான் ஒரு பெண் நம்மைக் கவிழ்க்க இருந்தாளே அதிலிருந்தாவது எனக்கு புத்தி வந்ததா? இல்லை. மறுபடியும் ஒரு பெண்ணைச் சங்கத்தில் சேர்த்துக் கொண்டேன். அதனால் நமக்குள்ளேயே சண்டை உண்டாகிறது. அண்ணன் தம்பிகளான சுந்தோப சுந்தர்களுக்கே பெண்ணால் சண்டை ஏற்படவில்லையா? நமக்குள் சண்டை ஏற்படுவதில் என்ன ஆச்சரியம்?'' என்றான்.

''நண்பர்களே! இந்தக் கபட நாடகத்தில் ஏமாந்து போகாதீர்கள்'' என்று ஜயலட்சுமி எச்சரித்தாள்.

''சகோதரர்களே! கபடநாடகம் யார் ஆடுகிறார்கள் என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும். இதோ இருக்கிற ஜயலட்சுமி உங்களுக்குச் சத்துருவா, நான் உங்களுக்குச்



சத்துருவா என்பதையும் நீங்களே தீர்மானியுங்கள்'' என்று சொல்லிவிட்டு, முதல் நாளிரவு கோபாலன் கையிலிருந்து எடுத்த கடிதத்தை அவர்களிடம் கொடுத்து, ''அதை வாசியுங்கள். அந்தக் கடிதம் குப்புசாமி ராஜாவுக்கு எழுதப் பட்டிருக்கிறது. சங்கத்தைப் பற்றிய எல்லாத் தகவல்களும் அதிலிருக்கின்றன. அந்தக் கடிதம் குப்புசாமி ராஜாவிடம் போய்ச் சேர்ந்திருந்தால் நான் மாத்திரமல்ல, நீங்களும் அந்தமானுக்குப் போவீர்கள்'' என்றான் சாஸ்திரி.

கடிதத்தை வாசித்த ஒவ்வொருவரும் திக்பிரமை யடைந்தனர். ஜயலட்சுமி ஏதோ பேச ஆரம்பித்தாள். உடனே அந்த ஏழுபேரும், ''ஜயலட்சுமி! பேசாதே போதும். உன்னை ஒரு தடவை நாங்கள் நம்பி இளிச்சவாய்ப் பட்டம் வாங்கினது போதும்'' என்று கோபத்துடன் சொன்னார்கள். அவள் மீது அவர்கள் அனைவருக்கும் வெறுப்பு ஏற்பட்டது.

அதற்கு மேல் தான் எதைச் சொன்னாலும் அவர்கள் நம்பமாட்டார்கள் என்பதை ஜயலட்சுமி நன்றாகத் தெரிந்து கொண்டாள். ஆகவே அவள் எதுவும் பேசவில்லை. டாக்டர் கோபாலனும் பேசவில்லை.

''சரப சாஸ்திரி கொஞ்சம் ஏமாற மாட்டானா, அவன் மேல் பாய்ந்து ரிவால்வரைப் பிடுங்கிக் கொள்ளலாமே'' என்று யோசித்தபடி மேஜைமேலிருந்த ரிவால்வரையும், சரப சாஸ்திரியையும் மாறி மாறிப் பார்த்த படியிருந்தாள். ஆனால் சரப சாஸ்திரியின் ஒரு கண் எப்போதும் கோபாலனையே அதிஜாக்கிரதையாகக் கவனித் துக் கொண்டிருந்தபடியால் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

பிறகு சரப சாஸ்திரி எதிரேயிருந்தவர்களைப் பார்த்து, ''இனி நான் கூறிய யந்திரத்தைப் பற்றிக் கவனிப்போம். இந்தப் பிள்ளையாரைப் பார்த்தீர்களா? எவ்வளவு சாதுவா யிருக்கிறார்'' என்று பிள்ளையாரை அவர்களுக்குச் சுட்டிக் காட்டினான். அதற்குள் ஜமீன்தார்,'' கட்டிடத்தையே ஓசைப்

படாமல் இடித்து விழ்த்தக்கூடிய சக்தி அவருக்கு இருக்கிறது'' என்றான்.

''இதென்ன வெடி குண்டா?'' என்று ஒருவன் கேட்டான்.

''ஆமாம்! ஆனால் இது வெடிப்பதால் சந்தேகம் ஏற்படாது'' என்றான் சாஸ்திரி.

''உள்ளே மருந்து வைத்துக் கெட்டித்திருக்கிறாயா?'' என்று மற்றொருவன் சந்தேகத்துடன் கேட்டான்.

சரப சாஸ்திரி மிகுந்த வருத்தப்படுபவன் போல அபிநயித்து, ''என் மேலிருக்கும் சந்தேகம் இன்னும் போகவில்லையா? சரி, உங்களுக்கு எதற்குச் சந்தேகம்? இதோ பிள்ளையாரைக் கழற்றியே காட்டிவிடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டு மேஜைக்குள்ளிருந்த ஆணி ஒன்றை எடுத்துப் பிள்ளையாரின் அடிப்பாகத்தைக் கழற்றினான். உள்ளேயிருந்த யந்திர வேலைப்பாட்டைக் கண்டு எல்லாரும் அதிசயித்தனர். டாக்டர் கோபாலன்கூட அம்மனிதனுடைய சாமர்த்தியத்தைக் கண்டு வியந்தார்.

''இதோ பார்த்தீர்களா! அந்த அறையில்தான் மருந்து வைத்துக் கெட்டிக்க வேண்டும். பிறகு இந்த ஆணியை இவ்விதம் திருகிவிட்டால் அந்த அறை மூடிக் கொள்கிறது. அதைச் சுற்றிலும் வைக்கப்பட்டிருக்கும் பஞ்சு, மருந்து வெடிப்பதால் உண்டாகும் ஓசையைத் தடுக்கும்'' என்று சொல்லியவண்ணம் சாஸ்திரி அந்தஅந்தப் பாகங்களைத் தொட்டுக் காட்டி அங்கிருந்தவர்களுக்கு யந்திர ரகசியத்தை விளக்கினான்.

அந்தச்சமயம் ஜமீன்தார், ''இதோ கொஞ்சம் வெளியே போய்விட்டு வந்துவிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு அறையிலிருந்து நழுவிவிட்டார். சாஸ்திரி அறை ஜன்னல் கதவுகளைச் சாத்தித் தாளிட்டான். பிறகு மேஜைமேலிருந்த பிள்ளையாரின் வயிற்றிலிருந்த ஆணியைத் திருகவே பிள்ளை



யார் இரு கால்களையும் பரப்பிக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். அந்த வேடிக்கையைப் பார்த்த எல்லாரும் பிள்ளையாரைச் சுற்றிக் கொண்டனர். எல்லாருடைய கவனமும் பிள்ளையாரின் மேலேயே இருந்தபடியால் சாஸ்திரி ஓசைப்படாமல் அறையை விட்டு வெளியே சென்றதை யாரும் கவனிக்கவில்லை. அதுவரையில் ஆழ்ந்த யோசனையிலிருந்த ஜெயலட்சுமி பிள்ளையார் செய்த வேடிக்கையைப் பார்த்தாள். அவளுடைய முகம் திடீரெனப் பயத்தால் வெளுத்தது.

''அட முட்டாள்களே! அதோ பாருங்கள். சாஸ்திரி முன்பு காட்டியது இந்தப் பிள்ளையாரல்ல. அந்தப் பிள்ளையாரின் முகத்தில் தென்கலை நாமமல்லவா போட்டிருந்தது. இதன் முகத்தில் வடகலை நாமமிருக்கிறது. இது வெடிகுண்டுப் பிள்ளையாரல்ல. இவரிடமிருந்து உண்டாகும் ஒருவித விஷப் புகையால் நாமெல்லோரும் இறந்து போவோம். சுவாசிப்பதற்குக் கொஞ்சம் காற்றாவது வரட்டும், அந்த ஜன்னல் கதவுகளைத் திறவுங்கள்'' என்று உடம்பு துடிக்கக் கூறினாள்.

எல்லோரும் அப்பொழுதுதான் விழித்துக் கொண்டார்கள். ஜன்னல்களை நோக்கி ஓடினார்கள். ஜன்னல் கதவுகள் எல்லாம் வெளியே தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தமையால் திறக்க முடியவில்லை.

''நான் அப்பொழுதே சொன்னேனே கேட்டீர்களா? சாஸ்திரியை நம்பி மதிமோசம் போனீர்களே. கதவையாவது திறவுங்கள்'' என்றாள். எல்லோரும் கதவுக்காக ஓடினார்கள். கதவும் வெளிப் பக்கம் தாளிடப்பட்டிருந்தது. பிள்ளையார் கொஞ்சம் கொஞ்சமாகத் துதிக்கை மூலம் விஷப் புகையை விட ஆரம்பித்தார். ஜயலட்சுமி புடைவைத் தலைப்பால் மூக்கை மூடிக்கொண்டு பிள்ளையாரைக் கையிலெடுத்தாள். கை வெடவெடவென்று நடுங்கியது.

''ஜயா! ஜயா! அதைத் தொடாதே'' என்று கோபாலன்

கூச்சலிட்டு ஓடி அவள் கையைப் பிடித்துக் கொண்டார்.

''தூரச் செல்லுங்கள். இந்தப் பிள்ளையாரின் விஷமத்தை நிறுத்தும் வழி எனக்குத் தெரியும்'' என்ற சொல்லிவிட்டு, ஜயலட்சுமி பிள்ளையாரின் தலையைப் பிடித்துக் கொண்டு தும்பிக்கையைக் கீழ் நோக்கி இழுத்தாள். பிள்ளையாருக்குள் 'கிர்' என்ற ஓசையுண்டாயிற்று. பிள்ளையார் ஆட்டத்தை நிறுத்தி ஓய்ந்து உட்கார்ந்தார்.

''ஜயா! இந்தப் பிள்ளையாரின் ரகசியம் உனக்கெப்படித் தெரியும்?'' என்ற கோபாலன் கேட்டார்.

''நேற்றிரவு சரப சாஸ்திரி இவற்றை ஆடவிட்டு ஜமீன்தாருக்குக் காண்பித்துக் கொண்டிருந்தபோது நான் மறைந்து நின்று எல்லாவற்றையும் பார்த்தேன்!'' என்றாள் ஜயலட்சுமி.

''ஜயலட்சுமி! நீதான் எங்களைக் காப்பாற்றினாய். நீ ஒருத்தி இல்லாவிட்டி அவ்விரு பாதகர்களும் எங்களை இத்தனை நாழி கொன்றிருப்பார்களே!'' என்று மற்றொருவன் கூறினான்.

''உபசார வார்த்தைகள் பேசிக் கொண்டிருப்பதற்கு இது சமயமல்ல. நம் அனைவருடைய உயிரையும் சாஸ்திரியும் ஜமீன்தாரும் வாங்கப் பார்த்தார்கள். நாம் பழிக்குப் பழி வாங்குவோம். இவர்கள் வேலையெல்லாம் போலீஸுக்குத் தெரிந்திருந்தும் போதிய சாட்சியம் இல்லாமையால்தான் போலீஸார் இவர்களைக் கைது செய்யவில்லை. இப்பொழுது நாம் ஒன்பது பேர் சாட்சி சொல்லலாம். வாருங்கள், நேராக குப்புசாமி ராஜாவிடம் சென்று சங்கத்தின் ரகசியங்களைச் சொல்லிவிடுவோம். சீக்கிரம் கதவை உடையுங்கள்'' என்று ஜயலட்சுமி உத்தரவிட்டாள்.

எல்லோரும் அறையிலிருந்த சாமான்களில் கைக்கு அகப்பட்டதை எடுத்துக் கொண்டு கதவை இடித்தார்கள். சிறிது



நேரத்திற்குள் கதவு உடைந்தது.

அரை மணி நேரத்திற்கெல்லாம் சரப சாஸ்திரியும் ஜமீன்தாரும் அன்று செய்யவிருந்த சதிச் செயலைப்பற்றிக் குப்புசாமி ராஜா மிகவும் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார். அடுத்த விநாடி தமக்கெதிரிலிருந்த டெலிபோனை எடுத்துச் சென்னையிலுள்ள எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் அவ்விருவரின் அடையாளங்களைச் சொல்லிக் கைது செய்யும்படி உத்தரவிட்டார். அவர் டெலிபோன் செய்து முடித்த மறு நிமிடம் அந்த அறையில் பலமான வெடி உண்டாயிற்று. அறையின் ஒரு பாகம் கலகலத்து இடிந்து விழுந்தது. கோபாலன் ஜயலட்சுமியைத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடினார். மற்றவர்களும் ஓடிவிட்டார்கள்.

அத்தியாயம் - 16

## சாகசியம்

விஷப் புகையால் மரணமடையாது ஜயலட்சுமியின் உதவியால் தப்பிய டாக்டர் கோபாலனும் சங்க மெம்பர்கள் ஏழு பேரும் சரப சாஸ்திரியைப் போலீஸாருக்குக் காட்டிக் கொடுத்துவிடவேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் ஜயலட்சுமியைப் பின்தொடர்ந்து மாடியிலிருந்து வெகு வேகமாய்க் கீழிறங்கி ஓடிவந்தார்கள் என்று முன் அத்தியாயத்தில் சொன்னோமல்லவா? அப்படி ஓடி வந்தவர்கள் முக்கியமான ஒரு விஷயத்தை மறந்துவிட்டார்கள்.

தங்களை அறையில் வைத்துப் பூட்டிச் சமாதி செய்துவிட யத்தனித்த சாஸ்திரியும், ஜமீன்தாரும் பங்களாவுக்குள்ளேயே தான் இருப்பார்கள் என்ற யோசனை அவர்களுக்கில்லை. யமன் வாயிலிருந்து அப்பொழுதுதான் தப்பி வந்ததால் ஏற்பட்ட கிலியும், முதலில் போலீஸாருக்குத் தகவல் கொடுத்துவிட வேண்டுமென்ற ஆர்வமும்தான் அவர்களுக்கு அதிகமாயிருந்தது. ஆகையால் சரப சாஸ்திரியைப் பற்றியோ ஜமீன்தாரைப் பற்றியோ நினைக்காமல் மெத்தைப் படிகளில் வெகு வேகமாக இறங்கி வந்து, வாயிற் கதவைத் திறந்துகொண்டு ஓடினார்கள். இப்படி அவர்கள் ஓடுவதை மெத்தைப் படியின் கீழிருந்த சரப சாஸ்திரியும், ஜமீன்தாரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். முடிந்திருந்தால் சாஸ்திரி அவர்களை வழிமறித்து நிறுத்தி இருப்பான். அவன் கையில் அப்பொழுது ஆயுதமெதுவும் இல்லை. ஜயலட்சுமிக்குப் பின்னால் கீழிறங்கி வந்துகொண்டிருந்த கோபாலன் கையில் ரிவால்வர்



இருந்ததைப் பார்த்தான். எல்லா நிகழ்ச்சிகளும் ஒரு விநாடிக்குள் நிகழ்ந்து, சாஸ்திரியைப் பிரமிக்கச் செய்து விட்டபடியால் அவன் அவர்களைத் தடுக்க ஒன்றும் செய்ய முடியவில்லை.

பிள்ளையாரின் மர்மத்தையறிந்து ஜயலட்சுமி மற்றவர்களைக் காப்பாற்றுவாளென்று அவன் எப்படி எதிர் பார்த்திருக்க முடியும்? கதவு இடிபடும் சப்தம் மாத்திரம் அவனுக்குக் கேட்டது. ஆனால் அவன் அதைப்பற்றி விபரீதமாக அர்த்தம் செய்து கொண்டான்.

''எல்லோரும் விஷப்புகையைச் சுவாசித்து விட்டார்கள். மூச்சுத் திணறிக் கொண்டு கதவைத் தடேல் தடேலென்று இடிக்கிறார்கள்'' என்று நினைத்தான். கதவு உடைந்து விழுந்த பிறகு தான் அவனுக்குச் சந்தேகமேற்பட்டது. உடனே தானிருந்த அறையை விட்டு, ஜமீன்தாரையும் அழைத்துக் கொண்டு மெத்தைப் படிக்கு ஓடிவந்தான். அதற்குள் அதிவேகமாக மேலிருந்தவர்கள் கீழிறங்கியதைப் பார்த்தவுடன் மெத்தை படியின் பக்கத்தில் ஜமீன்தாரைக் கையைப் பிடித்திழுத்து ஒளித்துவிட்டுத் தானும் ஒளிந்து கொண்டான்.

எல்லோரும் பங்களாவின் வாசலைவிட்டுத் தாண்டினதுதான் தாமதம். ஜமீன்தாரும் சரப சாஸ்திரியும் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தார்கள். சரப சாஸ்திரிக்குத் தாங்க முடியாத கோபம் உண்டாயிற்று. ''அடே ஜமீன்தார்! இவர்கள் எப்படித் தப்பினார்கள்?'' என்று கேட்டான்.

''எனக்கு எப்படித் தெரியும்?'' என்றார் ஜமீன்தார்.

சரப சாஸ்திரி மெத்தைமேல் ஏறி ஓடினான். ஜமீன்தாரும் பின் தொடர்ந்தார். மாடியறையின் மேஜைமேல் பிள்ளையார் செயலற்று உட்கார்ந்திருந்தார். அதைக் கையிலெடுத்துச் சாஸ்திரி சோதித்துப் பார்த்தான். அவனுக்கிருந்த கோபம் அதிகமாயிற்று.

''அடே ஜமீன்தார்! அவர்கள் உன்னால்தான் தப்பியிருக்கிறார்கள். இந்தப் பிள்ளையாரின் யந்திர சூட்சுமத்தை நான் உன்னைத் தவிர வேறு யாரிடமும் சொல்லவில்லை. ஆனால் அந்த ரகசியம் அறையிலிருந்தவர்களுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. ஜயலட்சுமியிடம் மோகம் கொண்டு திண்டாடிய நீதான் சொல்லியிருக்க வேண்டும்'' என்றான்.

ஜமீன்தார் பயத்தால் வெலவெலத்துப் போனார். அவர் உடம்பு முழுவதும் நடுங்கியது. ''சாஸ்திரி! சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் பிள்ளையாரைப் பற்றி ஒருவரிடமும் மூச்சுக்கூட விடவில்லை. இரண்டு நாளாக நீயும், நானும் தான் இணை பிரியாமல் இருக்கிறோமே. நான் எப்படி மற்றவர்களிடம் உன்னையறியாமல் ரகசியத்தைச் சொல்லியிருக்க முடியும்?'' என்று கெஞ்சினார்.

சரப சாஸ்திரி அவரைச் சிறிது நேரம் உற்று நோக்கினான். அவர் சொல்வது முழுதும் உண்மை என்று அவனுக்குத் தோன்றியது.

''சரி, நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் நம்மீது இருக்கும் சாட்சியத்தை மறைக்க முயலவேண்டும். நான் அவர்களைத் தொடர்ந்து போய் என்ன நடக்கிறதென்று கவனித்து வருகிறேன். நீ சங்கத்தைப் பற்றிய எல்லாத் தஸ்தாவேஜுகளையும் பொறுக்கி எடுத்துக் கொண்டு தயாராக இரு. நான் திரும்பியதும் கம்பி நீட்டிவிடுவோம்'' என்றான்.

''என்னை ஓடவா சொல்லுகிறாய்? என் ஜமீன் என்னவாகிறது?'' என்று ஜமீன்தார் கேட்டார்.

''தலைக்கே தீம்பு வந்திருக்கிறது. ஜமீனைப் பற்றி என்னையா கவலை? அந்தமானுக்குப் போனால் அதையும் கட்டி எடுத்துக் கொண்டு போவாயோ! முட்டாள் மாதிரி பேசாதே'' என்று சொல்லிவிட்டு வெளியே ஓடியவர்கள் போன திக்கை நோக்கி தானும் ஓடினான்.



போகும் போது உள்ளே சென்று ஒரு வெடிகுண்டையும் எடுத்துக் கொண்டு போனான். கொஞ்ச நாழிக்கெல்லாம் அவர்கள் கண்ணுக்குப் படும் தூரத்தில் வந்துவிட்டான். பிறகு மறைந்து மறைந்து அவர்களைத் தொடர்ந்து சென்றான். அவர்கள் எழும்பூருக்கு வந்து குப்புசாமி ராஜவின் பங்களாவுக்குள் நுழைந்தனர். சரப சாஸ்திரியும் மற்றொரு பக்கமாக மதில் சுவரில் ஏறிக் குதித்தான். குப்புசாமி ராஜா தன்னைப் பார்க்க வருபவர்களை வாயில் அறையிலேயே சந்திப்பது வழக்கம். அந்த அறை சாஸ்திரிக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகவே அவன் அந்த அறைப்பக்கம் சென்று அங்கிருந்த ஜன்னலின் பக்கத்திலிருந்த கொடிகளின் மறைவில் ஒளிந்து நின்று உள்ளே நடப்பவைகளைக் கவனிக்கலானான். பிறகு நாம் முன் அத்தியாயத்தில் சொல்லியபடி பையிலிருந்த வெடிகுண்டை எறிந்தான். நல்லவேளையாக அந்த வெடிகுண்டு அறைக்குள் வரவில்லை. ஜன்னல் பக்கத்திலிருந்த சுவரிலேயே பட்டு வெடித்துவிட்டது. உள்ளே விழுந்திருக்குமானால் அனைவரும் யமப் பட்டணம் போயிருப்பார்கள். சரப சாஸ்திரி வெடி குண்டை எறிந்துவிட்டு மதிலேறிக் குதித்து ஓடி பக்கத்துச் சந்துகளில் மறைந்துவிட்டான். அப்படி ஓடினவன் ஜமீன்தார் பங்களாவுக்குப் போகவில்லை. தன்னையும், ஜமீன்தாரையும் கைது செய்யச் சொல்லிக் குப்புசாமி ராஜா போலீஸ் ஸ்டேஷன்களுக்கு உத்தரவிட்ட பிறகு, போலீஸார் முதலில் ஜமீன்தார் பங்களாவுக்குத்தான் போவார்கள் என்பதை அவன் அறிந்திருந்தான்.

நிற்க, சங்கத்தைப் பற்றிய தஸ்தாவேஜுகளைக் கட்டி கையில் வைத்துக்கொண்டு பெரிய உத்தியோகஸ்தர் வீட்டு வாசலில் காத்திருக்கும் குமாஸ்தாபோலத் தமது பங்களாவின் ஹாலில் சரப சாஸ்திரியின் வரவை எதிர்பார்த்து அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தார் ஜமீன்தார். அவன் வருகைக்கு நாழியாக ஆக அவருக்குக் கவலையும் அதிகமாயிற்று.

வாசலில் யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. நல்ல வேளை; சரப சாஸ்திரி வந்துவிட்டானென்று நினைத்துக் கொண்டு, ''என்னப்பா! வருவதற்கு இவ்வளவு நாழியா? உனக்காகத்தான் அப்போ பிடித்துக் காத்துக்கொண்டிருக்கிறேன்'' என்றார்.

அவர் அப்படிச் சொல்லி முடிக்கு முன் இரண்டு போலீஸ்காரர்கள் உள்ளே நுழைந்ததைக் கண்டு பேச நாவெழாமல் பயத்தால் பிரமித்துப் போய் நின்றார். அடுத்த நிமிடம் அவருடைய கைகளுக்கு விலங்கிடப் பட்டது.

போலீஸ்காரர்களுக்குப் பின்னால் நுழைந்த குப்புசாமி ராஜா ஜமீன்தார் கையிலிருந்த கட்டைப் பிடுங்கி, ''என்ன இது! பேஷ்! ஜமீன்தார், சம்பூர்ணமான சாட்சியத்தோடு நின்று கொண்டிருக்கிறீர்களே! வாருங்கள், ஸ்டேஷனுக்குப் போகலாம்'' என்றார்.

குப்புசாமி ராஜா ஜமீன்தாரைக் கைது செய்ய வந்த அதே சமயத்தில் ஜயலட்சுமி இரண்டு போலீஸ் கான்ஸ்டேபிள்களுடன் வேதாசலத்தின் வீட்டுக்குச் சென்று அவனையும் கைது செய்துவிட்டாள். ஆகவே வேதாசலத்தைக் கொண்டு அன்றிரவு டாக்டர் கோபாலன் வீட்டின்மேல் வெடி குண்டு எறிந்து பலராம ஐயரை ஒழிப்பதற்குச் சரப சாஸ்திரி செய்திருந்த ஏற்பாடும் பலிக்கவில்லை.

ஜமீன்தார் கையில் வைத்துக் கொண்டிருந்த காகிதக் கட்டில் மெம்பர்களின் முகவரி கொண்ட ரிஜிஸ்டர் இருந்தபடியால் குப்புசாமி ராஜா அந்த அந்த உறுப்பினர்களிருக்கும் ஊரிலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்குத் தந்தியடித்து அவர்களைக் கைது செய்யும்படி ஏற்பாடு செய்துவிட்டார். என்ன செய்தாலும் குப்புசாமி ராஜாவுக்கோ ஜயலட்சுமிக்கோ மன நிம்மதியில்லை. சரப சாஸ்திரி வெளியில் இருக்கும் வரையில் எந்த நிமிஷமும் தங்களுடைய உயிர்களுக்கு ஆபத்து



நேரிடுமென்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

மறுநாட் காலை ஆழ்ந்த யோசனையுடன் குப்புசாமி ராஜா கோபாலன் வீட்டுக்கு வந்தார். கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ஜெயலட்சுமியும், கோபாலனும் அவரை வரவேற்று இருவரும் ஒரே முகமாய், ''என்ன சரப சாஸ்திரியைப்பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?'' என்று கேட்டார்கள்.

''இல்லை, ஒரு தகவலும் கிடைக்கவில்லை'' என்றார் குப்புசாமி ராஜா.

''ஜன நெருக்கமுள்ள இடங்களில் போலீஸ் ஒற்றர்களை விட்டுத் தேடச் சொல்கிறதுதானே!'' என்றார் டாக்டர்.

''பட்டணத்தைச் சல்லடை போட்டுச் சலித்தாய் விட்டது'' என்று குப்புசாமி ராஜா சொன்னார்.

''சிங்கப்பூர், பினாங்கு போகும் கப்பல்கள் ஏதாவதொன்றில் ஏறியிருந்தால் உங்களுக்கெப்படித் தெரியும்?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''ஜயலட்சுமி! சுமார் இரண்டு வருஷ காலமாக சரப சாஸ்திரியைப் பிடிக்கும் ஒரே நோக்கத்துடன் வேலை செய்து வரும் நான் இந்தச் சில்லறை வேலைகளைக்கூடச் செய்யாதிருப்பேனா? நேற்றிரவே துறைமுக அதிகாரிகளுக்கு விஷயத்தை அறிவித்துவிட்டேன். அவர்கள் வெகு ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். தவிர நாளைவரையில் எந்தக் கப்பலும் சென்னையை விட்டுப் புறப்படவில்லை. நாளைக் காலைதான் ஒரு கப்பல் ரங்கூனுக்குப் புறப்படுகிறது'' என்றார் குப்புசாமி ராஜா.

''அவனைப் பிடிக்க நீங்கள் வேறு எந்த மார்க்கத்தையும் யோசிக்கவில்லையா?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''இனிமேல் நாம் அவனைப் பிடிக்க பிரயத்தனப்பட வேண்டியதில்லை. அவனாக வந்து நம்மிடம் சிக்கிக் கொள்வான். நாம் வலையை விரிக்கவேண்டியதுதான் மிச்சம். அவனாக வந்து அதில் நுழைந்துகொள்வான்'' என்று குப்புசாமி ராஜா கூறினார். அவர் சொல்வதென்னவென்று மற்ற இருவருக்கும் புரியவில்லை.

''என்ன நான் சொல்வது உங்களுக்குப் புரியவில்லையா? ஜயலட்சுமி, சரப சாஸ்திரியின் குணத்தை இன்னும் நீ சரியாக அறியவில்லை போலிருக்கிறது. அதனால்தான் விழிக்கிறாய். சரப சாஸ்திரி தனக்கு துரோகம் செய்தவர்கள் மீது பழி வாங்காது எங்கும் போகமாட்டான். ஆகையால் அவன் நம்மிடம் தானாகவே வருவான்'' என்றார் குப்புசாமி ராஜா.

''உங்களிடமா வருவான்?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''என்னிடம் வரமாட்டான். அவனுக்கு உன்மேல்தான் கோபம் அதிகம். போலீஸ்காரன் புத்திசாலித்தனத்தில் அவனுக்கு நம்பிக்கை இருக்காது. இந்தப் பயங்கரவாதிகள் எல்லோரும் அப்படித்தான். நீயல்லவா அவனைப் போலீஸாருக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறாய். முதலில் உன்னிடம் வந்து பழி வாங்கப் பார்ப்பான். அப்பொழுது அவனைப் பிடித்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்'' என்று குப்புசாமி ராஜா விளக்கினார்.

''என்ன ஏற்பாடு செய்யப் போகிறீர்கள்? வீட்டைச் சுற்றிப் போலீஸ் பந்தோபஸ்து வைக்கப் போகிறீர்களா?'' என்று கோபாலன் கேட்டார்.

''போலீஸ் பந்தோபஸ்து வைத்தால் சாஸ்திரி கிட்டக் கூட வரமாட்டான். சரப சாஸ்திரியை முட்டாளென்று நினைத்துக்கொண்டீர்களா? போலீஸ் பந்தோபஸ்து வைக்கப் போவதில்லை. நான் வேறு ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன்.



அதனால் சரப சாஸ்திரி பிடிபடுவது மட்டுமல்ல ஜோதிபாயின் மரணத்தைப் பற்றிய மர்மங்களும் வெளியாகும்'' என்றார் குப்புசாமி ராஜா.

''அது என்ன வழி?'' என்று இருவரும் ஆவலாய்க் கேட்டார்கள். மிகவும் ரகசியமாக தாம் செய்யப் போகும் ஏற்பாட்டைக் குப்புசாமி ராஜா விவரித்தார்.

சரப சாஸ்திரி ஜயலட்சுமியை அவசியம் சந்திப்பானென்று குப்புசாமி ராஜா எதிர்பார்த்தது வீண்போகவில்லை.

மறுநாள் இரவு சுமார் பதினொரு மணி இருக்கும். ஜெயலட்சுமி தனது அறையில் தூங்கிக் கொண்டிருந்தாள். வீட்டில் நிசப்தம் குடி கொண்டிருந்தது. ஓர் உருவம் டாக்டர் கோபாலன் வீட்டின்மேல் ஏறி உள்ளே சந்தடி செய்யாமல் குதித்தது. பிறகு ஒவ்வொரு அறையாகக் கவனித்துக்கொண்டே வந்து ஜயலட்சுமியின் அறைக்குள் புகுந்து ஜயலட்சுமியின் அறைக்கதவைத் தாளிட்டு விட்டது. காலடி கேட்டு ஜயலட்சுமி விழித்துக்கொண்டாள். தன் கண்களுக்கெதிரில் துப்பாக்கியின் வாயிருப்பதை கண்டு நடுங்கினாள்.

''பேசாதே'' என்று மிரட்டினான் சரப சாஸ்திரி.

ஜயலட்சுமி பேசாமல் எழுந்து தனது படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள்.

''மின்சார விளக்கைத் தவிர வேறு ஏதாவது விளக்கிருந்தால் ஏற்று'' என்றான் சாஸ்திரி.

''தபால்களுக்கு முத்திரை வைக்க உபயோகப்படுத்துவதற்காக மேஜைமேல் மெழுகுவத்தி வைத்திருக்கிறேன்'' என்று ஜயலட்சுமி மெதுவாகப் பதில் சொன்னாள்.

''அதை ஏற்று'' என்று சொல்லிவிட்டுச் சாஸ்திரி ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டான். மெழுகுவத்தியின் மங்கலான பிரகாசத்தில் அவ்விருவரும் ஒருவரையொருவர் நோக்கிக் கொண்டு நின்றனர். சரப சாஸ்திரி அமைதியாக

இருந்ததுதான் ஜயலட்சுமிக்கு அதிக பயத்தைக் கொடுத்தது.

''பெரிய ஆபத்தில் சிக்கியிருக்கும் நான் ஏன் இவ்வளவு துணிச்சலுடன் இங்கு வந்திருக்கிறேனென்று உனக்குத் தெரியுமா?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''என்னிடம் பணம் ஏதாவது வாங்கிக்கொண்டு கப்பலேறி ஓடிவிடலாமென்று வந்தாயா?'' என்று ஜெயா கேட்டாள்.

''ஜயலட்சுமி! அம்மாதிரி இழிவான காரியங்களில் என்னுடைய புத்தி இதுவரை சென்றதில்லை. தாய் நாட்டுக்குத் தொண்டு செய்யும் நோக்கத்துடன்தான் நான் இதுவரை வேலை செய்து வந்திருக்கிறேன். என்னுடைய புத்திக்கு எது சரியென்று தோன்றியதோ அவ்வழியில் தேச சேவை செய்ய முயன்றேன். என்னுடைய உயிர் எனக்கு திருணமாத்திரம். அதைக் காப்பாற்றுவதற்காக நான் இதுவரை பிரயத்தனப்பட்டதில்லை'' என்றான் சாஸ்திரி.

''அப்படியானால் இங்கு ஏன் வந்தாய்?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''நீ கேட்கவேண்டுமா! தாய் நாட்டு விடுதலைக்கு உழைக்க ஏற்பட்ட எனது சங்கத்தை வீணாக்கி எங்களைப் போலீஸாருக்குக் காட்டிக் கொடுத்த துரோகியான உன்னுடைய உயிரை வாங்கத்தான் வந்திருக்கிறேன். நீ செய்த வேலையையே முன்பு செய்ய முயன்ற ஜோதிபாயை என்ன செய்தேனோ அதைத்தான் உன் விஷயத்திலும் செய்யப் போகிறேன்'' என்று சாப சாஸ்திரி கூறினான்.

''என்ன! ஜோதிபாயைக் கொன்றது நீயா! நீலமேகம் பிள்ளையல்லவா அவளுடன் வந்தவர்?'' என்று ஜயா கேட்டாள்.

''நீலமேகம் பிள்ளை அவளுடன் வந்தது உண்மைதான். ஆனால் ஜோதிபாயைக் கொன்றது அவன்



அல்ல. நான்தான் அவளை ஒழித்தேன்'' என்றான் சாஸ்திரி.

''எப்படி ஒழித்தாய்?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

''காட்டுகிறேன் பார்'' என்று சொல்லிக் கொண்டு துப்பாக்கியை மேஜைமேல் வைத்துவிட்டுத் தனது பையிலிருந்த ஒரு ஸிரிஞ்சை எடுத்தான். அதில் சிவப்பான திராவகம் இருந்தது. அதை சுட்டிக்காட்டி, ''ஜெயலட்சுமி! இது என்ன தெரியுமா? இது ஒரு விஷப் பச்சிலையின் ரசம். இதில் ஒரு துளியை ஊசியால் குத்தி உன் உடம்பில் ஏற்றிவிட்டேனானால் விஷம் உடம்பு பூராவும் ரத்தக் குழாய்களின் மூலம் பரவி நீ இறந்து விடுவாய். பிறகு இந்த விஷம் ஏற்றப்பட்ட விடத்தில் ஒரு சிறிய சிவப்புத்தழும்புதான் இருக்கும். விஷத்துக்குரிய குறியொன்றும் ரத்தத்தில் தெரியாது. இப்படித்தான் ஜோதிபாய் இறந்தாள்'' என்று சொல்லி விட்டுச் சாஸ்திரி மெள்ள ஸிரிஞ்சுடன் ஜயலட்சுமியை நோக்கி நெருங்கினான்.

ஜயலட்சுமி பட்டென்று இடுப்பில் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து அவனுக்கு எதிரில் நீட்டி, ''சாஸ்திரி! அப்படியே நில். ஒரு அடி எடுத்து வைத்தாயானால் பிணமாய் விடுவாய்'' என்று பயமுறுத்தினாள். சாஸ்திரி இடது கையால் மேஜை மேலிருந்த ரிவால்வரை எடுக்கப் போனான். ''அதைத் தொடாதே. தொட்டாயானால் சுட்டுவிடுவேன்'' என்று ஜயலட்சுமி மீண்டும் எச்சரித்தாள்.

''இப்பொழுது என்னை என்ன செய்யப் போகிறாய்?'' என்று சாஸ்திரி கேட்டான்.

''போலீஸாரிடம் ஒப்புவிக்கப் போகிறேன். ஜோதிபாயைக் கொலை செய்தவனைப் போலீஸார் இன்னும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றாள் ஜயலட்சுமி.

''நான் ஜோதிபாயைக் கொலை செய்தேனென்று நீ

சொன்னால் யார் நம்புவார்கள்? நீ வாசுதேவனைக் கொலை செய்ததை நான் சொல்லிவிட மாட்டேனா? கொலைகாரியான உன்னுடைய வார்த்தைக்கு அப்புறம் எங்கிருந்து மதிப்பு வரும்?'' என்று வினவினான் சாஸ்திரி.

''என்னுடைய வார்த்தையை நம்பாது போனால் போகட்டும். நீதான் ஜோதிபாயைக் கொலை செய்ததாக இப்பொழுது ஒப்புக் கொண்டாயே, அதைக் கூடப் போலீஸார் நம்ப மாட்டார்களா?'' என்று ஜயலட்சுமி கேட்டாள்.

அவள் சொல்வது சரப சாஸ்திரிக்கு புரியவில்லை. ''நீ, என்ன சொல்கிறாயென்று எனக்குத் தெரியவில்லை'' என்றான்.

''உனக்குப் பின்னாலிருக்கும் கதவைத் திற, தெரியும்'' என்றாள் ஜயலட்சுமி.

சாஸ்திரி கதவைத் திறந்தான். அடுத்த அறையில் பளிச்சென்று மின்சார விளக்கு எரிந்து கொண்டிருந்ததையும் அறை நடுவிலிருந்த மேஜைக்கருகில் ஸப்இன்ஸ்பெக்டர் வாஸுதேவன் சுருக்கெழுத்து நோட் புத்தகமும் கையுமாய் உட்கார்ந்து கொண்டு தான் சொல்லிய விஷயங்களை வேகமாய்க் குறித்துக் கொண்டிருப்பதையும் கண்டு பிரமித்து நின்றான்.

''ஜயலட்சுமி! நான் கனவு காண்கிறேனா அல்லது என் எதிரில் உட்கார்ந்திருப்பது நீ கொலை செய்த அதே வாஸுதேவன்தானா?'' என்று கேட்டான்.

''அதே வாஸுதேவன்தான். நீயும் நானும் இப்பொழுது பேசியதெல்லாம் சுருக்கெழுத்தில் (ஷார்ட்ஹாண்டில்) எழுதியிருக்கிறான். அதோ அவன் பக்கத்திலிருப்பவர் இந்த நகரத்தின் சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட்டு. உன்னுடைய குற்றத்துக்கு நீயே வாக்குமூலம் கொடுத்துவிட்டாய்'' என்றாள் ஜயலட்சுமி.

அத்தியாயம் - 17

## இருள் நீங்குகிறது

இனித் தப்ப வழியில்லை என்பதைச் சரப சாஸ்திரி சந்தேகமறத் தெரிந்துகொண்டான். தன்னை ஏமாற்ற ஏதோ பெரிய சூது நடந்திருக்கிறதென்பதையும் உணர்ந்தான். என்ன செய்வதென்று தெரியாமல் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றான். வாஸுதேவன் உட்கார்ந்திருந்த அறையின் மற்றொரு வாயில் வழியாகக் குப்புசாமி ராஜா உள்ளே நுழைந்தார். அவருடைய கையில் விலங்கு இருந்தது. மற்றொரு கையில் ரிவால்வர் இருந்தது. விலங்கு தனக்குத் தானென்று அறிந்து குப்புசாமி ராஜாவைப் பார்த்துச்சாஸ்திரி இகழ்ச்சியாக நகைத்தான்.

'' என்ன சிரிக்கிறாய்?'' என்ற குப்புசாமி ராஜா கேட்டார்.

''அர்ஜுனன் சிகண்டியை முன்னால் விட்டுப் பீஷ்மரோடு யுத்தம் செய்தமாதிரி ஆண் சிங்கமான நீர் பெண்ணொருத்தியின் மறைவில் நின்று என்னைப் பிடிக்க ஏற்பாடு செய்கிறீரே என்றுதான் சிரிக்கிறேன்'' என்று பதிலுரைத்தான் சாஸ்திரி.

''சரப சாஸ்திரி! இந்த மாதிரி வேடிக்கையாகப் பேசி, சமயம் பார்த்து என்னை ஏமாற்றிவிட்டு ஓடிவிடலாமென்று நினைக்காதே. பல தடவை என்னை ஏமாற்றிவிட்டாய். ஆனால் நான் இந்தத் தடவை ஏமாறப் போவதில்லை. உன்னைக் கைது செய்யாமல் நான் இவ்வீட்டை விட்டுப் போகப் போவதில்லை'' என்று குப்புசாமி ராஜா சொன்னார்.

''அப்படியானால், இந்த வீட்டை வாடகைக்கு

வைத்துக்கொள்ளும்'' என்றான் சாஸ்திரி.

''ஏன்?'' என்று குப்புசாமி ராஜா கேட்டார்.

''ஏனா? நீர் என்னைக் கைது செய்ய முடியாது. அதனால் தான்'' என்று சொல்லிவிட்டு, அவன் என்ன செய்யப் போகிறானென்பதை மற்றவர்கள் அறியுமுன்னமே சாஸ்திரி திடீரென ஒருபுறமாய்த் திரும்பி, கையிலிருந்த ஸிரிஞ்சின் ஊசியைத் தன்னுடைய மற்றொரு கையில் குத்தி விஷத்தை ஏற்றிக்கொண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் உடம்பு தள்ளாடிற்று. குப்புசாமி ராஜா அவனைப் பிடிக்கத் தாவினார்.

''என்னைத் தொடாதே. நான் இன்னும் சிறிது நேரம் தான் உயிருடனிருப்பேன். அதற்குள் எனக்கு விலங்கை மாட்டி அவமானப்படுத்தாதே. என்னை அமைதியுடன் இருக்கும்படி விட்டுவிடு'' என்று சொல்லிக்கொண்டே மெள்ள நகர்ந்து ஜயலட்சுமியின் படுக்கையில் தடா லென்று விழுந்தான்.

ஜயலட்சுமி ராஜாவைப் பார்த்து, ''ஐயோ! டாக்டரைக் கூப்பிடுங்கள். சாஸ்திரிக்குப் பிராணன் போய்விடும் போலிருக்கிறதே'' என்று அலறினாள். சாஸ்திரி அவளுக்கு எவ்வளவுதான் கெடுதி செய்ய யத்தனித்தவனானாலும் அவன் உடம்பு அப்பொழுது பட்ட வேதனையைப் பார்க்க அவளால் பொறுக்க முடியவில்லை. அவள் பேதை மனம் துடித்தது. மறு நிமிஷம் டாக்டர் கோபாலன் ஒரு ஸிரிஞ்சை எடுத்துக் கொண்டு வந்து விஷத்துக்கு மாற்றைச் சாஸ்திரியின் உடம்பில் ஏற்றினார்.

சிறிது நேரம் கழித்துச் சாஸ்திரி கண் விழித்தான். பக்கத்தில் ஜயலட்சுமி உட்கார்ந்து தனது தலையைத் தாங்கிக் கொண்டிருப்பதையும், எதிரே டாக்டர் கோபாலன் கவலையுடன் ஸிரிஞ்சை ஏந்தியவண்ணம் நின்று கொண்டிருப்பதையும் கண்டான். கல்லான அவன் மனமும் குழைந்தது.

''டாக்டர்! என்னுடைய விஷத்துக்கு நீர் கண்டு பிடித்த



மாற்றை இஞ்செக்ஷன் செய்திருக்கிறீர்களா? அதனால் ஒன்றும் பிரயோசனம் இல்லை. நான் அகப்பட்டுக் கொண்டால் ஒருவேளை நீங்கள் இப்படிச் செய்வீர்களென்று எதிர்பார்த்து நான் பச்சிலை விஷத்துடன் ஆயுர்வேதத்தில் நான் கண்டு பிடித்த மற்றும் சில விஷங்களையும் சேர்த்திருக்கிறேன். ஆகையால் நான் இறப்பது நிச்சயம். ஆனால் நீர் இஞ்செக்ஷன் செய்த மருந்து எனக்கு இன்னும் அரைமணி நேரம் உயிரைக் கொடுக்கும். அதற்குள் வாஸுதேவன் பிழைத்த விவரங்களைச் சொல்லிவிடுங்கள். உண்மையை அறிந்துகொண்டு நான் இறக்கிறேன்'' என்று ஹீனஸ்வரத்தில் கேட்டான்.

''சாஸ்திரி! நடந்த விஷயங்களைச் சொல்லுகிறேன். கவனமாகக் கேள்'' என்று ஜயலட்சுமி ஆதிமுதல் நடந்த கதையைச் சொல்லலானாள்:-

''உன்னைத் தலைவனாகக் கொண்ட பயங்கர சங்கம் ஒன்று சென்னையில் இருக்கிறதென்பது போலீஸாருக்கு முதலிலிருந்தே தெரிந்து இருந்தது. ஆனால் நீ உன் வேலைகளை மிகவும் சாமர்த்தியமாகச் செய்துவந்தபடியால் உன்மேல் குற்றம் காட்ட போதிய - தகுந்த சாட்சியம் எதுவும் அவர்களுக்கு அகப்படவில்லை. அவர்கள் தத்தளித்துக் கொண்டிருந்த சமயத்தில் வங்காளத்திலிருந்து சென்னைக்கு வந்த ஒரு ஸ்திரீ உன் சங்கத்தில் சேர்ந்து உன்னைப் பிடித்துக்கொடுப்பதாக ஒத்துக் கொண்டாள். அப்படியே உன் சங்கத்தில் சேர்ந்து அவள் தகுந்த சாட்சியம் தயாரித்தவுடன், சென்னைக்குப் போய்ப் போலீஸ் இலாகாவில் பூரா விவரங்களைச் சொல்லும்படி குப்புசாமி ராஜா அவளுக்கு உத்தரவிட்டார். அந்தச் சமயம் அவர் காட்டுப்புத்தூரில் வேறு வேலையாயிருந்த படியால் 'குள்ளநரி' யென்று கையெழுத்திட்டு ஒரு கடிதம் எழுதினார். அப்பொழுது திருச்சியிலிருந்த ரிஜிஸ்ட்ரார் நீலமேகத்தையும் அவளுக்குத் துணையாக அனுப்பினார்.''

சாஸ்திரி இடைமறிந்து, ''இதெல்லாம் எனக்குத் தெரியும். அவள் சென்னைக்கு வரப்போகிறாள் என்பதைப் பற்றிச் சென்னையிலிருந்த எனக்கு ஹோட்டல்கார கோவிந்தன் தந்தியடித்தான். அந்தச் சமயம் சங்கத்தில் புதிதாகச் சேர்ந்த ஜமீன்தாரை ஸ்டேஷனுக்கு அனுப்பி ஜோதிபாய் வருகிறாளா என்று பார்க்கச் செய்து, பிறகு நான் அவள் கோச்சைப் பின் பற்றிச் சென்று நிலமேகம் ஹோட்டலில் புகுந்த சமயம் பார்த்து அவளைத் தொலைத்து விட்டேன். நீ மேலே விஷயத்தைச் சொல்'' என்றான்.

''ஜோதிபாய் இறந்ததைக் கேட்டவுடன் எனது தகப்பனார் அவள் மரணத்துக்காக உன்னைப் பழிவாங்கத் தீர்மானித்தார். அதனால்தான் ஜயிலிலிருந்து வெளி வந்தார். ஆனால் நீ அவரை ஏமாற்றித் திருச்சிக்குக் கொண்டு வந்துவிட்டாய்'' என்றாள் ஜெயலட்சுமி.

''ஜோதிபாயின் பிறந்தகத்துப் பெயர் கண்ணம்மாள். அவள் என்னுடைய அத்தை. எனது தகப்பனாரின் தங்கை. வெகு நாட்களுக்கு முன்பே ஒரு வங்காளியுடன் வடக்கே போய்விட்டாள். அவருக்கு வாழ்க்கைப்பட்டு வடக்கேயே இருந்துவிட்டாள். அவர் பெயர் சரத்சந்திரர்'' என்று ஜயலட்சுமி கூறிவிட்டுச் சாஸ்திரியை நோக்கினாள்.

''யார்! போலீஸ் கமிஷனர் சரத்சந்திரனா? இப்பொழுது எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. சரத் சந்திரனை நான் வெடிகுண்டுக்கு இரையாக்கி விட்டேன். அதற்குப் பழிவாங்கத்தான் ஜோதிபாய் இங்கு வந்தாளா?'' என்று சாஸ்திரி மெதுவாகச் சொன்னான்.

''ஆம், சரத்சந்திரன் கொலைக்குப் பழிவாங்க ஜோதிபாய் வந்தாள். அவன் கொலைக்குப் பழிவாங்க நாங்கள் ஏற்பட்டோம். எங்களைப் பழிவாங்க நீ பார்த்தாய். கடைசியில் நீயே அழிந்து விட்டாய். பலாத்காரத்தின் பலனைப் பார்த்தாயா? ஒரு கெடுதலிலிருந்து எவ்வளவு கெடுதல். ஒரு



கொலையிலிருந்து சங்கிலி கோத்தாற்போல் எவ்வளவு வினை'' என்றாள் ஜயலட்சுமி.

சரப சாஸ்திரி, ''மேலே சொல்'' என்றான்.

''திருச்சிக்கு வந்த பிறகு உன் விஷயத்தில் தலையிட என் தகப்பனாருக்கு இஷ்டமில்லை. நீ எங்கு என்னையும் கொன்று விடுவாயோ என்று பயந்திருந்தார். போலீஸார் அவரைக் கட்டாயப்படுத்தினார்கள். முதலில் எனது தகப்பனார் மறுத்தார். ஆனால் டாக்டர் திருச்சிக்கு வந்த அன்று குப்புசாமி ராஜா எனது தகப்பனாரை மீண்டும் கூப்பிட்டனுப்பி என் உதவியை நாடினார். முடிவில் என் தகப்பனார் ஒப்புக் கொண்டார். என்னை மெள்ள உன் சங்கத்தில் சேர்த்து உளவறியச் சொல்ல வேண்டுமென்பது போலீஸார் நோக்கம். அதற்கான முன்னேற்பாடுகளை பலமாகச் செய்தார்கள். என் மீது கள்ளக் கையெழுத்து கேஸ்களைத் தாக்கல் செய்தார்கள். பிறகு கோவிந்தன் ஹோட்டலில் மாறுடை தரித்த போலீஸ் காரர்களை விட்டு யாருக்கும் தெரியாமல், ஆனால் உன் காதில் மட்டும் விழும்படி என்னுடைய நடத்தையைப் பற்றிக் கேவலமாகப் பேசச் சொன்னார்கள். நான் மிக கொடியவளென்று நீ தீர்மானிக்கும்படி, உன் மனத்தைத் தயார் செய்தார்கள். உன் மனம் தயாரானவுடன் என்னை உன் அருகில் சேர்க்க ஒரு சிறிய நாடகமும் ஏற்பாடு செய்தார்கள்'' என்றாள் ஜயலட்சுமி.

சரப சாஸ்திரிக்கு எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டது. ''அப்படியானால் வாஸுதேவனை காவிரிப் பாலத்தில் நீ குத்திக் கொன்றது வெறும் நாடகமா? நான் எவ்வளவு அடிமுட்டாள்! அவனை நீ காவிரிக்குள் தள்ளியதை நான் இரு கண்களாலும் பார்த்தேனே. அந்தப் பிரவாகத்தில் பாலத்துக்குக் கீழிருக்கும் சுழலில் அவன் எப்படித் தப்பினான்?'' என்று சாஸ்திரி மெல்ல கேட்டான்.

''காவிரிப் பாலத்தின்கீழ் அவனை ஏற்றி, பத்திரமாக

அப்புறம் கொண்டு போக போலீஸ் படகு தயாராயிருந்தது'' என்றாள்ஜயலட்சுமி.

''ஜயலட்சுமி! நீ ஒருத்தி இல்லாவிடில் போலீஸார் என்னைப் பிடித்திருக்க முடியாது. நீ ஆதிமுதலேயா எனக்குத் துரோகம் செய்தாய்?'' என்று சாஸ்திரி கேட்டான். அவன் கண்கள் சுழன்றன.

''இல்லை சாஸ்திரி! உன்னுடன் பழகிய பிறகு உன்னிடம் உயர்ந்த குணங்கள் இருந்ததைக் கண்டேன். ஆகையால் அஹிம்ஸா வழிக்கு உன்னைத் திருப்பிவிடலா மென்றும் போலீஸாரை ஏமாற்றி விடலா மென்றும் கூட நினைத்தேன். ஆனால் உன்னுடைய உயர்ந்த குனங்களை, உன்னுடைய பயங்கர வழிகள் தலையெடுக்க வொட்டாது தடுத்தன. கொள்ளையிட ஆரம்பித்தாய். கொலை செய்தாய். நீ என்னைச் சேர்ந்தவர்களையும் ஒழிக்க ஆரம்பித்த பிறகுதான் உன்னைப் போலிஸாருக்குக் காட்டிக் கொடுக்கத் தீர்மானித்தேன்'' என்றாள் ஜயலட்சுமி.

சாஸ்திரி பதில் சொல்லவில்லை. உடம்பை ஒருமுறை நெளித்துக் கொண்டான். அவன் தலை ஒருபுறமாய் விழுந்தது. சாஸ்திரி இவ்வுலக வாழ்க்கையை நீத்தான்! ஜெயலட்சுமியின் கண்களிலிருந்து நீர் சொரிந்தது.

''சாஸ்திரி, கொடியதான பலாத்கார வழி கடைசியில் உன்னையே அழித்துவிட்டது. இம்மாதிரி தீய வழியால் இன்னும் எவ்வளவு வாலிபர்கள் இந்தப் பாரத பூமியில் மாளப்போகிறார்களோ தெரியவில்லையே'' என்று சொல்லி, சாஸ்திரியின் சவத்தைப் பார்த்து ஜயா அழுதாள். டாக்டர் கோபாலன் அவளை மெள்ள அவ்வறையிலிருந்து வெளியே அழைத்துக் கொண்டு போனார். குப்புசாமி ராஜா போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்து மோட்டார் வரவழைத்து சவத்தை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்.

இரவு கழிந்தது. இருள் நீங்கியது. சில ஜனங்களின்



மனத்திலிருந்து அந்தகாரமும் நீங்கியது.

காந்தி - இர்வின் சம்பாஷணையில் பலன் எதுவும் ஏற்படாதென்றும், காங்கிரஸ்காரர்கள் ஜெயிலுக்குப்போய் அவஸ்தைப்பட்டது தான் மிச்சமென்றும் சரப சாஸ்திரியைப் போலவே பலர் நம்பி இருந்தார்கள். அந்த நம்பிக்கையும் அந்த இரவுடன் மறைந்தது. மறுநாள் பொழுது புலர்ந்தது. அன்று மார்ச்சு மாதம் 5-ந் தேதி. அது அஹிம்ஸை ஜெயித்த நாள். அன்றைய தினம்தான் காந்தி - இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்தியாவின் விடுதலைப் போரில் முதன் முதலாக ஜனப்பிரதிநிதியும், ராஜப்பிரதிநிதியும் சம தோரணையில் சந்தித்து ஒரேகாகிதத்தில் கையெழுத்திட்ட தினமும் அது தான். பெரிய சுபதினம்.

அன்று சாயந்திரம் டாக்டர் கோபாலன் வீட்டில் மாடி ஹாலில் ஒரு சிறிய கூட்டம் கூடியிருந்தது. குப்புசாமி ராஜா, நீலமேகம் பிள்ளை, உதவி கமிஷனர் சிங்காரவேல் பிள்ளை, அவர் புத்திரி புஷ்பவல்லி, டாக்டர் கோபாலன் தகப்பனார், பலராம் ஐயர் முதலியோர் கூடிப் பயங்கர சங்கத்தின் சரித்திரத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

முதல் நாளிரவு முதற்கொண்டு ஜெயலட்சுமிக்கு லேசாக ஜுரம் அடித்துக் கொண்டிருந்தது. அவள் ஒரு நாற்காலியில் படுத்துக் கொண்டிருந்தாள். குப்புசாமி ராஜா எல்லோருக்கும் கதையில் கண்ட விவரங்களை எடுத்துச் சொன்னார். அவர் பேசிக் கொண்டிருக்கையில் டாக்டர் கோபால் ஒரு சந்தேகம் கேட்டார்.

''அதிருக்கட்டும், ஜயலட்சுமியுடன் என்னைச் சேரக்கூடாதென்று திருச்சியில் உத்தரவிட்டீர்களே, அது ஏன்?'' என்று வினவினார்.

''நீர் ஜயலட்சுமியுடன் இருந்து கொண்டிருந்தால் அவள் உமது காதல் வலையில் சிக்கி வேவு பார்க்காதிருந்து விடப் போகிறாளே என்று எங்களுக்குப் பயம்'' என்றார்,

குப்புசாமி ராஜா. எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள்.

''நாங்கள் சந்தேகித்தபடி மறுநாள் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. சாஸ்திரி ஜயலட்சுமிக்குச் சொல்லாமலே கணபதி பாங்கிக்கு வெடி வைத்தானென்பது எங்களுக்குத் தெரியாது. ஜயலட்சுமி சாஸ்திரியிடம் நெருங்கிப் பழகாமல் உங்களிடமே நெருங்கிப் பழகிக் கொண்டிருக்கிறாளோ என்றும் சந்தேகம் கொண்டோம். பிறகுதான் சந்தேகம் தெளிந்தது. அடுத்தபடி சரப சாஸ்திரி சென்னைக்கு வந்து விட்டதும் அவனைத் தொடர்ந்து செல்ல ஜயலட்சுமிக்கு நாங்கள் மறைமுகமாக உத்தரவிட்டதும் உங்களுக்குத் தெரியும்'' என்று குப்புசாமி ராஜா விளக்கினார்.

''எனக்கும் ஒரு சந்தேகமிருக்கிறது?'' என்றார் உதவிக் கமிஷனர்.

''என்ன சந்தேகமென்று எனக்குத் தெரியும். சாஸ்திரியின் பேச்சைக் கேட்டு ஜயலட்சுமி உங்கள் சொந்தக் கடிதத்தை ஏன் திருடினாளென்று கேட்கப் போகிறீர்கள். அவள் வேறு என்ன செய்ய முடியுமென்று யோசித்துப் பாருங்கள். சாஸ்திரி சொல்லியபடி அக்காரியத்தை அவள் செய்யா விட்டால் சாஸ்திரிக்கு அவள் மேல் சந்தேகம் ஏற்படும். அவளைக் கொல்லவும் ஏற்பாடு செய்வான். ஆகையால்தான் உங்கள் கடிதத்தைத் திருடினாள். திருடினாளேயொழிய பிற்காலத்தில் உங்களுக்கு உபயோகப்படும்படி அந்தக் கடிதத்துக்குப் போட்டோ ஒன்றும் எடுத்து வைத்திருக்கிறாள். ஆனால் அது இப்பொழுது அவசியமில்லை. ஜமீன்தார் பங்களாவை சோதனை போட்டதில் உங்கள் சொந்தக் கடிதமே அகப்பட்டுவிட்டது'' என்றார் குப்புசாமி ராஜா.

''இன்னும் ஒரு சந்தேகமிருக்கிறது'' என்று சிங்கார வேல் பிள்ளை சொல்லிவிட்டு நீலமேகத்தைப் பார்த்து. ''நீங்கள் ஜோதிபாயைக் கோச்சில் விட்டுவிட்டு ஏன் ஓடிவிட்டீர்கள்?'' என்று கேட்டார்.



''நான் ரயிலிலிருந்து இறங்கியபோது முக்கியமான கோர்ட்டு தஸ்தாவேஜுகளை வண்டியில் வைத்துவிட்டு இறங்கிவிட்டேன். ஹோட்டலில் காபி சாப்பிடும்போது தான் அது நினைவுக்கு வந்தது. அந்த ரிகார்டுகள் போயிருந்தால் உத்தியோகமே போயிருக்கும். அதற்குப் பயந்து கொண்டு உடனே ஸ்டேஷனுக்கு ஓடினேன். அந்தச் சமயத்தில் எனக்கு வேறு எந்த ஞாபகமுமில்லை. ஜோதிபாயிடம் சொல்லிவிட்டுப் போக வேண்டுமேயென்ற யோசனைகூட இல்லை. நான் திரும்பி மவுண்டுரோட்டுக்கு வந்த போது கோச்சைக் காணோம். ஜோதிபாய் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் நேராகப் போயிருப்பாளென்று நினைத்து வீட்டுக்கு வந்தேன். அன்று சாயந்திரம் பேப்பரைப் பார்த்த போது தூக்கிவாரிப் போட்டது. உடனே ஆறு மாதம் லீவுபோட்டு விட்டு வீட்டிலேயே மறைந்து வசித்தேன். இன்று காலை குப்புசாமி ராஜா என் வீட்டுக்கு வந்து உண்மையைச் சொன்ன பிறகுதான் எனக்குப் பயம் நீங்கியது'' என்றார் நீலமேகம்.

அந்தச்சமயத்தில் டாக்டர் கோபாலன், ''ஜயா! ரசாயன அறைக்கு வா. நீ மருந்து சாப்பிடும் நாழியாகிவிட்டது. இன்னும் ஒரு டோஸ் மருந்து சாப்பிட்டால் நாளைக்கு உடம்பு சரிப்பட்டுவிடும்'' என்று சொல்லி அவளைக் கீழே அழைத்துப் போய் விட்டார். அவ்விருவரும் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த கோபாலனின் தகப்பனார், பலராம ஐயரைப் பார்த்து, ''என்ன பலராமா? உனக்கு இன்னும் என்னடா ஆக்ஷேபணை? அதுகளுக்குக் கலியாணத்தைப் பண்ணி வைத்துவிடலாமே'' என்றார்.

''இனிமேல் எனக்கென்ன ஆக்ஷேபணை' என்றார் பலராம ஐயர்.

''ஓஹோ! ஜயாவுக்குக் கலியாணம் நிச்சயமாய் விட்டாப் போலிருக்கிறதே. நான் அவளிடம் சொல்லி விட்டு

வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் புஷ்பவல்லியும் கீழே சென்றாள்.

ரஸாயன அறைக்குள் சென்ற கோபாலன் பல சீசாக்களிலிருந்து மருந்தை அவுன்ஸ் கிளாஸில் கொட்டித் தண்ணீரையும் சேர்த்துக் கலந்து ஜயலட்சுமிக்கு மருந்து கொடுத்தார். ஜயலட்சுமி மருந்தைசாப்பிட்டுவிட்டு, ''அப்பா! எவ்வளவு கசக்கிறது!'' என்றாள்.

டாக்டர் அவளைத் தம்மருகில் இழுத்துக்கொண்டார். ''மருந்து கசக்கவா செய்கிறது?'' என்று கேட்டார்.

''ஆமாம். இன்னுங்கூட வாயில் கசப்பு இருக்கிறது'' என்றாள் ஜயா.

''எங்கே பார்ப்போம்'' என்று சொல்லிக்கொண்டு கோபாலன் தனது இதழ்களை அவள் இதழ்களுடன் பொருத்தினார். அந்தச் சமயம் மெள்ள கதவைத் திறந்து உள்ளே தலையை நீட்டிய புஷ்பவல்லி, ''டாக்டர் ஸார்! நன்னா வைத்தியம் பண்ணறீகளே!'' என்ற சொல்லிச் சிரித்தாள்.

''ஜயா! உனக்குக் கலியாணம் நிச்சயமாகிவிட்டது. கலியாணம் ஆகும் வரைக்கும் இவரோட ஒண்டியாயிருக்கப் படாது. வா மெத்தைக்குப் போவோம்'' என்றாள்.

''என்னடி பரிகாசம்'' என்று சொல்லிக்கொண்டே ஜயா நடந்தாள். அவர்களுடன் கோபாலனும் மெத்தைக்குப் புறப்பட்டார்.

வாசலில் பையன், ''பேப்பர் ஸார்'' என்று கூறினான். கோபாலன் கீழே பேப்பரை வாங்கிப் பிரித்தார். அதில் பிரசுரித்திருந்த செய்தியைக் கண்டு சந்தோஷத்தால் மயிர் சிலிர்த்து நின்றார். பிறகு பைத்தியம் பிடித்தவர்போல், ''இதோ பார்த்தாயா ஜயா! காந்திக்கும், வைஸிராயிக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது'' என்ற கத்திக்கொண்டே மெத்தைமேல் ஓடினார். அங்கிருந்த எல்லோரும், '' என்ன! என்ன!'' என்று



கேட்டார்கள். கோபாலன் எல்லோருக்கும் காந்தி - இர்வின் ஒப்பந்தத்தையும், அதைப்பற்றி காந்தி வெளியிட்டிருந்த அறிக்கையையும் வாசித்துக் காண்பித்தார். எல்லாவற்றையும் விட மகாத்மாவின் அறிக்கையிலிருந்த ஒரு விஷயம் அனைவருடைய கவனத்தையும் அதிகமாகக் கவர்ந்தது.

''பலாத்கார ஸ்தாபனங்கள்'' என்ற தலைப்பின் கீழ் காந்திஜி பின்வருமாறு எழுதியிருந்தார்:

''பலாத்கார வழிகள் மூலம் இந்தியாவுக்கு விடுதலை சம்பாதித்துவிடலாமென்று எதிர்பார்க்கும் ஒரு சிறிய அமைப்பு தேசத்தில் இருக்கிறது. அச்சங்கம் தன்னுடைய நடவடிக்கைகளை நிறுத்திவிடவேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன். அஹிம்ஸைக்கு எவ்வளவு சக்தி இருக்கிறதென்பதை அவர்கள் ஒருவேளை இப்பொழுது அறிந்து கொண்டிருக்கலாம். தேசத்தில் பெருவாரியான மக்களிடை எழுச்சி ஏற்பட்டதற்கு அஹிம்ஸையின் அபூர்வ சக்தியே காரணம் என்பதை அவர்கள் மறுக்கமாட்டார்கள். உண்மை, அஹிம்ஸை இவற்றின் மூலம் நடவடிக்கை நடத்த காங்கிரஸுக்கும், எனக்கும் அவர்கள் சந்தர்ப்பம் அளித்துப் பொறுமையுடன் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்... அவர்கள் தங்கள் அரிய உயிர்களைத் தாய்நாட்டுச் சேவைக்குக் காப்பாற்றி வைத்துக் கொள்ளட்டும்'' என்றார்.

இந்த இடத்தைக் கோபாலன் உரக்கப் படித்துவிட்டு ''இந்த உபதேசத்தை எவ்வளவு பேர்கள் கேட்கப் போகிறார்களோ தெரியவில்லை'' என்றார்.

''எவ்வளவு பேர் தேச முன்னேற்றத்தை விரும்புகிறார்களோ அவ்வளவு பேர் கேட்பார்கள். வழி தவறிய இந்த வாலிபர்கள் சீக்கிரமே பலாத்காரத்தில் நம்பிக்கை இழந்து அஹிம்ஸையில் நம்பிக்கை கொள்ளும்படி கடவுள் அருள் புரியட்டும்!'' என்று ஜயலட்சுமி பிரார்த்தித்தாள்.

அவளுடைய பிரார்த்தனைக்குப் பலன் ஏழு வருஷங்களுக்குப் பிறகுதான் கிடைத்தது.

இரண்டு மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் சாயந்திரம் டாக்டர் கோபாலன் தமது வீட்டின் மேல் மாடியில் ஏதோ யோசித்த வண்ணம் நின்றுகொண்டிருந்தார். கீழேயிருந்த ஜயலட்சுமி ஓடிவந்து, ''இதோ பார்த்தீர்களா, அடுத்த வாரம் புஷ்பவல்லிக்குக் கலியாணமாம். கடுதாசி வந்திருக்கிறது'' என்றாள்.

''அவளுக்குக் கலியாணமானால் எனக்கு என்ன ஆச்சு?'' என்றார் கோபாலன். ஜயலட்சுமி புன்முறுவல் கொண்டாள்.

''என்ன ஜயா! நீ மெம்பராயிருந்த சங்கந்தான் க்ளோஸ் ஆயிடுத்தே. இனிமேல் என்ன செய்யப் போறே?'' என்று கோபாலன் கேட்டார்.

''உங்கள் குடும்பத்தில் மெம்பராயிடறேன்'' என்று ஜயா சொல்லிவிட்டு கன்னம் குழையச் சிரித்தாள். அந்தச் சமயத்தில் அவள் கண்களில் காதல் பொங்கி வழிந்து கொண்டிருந்ததைக் கோபாலன் கண்டார்.

★